


www.cleanindians.com

முதற் பதிப்பு : டிசம்பர், 2002

திருநாவுக்கரசு தீபாசிபு

விலை: ரூ. 75—00

Title : MAYAMAAN MALAI
Author : Indra Sounderrajan
Subject : Novel
Language : Tamil
Edition : First Edition, December - 2002
Pages : vi + 290 = 296
Publication : Vanathi Pathippakam
13, Deenadayalu Street,
Thyagaraya Nagar,
Chennai - 600 017.
Price : Rs. 75-00

ஒளி அச்சு : நேரு அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14
Printed At : Malar Printers 044-8224803

சென்னை மாவட்ட கிளை நூலகம் கொளத்தூர், சென்னை
36598
5389932
www.cleanindians.com

# என்னுரை

இந்தப் புத்தகத்தில் உள்ள நாவல்கள் நான் மாத நாவல்களாய் எழுதியவை.

மாத நாவல்களை ஒரு உதிர்ந்து விழும் இலைச் சருகு போல சிலர் நினைத்துக் கொண்டிருக்க பலரோ அவ்வளவும் தங்க இலைகள் என்பது போல அதன்மேல் ஒருவித பிரேமையோடு இருப்பதைப் பார்த்தேன்.

குறிப்பாக எனது மாத நாவல்கள் சமீப காலத்தில் வாசகர்களிடையே பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருவது எனக்கு மிகுந்த ஆச்சரியம் தருகிறது.

சமீப நாட்களில், அதுவும் டிவி தனது ஆதிக்கத்தில் தமிழ் மக்களை தன்வசப்படுத்தியுள்ள இந்த சமயத்தில், படிக்கின்ற பழக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து முற்றிலும் அழிந்து ஒழிந்துகூடப் போய்விடும் என்றுகூட நான் சில சமயம் நினைத்ததுண்டு.

ஆனால் என்னுடைய அந்தக் கருத்து தவறானது என்பதை எனது நாவல்களுக்கான வரவேற்பில் உணர்ந்துகொண்டேன்.

என் பெயர் ரங்கநாயகி, கிருஷ்ணதாசி, ஆகாயம் காணாத நட்சத்திரம், ஆசை ஊஞ்சல், ஆசை நெசவு போல பல குடும்ப நாவல்கள் எழுதி அவை தொலைக் காட்சியில் சக்கைப் போடு போட்ட நிலையிலும் ஒரு அமானுஷ்ய எழுத்தாளன் என்கிற நிலையில் என்னைப் பார்ப்பவர்களே அதிகமாக உள்ளனர்.

எனவே எனது மாத நாவல்களில் அந்தப் பாட்டையில் என்னைப் பயணிக்க அவர்களும் வற்புறுத்துகின்றனர்.

அமானுஷ்யம் என்பது குடும்பம், மர்மம், நகைச்சுவை போல ஒரு தனிப் பிரிவான விஷயம். ரா.கி. ரங்கராஜன், சுஜாதா போன்றவர்கள் அவ்வப் போது இதில் மூக்கை நுழைத்தது உண்டு. விறுவிறுப்புக்குப் பஞ்சமில்லாத இந்த அம்சத்தை சர்வ ஜாக்கிரதையாகக் கையாண்டால் எழுத்தாளர் பெரிதும் பாராட்டப்படுவார். அதில் கொஞ்சம் பிசகினாலும் அந்த எழுத்தாளர் மலிவாகத்தான் பார்க்கப்படுவார்.

எனவே இந்த அம்சத்தைக் கையில் எடுத்துக் கொண்டு செயல்பட பலரும் மிகவும் யோசிக்கிறார்கள்.

அடுத்து அமானுஷ்யம் என்றாலே அது நம்பிக்கை சார்ந்த ஒரு விஷயம் என்றாகி விட்டது. படிப்பதற்கு சுவையான, அதேசமயம் அறிவுக்கு ஒவ்வாததாக, நம்புவதற்குக் கடினமானதாகவும் இருப்பதால் இந்த அமானுஷ்யம் என்கிற புலியை வேட்டையாட அதிக சிரமப்பட வேண்டியும் உள்ளது.

இந்த சிரமத்தை நான் மாதாமாதம் பட்டாக வேண்டிய ஒரு நிலை. காரணம் வாசக ஆதரவு! நல்ல வேளை... நான் இம்மட்டில் மலிவாகப் பார்க்கப்பட வில்லை. மதிப்பாகவே பார்க்கப்படுகிறேன்.

வாராவாரம் எல்லாக் கோயில்களிலும் இருந்து எனக்காக அர்ச்சிக்கப்பட்டு பிரசாதங்களை எனது வாசகர்கள் அனுப்பும்போதும், நாவல் வரத் தாமத மானால் போன் செய்து விசாரிக்கும்போதும் அவர்கள் வாழ்க்கையில் குழப்பம் நேரிடும்போது, என்னை ஒரு பேரறிஞனாகக் கருதி அவர்கள் ஆலோசனை கேட்கும் போதும் அந்த உண்மையை நான் புரிந்துகொள் கிறேன்.

நானும் இந்த அமானுஷ்யத்தை சாதாரணமாக அணுகுவதில்லை. கடைந்தெடுத்த நாத்திகப் பார்வையோடுதான் அணுகுகிறேன். சிலசமயம் என் தனிப்பட்ட நம்பிக்கைகள் இந்த நாத்திக அணுகு முறையைப் புறம் தள்ளிவிட்டு முன்னே பாய்ந்துவிடும் விபத்தை மட்டும் தவிர்க்க முடியவில்லை.

ஒன்று நிச்சயம்.

இந்த வகை நாவல்கள் நிச்சயம் பெரிய அளவில் யோசிக்க வைக்கின்றன. நம்புகின்றவர்கள் 'ஆஹா என்ன ஒரு அற்புதமான கருத்து இது' என்று நெகிழ்வுடனும் நம்ப முடியாதவர்கள் 'இப்படியெல் லாமா மூடத்தனமாக சிந்திப்பது?' என்று கோபத் துடனும் தாக்கங்களுக்கு உள்ளாகிறார்கள்.

'படித்தோம் தூக்கிப் போட்டோம் மறந்தோம்' என்கிற ரகத்தைச் சாராத இந்த வகை கதைகள் ஒரு விஷயத்தைக் கட்டாயம் செய்கின்றன.

அது 'கேள்விகள் கேட்பது' என்கிற ஒன்றாகும். மாயமான் மலையும் அந்த ரகத்தில் நிறைய கேள்விகளை எழுப்பும். எழுப்பட்டும்.

அன்புடன்

**இந்திரா சௌந்தர்ராஜன்**

www.cleanindians.com

இந்தப் புத்தகத்திலுள்ள நாவல்கள்:


| | | |
|---|---|---|
| 1. | மாயமான் மலை | 1 |
| 2. | நான் நீ... ஆத்மா! | 117 |
| 3. | விடவே விடாது | 197 |


www.cleanindians.com

சென்னை மாவட்ட கிளை நூலகம்

# மாயமான் மலை

## 1

"இப்பொழுது நினைத்தாலும் எனக்கு சிலிர்த்துப் போகிறது. காரணம் நான் கண்ட அந்தக் காட்சி. அந்தக் காட்சி பற்றி நான் யாரிடம் கூறினாலும் அவர்கள் ஒரு அணுத்துகள் அளவுகூட நம்பமாட்டார்கள்.

'இந்த பாற்கடல் மாதவன் உளறுகிறான். உளறுவதே இவன் பிரதான பணி' என்பார்கள்... அது ஏனோ தெரியவில்லை என் கண்ணுக்கு மட்டும் அந்தக் காட்சி தென்பட்டது. மாயமான் மலையின் இந்திர தீர்த்தம் என்னும் அருவியின் சேர்க்கையால் உருவான ஏரியின் கரையில் அன்று ஒரு மான் நீர் அருந்த வந்தது. நானும் அதன் துள்ளாட்டம், புள்ளி உடல், வளை கொம்பு இவைகளில் மயங்கி அதை சுட்டுப் பிடிக்கத் தீர்மானித்தேன். அதற்காக நான் என் வேட்டைத் துப்பாக்கியில் குறி பார்த்தபோதுதான் அந்த அதிசயக் காட்சியைக் கண்டேன். மிகக் கூர்மையாக துளியும் நடுக்கமின்றி நான் குறி வைத்திருந்த மான் அந்த ஏரியில் நீர் குடித்துவிட்டு நிமிர்ந்து பார்த்தது. அப்படியே உறைந்துபோனேன். அதற்கு மனித முகம். அதுவும் தாடியும் மீசையுமாய் ஒரு சித்த புருஷரைப் போன்ற முகம்! உடம்பெல்லாம் துளியும் சந்தேகத்திற்கு இடமின்றி மானின் உடல்!"

—ஓவியர் பாற்கடல் மாதவனின் பேட்டிக் கேள்வி ஒன்றிலிருந்து!

இந்தப் பணக்காரப் பெண்களே இப்படித்தானோ?

பிறரைப் பற்றி துளியும் கவலையே படமாட்டார்களா...? அதிலும் ஆண்களுக்குச் சமமாகக் கார் ஓட்டுவது, துப்பாக்கிச் சுடுவது, கிரிக்கெட் விளையாடுவது என்றெல்லாம் வந்துவிட்டால் அதன் காரணமாய் அந்த அச்சம் மடம் நாணமுமெல்லாம் விடைபெற்றுக்கொண்டு போய்விடுமா?

காவ்யாவைப் பார்த்தபோது அப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது. பரம்பரை பரம்பரையாக நிலாத்தூர் ஜமீன் வம்சத்துப் பெண்களுக்கு ஒன்பதடி கூந்தல்! அவிழ்த்துவிட்டால் தரையில் புரண்டுதான் முடியும். சுருட்டி சதா தோள்மேல் போட்டபடி திரிய வேண்டும். அப்படித்தான் நிலாத்தூர் ஜமீன்தாரிணி ஜமுனாவதி இருந்தாள் என்பார்கள். வெள்ளிக்கிழமையானால் அவள் ஜமீன் குளத்தில் குளித்து முடித்துவிட்டு தலை துவட்டிக் கொள்ளும்போது கூடவே மூன்று சேடிப் பெண்களும் இருந்து ஆளுக்கொரு பாகமாய் பிரித்துக் கொண்டு துவட்டிவிடுவார்களாம்!

அதன்பின் சாம்பிராணிப் புகை போடும் வைபவம். அதற்கு மட்டுமே ஒரு வெள்ளிப் பேலா கொள்ளாத அளவு சாம்பிராணித் தூள் செலவாகுமாம்.

ஜமுனாவதி சாவதற்கு முன்கூட தன் கூந்தலைப்பற்றிக் கவலைப்பட்டிருக்கிறாள்.

கணவர் தங்கராஜ பாண்டியனை அழைத்து தன் மரணத்துக்குப் பிறகு அவ்வளவு நீண்ட கூந்தலையும் சேர்த்து எரித்துவிட வேண்டாம் என்றும், அதைத் தனியே வெட்டி எடுத்து பத்திரமாக பாதுகாக்கும்படியும் கேட்டுக் கொண்டாளாம். அதனால், இன்றைக்கும் படையல் இடும்



நாட்களில் அந்தத் தலைமுடியையும் சேர்த்து வைத்தே படையல் இடுகிறார்கள் என்பது நிலாத்தூர் ஜமீனின் நடைமுறை. அப்படிப் படையல் இடும்போது ஒரு மூங்கில் கூடையில் சுருட்டி வைக்கப் பட்டிருக்கும் அந்த ஒன்பதடி நீள கூந்தலும் ஏதோ அப்பொழுதுதான் வாசனாதி தைலம் போட்டு வாரி விட்டது போல் இருப்பதுதான் புரிந்துகொள்ள முடியாத ஓர் அதிசயம்.

இதே அளவு கூந்தல்தான் காவ்யாவின் அம்மா கண்மணி தேவிக்கும் இருந்தது. இன்று அதுவும் வெட்டப்பட்டு ஒரு மூங்கில் கூடையில்தான் கிடக்கிறது.

அப்படி ஒரு கூந்தலை உடைய காவ்யாவோ கல்லூரிக்குப் போகும்போது கூந்தலோடு போய்விட்டு, திரும்பி வரும்போது கிராப்புத் தலையுடன் வந்தால் எப்படி இருக்கும்?

ஜமீன்தார் ராமண்ண ராஜாவுக்கு ரத்தக் கொதிப்பே ஏற்பட்டுவிட்டது. அவர் அந்தக் கூந்தலை ஒரு அழகு சாதனமாய் மட்டும் பார்ப்பவரில்லை. அது அந்த ஜமீனின் செல்வ வளத்திற்கு சான்று கூறும் ஒன்று. அவர் அப்படித்தான் நினைத்தார்.

காவ்யாவை அவர் பார்த்த பார்வையில் அனல் பறந்தது.

"டாட்... நான் எப்படி இருக்கேன் இப்போ...?" காவ்யா அவர் மனநிலை புரியாமல் கேள்வி கேட்டாள்.

"உம்... எனக்கு வர்ற ஆத்திரத்துல..."— ராமண்ண ராஜாவின் கன்னக் கதுப்புகள் துடித்தன.

"எதுக்கு டாட் இப்போ இப்படிக் கோவப்பட்றீங்க?"

காவ்யாவும் அதிர ஆரம்பித்தாள்.

www.cleanindians.com

"என்ன காரியம் பண்ணிட்டு வந்திருக்கே?"

"ஏன் என்ன இப்ப.. எதுக்கு இப்படி கத்தறீங்க?"

"கத்தாம... அவ்வளவு நீள தலைமுடியைப் போய் வெட்டிப் போட்டுட்டு இப்படிக் கிராப்புத் தலையோட வந்து நிக்கறியே... உனக்கு அறிவில்ல..?"

"நோ டாட்... திஸ் ஈஸ் டூ மச். இப்ப இப்படி பாப் வெட்டிக்கறதுதான் ஃபேஷன்."

"மண்ணாங்கட்டி... ஃபேஷனாம் ஃபேஷன். பேசறதப் பாரு. உனக்கு நான் அளவுக்கதிகமாக சுதந்திரம் கொடுத்து விட்டேன்."

ராமண்ணா ராஜா உக்ரமாக முணுமுணுத்துக் கொண்டே அவளை விட்டு விலகிச் சென்றார்.

www.cleanindians.com

பார்த்துக்கொண்டே இருந்தாள் தர்மா. கண்மணி தேவி போனபிறகு அவள்தான் காவ்யாவுக்கு அம்மாவாய் இருந்து கவனித்து வருபவள். மெல்ல காவ்யாவிடம் வந்தாள்.

"தர்மா.."— காவ்யாவின் கண்களில் கண்ணீர்.

"அவசரப்பட்டுட்டியே கண்ணு.."— இது தர்மா.

"என்ன தர்மா சொல்றே நீ?"

"எவ்வளவு நீள தலைமுடி அதைப் போய்.."

"என்ன உளர்றே.. தினம் அதை சீவி சிடுக்கு எடுத்து வாரிப் பின்னிக்க நான் என்ன அந்தக் காலத்து அகிலாண்டமா இல்லை அங்கயற்கண்ணியா... என் விருப்பத்துக்கு பாப் வெட்டிக்கிட்டதுக்காக நீ கூட அலட்டிக்கிறியே?"

"அப்படி இல்ல கண்ணு.. அது வந்து."



"எது வந்து.. என் தலைமுடி.. என் விருப்பம்.. நான் வெட்டி எறிவேன்.. மொட்டையும் போட்டுக்குவேன்.

இது ஒரு சாதாரண விஷயம். இதை என்னமோ ஒரு செய்யக்கூடாத தப்பை செய்துட்ட மாதிரி நினைச்சு பேசறீங்களே. எந்த காலத்துல இருக்கீங்க நீங்க...?"

கோபமாய் கேட்டுவிட்டு காவ்யாவும் விலகினாள்.

கச்சிதமாய் ஜமீன் பங்களா முகப்பில் ஒரு இண்டிகா கார் ஒன்று ஸ்டோன் புளூ வண்ணத்தில் கிரீச்சிட்டு தேங்கி நின்றது.

அதில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தான் மோகன், காவ்யாவின் அத்தை மகன்!

உள்ளே நுழைந்தவன் கலக்கத்தோடு நிற்கும் தர்மாவைத்தான் முதலில் பார்த்தான்.

"வாங்க தம்பி.."

"தர்மா.. காவ்யா இல்ல?"

"இருக்கா... இப்பதான் அவ ரூமுக்கு போனா."

"ஆமா... ஏன் ஒருமாதிரி இருக்கீங்க?"

"ஒண்ணுமில்ல—நீங்க போங்க."

தர்மா சமாளித்தபடி நழுவ அவனும் வளைந்து மேலேறும் ரெட் கார்ப்பெட் விரித்த அந்த பங்களாவின் படிகளில் தாவிக் குதித்து ஏறினான்.

வாட்ரோபில் ஏராளமான நைட்டிகள். அதில் ஒன்றை எடுத்து அப்படியே ஒரு வட்டத்துக்குள் நுழைகிற மாதிரி நுழைந்தவளாய் கண்ணாடி முன் நின்றாள். காவ்யா.

பாப் வெட்டிய தலைமுடியும் தளதள உடல்வாகும் கண்ணாடியில் அப்படியே பிரதிபலித்தது.

ஊட்டமான உணவு காரணமாக முன்பாகத்தில் நல்ல செழிப்பு. ஜிப்பை இழுத்துவிட்டுக் கொள்ளும்போது சற்று சிரமமாக இருந்தது.

முகத்தில் மட்டும் கோபம் அப்படியே இருந்தது. அதே சமயம் கதவைத் திறந்துகொண்டு மோகன் நுழைவதும் கண்ணாடியில் தெரிந்தது.

திரும்பினாள்.

"ஹாய்!"

"வா மோகன்.. இப்பத்தான் வந்தியா?"

"ஆமா, என்ன இது புதுக்கோலம்?"

"எது?"

"எதுவா.. பாப் தலையோட இருக்கே. எதுன்னு கேக்கறே?"

"போதும்.. நீயும் இந்த சப்ஜெக்டைத் தொடாதே.."

அவனுக்கான பதிலோடு ரோலர் சீப்பை எடுத்தாள். அப்படியே கோதிவிட்டுக் கொள்ளத் தொடங்கினாள்.

"அப்ப எல்லாரும் உன் பாப் தலையைப் பத்திதான் இன்னிக்கு பேசினாங்களா?"

"மத்தவங்கள விடு... நல்லாருக்கா...? உனக்கு பிடிச்சிருக்கா?"

"சூப்பர்!"

"அப்பாாாா...!"

"என்ன காவ்யா... உன் அப்பா ஏதாவது சொன்னாரா?"

"ஆமாம்.. பிடிச்சு ஒரேயடியா கடிச்சுட்டார்..."

"அந்தக் காலத்து மனுஷன் இல்லியா.. விட்டுத்தள்ளு."

www.cleanindians.com



"இது ஒரு பெரிய விஷயம் மாதிரி தர்மாவும் முணுமுணுத்தா..."

"போகட்டும் விடு. அவளும் அந்தக் காலத்து ஆள்தானே?"

"கொஞ்சம் விட்டா பட்டுப் புடவைதான் கட்டணும், ஒட்டியாணம் போட்டுக்கணும், அப்புறம்.. இந்த ஜிமிக்கி புல்லாக்குன்னு அந்த ஓல்டு மாடலையெல்லாம் போட்டுகிட்டு காலண்டர்ல இருக்கற பொம்பள சாமிங்க மாதிரி நான் இருக்கணும்னு சொல்வார் போல இருக்கு என் டாடி..."

அவளிடம் குமுறல் நீடித்தது.

"ஓ. கே.. ஓ. கே.. கூல் டவுன். அப்புறம் ஒரு முக்கிய மான விஷயம்."

"என்ன?"

"ஐயாவுக்கு ஆஸ்திரேலியா கம்பெனியில ஜாப் கிடைச்சாச்சு..."

"ஈஸ் இட்?"

"ஆமாம். கொஞ்சம் முந்திதான் மெயில் வந்தது. மேபீ.. நான் அதிகபட்சம் ஒன் மன்த்ல ஜாய்ன் பண்ண வேண்டி வரலாம். கான்ட்ராக்ட் ஃபார்ம் விசா எல்லாம் கொரியர் பண்ணியிருக்காங்களாம்."

"ஓ.... வெரி நைஸ். கங்கிராஜுலேஷன்ஸ்." அவள் தன் நீண்ட விரல்களை உடைய வாளிப்பான கையை குலுக்கு வதற்காக அவனை நோக்கி நீட்டினாள்.

அவனும் பதிலுக்கு நீட்டினான். இரு கரமும் நொடியில் பின்னிக்கொண்டன. அவனுக்கு ஒரு மேகப் பொதியை தொடுகிற மாதிரி இருந்தது.

பக்கத்திலேயே பாடம் செய்து வைத்திருந்த ஒரு சிறுத்தை தன் அரக்க விழிகளால் அந்தக் காட்சியை ரசித்தது.

அதன் வயிற்றுப் பாகத்தில் எப்பொழுதோ ராமண்ண ராஜா அதை வேட்டையாடிய போது சுட்ட தோட்டாவின் துளை!

மோகனும் அதை கவனித்தான். காவ்யாவிடம் இருந்து கையை விலக்கி அந்த துளைப் பாகத்தை வருடிவிட்டான்.

"என்ன அந்த புலிகிட்ட போய்டுச்சு உன் கவனம்."

"உன் அப்பா சுட்டுச் சாகடிச்ச புலி இல்ல இது?"

"ஆமாம். இப்ப என்ன அதுக்கு?"

"உனக்கு விஷயம் தெரியாதா?"

"என்ன?"

"நம்ம எஸ்டேட்ல ஒரு புலி திரிஞ்சுகிட்டிருக்காம்."

"கேள்விப்பட்டேன். அதுக்கென்ன இப்போ?"

"ஆஸ்திரேலியா கிளம்பறதுக்குள்ள அதையும் சுட்டு இப்படி பிரசர்வ் பண்ணி ஒரு பொம்மையா நிறுத்த முடியுமான்னு யோசிக்கிறேன்."

"உனக்கு ஏன் இப்படி ஒரு ஆசை?"

"என்ன காவ்யா சாதாரணமா கேட்டுட்டே. நம்ம எஸ்டேட் மேனேஜர் தீனதயாளனை அது பிரியாணியா நினைச்சு சாப்ட்டது உனக்குத் தெரியாதா?"

"என்ன சொல்றே மோகன்?"

"சரிதான்... உனக்கு எதுவுமே தெரியாதா?"

"சத்தியமா தெரியாது... தீனதயாளன் இப்ப உயிரோட இல்லையா?"

www.cleanindians.com



"இல்ல காவ்யா. இப்பகூட நான் உன் அப்பா யூஸ் பண்ற அந்த செய்ரோ துப்பாக்கியை வாங்கிட்டு அப்படியே எனக்கு ஜாப் கிடைச்ச விஷயத்தை சொல்லிட்டு போகத்தான் வந்தேன்."

"மை காட்..."—காவ்யாவின் கண்கள் அகண்டன.

"ஆமா... மாமா எங்க இருக்கார்...?"

"அவர் எங்க இருப்பார்... டென்ஷனானா குடிக்கப் போய்டுவார். அதான் வீட்ல ஒரு பெரிய பாரே இருக்கே..."

அவள் அலுத்துக்கொள்ள மோகன் உடனே நழுவினான்.

"அவர்கிட்ட துப்பாக்கிய வாங்கிட்டு அப்படியே போய்டாதே. இங்க வந்துட்டு போ."

அவன் நழுவும்போது கத்திச் சொன்னாள்.

## 2

**"என் வரையில் மாயமான் மலை ஒரு அதிசயங்கள் மிகுந்த மலை. ஒரு மலையில் அருவி, ஓடை, ஏரி என்று மூன்றும் இருப்பது அனேகமாய் இங்கே மட்டும்தான் என நினைக்கிறேன்.**

**இந்த மலையில் வசிக்கும் பழங்குடிகள் பார்க்கத்தான் ஆதிவாசிகளாட்டம் இருக்கின்றனர். ஆனால் தங்கச் செம்பில் தண்ணீர் குடிக்கின்றனர்!**

ஒரு பெண் சாப்பிடுவதற்காக தாமரை இலையை தைத்துக் கொண்டிருந்தாள். அவள் அப்படித் தைத்து வைத்த இலைக் கட்டுமேல் மஞ்சளாய் உருண்டையாய் கல்போல ஒன்று இருந்தது.

காற்றில் இலை பறந்துவிடக்கூடாது என்பதற்காக வைக்கப்பட்டிருந்த ஒரு கல்லாகத்தான் முதலில் அதை நான் நினைத்தேன்.

ஆனால் அதைக்கொண்டு அவள் அங்கே நுழையப் பார்த்த ஒரு நாயின் மேல் எரிந்தபோது அது தவறி அந்தப் பக்கமாய் நடந்து கொண்டிருந்த என்மேல் பட்டது. கீழேயும் விழுந்தது. குனிந்து அதை எடுத்த எனக்கு ஆச்சரியமாகவும் போய்விட்டது.

அது ஒரு தங்க உருண்டை!

மதிப்பு தெரியாமல் அதை அவள் வைத்திருந்தாளா– இல்லை அது அங்கே மிகச் சாதாரண விஷயமா என்பது புரியவில்லை!"

—பேட்டிக் கேள்வியில் பாற்கடல் மாதவன்.

நிலாத்தூர் ஜமீன் மாளிகையை போன நூற்றாண்டில் கட்டியதாகச் சொல்வார்கள். அது கட்டப்படும்போது அந்த மாளிகை கட்டத் தேவையான தேக்கு மரங்கள் ஒரு கப்பல் மூலமாக தூத்துக்குடி துறைமுகத்திற்கு வந்ததாம்.

அங்கிருந்து அறுபது மாட்டு வண்டிகளில் அந்த தேக்குக் கட்டைகளை போட்டுக்கொண்டு நிலாத்தூருக்கு அதைக் கொண்டு வந்தார்களாம்.

அதில் ஒரு தேவதாரு மரமும் இருந்ததாம்!

தேவதாரு, தச்சர்களுக்கு மிகப் பிடித்த ஒரு மரம். மாவைப் பிசைந்து விருப்பத்திற்கு பிடிக்கிற மாதிரி அதை எப்படி வேண்டுமானாலும் வளைத்துச் செதுக்கிப் பிடிக்கலாம்.

www.cleanindians.com

அப்படிச் செதுக்கிச் செதுக்கி உருவாக்கிய தேன் நிலா அறையில் தனக்குத்தானே செஸ் விளையாடிக்



கொண்டிருந்தார் ராமண்ண ராஜா. பக்கத்து சுவரில் ஒரு ராட்சஸ டிஸ்ப்ளே அலமாரி. அதில் அழகிய கலைப் பொருள்களுக்கு பதிலாக விதம்விதமான மது பாட்டில்கள்!

அதில் சரிபாதிக்குமேல் சூதாட்ட நகரமான லாஸ் வேகாஸிலிருந்து அவருக்காகவே பிரத்யேகமாக தருவிக்கப் பட்டவை.

அதில் ஒன்று அருகில் திறந்திருக்க வெள்ளிக் கிண்ணம் ஒன்றில் ஐஸ்க்யூப் ஒன்றுடன் விஸ்கி ஜில்லிட்டுக் கொண்டிருந்தது.

"மாமா..."—அழைப்போடு அவருக்கு எதிரில் கிடந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தான் மோகன்.

"வா மோகன்..." என்றபடியே நிமிராமல் செஸ் கட்டத்தில் ஒரு பிரைம் மூவ் செய்தார் ராமண்ண ராஜா.

"எப்படி அங்கிள் இப்படி உங்களுக்கு நீங்களே செஸ் விளையாடிக்கிறீங்க... போர் அடிக்கலையா?"

"இதே கேள்வியை நிறைய தடவை நீ கேட்டுட்டே நானும் பதில் சொல்லிட்டேன். வந்த விஷயத்தைச் சொல்லு..."

"................"

"என்ன பேச்சக் காணோம். கமான். வாட்ஸ் த மேட்டர்?"

"உங்க வேட்டைத் துப்பாக்கி கொஞ்சம் வேணும்."

"என் வரைல என் கர்ச்சீப், சோப், டூத் பிரஷ், ஜட்டி மட்டுமில்ல... என் துப்பாக்கியையும் நான் மட்டும்தான் உபயோகப்படுத்தணும். அப்புறம்..."

நிமிராமலே சுருக்கமாய் அதேசமயம் பளிச்சென்று பதில் சொன்னார் ராமண்ண ராஜா. அதில் ஒரு அசாத்ய அலட்சியம்.

"மாமா..."

"சாரி... நான் ரொம்ப பிஸி..."

"........................"

"இன்னுமா நீ கிளம்பலை?"

மோகனும் சங்கடத்தோடு நாற்காலியை விட்டு எழுந்தான்.

"இனிமே உள்ள வரும்போது கதவைத் தட்டி வரலாமான்னு கேட்டுட்டு வா..."

எழுந்து நின்றவனை மீண்டும் வார்த்தை கொண்டு அறைந்தவர் அப்படியே அடுத்த ஒரு மூவுக்கு தயாரானார்.

"சாரி மாமா..."

"நீ போகலாம்..."

அவன் அங்கிருந்து புறப்பட்டான்.

அறையை விட்டு வெளியேறி ஜமீன் மாளிகையின் காரிடாரில் நடக்கும்போது 'இந்த மாமா ஏன் இப்படி நடந்துக்கறாருன்னு தெரியலியே...' என்கிற கேள்வியில் விழுந்திருந்தான்.

எதிரில் மீண்டும் தர்மா.

ஜமீன் மாளிகையின் மூத்த தாதி.

"என்ன தம்பி, ஐயாவைப் பார்த்துட்டு வர்றீங்களா?"

"ஆமாம் தர்மா. ஏன் பார்த்தோம்னு இருக்கு. மாமா இப்பல்லாம் முகம் கொடுத்தே பேசமாட்டேங்கறாரு."

"அது ஏன்னு புரியலியா?"

"ஏன்...?"

"காலேஜ்லாம் போய் படிச்சிருக்கீங்க. இந்த காலத்து புள்ள. உங்களால யூகிக்க முடியலியா?"



"ஸ்டேட்டஸ் பாக்கறாரா?"

"அதுவும் ஒரு காரணம்."

"அப்ப வேற காரணமும் இருக்கா...?"

"ஆமாம். அவர் காவ்யாவை கப்பலூர் ஜமீனுக்கு கல்யாணம் செய்து கொடுக்க ஆசைப்பட்றார்."

"அவர் ஆசைப்படலாம். காவ்யா சம்மதிக்கணுமே."

"சம்மதிக்க வைப்பார். ஏன்னா அவர்கிட்ட பணம் இருக்கு, ஆஸ்தி இருக்கு..."

"என்கிட்ட அதெல்லாம் இல்லேன்னு சொல்லாம சொல்றீங்களா?"

"அதானே உண்மை?"

"நான் முறைப்பையன்..."

"ஆனா உங்க அப்பா ஜமீன்தார் இல்லியே. இந்த ஜமீன்ல கணக்குப் பிள்ளையா இருந்தவர்தானே?"

"அந்த கணக்கு பிள்ளையைதான் மாப்ளையா ஏத்துகிட்டாரே—அப்புறம் என்ன?"

"அதுக்கு காரணம் வேற தம்பி. புரிஞ்சுக்குங்க. உங்கம்மா, உங்கப்பாவோட ஓடிப் போய் அவரோட கிராமத்துல வாழ்ந்தா அது ஜமீனுக்குக் கேவலம்னு உங்கப்பாவையே விலைக்கு வாங்கி இந்த ஜமீன் மாளிகைல அவரைக் கட்டிப் போட்டுட்டார். இது புரியலியா?"

"அப்படின்னா என்னை எதுக்கு படிக்க வைக்கணும்? அதுவும் ஐஐடிலல்லாம்...?"

"சரியான பித்துக்குளி தம்பி நீங்க... சிங்காரிச்சு நாலுபேர் முன்ன மணைல உக்காத்தி வெச்சு மூக்கை அறுக்கறதுங்கறது சிலரோட பழக்கம்... உங்களையும்..."

www.cleanindians.com

"என்னையும்...?"

"வேண்டாம்... இதுக்கு மேல என் வாயைக் கிண்டாதீங்க..."

"இப்ப சொல்லப் போறீங்களா இல்லையா?"

"சுருக்கமா சொல்றேன். காவ்யா உங்களுக்குக் கிடையாது. படிப்பு மட்டும்தான் உங்ககிட்ட இருக்கு. அதுவும் ஜமீன்தார் போட்ட பிச்சை. ஆனா அதை உங்களுக்குக் கொடுத்த ஒரு காலேஜ் கப்பலூர் ஜமீனுக்குச் சொந்தம். இதுல யார் பெரியவங்க?"

"மண்ணாங்கட்டி... காசு பணத்தைவிட அன்பும் பாசமும்தான் பெரிசு தர்மா."

"அதெல்லாம் காசு பணமில்லாத ஏழைகளுக்காகவே அவங்க சமாதானத்துக்கு சொன்ன விஷயம் தம்பி."

www.cleanindians.com

"நானும் வெளிநாடு போய் லட்ச லட்சமா சம்பாதிக்கப் போறேன் தர்மா. எனக்கு வேலை கிடைச்சாச்சு."

"இவர் கொடுத்த படிப்பு—அதால வர்ற வேலை தானே?"

"புடலங்கா... இந்த ஜமீன் சொத்து மட்டும் என்ன இவர் சொந்தமா சம்பாதிச்சதா? தலைமுறை தலைமுறையா வர்றதுதானே... ஆனா நான் உழைச்சு சம்பாதிக்கப் போறேன். அதால காவ்யாவை கண்கலங்காம வெச்சு காப்பாத்துவேன்."

"இப்ப என்ன அவ கலங்கிகிட்டா இருக்கா... உக்காந்து காலாட்டிகிட்டு சாப்பிட்டாலே இன்னும் பத்து தலைமுறைக்கு தாங்கும் தம்பி."

"அப்ப என்னதான் முடிவு?"



"போய் வேலையைப் பாருங்க. இந்த நாட்டுல எவ்வளவோ பெண்கள். அவங்கள்ள யாரையாவது கல்யாணம் பண்ணிகிட்டு சந்தோஷமா இருங்க. காவ்யா கிடைக்கமாட்டா. அவளுக்காக காத்திருந்து ஏமாறாதீங்க."

"திரும்ப சொல்றேன். இதுக்குக் காவ்யா ஒருநாளும் சம்மதிக்கமாட்டா."

"உங்களுக்குக் காவ்யாவைப் பத்தி ரொம்ப தெரியுமோ?"

"நிச்சயமா..."

"வேண்டாம் தம்பி. சில உண்மைகள் தெரிஞ்சா மனசு நொறுங்கிப் போயிடும். பேசாம கிளம்புங்க..."

தர்மா ஒருவித தீர்மானத்தோடு பேசினான்.

"என்ன உண்மை தர்மா... என்ன அது?"

மோகனும் கழுத்து நரம்பு புடைக்க எம்பினான்.

"மனசு தாங்காது தம்பி உங்களுக்கு..."

"தாங்காமதான் பேசிகிட்டிருக்கேனா?"

"காவ்யாவே உங்ககிட்ட 'இனி இங்க அவரை வரவேண்டாம்னு சொல்லு'ன்னா... போதுமா?"

தர்மா முத்தாய்ப்பாக செருப்பாலடித்த மாதிரி சொல்ல அவனுக்குப் பொட்டில் சுட்டது அந்த வார்த்தைகள்.

"நிஜமாவா தர்மா?" என்று கேட்டான் காற்றுக் குரலில். பதிலுக்கு வார்த்தையால் ஆமோதிக்காமல் விலகத் தொடங்கினான்.

மோகனுக்கு நின்ற இடம் நடுங்கியது!

## 3

"ஒரு எழுத்தாளனாக ஒரு நாவல் எழுதத்தான் நான் மாயமான் மலைக்குச் சென்றேன். ஆனால் நான் கற்பனை செய்து எழுத நினைத்த கதையைவிட நம்ப முடியாத விஷயங்கள் அந்த மலை முழுக்க இருப்பதை அங்கே பார்த்தேன்.

இதை நான் சொன்னால் யாரும் நம்ப மறுக்கிறார்கள். 'இந்த பாற்கடல் மாதவன் ஒரு சராசரி எழுத்தாளர். இவரது கதைகள் எல்லாம் நம்ப முடியாத ஒரு ஃபான்டசி டைப். எனவே இவர் தன் கதைக்கு மதிப்பு சேர்ப்பதற்காக பொய் சொல்கிறார்' என்கிறார்கள்.

ஒருமுறை மாயமான் மலைப் பக்கம் போய் சில தினங்கள் தங்கிப் பாருங்கள். நான் சொல்வது புரியும். ஒரு இடத்தில் புலியும் மானும் நாய்க்குட்டிகள் இரண்டு விளையாடுவது போல விளையாடிக் கொண்டிருந்தன. பக்கத்திலேயே சற்றுத் தள்ளி ஒரு மனிதர் அமர்ந்து நான் கதை எழுதுகிற மாதிரி எதையோ எழுதிக் கொண்டிருந்தார்.

அந்தக் காட்சி இப்பொழுதும் என் மனதில் அப்படியே இருக்கிறது. அது மட்டுமல்ல... அவருக்குப் பக்கத்தில் ஒரு பெரிய மாமரம். எழுதிக் கொண்டிருந்த அந்த மனிதர் அந்த மரத்திடம் சென்று 'காளா... நல்ல பழமா ஒரு பழம் கொடு. பசிக்கிறது!' என்றார்.

உடனே மரத்தின் ஒரு உச்சாணிக் கிளையில் மஞ்சளாய்ப் பழுத்திருந்த ஒரு மாம்பழம் அப்படியே உதிர்ந்து கீழே விழுந்தது. அவரும் நன்றியோடு அந்த மரத்தை தட்டிக் கொடுத்துவிட்டு அந்தப் பழத்தை எடுத்து சாப்பிட்டார்.



சத்தியமாக சொல்கிறேன். இது நம்ப முடியாத கற்பனை இல்லை. நான் கண்ணால் பார்த்த நிஜம்!"

—பேட்டியில் பாற்கடல் மாதவன்.

சோர்ந்து போய் அமர்ந்திருந்தான் மோகன்.

எதிரில் டீ.வியில் ஜாக்ரஃபி சேனல்! வரிக்குதிரை ஒன்று புஷ்டியோடு பார்க்க வெகு அழகாக புல் மேய்ந்து கொண்டிருந்தது. ஒரு மறைவில் சிட்டாப் புலி ஒன்று அதை ரகசியமாய்ப் பார்த்தபடி அதை நோக்கி அடி எடுத்து வைத்துக் கொண்டிருந்தது.

அதிகபட்சம் பத்து நிமிஷம். அந்த வரிக்குதிரை புலியின் வயிற்றுக்குள் அடங்கிவிடும். அது எங்கே ஓட முயன்றாலும் தப்ப முடியாது. வேண்டுமானால் ஒருமுறை தப்பலாம். இரண்டாவது முறையும் தப்பலாம். அவ்வளவு தான். இன்றில்லை நாளை அந்த குதிரை அந்தப் புலிக்கோ இல்லை அதன் கூட்டத்திற்கோதான்...

எப்பொழுதும் வலுத்ததே ஜெயித்துக் கொண்டிருக்கிறது இந்த உலகில்... மற்றவை அடங்கித்தான் போக வேண்டும். இல்லாவிட்டால் அழிந்து போக வேண்டும். அந்தக் குதிரை சாகப் போவதைப் பார்க்கப் பிடிக்காமல் ரிமோட்டைத் தட்டி வேறு சேனலுக்குச் சென்றான்.

சினிமாப் பாட்டு!

கதாநாயகனும் கதாநாயகியும் ஒரு பத்து பதினைந்து எக்ஸ்ட்ரா நடிகர் நடிகைகளுடன் காதல் செய்து பாடிக் கொண்டிருந்தனர்.

உலகில் எந்த ஒரு காதலராவது இப்படி பத்து பேர் சுற்றி இருக்க ஆடிப் பாடுவார்களா...? காதல் என்பது எத்தனை பிரைவசியான விஷயம்?

ஆனால் இந்தப் பொய்தான் இன்றைய சினிமாவில் இந்தியாவின் எல்லா மொழிச் சினிமாவிலும் காட்சிப் படுத்தப்பட்டு வருகிறது.

யாரும் அதை நம்ப முடியவில்லை என்று ஒதுக்கித் தள்ளவில்லை.

வேடிக்கையாக இருந்தது. ஒரு பக்கம் காணச் சகிக்க முடியாத நிஜம்... இன்னொரு பக்கம் பொய். இரண்டும் ஒரே பெட்டியில்தான் பார்வையாகிறது.

பார்ப்பவர்கள்தான் பாவம் செய்தவர்களோ?

ஆஃப் செய்துவிட்டு எழுந்திருந்தான். ஜமீனுக்கு சொந்தமான எஸ்டேட்டின் மேஸ்திரி வேலாயுதம் வந்து கொண்டிருந்தார். நெருங்கியவர் பெரிய கும்பிடு போட்டார்.

"என்ன மேஸ்திரி..."

"துப்பாக்கி கிடைச்சிச்சுங்களா?"

"அது... நான் இன்னும் மாமாவைப் போய் பார்க்கல மேஸ்திரி..."—பொய் சொன்னான் மோகன்.

மேஸ்திரி முகத்திலும் மாற்றங்கள்.

"ஃபாரஸ்ட் ஆபீசருங்ககிட்ட கம்ப்ளைண்ட் கொடுங்களேன்..."

"ஏன் தம்பி... ராஜா துப்பாக்கி தரமாட்டேன்னுட்டாரா?"—மேஸ்திரி அவன் முதலில் சொன்னது பொய் என்பதுபோல கேட்ட கேள்வி அவனை நெளியச் செய்தது.

"இல்ல... அப்படியெல்லாம் இல்ல..."

"முந்தி எல்லாம் எஸ்டேட்ல ஒரு பிரச்சினைன்னா அவரே இறங்கிடுவாரு. இப்பல்லாம் சதா குடிச்சுட்டு

www.cleanindians.com



ஏதோ சிந்தனைலயே இருக்காரு. எஸ்டேட்டைக்கூட விக்கப் போறாருன்னு கேள்விப்பட்டேன். ஒரு மாசமா அவர் போக்கே புரியமாட்டேங்குது."

"அப்படியா?"

"என்ன தம்பி அப்படி கேட்டுட்டீங்க. அவரோட மருமகன் நீங்க உங்களுக்குத் தெரியாதா?"

மேஸ்திரியின் பதில் கேள்வி மோகனை மேலும் நெளிய வைத்தது. நெளிந்தான். மேஸ்த்ரியும் அவனை ஒரு பார்வை பார்த்தார்.

அது உனக்கும் எனக்கும் பெரிய வித்தியாசமில்லை என்று சொல்லுகிற மாதிரி இருந்தது.

அதுதானே உண்மையும்கூட...

"சரி தம்பி... நான் போய் மானூர்ல இருக்கற ஜஹாங்கிர்ங்கற வேட்டைக்காரனைப் பாக்கறேன். சர்க்கஸ்காரங்களுக்கு மிருகங்களைப் பிடிச்சுக் கொடுக்கறதுதான் அவனோட வேலை. அவன்தான் இந்த வேலைக்குத் தோது. ஆனா அந்தப் புலி பிடிபட்றவரை யாரும் வேலைக்கு வரப்போறது கிடையாது. தீனதயாளன் அய்யா போனதுல இருந்து ஒருத்தருக்கும் மனசு சரியில்லை.

ராஜாவோ எனக்கென்னன்னு இருக்காரு... எங்க போய் முடியப் போவுதோ தெரியல."

மேஸ்த்ரி அலுப்பு—ஆயாசம்—தீர்மானம் என்று கவலையாக பேசியபடி கிளம்பிச் சென்றார்.

மோகனுக்கு நெஞ்சைப் பிசைந்தது.

ஆஸ்திரேலியா—அந்த நாட்டில் வேலை எல்லாமே ஒரு LKG லெவலுக்குப் போய்விட்டது.

காவ்யா ஒரு பக்கம் அவன் மனசை சதுரம் சதுரமாகக் கீறுவது போலவும், அவன் செத்துவிடப் போவது போலவும் கூடத் தோன்றியது.

கையில் காபியுடன் மங்களாயி வந்தாள்.

அம்மா.

ராமண்ண ராஜாவின் தங்கை.

அப்பா இறந்துவிட்டதால் விதவை.

"என்னடா யோசனை பலமா இருக்கு?"

"நாம மோசம் போய்ட்டோம்மா..."

"ஏன்... உன் மாமா ஏதாவது சொன்னாரா?"

"சொன்னாரா...? கொன்னுட்டாரு!"

"அவர் அப்படித்தான். மனசுல வெச்சுக்காதே. ஆமா காவ்யாவைப் பார்த்தியா?"

"பார்த்தேன். 'உன்னைப் பிடிக்கலே'ன்னு நேர்ல சொன்னாகூட பரவால்ல. தாங்கியிருப்பேன். அந்த வேலைக்காரி தர்மா வந்து சொல்றா..."

www.cleanindians.com

"என்னன்னு...?"

"வேண்டாம்... விடு. இனியும் நாம் இங்க இருக்க வேண்டாம்."

"உன் அப்பாவும் ஆரம்பத்துல இப்படித்தான் பேசினார்."

அவன் ஆச்சரியமானான். அவள் தொடர்ந்தாள்.

"ஆனா நான்தான் தடுத்தேன். இங்கேயே வாழ்ந்து காட்ட முடியும்னேன். அப்ப நீ என் வயித்துல இருந்தே. உன்னை நம்பித்தான் அப்படிச் சொன்னேன்."

"மங்கம்மா சபதம் மாதிரி இது உன்னோட சபதமா?"

"எப்படி வேணா வெச்சுக்கோ. நானும் உன் அப்பாவும் எங்கையாவது ஓடிப் போயிருந்தாலும் வாழ்ந்திருக்க முடியாது. உன் மாமா வாழவிட்டுருக்க மாட்டாரு."



மங்களாயி புதுப்புது உண்மைகளை சொல்லத் தொடங்கினாள்.

"அப்ப பயந்துகிட்டு இங்கயே இருந்துட்டியா?"

"இருக்க வைக்கப்பட்டோம். என் காதலுக்கு நான் கொடுத்த விலை பத்தியெல்லாம் உனக்கு எதுவும் தெரியாது."

"எல்லாமே புதுமையா இருக்கும்மா. சாதாரணமா காதலிச்சு கல்யாணம் செய்துகிட்டா மாமா மாதிரி அந்தஸ்த்துக் காச்சல் பிடிச்ச ஜென்மங்க வீட்டை விட்டு துரத்தித்தான் அடிப்பாங்க. ஆனா இங்க தலைகீழா இருக்குதே...?"

"காரணம் இருக்கு மோகன். நான் போய்ட்டா இந்த ஜமீனோட செல்வமெல்லாம் போய்டும்னு ஒரு சாமியார் சொன்னதுதான் காரணம்."

"என்னம்மா இது புதுக்கதை..."

"கதை இல்லை. உண்மை! நான் போய்ட்டா செல்வம் போகுமா போகாதா அது எனக்குத் தெரியாது. ஆனா அந்த சாமியார் சொன்னதுதான் உண்மைன்னு சொன்னேன்."

"என்ன பேத்தல் இதெல்லாம்... எப்படி இதை எல்லாம் மாமா நம்பறாரு?"

"அதான் உன் மாமா..."

"அவர் நம்பிக்கைக்காக நீயும் இங்க இருக்கணுமா?"

"இது எனக்கு ஆரம்பத்துல தெரியாது. பின்னாலதான் தெரியவந்தது. அப்ப உன் அப்பா என்னைவிட்டு போய் சேர்ந்துட்டாரு. நீ படிச்சுகிட்டிருந்தே. அந்த நிலைல நான் என்ன செய்ய முடியும்... சொல்லு பார்ப்போம்."

"என்னம்மா நீ... இப்ப மாமா என்ன தெரியுமா சொல்றாரு."

"இருந்தா இரு- போனா போங்கற மாதிரி பேசறாரா?"

"உனக்கு புரிஞ்சா சரி_"

"காவ்யாவும் அவர் பக்கம் சாஞ்சுட்டாளா?"

"அப்படித்தான் தெரியுது. இல்லேன்னா தர்மா ஏன் அப்படிப் பேசறா?"

"அவசரப்படாதே... தர்மா என் அண்ணன்கிட்ட வேலை பாக்கறவ. அவ பொய்கூட சொல்லலாம். காவ்யாவே நேர்ல சொல்லட்டும். அப்ப யோசிப்போம்."

"அது சரி- இப்ப நீ இந்த ஜமீன் மாளிகையை விட்டு வெளியேறினா இவங்க செல்வம்லாம் போய்டாதா?"

"முந்தி நான் சுமங்கலி. ஆனா இப்ப விதவைப்பா. அதனால போகட்டும்னு நினைக்கலாம் இல்லியா...?"

"உன் கருத்தைக் கேட்டா சிரிக்கத்தாம்மா தோணுது. இன்சாட், இன்டர்நெட்டுன்னு உலகமே உள்ளங்கைல இருக்கற இந்த காலத்துலையும் இப்படி எல்லாம் நம்பிக்கைங்க இருக்கறத நினைச்சா ஆச்சரியமாத்தான் இருக்கு-"

மோகன் அலுத்துக் கொண்டான். திரும்பவும் TV அருகே வந்து ரிமோட்டை எடுத்து அதை ஆன் செய்தான். திரையில் 'இன்னும் சில நிமிடங்களில் அதிர்ச்சியும் ஆச்சரியமும் தரும் எழுத்தாளர் பாற்கடல் மாதவனின் பேட்டியைக் காணத் தவறாதீர்கள்' என்கிற ஸ்க்ரோலிங் லெட்டர்ஸ்.

பாற்கடல் மாதவன் பற்றி மோகனும் கேள்விப் பட்டிருக்கிறான்.

www.cleanindians.com



எல்லோரும் குடும்ப உறவுகளை வைத்துக் கதை எழுதும்போது மாதவன் மட்டும் வேறுபட்டு நம்ப முடியாத விஷயங்களை வைத்தே கதை எழுதுபவர். அவர் கதைகளில் மரங்கள் நடக்கும். மிருகங்கள் பேசும். தேவதைகள் மனித வடிவில் வந்து வாழ்க்கை நடத்துவார்கள். ஒரு சதம்கூட நம்ப முடியாது. ஆனால் படிக்க படுசுவாரஸ்யமாக இருக்கும்.

ஆரம்ப காலத்தில் அவரை 'சிறுவர்களுக்குக் கதை எழுதத்தான் அவர் லாயக்கு' என்று சொன்ன பலர் பின்னாளில் அவரை மெல்ல ஒப்புக் கொண்டார்கள்.

அதிலும் அவர் எழுதிய 'பாற்கடலும் பகவதி தேவியும்' என்னும் நாவல் மிக மிகப் பிரபலம். மோகனும் அவரைப் பற்றிய நினைவில் விழுந்தவனாக திரையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பேட்டியும் ஆரம்பமானது.

"வணக்கம்."—இது பேட்டி காண்பவர்.

"வணக்கம்."—இது பாற்கடல் மாதவன். ஒல்லியாக ஈர்க்குச்சியில் செய்த உடம்பு, பாகவதர் கிராப்பு, காந்திக் கண்ணாடி. காவி ஜிப்பா, வெள்ளை பைஜாமா, கழுத்தில் ஒரே ஒரு ருத்ராட்சக் கொட்டை கட்டிய கறுப்புக் கயிறு.

'இவர்தான் பாற்கடல் மாதவனா?'

"மாயமான் மலைக்கு ஒரு நாவல் எழுதப் போனதா சொன்ன நீங்க அங்க நிறைய அதிசயங்களைப் பார்த்ததா சொன்னீங்க. அதுபற்றி நேயர்களுக்குச் சொல்ல முடியுமா?"

"சொல்றேன். முதல்ல மாயமான் மலைபற்றி சொல்லிட்றேன். நம்ம இந்திய நாட்டுல எவ்வளவோ மலைகள். அதுல இமய மலைதான் மிக உயர்ந்த மலைன்னு சொல்றாங்க. அதேபோல நம்ம தமிழ்நாட்டுல

சேர்வராயன் மலை, கொல்லிமலை, மேற்கு தொடர்ச்சி மலை, அதுல சதுரகிரி மலை, பொதிகை மலை, அப்புறமா ஏலகிரி மலை, வெள்ளியங்கிரி மலை, நீலகிரி மலை, முதுமலைன்னு எவ்வளவோ மலைகள்... இது இல்லாம பாம்பு மலை, பச்சை மலை, நாக மலை, சிறு மலை, கல்ராயன் மலைன்னு மாவட்ட வாரியா கொஞ்சம் மலைங்க..."

பாற்கடல் மாதவன் விஸ்தாரமாக சொல்லிக் கொண்டே சென்றார்.

"நாங்க மாயமான் மலை பத்திதான் கேட்டோம்."—பேட்டியாளரும் கத்தரித்தார்.

"நானும் அங்கதான் வரேன். மாயமான் மலைன்னு ஒண்ணும் தனியா இல்லை. அது இத்தனை மலைகள்ள பொதிகை மலைல இருக்கற ஒரு பகுதி. இங்கதான் பாண தீர்த்தம் இருக்கு. ரொம்ப பேருக்கு இது மாயமான் மலைன்னே தெரியாது. இதை பாபநாசம் பகுதியைச் சேர்ந்த காரையார் மலைப்பகுதியாதான் நினைக்கறாங்க. அந்த மலைப்பகுதியில போகக் கஷ்டமான ஒரு இடத்துல இருக்கு இந்த மாயமான் மலை...

கூட்டம் கூட்டமா மான்கள் மேஞ்சுகிட்டிருக்கற மாதிரி இருக்கும். கிட்டப் போய் பார்த்தா ஒரு மான்கூட இருக்காது. அதனால இந்த பேர் வந்ததா சொல்வாங்க!"

"சரி அதுக்கு எதுக்கு இத்தனை மலைகளைப் பத்தி முதல்ல சொன்னீங்க?"

"காரணமாத்தான். உலகத்துலையே சீனாவுக்குப் பிறகு இந்த மலைகள்லதான் மூலிகை பயிராகுது. மூலிகைன்னா சாதாரண மூலிகை இல்ல. வெறும் மோந்து பார்த்தா போதும்... தூக்கம் வந்துடும். ஒரு பத்து மணி நேரம் எழுந்திருக்க மாட்டோம். அப்படிப்பட்ட மூலிகைல



இருந்து இரும்பை இளக்கி துளை போட்ற மூலிகை எல்லாம் இந்த மலைல இருக்கு."

"மலைன்னா மூலிகை இருக்கத்தானே செய்யும்?"

"அதுதான் தப்புங்கறது. எல்லா மலையும் எல்லா மூலிகையும் கிடைச்சுடாது. அதுலையும் மாயமான் மலைல கிடைக்கற மாதிரி மூலிகைகள் உலகத்துல எங்கையுமே கிடைக்காது."

"காரணம்?"

"முதல் காரணம் மண் வாகு. அடுத்த காரணம் சூரிய சந்திரக் கதிர்கள் அதன் மேல் படும் விதம். மூணாவது காரணம் கூடுதல் குறைவு இல்லாத சரியான மழை அளவு... நாலாவதா ஒரு காரணம் இருக்கு. அதுதான் முக்கியமான காரணம்."

"என்ன அது?"

"புராணத்துல தாருகா வனம் பத்தி கேள்விப் பட்டுருப்பீங்க..."

"தாருகாவனமா?"

"ஆமாம்... இந்த வனத்துலதான் சிவனுக்கு எதிரான தட்சன் யாகம் வளர்த்தான். சனகாதி முனிவர்கள் தவம் செய்தாங்க..."

"சிவன், தட்சன், சனகாதி முனிவர்கள்—இவர்களே கற்பனை... எல்லாம் புராண புருடான்னும் ஒரு கருத்து சொல்லப்பட்றப்போ இதை எப்படி நம்பறது, ஆதாரமிருக்கா?"

"என்கிட்ட நூல் ஆதாரம் இல்லை. ராமஜென்ம பூமியையே நம்பத் தயாரா இல்லாம கோர்ட்ல கேஸ் நடந்துகிட்டிருக்கு. அப்படி இருக்க இதைத்தான் தாருகா வனம்னு நான் சொன்னா யார் நம்பப் போறாங்க? ஆனா

www.deanindians.com

நான் அங்க போனப்போ அங்க எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை வெச்சு அது தாருகா வனமாத்தான் இருக்கணும்னு நம்பினேன்."

"அப்படி என்ன அனுபவம் உங்களுக்கு ஏற்பட்டது?"

"அங்க மரங்கள் பேசுது. ஒரு மரத்துகூட நான் பேசினேன். நம்புவீங்களா?"

"வீடியோ ஆதாரம் எதாவது இருக்கா...?"

"அதைக்கூட கிராஃபிக்ஸ் அது இதுன்னு சொல்லி நம்பாம போயிடுவீங்க. எனக்கும் நீங்கல்லாம் நம்பியா கணும்கற அவசியம் இல்லை."

"சரி.. வேற என்ன அதிசயத்தை எல்லாம் பார்த்தீங்க..."

"ஒரே நீர் நிலைல மானும் புலியும் தண்ணி குடிக்குது..."

"அப்புறம்?"

"அந்த காத்தை சுவாசிச்சாலே போதும்... பசியே எடுக்கமாட்டேங்குது..."

"அப்புறம்?"

"இப்பவும் அங்க பல முனிவர்கள் தவம் செய்துகிட்டு இருக்காங்க."

"நீங்க பார்த்தீங்களா?"

"பார்த்தேனாவா.. பேசவும் செய்தேன்."

"எப்படி இப்படி ஒரு பர்சன்ட் கூட நம்பமுடியாத விஷயங்களை உங்களால கொஞ்சமும் தயக்கமில்லாம சொல்ல முடியுது?"

"உண்மைகளைச் சொல்ல எதுக்கு தயங்கணும்?"

"உங்க மேல வாசகர்கள் கவனத்தைத் திருப்ப நீங்க இப்படியெல்லாம் சொல்றீங்கங்கற குற்றச்சாட்டுக்கு உங்க பதில்..."

www.cleanindians.com



"தாராளமா சொல்லிக்குங்க. முதல் முதலா பல உண்மைகளைச் சொன்ன முகம்மது நபியில இருந்து கலிலியோ வரை பலரை கல்லால அடிச்ச சமூகம்தானே இந்த மனுஷ சமூகம்?"

"அந்தக் காலமும் இந்தக் காலமும் ஒண்ணா? அதை எப்படி நீங்க இந்த விஞ்ஞான யுகத்தோட பொருத்திப் பார்க்கலாம்."

"நம்ப வேண்டிய விஷயத்துல அந்தக் கால மனிதர் களைவிட இந்தக் கால மனிதர்கள் ரொம்பவே பின்தங்க றாங்க. எல்லாத்துக்கும் விஞ்ஞான ஆதாரம் தேட்றது இப்ப வழக்கமா போச்சு."

"அதுல தப்பு என்ன?"

"ஒரு விஷயத்தை நீங்க புரிஞ்சுக்கணும். நேத்தும் சரி, இன்னிக்கும் சரி, நாளைக்கும் சரி நம்பிக்கைங்கறது உணர்வு சார்ந்த ஒரு விஷயம். ஆனா நிரூபணம்கறது புலன்கள் சார்ந்த ஒரு விஷயம்..."

"அதனால...?"

"உணர்வு சார்ந்த விஷயங்கள்ல நம்பிக்கை ரொம்ப முக்கியம்..."

"நீங்க முனிவர்களைப் பார்த்தது புலன் சார்ந்த விஷயம்தானே...?"

"நிச்சயமா!"

"அப்ப அவங்ககூட ஒரு போட்டோ எடுத்துகிட்டு வந்து காட்டலாமே..."

"அதை நீங்க யாரோ ஒரு குப்பன் சுப்பன்னு சொல்ல மாட்டீங்களா?"

"இருக்கலாமில்லியா?"

"இது சந்தேகம்..."

"சந்தேகப்பட்றது அப்ப தப்பா?"

பேட்டியாளரின் கேள்வியும், எழுத்தாளரின் பதிலும் மோகனுக்கு எரிச்சலைத் தந்தது.

'புல்ஷிட்!' என்றபடி TVஐ அணைத்தான்.

எழுந்தான்.

வெளியே வந்தான்.

ஜமீன் மாளிகையின் ஒரு துண்டுப் பகுதிதான் அவனது ஜாகை. சுற்றிலும் பெரிய தோட்டம். அதில் அணில் விளையாட்டுக்கள். பன்னீர் மரம் ஜலதோஷம் வந்து தும்மினது போல நிறைய பூக்களை தரை முழுக்க உதிர்ந்திருந்தது.

மரத்தடியில் அவனது உபயோகத்திற்கான மாருதி கார். அதை நெருங்கிக் கிளப்பினான். வளைத்துத் திருப்பியபோது எதிரில் காவ்யா!

வாக்மேன் காதுகளோடு அவனைப் பார்த்து சிரித்தாள். எரிச்சலாக வந்தது. தர்மா சொன்னது ஒருமுறை ஞாபகத்தில் மின்னியது. அவளும் கைகளை நீட்டி காரை மறித்தாள். அவனும் கிரீச்சிட்டு நிறுத்தினான்.

"எங்க மோகன் கிளம்பிட்டே?"

"எதுக்கு கேக்கறே?"

"கோபமா? ரொம்ப லௌவ்டா இருக்கே உன் வாய்ஸ்."

"போதும் காவ்யா... நான் இப்ப கொஞ்சம் நெர்வசா இருக்கேன். வழிய விடு. உனக்குத்தான் கப்பலூர் ஜமீன்தார் தயாரா இருக்காரே. நான் எதுக்கு?"

"எதுக்கு... என்கிட்ட பி.ஏ.வா வேலைக்கு சேரவா?"



"வரப்போற புருஷன் உனக்கு பி.ஏ.வா இருக்கணும்னு நினைக்கறே... ரைட், நீதான் புரட்சித் தமிழ்ப் பெண் ஆச்சே?"

"இடியட்... ஒரு சின்ன டீசிங்கை உன்னால தாங்க முடியல பார். ஸ்டுப்பிட்."

சிணுங்கலோடு காரில் ஏறி அமர்ந்தாள். அப்படியே அந்த வேட்டைத் துப்பாக்கியையும் அவன் கண்முன் காட்டினாள்.

"இது...?"

"என் அப்பா உனக்குத் தரமாட்டேன்னு சொன்ன அதே கெய்ரோ துப்பாக்கி. முப்பது நாப்பது மான், ஐம்பது அறுபது முயல், எழுபது எண்பது காட்டெருமைன்னு காட்டு மிருகங்களுக்கு வைகுண்டத்தையும் சிவலோகத்தையும் காட்டின அதே கெய்ரோ துப்பாக்கி."

"அப்படின்னா...?"

"அப்பாகிட்ட சண்டை போட்டு எடுத்துகிட்டு வந்துருக்கேன். பிடி... காரை எடு. ஐ வில் ஆல் சோகம். அந்தப் புலியை என்னன்னு ஒரு கை பார்ப்போம்."

"காவ்யா..."

"என்னடா ஆள் நீ. தர்மா எங்கப்பாவோட சர்வண்ட். அவ பேச்சை எல்லாம் கேட்டு ஒரு சின்ன என்கொயரி கூட என்கிட்ட பண்ணாம..."

"சாரி காவ்யா... அப்ப நீ?"

"காரைக் கிளப்பு. நீ எப்பவும் என் மோகன். நான் உன்னோட காவ்யா."

"ஏய்ய்..."

"உணர்ச்சி வசப்படாதே. காரை ஸ்டார்ட் பண்ணு."

காரும் குதூகலமாக சீற ஆரம்பித்தது.

www.cleanindians.com

## 4

"என்னை எல்லோரும் நிறைய கடவுள் பக்தி உள்ள ஒருவன் என்றும், பழமைவாதி என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பொய். நான் ஒரு சந்தேகப் பேர்வழி.

அதிலும் கடவுள் நம்பிக்கை சார்ந்த விஷயங்களை என்னைப் போல கேள்வி கேட்டவர்கள் இருக்கவே முடியாது.

கடவுள் மனித வடிவத்தில் சித்திரிக்கப்படுவதையே என்னால் ஒப்புக்கொள்ள முடியாது.

மனிதர்களுக்கு வேண்டுமானால் அவர்கள் வடிவமும் உருவமும்தான் உலகிலேயே சுபீரியராகத் தோன்றலாம். எனக்கு அப்படியில்லை. மனிதனைவிட மேலான ஒரு உயிரினம் நிச்சயமாக இருக்கக்கூடும் என்று நான் நம்புகிறேன். அப்படியானால் அந்த உயிரினமாகக் கடவுள் இருப்பாரா என்று நீங்கள் கேட்கலாம்.

என்னைக் கேட்டால் தன்னைப் போல ஒரு உயிரினத்தை நிச்சயம் கடவுள் படைக்கவே மாட்டார். யாரும் தன் தலையில் தானே மண் அள்ளிப் போட்டுக் கொள்ளமாட்டார்கள். ஒரு மனிதனே தன்னைவிட அழகாகவோ, பலசாலியாகவோ இன்னொருவன் இருப்பதை விரும்பாதபோது கடவுள் விரும்புவாரா?

இதெல்லாம் என் கேள்விகள். இப்படிப்பட்டதுதான் என் சிந்தனையும்கூட... இந்த மாதிரியான என்

www.cleanindians.com



சிந்தனைகளுக்கு செவிசாய்க்க இங்கே யாருமே இல்லை. ஆனால் மாயமான் மலையில் பலர் இருந்தார்கள்.

நான் பேசப் பேச அவர்கள் படு குஷியாகிப் போனார்கள். பலமாய் கை தட்டி ஆர்ப்பரித்தார்கள்.

ஆனால் அவர்களில் ஒருவர் சொன்ன பதில்தான் எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. அவர் வரையில் கடவுள் என்பவர் ஒரு நிலைக் கண்ணாடியைப் போன்றவராம். நாம் தினமும் அதில் அவரைப் பார்க்கிறோமாம். நமக்குத் தான் அவரைத் தெரியவில்லையாம். ஆனால் அவருக்கு நம்மை நன்றாகத் தெரியுமாம்.

இந்த பதிலில் ஒரு சூட்சுமம் இருக்கிற மாதிரி தோன்றவில்லை?"

—பாற்கடல் மாதவனின் பேட்டியிலிருந்து.

எஸ்டேட் பங்களா முகப்பில் நல்ல கூட்டம்.

ஒரு ஓரத்தில் கமலா ஆரஞ்சுகள் குவிந்து கிடந்தன.

அதன்மேல் தென்னை மட்டைகளைப் போட்டு மூடியிருந்தும் சின்னப் பிள்ளைகள் துணியை விலக்கிப் பார்க்கிற மாதிரி அவை தெரிந்தன.

தேக்கி நிறுத்திய காரில் இருந்து அதைப் பார்த்தபடி இறங்கினான் மோகன். ஒரு துள்ளலோடு இறங்கினாள் காவ்யா.

ஓடிவந்த மேஸ்திரிக்குக் காவ்யாவை ஒரு க்ஷணம் அடையாளம் தெரியவில்லை.

"என்னம்மா இது... இப்படி ஆம்பளப்புள்ள மாதிரி தலை முடிய ஒட்ட வெட்டிட்டீங்க.." என்று வழிந்தார்.

"அது என் இஷ்டம். யாரைப் பார் என் தலை முடியைப் பத்தியே கேள்வி கேளுங்க. எரிச்சலா வருது... ஆமா, இப்ப அந்தப் புலி பத்தி எதாவது தகவல் உண்டா?"

"இங்கதான்மா சுத்திக்கிட்டிருக்கு..."

"இங்கதான்னா...? அக்யூரேட்டா சொல்லுங்க எதையும். அனுமானமா பேசறது அந்தக் காலம். நௌ வி ஹேவ் லாட் ஆஃப் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ்."

அவள் கோபமான பதில் மேஸ்திரியை தடுமாறச் செய்தது. மோகன் நடுவில் நுழைந்து தளர்த்த முயன்றான்.

"இன்னிக்கு அந்தப் புலியால ஒண்ணும் பிரச்சினை இல்லையே...?"

"இதுவரை எதுவுமில்லீங்க..."

"சரி... இப்ப அது எந்தப் பக்கம் இருக்கும்...?"

"வடக்க போயிருச்சுங்க... ஐம்பது அறுபது மைல்கூட ஒருநாள்ள அது போகும்."

"அது எனக்கும் தெரியும். வடக்குப் பக்கம் தானான்னு நீ உறுதிப்படுத்துனா போதும்."

"நிச்சயமா அந்தப் பக்கம் தாங்க... அதை எப்படியாவது சுட்டாதான் அடுத்து வேலைக்கே ஆள் வருவாங்க."

"புலம்பாதே... நான் பாத்துக்கறேன். அதுக்குத்தான் நாங்க வந்துருக்கோம். காவ்... போய் டிரெஸ் சேஞ் பண்ணிகிட்டு வா. ட்ரெக் ஷூ இருந்தா அதை போட்டுக்கோ..."

அவளும் உள் ஓடினாள்.

"தம்பி... பாப்பாவும் வருதுங்களா?"

"ஆமாம்."



"வேணாம் தம்பி. ஜமீன்தாருக்குத் தெரிஞ்சா என் வேலை போயிடும்."

"தெரிவிச்சாலும் வேலை போயிடும். வாயை மூடிகிட்டு சும்மா இரு."

"வேணாம் தம்பி. இது பொம்பளப் புள்ளைங்க. அதுவோ பொல்லாத புலி."

"இவ பொம்பளப் புள்ள இல்ல. பொம்பளப் புலி. நான்தான் கூடப் போறேனே... ஏய்யா அதெல்லாம் புரியாம பெரிய விஸ்வாசக்காரனாட்டம் உருகறே...?"

—மேஸ்திரியைக் கட்டிப் போட்டுவிட்டு மோகனும் உள்ளே நுழைந்தான்.

எஸ்டேட் பங்களாவின் ஏசி அறையில் வேட்டைக்காரன் விஷயங்கள் ஸ்டாக்கில் இருந்தன. அவைகளோடு சில மினரல் வாட்டர் பாட்டில்களையும் அள்ளிப் போட்டுக்கொண்டு மாருதியை ஓரம் கட்டி சுமோவை களத்தில் இறக்கியவனாய் எஸ்டேட் காட்டுக்குள் நுழைய ஆரம்பித்தான்.

www.cleanindians.com

**வ**கிடு எடுத்த மாதிரி தார்ச்சாலை.

அதில் ஏராள வளைவு நெளிவுகள்.

சுமோவும் பரம சுகமாக பயணித்தது.

மோகனிடம் ஒருவித புது உற்சாகம்.

"என்ன மோகன்... ரொம்ப குஷில இருக்கே?"

"அஃப்கோர்ஸ்... ஆனா சொல்லத் தெரியல காவ்யா."

"ஆமா அத்தைகிட்ட... ஐ மீன் உன் அம்மாகிட்ட அப்பா உன்னை அலட்சியப்படுத்தினதை சொன்னியா?"

"உம்..."

"ஏன் சொன்னே...? அவங்க ஃபீல் பண்ணுவாங்கல்ல?"

"பண்ணட்டும். காதலிச்சாங்கல்ல... அதுக்கு தண்டனை அனுபவிக்க வேண்டாம்."

"டேய் பையா... என்னடா உளறுறே? நான் கூடத்தான் உன்னை லவ்வறேன். அப்ப அதுக்கும் தண்டனை உண்டா?"

"உன் அப்பா பதில் சொல்ல வேண்டிய கேள்வி இது."

"ஸ்டுப்பிட் மாதிரி பேசாதே. அப்பா நல்லவர்தான். ஆனா அவருக்குள்ள சின்னதா ஒரு குழப்பம் இருக்கு, அதுவும் ஒரு மாசமாத்தான்!"

"குழப்பம் மட்டுமா... திமிறு, ஈகோ, தலைகனம்னு மத்ததை விட்டுட்டியே..."

"அது யார்கிட்ட இல்லை. நீ ரொம்ப யோக்ய மகாபிரபுவா?"

"சத்தியமா உன் அப்பா அளவு இல்லை..."

"போதும். அவரை விமர்ச்சிக்கறத விடு. அவர் மனக் குழப்பத்துக்கு ஒரு வழியை சொல்லு."

"குழப்பமே என்னன்னு தெரியாது. இதுல வழி எப்படி சொல்றது?"

"தான் கூடிய சீக்கிரம் எல்லா காசையும் இழந்து நடுத்தெருவுக்கு போயிடுவோம்னு பயப்பட்றார்."

"காரணம்?"

"அதுக்கான காரணம் அத்தைகிட்ட ஆரம்பிக்குது. நிலாத்தூர் ஜமீன்ல குடும்பத்துக்குள்ளறையேதான் கல்யாணம் செய்துக்குவாங்களாம். தப்பித் தவறி வெளிய யாரையாவது கல்யாணம் செய்துகிட்டா இந்த ஜமீனோட லக்ஷ்மிகடாட்சமே போயிடுமாம்."

www.cleanindians.com



"சூப்பர் பேத்தல். லட்சுமி என்ன சர்க்கஸ்காரியா? ஜம்ப் பண்ணிகிட்டே இருப்பாளாக்கும்?"

"பீ சீரியஸ்... இது தெரியாம நான் வேற தலைமுடியை வெட்டிகிட்டு வந்து நின்னுட்டேன். அவ்வளவுதான் இனி நிலாத்தூர் வம்சம்னு ஒரே புலம்பல்."

"அப்ப உங்க வம்ச சீக்ரெட் பொம்பளைங்க தலை முடிலதான் இருக்குதுன்னு சொல்."

"அப்படித்தானாம். பல தலைமுறைக்கு முந்தி யாரோ ஒரு சாமியார் நிலாத்தூர் ஜமீனுக்கு வந்திருந்தாராம். அப்ப ஜமீனும் பஞ்சத்துல அடிபட்டுக் கிடந்ததாம். அவர் ஒரு மூலிகை கொடுத்து சாப்பிடச் சொன்னாராம். அதைச் சாப்ட்டா தலைமுடி நல்லா வளருமாம். அப்படி தலை முடி வளர்ந்தாலே போதும்... பரம்பரை தரித்திரம் நீங்கிடும்னு சொன்னாராம்."

"என்ன காவ்யா... சொல்லும்போது உனக்கே பயங்கர கேனத்தனமா இல்லை?"

"காதுல விழுந்ததைச் சொல்லும்போது குறுக்க பேசாதே."

"சரி சொல்லு... அவ்வளவுதானா? இல்லை இன்னும் இருக்கா?"

"இருக்கு... அப்பதான் அவர் சொன்னாராம், எந்த காரணம் கொண்டும் நீங்க உங்க குடும்ப சம்பந்தங்களை அந்நியர்கள்கிட்ட வெச்சுக்கக் கூடாதுன்னு..."

"அப்ப இது சாமியார் பத்த வெச்ச நெருப்புன்னு சொல்."

"ஆமாம்... அதனாலதான் என் அத்தை அதாவது உன் அம்மா அதைமீறி காதலிச்சு கல்யாணம் செய்துகிட்டப் போ என் அப்பாவுல இருந்து தாத்தாவரை எல்லாரும் பதறிப் போய்ட்டாங்களாம்."

"ஒரு சாமியாருக்கு இவ்வளவு சக்தியா... ஆமா உங்கப்பா தலைல மூளைதான் இருக்கா இல்லை காலிஃப்ளவர் எதாவது இருக்கா...?"

"நான் அந்த காலிஃப்ளவர்கூட அவர் தலைல இல்லேன்னு நினைக்கறேன். இல்லேன்னா நான் பாப் வெட்டிகிட்டதுக்காக உயிரே போய்ட்ட மாதிரி துடிச்சுப் போவாரா? உன்கிட்டையும் மூணாம் மனுஷன் மாதிரி நடந்துக்குவாரா?"

"உனக்கு இதை எல்லாம் யார் சொன்னது?"

"வேற யார்... தர்மாதான்!"

சுமோ சீறிக் கொண்டிருந்தது. மோகன் காவ்யாவின் அருகாமையாலும், மனம்விட்ட பேச்சாலும் லேசாயிருந்தான். ஒரு சிகரெட்டை எடுத்து பற்றவைத்துக் கொண்டால் தேவலை என்று தோன்றியது. காரின் ஏ.சி. குளிர் வேறு உடம்பில் லேசான சோம்பலை உருவாக்கப் பார்த்தது.

டேஷ் போர்டைப் பார்த்தான். அவன் பார்ப்பதை வைத்து காவ்யாவும் பார்த்தாள். அங்கே ஒரு சிகரெட் பாக்கெட். சடாரென்று புரிந்தவள்போல் அதை எடுத்து ஜன்னல் வழியாக வெளியே எரிந்தாள்.

"ஏய் ஏய்..."

அவனும் கூவலோடு பிரேக்கடிக்க கிரீச்சிட்டு நின்றது அந்த வெள்ளைச் செவ்வக வாகனம். மண் சாலையிலும் அழுத்தமாய் டயர் அச்சுக் கோடுகள்.

சுமோவை நிறுத்திய மோகன் கதவைத் திறந்து கொண்டு இறங்கப் பார்த்தான். சட்டென்று காலரைப் பிடித்து "பேசாம உக்கார். தூக்கி எரிஞ்ச அதை எடுக்கப் போனே... அப்படியே போயிடணும்."



"ப்ளீஸ் காவ்யா. சொன்னா கேளு. ரொம்ப டல்லா இருக்கு."

"அப்படியா... இரு சூடேத்தறேன்..."

சொன்ன மறுநொடி அப்படியே அவன்மேல் விழுந்தவள் அவனது கோதுமை நிற முகத்தில் சதைக்கதுப்பான கன்னத்தில் அழுத்தமாய் தன் உதடுகளைப் பதித்தாள். மார்பும் அவன் தோள்மேல் வெண்ணெய்ப் பந்தாய் அமுங்கியது. இரண்டு நிமிடம்வரை அந்த அணைப்பை நீட்டித்தவள் மெல்ல விலகி நிமிர்ந்து அமர்ந்தாள்.

"இப்ப இன்னும் குளிருது..."—மோகன் கண்களைச் சிமிட்டியபடியே கேலியாகச் சொன்னான். சொல்லும் போதே டோரை வேகமாய்த் திறந்தவன் ஒரு பொட்டலம் போல் உருண்டு சாலையில் விழுந்தான். பின் எழுந்தான். அவள் சிகரெட்டை வீசி எரிந்த பகுதி நோக்கி ஓடினான்.

"மோகன் டோன்ட் கோ... ஸ்டாப்."

காவ்யா கத்தினாள். அவன் "சாரி... வெரி சாரி." என்று பதிலுக்குக் கத்திக்கொண்டே சுற்றிச் சுற்றிப் பார்த்து சிகரெட் பாக்கெட்டை தேட ஆரம்பித்தான்.

அதுவும் பளிச்சென்று கண்ணில் பட்டுத் தொலைத்தது. பாய்ந்து சென்று எடுத்தான். முதல் காரியமாக அதன் பாக்கெட்டில் இருந்து ஒரு சிகரெட்டை உருவி வாயில் செருகிக் கொண்டான். நல்லவேளை பேண்ட் பாக்கெட்டிலேயே இருந்தது லைட்டர்.

'ஸ்ணுக்!—அவனது மோதிர விரலின் தூண்டலில் அதில் ஒரு தீபச்சுடர். அது சிகரெட் நுனியை தீக்கங்காக்கியது. உதட்டின் பிரிவில் புகையும் கசிந்தது. அப்படியே சாவதானமாக நடந்துவரத் தொடங்கினான்.

பார்த்துக்கொண்டே இருந்த காவ்யாவுக்குள் அவனது மீறல் கோபக்கனலில் அவள் முகத்தைச் சிவக்கவிட்டிருந்தது.

www.cleanindians.com

சட்டென்று யூகித்தவள் சரேலென்று டிரைவிங் சீட்டில் அமர்ந்து சுமோவைக் கிளப்பினாள்.

"உனக்கு இனி இந்த கார்ல இடம் இல்லை... என் கிஸ்ஸையே கேவலப்படுத்திட்டியேடா பாவி..."

நரநரத்தபடி சுமோவை விரட்டிக்கொண்டு பறந்தாள். பின்னாலேயே துரத்திக்கொண்டு ஓடினான் மோகன்.

"ஏய் காவ்யா நில்லு... சொன்னா கேளு..."

அவன் கத்தல் காற்றில் கரைந்து போனது. அவனது ஓட்டமும் ஒரு முடிவுக்கு வந்து நின்றது.

அப்படி அவன் நின்ற இடத்தில் பக்கத்திலேயே 'பொதிகை மலைச்சரக எல்லை ஆரம்பம்.' என்கிற பெயர்ப் பலகை!

www.cleanindians.com

## 5

"கிட்டத்தட்ட பத்து நாட்கள் மாயமான் மலையில் தங்கியிருந்தேன். இரவு நேரங்களில் வெளிச்சத்திற்கு 'அந்தக ரக்ஷா' எனும் பெயர்கொண்ட ஒரு மூலிகைச் செடியை கொளுத்தியதில் அது மெர்க்குரி விளக்கு போல் ஒளியுடனும், மெழுகுபோல் நீண்ட நேரமும் எரிந்தது. அதன் புகை துளிகூட கண்ணைக் கரிக்க வில்லை. பல நேரங்களில் நடுச் சாமத்தில் சலங்கை கட்டி யாரோ நாட்டியம் ஆடுவது போலவும், யாரோ நட்டுவாங்கம் சொல்வது போலவும்கூட காதில் விழுந்து ஆச்சரியப்படுத்தியது. அந்தக் காட்டில் இரவு நேரத்தில் காவலுக்கு என்று யாரும் முழித்திருப்பது கிடையாது. மறுநாள் பகல் பொழுதில் காதில் விழுந்த விஷயம் பற்றி சொன்னபோது அது சிவதாண்டவமாக இருக்கும் என்று



சாதாரணமாக சொல்லிச் சென்றார்கள். என்னால் அதிர்ச்சியடைய மட்டும்தான் முடிந்தது. ஒன்று மட்டும் உறுதி. சதங்கை சப்தமும் நட்டுவாங்கக் குரலும் கேட்டது சத்தியத்திலும் சத்தியமான உண்மை. ஆனால் அது சிவதாண்டவம் என்பதில்தான் எனக்கு சற்று வேறுபாடு!"

—பாற்கடல் மாதவனின் பேட்டி பதில்களில் இருந்து

அந்த பெயர்ப் பலகையை மோகனும் பார்த்தான். இந்த மலைக் கூட்டத்தில் தானே யாருக்கும் தெரியாதபடி மாயமான் மலைப் பிரிவும் இருப்பதாக சில மணிகள் முன் டீ.வி.யில் ஒரு எழுத்தாளர் பேட்டி கொடுத்தது முதலில் ஞாபகத்திற்கு வந்தது.

பேட்டியா அது? சரியான உளறல்... அவ்வளவும் நெல்லே இல்லாத பதர். முத்தே இல்லாத சிப்பி. அந்த உளறலுக்கு சொந்தமான மலைப்பகுதி இதுதானா? கையைச் சுடப் பார்த்த சிகரெட்டை ஒரு உதறு உதறி விட்டு பின் ஒரு இழுப்பு இழுத்தவனாய் சுற்றி ஒரு பார்வை பார்த்தான்.

கும்மென்ற பச்சை வாசனை மூக்கில் ஏறியது. முதல் நாள் மழைநீர் சாலைப் பள்ளங்களில் தேங்கியிருக்க அதை தங்கள் பள்ளிக்கூட நீச்சல் குளமாய் கருதி நீந்தும் ஒரு சில தவளைக் குஞ்சுகள் மோகனை நிமிர்ந்து வெறித்துப் பார்த்தன.

சாலைக்கு இருபுறத்திலும் அடர்வான மரக்கூட்டம். ஒரு மரத்தைக்கூட இதற்கு முன் பார்த்ததில்லை என்கிற மாதிரியில் வினோத இலைகளும் கிளைகளுமாய் 'ஹோ'வென்று விரிந்து கிடந்தன. அதில் அங்கும் இங்குமாய் சில பறவைகள். அந்தப் பறவைகளின் பெயர்கூட மோகனுக்கு தெரிந்திருக்கவில்லை.

அதன் காரணமாய் இதுகூட தெரியாத நான் ஆஸ்திரேலியா போய் எதைக் கிழிக்கப் போகிறேனோ தெரியவில்லையே என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். அப்படியே காவ்யா விட்டுவிட்டுப் போன கோவம் கொஞ்சம்போல மூக்கு நுனியில் கொஞ்சமாய் சிவப்புச் சாந்து பூசியது.

எப்படியும் சிறிது தூரம் போய்விட்டு திரும்பி வருவாள் என்றுதான் தோன்றியது.

'அவளாக வரட்டும்... நானாக இங்கிருந்து ஒரு அடிகூட வைக்கமாட்டேன்.'

ஒரு முடிவோடு அருகில் இருந்த ஒரு பருத்த மரத்தின் அடிநிழலில் போய் அமர்ந்தான்.

மரக்கிளைகள் காற்றில் ஊஞ்சல் கணக்காய் ஆடிக் கொண்டிருந்தன.

ஒரு கிளையின் பருத்தத் தண்டுப் பகுதியில் அவன் எந்தப் புலியைத் தேடிக்கொண்டு கிளம்பினானோ அது படுத்திருந்தது!

வயிற்றுப் பக்கம் அதன் சுவாசம் காரணமாக விம்மச் சரிவுகள்.

வயலட் விழிகளோடு ரோஸ் நிறத்திலான நீண்ட நாக்கை தொங்கப் போட்டபடி அது படுத்திருந்தது. அதுவும் மோகனைப் பார்க்கவில்லை. மோகனும் அதைப் பார்க்கவில்லை!

புழுதியில் எதிரே சாலையே தெரியவில்லை. அத்தனை வேகம் காவ்யாவிடம். போதாக்குறைக்கு சாலை மழைநீர் இருபுறமும் குடை விரித்த மாதிரி சூழ்ந்ததில் கண்ணாடியில் எல்லாம் சிவப்பு மழைநீர்ப் பொட்டுகள்.

www.cleanindians.com



கிட்டத்தட்ட பதினைந்து கிலோ மீட்டருக்கு மேல் வந்துவிட்டதை டயல் மீட்டரைப் பார்த்து தெரிந்து கொண்டவள் போதும் என்கிற மாதிரி பிரேக்கை அழுத்தி காரை நிறுத்தினாள்.

அப்படியே கோபத்தோடு ஸ்டியரிங் மேல் விழுந்தாள். இதமான ஏ.சிஐ மீறி உடம்பில் உஷ்ணம்... பின்னங் கழுத்திலும் கசகசப்பு.

அதை கை கொண்டு ஒத்திப் பார்த்தவள் காரைவிட்டு இறங்கினாள். சாலையில் வந்த வழியைப் பார்த்தாள்.

மோகன் ஓட்டமாய் ஓடி வந்தபடி இருப்பான் என்று நம்பியது மனது.

'வா... வந்தாதான் உனக்கு புத்தி வரும்!'

கைகளை உயர்த்தி சோம்பல் முறித்தாள். அப்போது எதிரில் அவள் நின்று கொண்டிருக்கும் மண் சாலையில் சில மலைக் குடிப் பெண்கள் நடந்து வந்துகொண்டிருந்தனர். அவர்கள் தோள்களில் தேன் குடுவைகள். ஒரு தினுசாக கழுத்தை வளைத்துக் கட்டியிருக்கும் மாராப்பும் பாவாடையுமாக பார்க்க வித்தியாசமாக இருந்தார்கள்.

காவ்யாவையும் காரையும் நெருங்கியவர்கள் ஏதோ காணாததைக் கண்டதுபோலப் பார்த்தனர்.

"நீங்கள்ளாம் யார்... இந்த மலைக்காட்டைச் சேர்ந்தவங்களா?"

அவர்கள் தலை வெட்கத்துடன் ஆமோதித்தது.

அப்படியே "தாயி ஆரு?" என்றனர் அவர்களுக்கே உரிய தமிழில்.

"நான் தாயி இல்ல. பொண்ணு—சின்னப் பொண்ணு. என் பேர் காவ்யா... உங்க பேர்?"

"எம் பேரு காணியம்மா. இவ பேரு சுந்தரம். அது பேர் வண்டு."

"ஒரு பேர்கூட பொருத்தமாவே இல்லையே. காணியம்மா, சுந்தரம், வண்டு. ஓ.கே. உங்களுக்கு பேராவது வெச்சாங்களே..."

மோகன் ஓடிவந்து சேரும் வரையில் பொழுதைக் கழித்தாக வேண்டுமே... காவ்யா அவர்களுடன் அரட்டையடிப்பது என்று தீர்மானித்துவிட்டாள்.

"தாயி... இதான் தரைமேல ஓடற மோட்டார் காரா?"

"ஆமாம்... பாத்துருக்கீங்கல்ல?"

"ஃபாரெஸ்டாபீசரு அப்பப்ப இதுல வரும்போது பாப்போம். ஆனா அவுரு காரை தொடக்கூட உட மாட்டாரு."

"நான் அப்படியில்லை... தொடுங்க... ஒண்ணும் சொல்லமாட்டேன்."

—காவ்யா சொல்ல அவர்களும் காரை ஒரு பூவைத் தொடுவதுபோலத் தொட்டனர்.

"பயப்படாம நல்லாத் தொடுங்க. அது ஒண்ணும் சிங்கம் புலி இல்லை..."

"ஐய்ய... சிங்கம் புலியெல்லாம் எங்கள ஒண்ணும் செய்யாதுங்க. இந்த மோட்டார் காரு வேணா ஏதாச்சும் செய்யும்."

"ஒண்ணும் செய்யாது. ஏறி உட்காருங்க. ஒரு ரவுண்டு அடிக்கறேன்."

"அடி ஆத்தி... நாங்க இதுக்குள்ளார ஏறவா?"

"சும்மா ஏறுங்க..."

"பொம்பள புள்ள நீங்களா தாயி ஓட்டப் போறீக..."



"விட்டா நான் ஃப்ளைட்டையே ஓட்டுவேன்."

"அப்படின்னா?"

"அப்படின்னா... அப்படின்னா... அதெல்லாம் உங்களுக்கு எதுக்கு? எல்லாரும் கார்ல ஏறுங்க முதல்ல."

காவ்யா அவர்களை உள்ளே பிடித்துத் தள்ளினாள். பின் காரில் ஏறிக்கொண்டு ஸ்டார்ட் செய்தாள். அவர்களில் சுந்தரத்திற்கு நல்ல அகண்ட வண்டு விழி. அது படபடத்தது. பார்க்க கருவண்டு ஒன்று பறந்தபடியே அந்தரத்தில் நிற்கிற மாதிரி இருந்தது.

"அய்யோ... அய்யோ... அடியே காணி பாத்தியாடி எம்பூட்டு வேகமா நம்ம காட்டு சாம்பக்குருவி கணக்கா இந்தக் காரு பறக்கறத...?"

"ஆமாண்டி... அதுலையும் ஒரு பொட்டப்புள்ள இது. இது என்னமா ஓட்டுது...?"

அவர்களிடம் குதூகலம் கொடிகட்டிப் பறந்தது. பரவசம் செக்கு எண்ணெயாய் வழிந்தது. காவ்யாவும் வந்த வழியில்தான் திரும்பிக் கொண்டிருந்தாள். எதிரில் மோகனைப் பார்த்தவுடன் காரை நிறுத்தி 'எப்படி என் பனிஷ்மென்ட்?' என்று கேட்க வேண்டும் என்றெல்லாம் மனதில் தீர்மானங்கள்.

அதேசமயம் சாலை நடுவே ஒரு யானை எனக்கென்ன என்று நின்றுகொண்டிருந்தது. சுமோவும் கிரீச்சிட்டபடி அதற்கு ஒரு பத்தடி முன்பு தேங்கி நின்றது. அந்த யானை கோபத்துடன் காரை நோக்கி ஓடி வந்தது. அது ஓடிவந்த வேகத்தைப் பார்த்தால் சுமோவை அது ஒரே புரட்டாக புரட்டிப் போட்டுவிடும் போலத்தான் தோன்றியது. அலறிவிட்டாள் காவ்யா. நல்லவேளை... முந்திக் கொண்டாள் அவளுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த வண்டு.

www.cleanindians.com

உள்ளிருந்தபடியே யானையைப் பார்த்து "தா... போ அப்பால. உள்ற இருக்கறது யாருன்னு நினைச்சே..." என்று கத்தவும் அதுவும் கூர்மையாக பார்த்தபடியே ஏதோ எஜமானனுக்கு கட்டுப்பட்ட ஒரு தொழிலாளி போல ஒதுங்கி வழி விட்டது.

"மைகுட்நெஸ்...!"—காவ்யா நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

மீண்டும் கார் கிளம்பியது.

"ஆமா... எப்படி அந்த யானையை ஒரு அதட்டுல அடக்கினீங்க...?"

"அதட்டலா... பார்த்தாலே போதும். இந்தக் காட்டுல காக்கா குருவில இருந்து கல்லு மண்ணு வரைதான் பழகி வெச்சுருக்கோமே...?"

"அது எப்படி... மிருகங்க... அதுவும் டேஞ்சரான மிருகங்க எப்படி மனுஷனுக்குக் கட்டுப்படும்?"

"அதான் மாயமான் மலைக் காடுங்கறது..."

"என்ன சொன்னீங்க... என்ன சொன்னீங்க?"

"ஏன் தாயி... மாயமான் மலைக்காடுன்னேன்."

"மாயமான் மலைக்காடு... இன்னிக்குக் கூட டி.வி.ல ரைட்டர் பாற்கடல் மாதவன் இந்தக் காட்டைப் பத்தி நிறைய சொல்லிட்டிருந்தார். அந்தக் காடா இது?"

"நீங்க என்னவெல்லாமோ சொல்றீங்க. இது மாயமான் மலைக்காடு. சிவசாமியும், பெருமாள் சாமியும் ராவானா வந்துட்டுப் போற காடு எங்க காடு..."

"அது யாரு சிவசாமி, பெருமாள் சாமி?"

"சாமி தெரியாது சாமி... நமக்கெல்லாம் சோறு போட்ற சாமியைத் தெரியலையா உங்களுக்கு?"



"யு மீன் காட்... அதாவது கடவுளான்னு கேக்கறேன்."

"ஆமாங்கோவ்... இதெல்லாம் தெரியாமத்தான் இந்தக் காட்டுப்பக்கம் வந்தீங்களா?"

அவர்கள் படுபுத்திசாலி போல கேட்க, காவ்யாவும் பள்ளி மாணவிபோல தலையை ஆட்ட, கண்ணிரண்டும் மோகன் இன்னும் வரவில்லையே என்று பார்த்தபடியே இருந்தது.

"நிறுத்து தாயி... நிறுத்து தாயி..."

காருக்குள் சுந்தரம் என்பவள்தான் கத்தினாள். காவ்யாவும் காரை நிறுத்தியவளாய் அவளைப் பார்த்தாள்.

"எங்க வூடுங்க இருக்கற இடம் வந்துடுச்சிங்கோ. அதான் மோட்டாரு வண்டியை நிறுத்தச் சொன்னேன்."

"அப்படியே... இங்க எங்க இருக்கு உங்க வீடு?"

"இறங்குங்க காட்றோம்."

அவளையும் காரைவிட்டு இறக்கி பக்கமாய் சல சலத்தபடி ஓடிக் கொண்டிருக்கும் ஒரு அருவி வாய்க்கால் அருகே அழைத்துச் சென்று அங்கிருந்து ஒரு சரிவைக் காட்டினார்கள்.

அந்தச் சரிவில் தட்டுக் குச்சிகளால் வேயப்பட்ட கூம்பு கூம்பான குடிசைகள்.

குடிசைகளுக்கு வெளியே ஆடும் மாடும் அங்கங்கே படுத்திருந்தன. அவைகளுக்கு நடுவில் ஒரு ஓரமாய் நாக்கைத் தொங்கப் போட்டபடி ஒரு சிங்கம் படுத்திருந்தது தான் ஆச்சரியத்திலும் ஆச்சர்யம்!

ஒன்று... இரண்டு... மூன்று என்று ஒவ்வொரு சிகரெட்டாக காலியாகி கடைசிச் சிகரெட்டுக்கு மோகன் வந்தபோது அந்த மரத்தடியே சற்று பொல்யூட் ஆகி

www.cleanindians.com

மெல்லிய புகை மண்டலத்தால் சூழப்பட்ட ஒரு இடம்போல ஆக்கிவிட்டது. அந்தத் தாக்கம் மேலே கிளையில் தேமே என்று படுத்திருக்கும் புலிவரை போனது. அதற்குக்கூட கண்ணும் மூக்கும் கரித்தது. மெல்லக் கீழே பார்த்தது. மோகன் மரத்தண்டின் மேல் சாய்ந்த நிலையில் படுத்திருந்தான். கிட்டத்தட்ட காவ்யாவின் செயலால் வெறுத்துப் போயிருந்தான்.

எதற்கோ புறப்பட்டு ஊடலால் அது என்னவோ ஆனதாகக் கருதியவன் ஒரு எறும்பின் கடியின் நிமித்தம் சற்று புரண்டான். புரண்ட நிலையில் அனிச்சையாக பார்வை மேலே பார்த்தது.

புலியும் படுத்தது போதும் என்று ஒரு மாதிரி எழுந்து ஒரு ஓட்டப் பந்தயக்காரரைப் போல கீழிறங்கத் தயாராக இருந்தது. அதுவும் மோகனைப் பார்த்தபடி ரோஸ் நிற நாவு வெளித் தெரிய வெறித்தது.

ஒரு வினாடிதான்!

மோகனின் இதயத்தில் திடும்மென்று ரத்தத்திற்கு பதிலாக மின்சாரம் பாய்ந்ததுபோல ஒரு குபீர் உணர்வு. வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து நின்றான். அதுவும் அங்கிருந்தபடியே கீழே தரை நோக்கி குதித்தது. மோகனும் தாமதிக்காமல் துப்பாக்கிக்காக சட்டைப் பாக்கெட்டில் கையை விட்டான். சிகரெட் பாக்கெட்தான் அகப்பட்டது.

'ஐய்யோ துப்பாக்கி...!' மனது அது இல்லாத பதட்டத்தில் மூழ்க அந்தச் சிறுத்தைப் புலியும் அவனை நோக்கி முதல் அடியை எடுத்து வைத்தது. மோகனை உயிர்ப்பயம் தொற்றிக் கொண்டது. 'ஓடு' என்று கட்டளையிட்டது புத்தி. துப்பாக்கி காருக்குள் சீட்டில் இருக்க வேண்டும் என்று அந்த நொடிப் பொழுதே யூகித்தும் முடித்துவிட்டது.



மோகன் ஓடத் தொடங்கினான். அதுவும் துரத்த ஆரம்பித்தது. உலகிலேயே ஓடுவதில் மற்ற மிருகங்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளியும், ஒரு சதாப்தி எக்ஸ்ப்ரஸின் வேகம்கூட எனக்குச் சாதாரணம் என்கிற ஒரு நிஜத்துக்கும் சொந்தமான அந்த புலியின் வேகத்துக்கு முன்னால் அதிகபட்சம் ஐம்பது கிலோமீட்டர் வேகத்தைக் கூட எட்டமுடியாத மோகனின் வேகம் மிகச் சாதாரணமாகிப் போக ஒரு பெரிய பள்ளம் நடுவில் இடைப்பட்டு அதில் மோகனை அப்படியே சுருட்டித் தள்ளியது.

ஓடிவந்த வேகத்தில் தலை குப்புற விழுந்தவன் அந்தப் பள்ளத்தில் ஒரு கல்லைப்போல உருண்டான். உருளும்போதே 'அம்மாாாா.....' என்று அவன் கொடுத்த குரல் அந்தக் காடு முழுக்க எதிரொலித்தது!

## 6

"பொதுவில் யாரையாவது திட்டும்பொழுது அவர்கள் எதுவும் கூறாமல் நின்றுகொண்டிருந்தால் மரம் மாதிரி நிற்பதாகக் கூறுவோம். ஆனால் இனி நான் அப்படிக் கூறமாட்டேன். அது மிக தப்பான ஒரு உதாரணம். மரம் என்பது அதிதீவிரமான ஒரு செயல்பாட்டின் சின்னம். அது ஒவ்வொரு நொடியும் இயங்கிக்கொண்டே இருக்கிறது.

வேர்கள் பூமிக்கடியில் நீரை உறிஞ்சி மேலே ஏற்றுகின்றன. இதில் நமது ஜெட் மோட்டார் பம்ப் சிஸ்டம் உள்ளது. அப்படி மேலேறும் நீரானது கிளைப்பகுதி வழியாக உரிய முறையில் மாற்றப்பட்டு இலைகளுக்கும், காய் கனி பூக்களுக்கும் போய்ச் சேருகிறது. அந்த நொடியே அந்த மரத்தின் உயரமும், பருமனும் நாம் கண்ணால் காண முடியாதபடி அதிகரிக்கிறது. இது

ஒருபுறம் நிகழும்போதே மறுபுறம் சூரிய சக்தியைக் கொண்டு அது பல வினைகளைப் புரிகிறது. இரவில் ஒருவித வாயுவை ஒவ்வொரு இலையும் வெளிவிட பகலில் அதுவே வேறுவித வாயுவாக மாற ஒவ்வொரு நொடியும் மரத்திடம் வாழ்க்கைதான்.

அனுபவித்து வாழ்கிறது மரம். ஆயிரம் பறவைகள் கூடுகட்டிக் கொள்ள இடம் தருகிறது. இதமான நிழலைத் தருகிறது. எத்தனை பெரிய கோடாலி கொண்டு நாம் வெட்டினாலும் பதிலுக்கு அது நம்மைத் திருப்பித் தாக்குவதில்லை.

பொறுமையாக நமது பிழையை அது பொறுத்துக் கொள்கிறது. தாயைவிட அதிக தயை புரியும் மரத்தை அற்ப மனிதனுக்கு உதாரணமாகக் கூறுவது மிகப்பெரிய தப்பு.

www.cleanindians.com

மாயமான் மலைக்காடு இந்த ஞானத்தை எனக்கு அளித்தது. அந்த மலை மக்கள் மரங்களை வெட்டுவதில்லை. ஒரு இலையைக் கூடப் பறிப்பதில்லை. தானாக உதிர்ந்து விழுவதைத்தான் பயன்படுத்துகின்றனர். அவர்களில் யார் இறந்தாலும் புதைக்கும்போது வயிற்றின் மேல் தொப்புள் பாகத்தில் நிறைய விதைகளைத் தூவி அதன் பிறகே புதைக்கின்றனர். மண்ணோடு மண்ணாகத் தொடங்கும் மனித உடலும் விதையோடு சேர்ந்து வளர்ந்து மரமாகிவிடுகிறது. இதில் சந்தேகம் வேண்டாம் என்கிற மாதிரி ஒரு புளிய மரத்தைப் பார்த்தேன். அதன் தண்டுப் பகுதியில் ஒரு இடத்தில் ஒரு மனித முகம்போல அமைப்பு. அது அப்படியே அங்கு புதைக்கப்பட்ட காட்டுவாசி ஒருவனின் முகமாம். இப்பொழுதுகூட மாயமான் மலைக்காட்டில் அந்த மரத்தைப் பார்க்கலாம்.

அப்பொழுதுதான் தெரிந்தது. அழிந்துவிடும் பிறப்பு கொண்ட மனிதன் அந்த மலைக்காட்டில் பிறந்தால் அழியாத பிறப்பு கொண்ட மரமாக மாறுகிறான் என்பது...



ஆயிரம் வருடத்து மரங்கள் எல்லாம் அங்கே இருக்கின்றன... இல்லையில்லை... இப்படிச் சொல்வது பிழை! ஆயிரமாயிரம் ஆண்டாய் வாழும் மனிதர்கள் அங்கே மரங்களாய் நின்று கொண்டிருக்கிறார்கள்! அதுதான் உண்மை."

—பாற்கடல் மாதவனின் பேட்டியில் இருந்து.

பார்க்க வெகு அழகாக இருந்தது அந்த கிண்ணம். சில கிராஃப்ட் எக்ஸிபிஷன்களில் அதுபோன்ற கிண்ணங்களை காட்சிப் பொருளாய்ப் பார்த்திருக்கிறாள் காவ்யா.

அப்படி ஒரு கிண்ணத்தில் தளும்பத் தளும்ப தேனை ஊற்றியவளாய் நீட்டினான் சுந்தரம்.

"குடிங்க.. மலைத்தேன்! நீங்கல்லாம் யாரும் வந்தா காபி, டீ கொடுப்பீங்க. நாங்க அதைக் கையால கூட தொடமாட்டோம். இங்கல்லாம் தேனு, கள்ளுப்பாலு, சுக்கு மல்லிச்சாறுதான்.." சுந்தரத்தின் பதிலை ரசித்தபடி தேனை வாங்கி ஒரு சிப் குடித்தாள். இனிப்பும் புளிப்புமாய் இதுவரை அவள் உணர்ந்திராத புதுச்சுவை. ஒரு அளவுக்கு மேல் குடிக்க முடியவில்லை.

"பரவால்ல... அப்படியே எடுத்து வெச்சுக்குங்க. கொண்டாங்க இப்படி. வந்திக்குறிச்சி இலையால அப்படியே மூடிக் கட்டித்தாரேன். ஒரு வருசமானாலும் கெட்டுப் போகாது. எறும்போ கொசுவோ கிட்டாரக்கூட வராது. அப்படி வராம இருந்தாத்தான் அது நல்ல மலைத்தேன்..." என்று விளக்கமும் கொடுத்தான் சுந்தரம். ஆனால் அதை ரசிக்கும் மனநிலைதான் காவ்யாவிடம் இல்லை.

"எனக்கு நேரமாச்சு. என்கூட ஒருத்தர் வந்துருக்காரு. அவர் என்னைத் தேடி அலைஞ்சுகிட்டேயிருப்பார்.."

என்று மோகனுக்கான நினைவோடு பேசியவள் அந்த தேன் கிண்ணத்தைக் கீழே வைத்தாள். சுந்தரமும் அது இனி தனக்கு சொந்தமில்லை என்கிற மாதிரி அதை அவளே சொன்னதுபோல அந்திக்குறிச்சி என்னும் ஒரு இலை கொண்டு மெல்லிய கயிறு போன்ற சீந்தல் கொடித் தண்டால் கட்டி அவளுக்கே தரத் தயாரானாள்.

காவ்யாவும் குடிலைவிட்டு வெளியே வந்தாள். பலர் அவளையே பார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு கிழவர் கழுத்துவரை போர்வையால் மூடியிருந்தார். கட்டிலில் அமர்ந்திருந்தார். முகம் முழுக்க புதர்போல தாடி மீசை. ஆனால் கன்னக் கதுப்பும் கண்களும் நெற்றியும் பளிச் சென்று இருந்தது. அதில் துளிகூட சுருக்கமில்லை. அவர் பார்வையின் கூர்மை காவ்யாவை என்னவோ செய்தது. சுந்தரம் அதற்குள் தேன் கிண்ணத்துடன் வெளியில் வந்தவளாய் "இது என் முப்பாட்டன்" என்றாள்.

"முப்பாட்டனா...?"

"ஆங்... எங்க அப்புக்கு அப்புக்கு அப்பு..."

"ஓ கொள்ளுத் தாத்தா!" அவள் புரிந்துகொண்டு சொல்ல "எள்ளும் கொள்ளும் உங்களுக்குத் தேங்..." என்றார் வேகமாய் அவர்.

"அப்படின்னா?"

"இங்க இந்த காட்டுல பொறந்துட்டாலே பொறவு மனுஷப் பொறப்பு கிடையாது. நேரா மோட்சம்தான். இல்லாட்டி தா... இப்படி மரங்களா மாறி ஆனந்தமா பல நூறு வருசம் இருப்போம்."

அவரிடம் புது விளக்கம். காவ்யாவுக்கு கொஞ்சம் புரிந்தது. மீதியைப் புரிந்துகொள்ள மனது தயாராக இல்லை. மோகனின் நினைவு அவளைத் துருவியது. பார்வை அடிக்கடி குடிசைகளுக்கு வெளியில் எந்தக்



கயிறும் கொழுக் கொம்பும் இன்றி கட்டப்படாத நிலையில் அங்கு அசைபோட்டபடி அமர்ந்திருந்த ஆடு மாடுகளை யும், ஒரு ஓரமாய் எனக்கென்ன என்று தூக்கத்தில் இருக்கும் அந்த சிங்கத்தையும் பார்த்து மிரண்டது.

"அது ஒண்ணும் பண்ணாது... பயப்படாதே" என்று அதற்கும் ஒரு பதில் அந்தப் பெரியவரிடம் இருந்து வந்தது.

அப்போது ஒரு பல்லாக்கு நாற்காலி போல் ஒன்றைச் சுமந்தபடி சற்று தூரத்தில் சிலர் வந்துகொண்டிருந்தனர். நெருங்க நெருங்கத்தான் அந்த நாற்காலியில் அமர்ந்து இருப்பது மோகன் என்பது தெரிந்தது.

'அவன் எப்படி அதில்...?' வியப்பானாள் காவ்யா.

"மோகன்..." என்றபடியே அவனை நோக்கி ஓடினாள்.

அவனும் அவளைப் பார்த்தவனாக அந்த நாற் காலியை விட்டு எழுந்தான். கையில் ஒரு பெரிய துணிக் கட்டு, எலும்பு முறிந்தவர்களுக்கு போடுவதைப்போல போடப்பட்டு கழுத்தோடு சேர்த்து கட்டப்பட்டிருந்தது.

"ஏய்... என்னப்பா இது?"

"அத ஏன் கேக்கறே... எல்லாம் உன்னால வந்த வினை. நீ பாட்டும் விட்டுட்டு போய்ட்டே. நீ விட்டுட்டுப் போன இடத்துல ஒரு சிறுத்தைப்புலி. அதுக்குப் பயந்து போய் ஓடி ஒரு பள்ளத்துல விழுந்தேன். கை முறிஞ்சு போச்சு. நல்லவேளை தாடியும் மீசையுமா ஒரு சாமியார் பார்த் துட்டு காப்பாத்தி கட்டு போட்டார். இவங்களைக் கூப்பிட்டு நீ இங்க இருக்கேன்னு சொல்லி அனுப்பியும் வெச்சார்... நீயும் இங்க இருக்கே...!"

"ஓ... என்னப்பா நீ. சாரி... வெரிசாரி. நான் விளை யாட்டா செஞ்சது விபரீதமாயிடிச்சு. வெரி சாரிடா..."

அவள் உருகினாள். அவனது கட்டுப் போட்ட கரத்தை தன் விரலால் தொட்டு வருடியும் கொடுத்தாள்.

www.cleanindians.com

"ஆமா துப்பாக்கி எங்கே?"

"உன்கிட்டதானே கொடுத்தேன்..."

"எங்க...? அதுமட்டும் இருந்திருந்தா என்னைத் துரத்தின புலியை பரலோகம் அனுப்பியிருப்பேன். அனேகமா அது எஸ்டேட்டை சுத்தி அலையற புலியாத் தான் இருக்கணும்."

பதிலோடு அப்போதுதான் அவனும் அங்கே ஆடு மாடுகளோடு உறக்கத்தில் இருந்த சிங்கத்தைப் பார்த்தான்.

திரும்பவும் ஒரு பகீர் உணர்ச்சி.

கிழவர் அவன் பேச்சையும், பார்வையையும் வைத்து யூகித்தபடியே வாயைத் திறந்தார்.

"பயப்படாதீங்க... அது ஒண்ணும் பண்ணாது. அது இறை செத்த மிருகம் இப்போ. நீர் வாழைதான் அதுக்கு இப்ப உணவு. வேட்டையாடித் திங்கறது அதுக்கு அலுத்துப் போச்சு. இறைச்சின்னாலே அதுக்கு இப்ப புடிக்கமாட்டேங்குது..." என்றார்.

"இவரு...?"

"இவர் சுந்தரத்தோட ஃபோர் ஃபாதர்ல ஒருத்தராம் வயது அனேகமா..."

"அது ஆச்சு தாயி... வர்ற பௌர்ணமி வந்தா நூத்தி இருவது!"

"நூத்தி இருவதா?"

"நம்ப முடியலியாக்கும்... இந்த காட்டுலையே இருந்திங்கன்னா நீங்களும் நூறு வருசத்துக்கு மேல இருப்பீங்க. எமனுக்கு வேலையே இல்லாத காடு இது..."

"நம்ப முடியலை இல்ல காவ்யா..."

www.cleanindians.com

36528
5389932



"ஆமாம்... காலைலதான் இந்த காடு பத்தி ரைட்டர் மாதவனோட பேட்டிய டி.வில பார்த்தோம். நம்ம ஜமீனுக்கு பக்கத்துலையே இந்தக் காடும் இவங்களும் இருக்கறது தெரிஞ்சும் இவ்வளவு நாளா எதுவுமே தெரிஞ்சிக்காம இருந்துட்டோம் பாரு..."

"நான்கூட மாதவன் சார் ஏதோ மிகையாதான் சொல்றாரோன்னு நினைச்சேன். இங்க வந்து பார்த்த பிறகுதான் தெரியுது..."

அவர்கள் ஒருவருக்கொருவர் பேசியது அந்தக் கிழவரை என்னவோ செய்தது.

"தம்பி ஆரைச் சொல்றீங்க?"

"பாற்கடல் மாதவன்னு ஒரு எழுத்தாளர். இந்த மலைக்காட்டுல உங்களோடல்லாம் தங்கி இருந்தாராமே."

"ஆமாம். அவரு ஏதோ சொன்னதா சொன்னீங்களே..."

"ஏதோ சொன்னாராவா... நம்ப முடியாததையா சொன்னாரு!"

"ஆருகிட்ட...?"

"டி.வில பெரியவரே... டி.வில..."

"படம் ஓடுமே அந்த பொட்டி வழியாவா?"

"கரெக்ட்... இங்க டி.வி இல்லையா?"

"அதெல்லாம் எங்களுக்கெதுக்கு... வேலை வெட்டி கெட்டுப் போகவா...?"

"என்ன அப்படி சொல்லிட்டீங்க. டி.வி எவ்வளவு பெரிய விஷயம் தெரியுமா. அதனால எத்தனை லட்சம் பேர் பிழைக்கறாங்க தெரியுமா?"

"பிழைக்கறாங்களா... அழிஞ்சுகிட்டிருக்காங்கன்னு சொல்லுங்க..."

"ரொம்ப தப்பு.. படிப்பறிவு இல்லாததால கொஞ்சம் பழமை நெடியோட பேசறீங்க. டி.வி ஒரு வரப்பிரசாதம். உலகத்தோட ஒரு மூலைல நடக்கறதைக்கூட ஒவ்வொருத்தரும் தங்கள் வீட்லையே பாத்துடலாம்."

"அதெல்லாம் சப்ப கட்டு... காத்து வரணும்கறதுக்காகத்தான் வூடுகளுக்கு சன்னல் வைக்கறோம். ஆனா காத்து வராம அது வழியா பாம்பும் தேளும் வந்தா நல்லாவா இருக்கும். அப்படித்தான் ஆயிப்போச்சு அந்தப் பொட்டிகளோட நிலமை.

ஆசைபுடிச்ச மனுசன் கைல காமதேனுவே கிடைச்சாலும் அவன் சும்மா இருக்கமாட்டான். அதை வெச்சு சொகமா வாழாம அந்த காமதேனுவையே உரிச்சு தின்னுப்புடுவான். போவட்டும். அதுல அவர் வேற என்ன சொன்னாரு..."

"நான் முழுசா பாக்கல பெரியவரே. நம்பமுடியாத எதையும் என்னால நேசிக்க முடியாது. அதனால டி.வியை அணைச்சுட்டேன்... ஆனா இப்ப வருத்தப்பட்றேன்"

"பாவி மனுஷன்... பாவி மனுஷன்..."

கிழவர் உதட்டில் உக்ரமான முணுமுணுப்பு.

"ஏன் அவரைத் திட்றீங்க?"

"திட்டலை... எங்களுக்கு அழிவு காலம் வரப்போகுது. அதான் என்னை நான் சொல்லிகிட்டேன்..."

கிழவர் கலங்கிப் போனார். நடுவில் ஒரு செம்பு நிறைய கஞ்சியை நீட்டினாள் அவரது பேத்தியைப் போன்ற ஒரு பெண்.

அந்தச் செம்பு பளபளவென்று மின்னியது.

காவ்யா கையில் வைத்திருந்த தேன் கிண்ணமும் அதேபோல மின்னியது– அதில் கவனம் சென்றதால் அவர்

www.cleanindians.com



பாவி மனுஷன் என்று அவர் சொன்னதில் பெரிதாக கவனம் செல்லவில்லை.

"காவ்யா... இங்க யாரும் மண்கலயங்களை உபயோகிக்கறதில்ல போல இருக்கு... கவனிச்சியா..." என்றான். "அதுதான் இப்ப இங்க ரொம்ப முக்கியமாக்கும்.. ஆமா கைல இவ்வளவு பெரிய கட்டு போட்டுகிட்டு ரொம்ப கேஷுவலா பேசறியே... வலிக்கலை?"

"இல்ல காவ்... துளிகூட வலியே இல்லை. நீ நம்ப மாட்டே கண், காது, மூக்கு, வாய்னு உடம்புல எங்கெல்லாம் துவாரம் இருக்கோ அதுல எல்லாம் சில ட்ராப்ஸ் மூலிகைச் சாறை முதல்ல விட்டாரு அந்தச் சாமியார். அப்புறம்தான் இந்தக் கட்டைப் போட்டார்."

"ஆரு ஆனந்த சாமியா?"—கஞ்சி குடித்தபடி கிழவர் தான் கேட்டார்.

"அவர் பேரெல்லாம் தெரியாது. ஆனா மீடியமா இருந்தார். வெரி நைஸ் மேன். பாத்தா பாத்துகிட்டே இருக்கலாம் போல இருந்துச்சு..."

"அதான் அந்த சாத்தான் பொட்டி வழியா அந்த ஓட்டக் கையர் பேசக்கூடாததெல்லாம் பேசி வெச்சுட்டாரே... இனி இந்த காட்டுல எதையும் பாக்க முடியாது.. அம்புட்டுதான்!"

கிழவரிடம் ஆதங்கப் பெருமூச்சு.

"போதுப்பா... கிளம்புவோம். டயமாச்சு."

சிணுங்கினாள் காவ்யா.

"இரு காவ்யா... இவர் டிவிக்கு எதிராவே ஆரம்பத்துல இருந்து பேசிட்டிருக்கார். என்னன்னு கேப்போம்."— மாதவன் அந்தக் கிழவரை ஒரு வழி செய்யத் தயார்

ஆனான். அதேசமயம் தடதடவென்று ஒருவிதமான மத்தள சப்தம் கேட்டது..

திபுதிபுவென்று ஒருவன் கழுத்தில் மாட்டியிருந்த பருத்த மத்தளம் ஒன்றுடன் ஓடிவந்தபடி இருந்தான். அவனிடம் அசாத்ய வேகம்.

அவனைப் பார்த்து எல்லோருமே மிரண்டு போனார்கள். சில பிஞ்சு பிள்ளைகள் ஓடிப்போய் தங்கள் தாயின் கால் இடுக்கில் புகுந்துகொண்டு நின்றன.

கிழவர் முகமும் படுபயங்கரமாக மாறியது. ஓடிவந்தவன் கிழவரிடம்தான் வந்து நின்றான். மூச்சிளைத்தது அவனிடம். கழுத்தில் பாசிமணி மாலைகள் அணிந்திருந்தான். காலில் ஓடிவந்த வேகத்தில் நகம் பிய்ந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

www.cleanindians.com

"என்னவே... வெள்ளாவி. என்னாச்சு?"

"அரசப்பு... அரசப்பு..."

"மெள்ள... நிதானம். நிதானம்..."

அவனும் மிடறு கூட்டி எச்சில் விழுங்கி முடித்தவனாக "அரசப்பு... அரசப்பு... நம்ம கோவில் மரம் தீப்பிடிச்சு எரியுது அப்பு... தீப்பிடிச்சு எரியுது..." என்றான்.

"ஆத்தி... கோவில் மரம் எரியுதா...?"

—கிழவர் கண்கள் விரிந்தன.

"ஆமாப்பு... தெக்கு வானமடைல வழக்கம்போல் மேகம் திரண்டு வந்துச்சு. மழைதான் பெருசா வரப்போவுதாட்டம்னு பாத்துகிட்டிருந்தேன். பாத்தா பெருசா ஒரு இடி...! கூடவே சவுக்காட்டம் மின்னலுங்க. இடி என்னடான்னா கோவில் மரத்துல இறங்கி அந்த



பச்சை மரம் அப்படியே பத்தி எரியுது. அதான் சொல்ல ஓடிவந்தேன்..."

அடுத்த நொடி கிழவரின் கண்களில் கண்ணீர் சரசரவென்று வழிய ஆரம்பித்தது.

"இப்பத்தான் பாவி மனுஷான்னேன். அது பலிச்சுப் போச்சு"—அவரிடம் முணுமுணுப்பு. அதைப் பார்த்த மற்றவர்களும் திடுக்கிட்ட மாதிரி முணுமுணுத்தனர்.

"அரசப்பரே அழுவறாரே... அவர் அழுது பாத்ததே யில்லையே..." என்றனர்.

காவ்யாவுக்கும் மோகனுக்கும் சர்வமும் ஆச்சரியமளித்தது. கனவு ஒன்று கண்டு கொண்டிருப்பதாகக்கூடத் தோன்றியது.

"மோகன்... வாட் ஈஸ் திஸ். இங்க நடக்கறது எதுவுமே நார்மல் மேட்டராவே இல்லை. ஒரு மரம் எரியறதுக்காகப் போய் இந்தக் கிழவர் அழறார். நான்கூட ஏதோ ஒரு பெரிய விபரீதத்தை சொல்லத்தான் அவன் ஓடி வந்துகிட்டிருக்கான்னு நினைச்சேன். இடி விழுந்து மரம் எரியறது சகஜம்தானே?"

—காவ்யா மோகனின் காதைக் கடித்தாள். மோகன் முகத்திலும் ஆமோதிப்பு ரேகைகள் ஓடியது. கிழவர் அழுகைக்கு நடுவில் மோகன்—காவ்யா பக்கம் திரும்பினார்.

"கொழந்தைங்களா... கொஞ்சம் இப்படி வாங்க..." என்று அவர்களை ஒரு குடிசைக்குள் அழைத்துச் சென்றார்.

உள்ளே கும்மென்று மூலிகை வாசம்!

கூரைச் சரிவுகளில் காய்ந்தும் காயாமலும் பல மூலிகைக் கொடிகள்... இலைகள்... வேர்கள்! கூண்டு

ஒன்றில் தேவாங்கு ஒன்றும் வெறித்தபடி அமர்ந்து கொண்டிருந்தது.

கிழவர் மளமளவென்று உரிப்பானை ஒன்றை நெருங்கித் தொட்டார்.. அடுக்கடுக்கான பல பானைகளில் ஒன்றை எடுத்தவர் அதனுள் கையைவிட்டு மெல்லிசான வேர்த்தண்டு ஒன்றை எடுத்தார். சற்றுத்தள்ளி அந்த குடிசையின் அக்னி மூலையில் ஒரு சாணி மெழுகிய அடுப்பும் அதில் அவிந்தடங்கிய நெருப்பும் இருந்தது. அந்த வேரை நெருப்பில் காட்டி வாயால் ஊதினார். அனல் காய்ந்தது. வேரும் அந்த அனலில் விழுந்து பற்றிக்கொண்டு ஒரு சுள்ளி எரிகிற மாதிரி எரிந்தது. அப்படியே சாம்பலாகியது. அந்தச் சாம்பலை விபூதிச் சிட்டிகையை எடுப்பதுபோல எடுத்து உள்ளங்கையில் வைத்துக் கொண்டார். பின் ஒரு சருவத்தில் இருந்த தண்ணீரை எடுத்து அதைக் குழைத்தார். மைபோல அது உருத்திரண்டது.

அதோடு காவ்யாவையும் மோகனையும் நெருங்கியவர் "கிட்ட வாங்க.." என்றார்.

"எதுக்கு பெரியவரே...?"

"அட வா அப்புன்னா..."—கிழவர் அதட்டவும் அவர்களும் அதிர்ந்த முகத்தை அவர் முன்கொண்டு செல்ல அவர்கள் புருவத்தில் மளமளவென்று அந்த மசியைப் பூசிவிட்டார்.

"என்ன பண்றீங்க?"

"ஒண்ணுமில்ல... நீங்க இங்க எதையும் பார்க்கல. இனி இந்தப் பக்கமே வரக்கூடாது. தெரிஞ்சுதா...?"

"என்ன சொல்றீங்க...?"

"பேசாதே.. இனி நீ பேசமாட்டே... பேசவும் கூடாது. போதும்.. ஒரு பேனாக்காரனால வரப்போவுற ஒரு ஆபத்து போதும். நாங்கல்லாம் அக்கடான்னு இருக்குறோம்.

www.cleanindians.com



இங்கதான் மனுஷன் மனுஷனா இருக்கான். அதைக் கெடுத்துப்புடாதீக.

முப்புடாதீ...!

இனி யாரையும் இங்க வர உடாதே.

உன் செல்வங்கள எப்பாடு பட்டாவது இந்த அரசப்பன் பாதுகாப்பான்.

நீங்க போகலாம்.. கிளம்புங்க. இன்னும் அரைமணி நேரத்துல மழை இந்த காட்டையே பிடிச்சு ஆட்டப் போவுது. அந்த பதினெட்டு சாமிங்கதான் எப்பவும்போல இந்தக் காட்டைக் காப்பாத்தணும்.

போதும்யா... போதும்... கிளம்புங்க. அட கிளம்புங்கன்னா..."

கிழவர் பதறி வெடித்தார். மோகனும் காவ்யாவும் குழப்பத்துடன் குடிசையை விட்டு வெளியில் வந்தனர்.

திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே நடந்தனர்.

அவ்வளவு களேபரத்திலும் ஒரு குடிசை முகப்பில் இரண்டு பெண் குழந்தைகள் பல்லாங்குழி விளையாட்டில் மும்முரமாயிருந்தன.

அதன் குழிகளில் சோழி மணிகளுக்கு பதிலாக நிஜமாலுமே நவரத்னங்கள்! பார்த்துக்கொண்டே நடந்தான் மோகன்.

வானத்திலும் திபுதிபுவென்று மேகங்களின் அணிச் சேர்க்கை!

சுமோ காவ்யா நிறுத்திவிட்டுச் சென்ற அதே மண்சாலை மேல் காத்துக் கொண்டிருந்தது.

காவ்யா மிக மௌனமாக விரதம் இருப்பவள்போல ஒருவித இறுக்கத்துடன் இருந்தாள். மோகனும் பேசப் பிடிக்காமல் பலவித குழப்பத்தில் இருந்தான்.

காரை நெருங்கியவர்கள் ஏறி அமர்ந்தனர். மோகன் டிரைவிங் சீட்டில் அமர்ந்தவனாய் சாவியைத் திருகி ஸ்டார்ட் செய்யப் பார்த்தான். அதிசயமாய் கைவலி போய் கட்டும் அவிழ்ந்தது.

நொடியில் ஸ்டார்ட் ஆகாமல் காரோ சண்டித்தனம் செய்தது. சடசடவென்று மழைத்துளிகளும் கார் கூரையில் பட்டு ட்ரம்ஸ் வாசிக்கப்படுகிற மாதிரி ஒருவித சப்தம்.

நெடுநேரம் ஸ்டார்ட் செய்ய முயன்றவன் எஞ்சினில் ஏதோ கோளாறு என்று உணர்ந்து அதைப் பார்ப்பதற்காக காரைவிட்டு இறங்கினான். மழை வலுத்துவிட்டிருந்தது.

உடம்பெல்லாம் நனைய பானட்டைத் திறந்தான். ஒரு வயர்த் தொடர்பு அறுந்திருந்தது. இணைத்து சரி செய்தான். மீண்டும் பானட்டை மூடியவனாகக் காரில் ஏறத் தொடங்கினான். அந்த சொல்ப நொடிகளில் பெய்த வலுவான மழையில் அவன் தலையெல்லாம் நனைந்து முகத்தில் நீர் பெருக்கெடுத்து ஓடியது.

www.cleanindians.com

அது புருவத்தில அரசப்பர் என்னும் அந்த கிழவர் பூசிய மூலிகை மையை கரைத்துக்கொண்டே ஓடியது.

கை விரல்களால் வழித்தபோது கையெல்லாம் கசகசவென்று ஒரே கறுப்பு மசி! உள்ளே தேன் கிண்ணத்தை இறுக்கமாகப் பற்றியவளாகக் காவ்யா!

## 7

"ஒருநாள் காற்றாட அந்தக் காட்டுக்குள் நடந்து கொண்டிருந்தேன். பச்சைவாசமும் பட்சி ஜாலக் கூக்குரல்களுமாய் மிக ரம்யமாக இருந்தது. மழை பெய்து முடித்திருந்தது!



சிறு மழைக்கும் அங்கே அருவிகளில் பெரிய வெள்ளம் வந்துவிடுகிறது. ஓடைகளில் அது பாய்ந்து ஓடுவதைப் பார்க்கும்போது விடுமுறை பெற்று ஓடும் பள்ளிச் சிறுவர்களைப் பார்க்கிற மாதிரிதான் இருந்தது எனக்கும்.

அப்படி ஒரு மழை வெள்ளத்தை ரசித்தபடி ஆற்றின் கரை ஒன்றில் நின்றுவிட்டேன். 'ஹோ'வென்ற இரைச்சலிடும் அந்த ஆறு பாறைகளில் தாண்டிக் குதித்து ஓடிவரும் அழகை விவரிக்க வார்த்தைகள் கிடையாது. இதில் ஒரு இடத்தில் அருவியாக அந்த ஆறு சரிந்து விழுந்து பொங்கிப் பிரவாகிக்கிறது. நம்பமாட்டீர்கள், அப்படி பொங்கிப் பிரவாகிக்கும் இடத்தில் உள்ள பாறைகளிடம் யாராலும் செல்ல முடியாது. அங்கே தண்ணீரிடமும் அப்படி ஒரு சீற்றம்.

நானும் அந்த சீற்றத்தை ரசித்துக் கொண்டிருந்தபோது அந்தப் பாறைமேல் ஒரு மனித உருவம் தெரிந்தது. அந்த உருவம் நிதானமாக பாறையில் நின்று வானில் உதித்த சூரியனைப் பார்த்து கையை உயரத் தூக்கித் தொழுதுவிட்டு உடனே சரிந்தபடி இருக்கும் நீருக்குள் ஏதோ திரைச்சீலையை ஒதுக்கிக்கொண்டு உள்ளே நுழைகிற மாதிரி நுழைந்தும் மறைந்துவிட்டது.

என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. மிரட்டலாக சீறிப்பாயும் அருவி நீருக்குள் அவர் என்ன செய்கிறார் என்று தெரியவில்லை. அங்கே எப்படி ஒருவரால் இருக்க முடியும் என்பதும் புரியவில்லை!

—பாற்கடல் மாதவனின் பேட்டியில் இருந்து.

நிலாத்தூர் ஜமீன் மாளிகை!

சுமோவை விட்டு இறங்கி ஒரு சிலைபோல நடந்து உள்ளே நுழைந்த காவ்யாவை முதலில் பார்த்தவள் தர்மாதான்.

"எங்கம்மா போய்ட்டுவரே?"—கேட்டாள். அது காதிலேயே விழாதமாதிரி நடந்தாள் காவ்யா. காரைவிட்டு மோகனும் இறங்கி பின்னாலேயே வந்து கொண்டிருந்தான்.

முகத்தில் அங்கங்கே அந்த கரித்திட்டுக்கள்.

தர்மாவை நெருங்கவும் அவனையும் அவள் விட வில்லை.

"எங்க தம்பி போய்ட்டு வர்றீங்க?"

"அவசியம் சொல்லணுமோ?"

"ராஜாதான் விசாரிக்கச் சொன்னார்."

"அவரே வந்து விசாரிக்கட்டும். இனிமே உனக் கெல்லாம் நான் பதில் சொல்ற மாதிரி இல்ல..."

"தம்பி..."

"என்ன?"

"இப்படி எல்லாம் அலட்சியமா பதில் சொல்லாதீங்க. ராஜா ரொம்ப கோபமா இருக்காரு."

"நான்தான் சொன்னேன்ல... அவர் எனக்கு மாமா... என்கிட்டையே அவர் நேர்ல கேட்கலாம். இடைல நீ எதுக்கு... ஒதுங்கிக்கோ."

"தம்பி..."

"என்ன...? தமிழ்லதானே சொல்றேன். புரியலியா உனக்கு?"

"உங்கம்மா வந்துட்டு போனாங்க."

"அதுக்கென்ன...?"

"அவங்களுக்கும் ராஜாவுக்கும் பெரிய வாய்ச்சண்டை ஏற்பட்டு அழுதுகிட்டே போனாங்க..."

தர்மா அவனை பிரேக்கடித்த மாதிரி தேக்கி நிறுத்தினாள்.

www.cleanindians.com



"புரிஞ்சுக்குங்க தம்பி, நீங்க காவ்யாவை கட்டிக்க முடியாது. கட்டிக்கவும் கூடாது. ஏன்னா...?"

அவள் நேராகவே விஷயத்துக்கு வந்தாள்...

அவனும் கூர்மையாக கவனித்தான்.

"நீங்க இந்த ஜமீன் வம்சத்தை சேர்ந்த ரத்தம் இல்ல. உங்கப்பா இங்க கணக்குப் பிள்ளையா வேலை பார்த்த ஒருத்தர். அப்பவே ராஜா பாதி செத்துட்டார். இப்ப உங்களுக்கு தன் மகளைக் கொடுத்தா முழுசா செத்துடுவார்..."

"இதோ பார் தர்மா... இந்த மாதிரி உளறலுக்கு எல்லாம் நான் பதில் சொல்ல முடியாது. நல்லாதானே இருந்தீங்க. இவ்வளவு நாளா எங்களை பழகவிட்டுட்டு இப்ப திடீர்னு இப்படி சொன்னா என்ன அர்த்தம்?"

"திடீர்னுதானே சில விஷயங்க நடக்குது."

"அப்படி என்ன நடக்கக்கூடாதது நடந்துடிச்சு."

"போன மாசம் கன்னம் வைக்கற கொள்ளைக்காரன் மார்த்தாண்டம் இந்த மாளிகைக்கு செய்தி அனுப்பினது தெரியும்தானே?"

தர்மா மெல்ல ஒரு பழைய சம்பவத்தின் ஒரு நூலை எடுத்தாள். மோகனும் யோசித்துவிட்டு "அதான் முடிஞ்ச விஷயமாச்சே. அவன் கன்னம் வெச்சு திருட முடியாதபடி காவல் போட்டு அவனும் அதைப் பார்த்து வர முடியாத படி ஆயிடிச்சே..." என்றான்.

"அதுதான் கிடையாது..."

இது தர்மா தந்த அடுத்த அதிர்ச்சி.

"கிடையாதுன்னா... அப்ப அவன் வந்தானா?"

"வந்தான்... இந்த ஜமீனோட அவ்வளவு தங்கம் வெள்ளியையும் கொண்டுகிட்டும் போய்ட்டான்!"

"என்ன தர்மா சொல்றே நீ..."

ஒரு அம்பின் வேகத்தில் தர்மா முன்வந்து முகத்தை நிமிர்த்தினான் மோகன்.

"ஆமாம் தம்பி.. அவன் கன்னம் வெச்சா வெச்சது தான். எப்படி வந்தான் எப்படி திருடினான்னே தெரியாது... ஆனால் அவ்வளவும் போயிடிச்சு. கிட்டதட்ட நூறு தோலா இருக்குமாம். காவ்யாவுக்கு சீதனமாத் தர ராஜா வெச்சிருந்த தங்கம் அது. அவ்வளவும் போயிடிச்சு..."

"உடனே போலீசுக்கு போறதுக்கென்ன?"

"அப்படி எல்லாம் போக முடியாது தம்பி.. ஐம்பது வருஷத்துக்கு முந்தி ஜமீனை மத்திய சர்க்கார் ஒழிச்சப்ப எடுத்த சொத்துக் கணக்குக்கும், இப்போதைய சொத்துக் கணக்குக்கும் நிறைய வித்தியாசமிருக்குதாம்.

வருமான வரிக்கு பயந்துகிட்டு வேற நம்ப ராஜா சில விஷயங்களை மறைச்சிருக்காரு. அதெல்லாம் இவ்வளவு திருட்டு போயிருக்குன்னா வெளிய வந்துடும்னுதான் போலீஸ் பக்கமே போறதில்லை."

"அப்ப அந்த கள்ளன் திட்டம் போட்டுதான் பணக் காரங்களா பார்த்து திருட வர்றான் போல இருக்கு."

"கன்னம் வைக்கறவங்களே அப்படித்தான். அதுலை யும் வருச நாட்டு மார்த்தாண்டன் கோஷ்டி முழிச்சு கிட்டிருக்கும்போதே முழிச்சுகிட்டிருக்கறவருக்கு தெரியாம முழியை திருட்றவங்க..."

"அதெப்படி தர்மா முடியும்?"

"அவங்க வரையில களவு ஒரு கலை தம்பி. தலைமுறை தலைமுறையா திருட்டை தொழிலா வெச்சிருக்கறவங் களுக்கு இதெல்லாம் ஒரு விஷயமே இல்லை.

www.cleanindians.com



அவங்களுக்கு கொஞ்சம் மாய்மாலமும் தெரியும். ஒரு மை ஒண்ணு இருக்குது. அதை புருவத்துல பூசிக்கிட்டு திருடக் கிளம்பினா அவங்க யார் கண்ணுக்கும் பட மாட்டாங்களாம்."

—தர்மா சொல்லி முடித்தாள். மோகனுக்கு உச்சந் தலையைப் பிடித்து வெடுக்கென்று யாரோ இழுத்தமாதிரி இருந்தது.

'சில மணிகள் முன்பு காட்டில் அந்தக் கிழவர் அரசப்பரும் தங்கள் நெற்றிப் புருவத்தில் மைபோல் பூசினாரே.. ஒருவேளை அதுவும் இவள் சொல்கிற மாதிரி ஏதாவது மாய்மாலமோ..?'

கேள்வி எழும்பிக் கொத்தியது.

"என்ன தம்பி யோசனை.. நம்ப முடியலையா?"

"ஆமாம் தர்மா.. நீ சொல்றது—எங்களுக்கு நடந்தது எல்லாமே நம்பமுடியாத ஒண்ணாத்தான் இருக்குது."

"உங்களுக்கு என்ன நடந்துச்சு... நீங்க எங்க போய்ட்டு வர்றீங்க..."

"அது பிறகு... நீ முழுசா சொல்லி முடி. இந்த மாளிகைல, திருட்டு போனதுக்கும் எங்க காதலுக்கும் என்ன சம்பந்தம்?"

"நிறைய இருக்கு...

உங்கம்மா கட்டுப்பாட்டை மீறி கல்யாணம் செய்து கிட்டாலும் அதை மறந்து மன்னிச்சு அவங்கள இந்த வீட்டைவிட்டு போகாம பாத்துக்கிட்டார் உங்க மாமா. நல்லவேளை... அவர் எதிர்பார்த்த மாதிரியோ அந்த சாமியார் ஒரு தடவை சொன்னமாதிரியோ பெரிசா எதுவும் ஆயிடலை. இருந்தும் இப்ப திருட்டு போய் கதிகலங்கி கிடக்கறாரு. அந்த சாமியார் சொன்ன

மாதிரியே மிச்சம் இருக்கற எல்லாத்தையும்கூட இழந்துடுவோமோங்கிற பயம் அவரை இப்ப ஆட்டிப்படைச்சுகிட்டிருக்கு..."

"பைத்தியக்காரத்தனம். வடிகட்டின பைத்தியக்காரத்தனம். எப்பவோ யாரோ சொன்ன ஒரு விஷயத்துக்காக மாமா தேவையில்லாம கவலைப்பட்றாரு..."

"மேலோட்டமா பார்த்தா அப்படித்தான் தெரியும். ஆனா காவ்யா முடி வெட்டிகிட்டு வந்து அவர் பயத்தை அதிகப்படுத்திட்டதால..."

"இது இன்னும் பைத்தியக்காரத்தனம். தலைமுடிக்கும் காசு பணத்துக்கும் என்ன சம்பந்தம்? தலைமுடிங்கறது உதிர்ந்து விழற ஒரு அல்ப விஷயம். போடா மசுருன்னு கோபத்துக்கு திட்டப் பயன்பட்ற ஒரு சாதாரண சமாச்சாரம்."

"அப்படி இல்ல... சில விஷயங்க அறிவுக்கு அப்படித்தான் தெரியும். ஆனா உள்காரணம் ரொம்ப பெரிசா இருக்கும்."

"ஒரு காரணமும் கிடையாது. இதோ பார் தர்மா. இந்த மாதிரி நம்பிக்கைகளுக்காக நாங்க எங்க காதலை இழக்க முடியாது. காவ்யாவும் தீர்மானமா இருக்கா. அவ சொன்னான்னு நீ சொன்ன பொய் எப்பவோ சாயம் வெளுத்துப் போச்சு."

"இருக்கலாம் தம்பி.. இந்த நம்பிக்கையால மட்டும் இப்ப உங்க காதலுக்கு பாதிப்பு வந்துடலை. வேற ஒரு காரணமும் இருக்கு..."

"என்ன அது... சொல்லு அதையும். அது இந்தக் காரணத்தைத் தூக்கிச் சாப்பிட்ற இன்னொரு பேத்தலாதான் இருக்கும். கமான்... சொல்லு."



"கப்பலூர் ஜமீன்தார் ஒரு முக்கியமான சமயத்துல அம்பது தோலா தங்கத்தை உங்க மாமாகிட்ட அடகு வெச்சு ஒரு 25 லட்ச ரூபாயை கடனா வாங்கிட்டு போயிருந்தாரு. அந்த கள்ளன் திருடும்போது அதையும் கொண்டு போய்ட்டான். அவர் வந்து கேட்டா என்ன பண்றதுன்னு தெரியாம கையைப் பிசைஞ்சுக்கிட்டிருந்தப்பதான் கப்பலூர் ஜமீன்தார் நம்ம காவ்யாவை அவர் மகனுக்குக் கேட்டார்.

இந்த ஜமீன் சம்பிரதாயப்படி ஆணுக்கு பெண் எதையும் கொடுக்க வேண்டியதில்லை. பெண்ணுக்குதான் ஆண் கொடுக்கணும். ஆகையால அடகு வெச்ச தங்கத்தை அப்படியே சீதனமா தரதா சொல்லி அந்த 25 லட்ச ரூபா பணத்தையும் திருப்பித் தந்துட்டார் கப்பலூர் ஜமீன்தார்."

நெத்தியடியாக இருந்தது தர்மாவின் இந்த பதில். மோகனும் நடு நெஞ்சில் சுடப்பட்டது போல ஒரு ஓரமாய் போய் உட்கார்ந்தான்.

"இப்ப புரிஞ்சிருக்கும் உங்களுக்கு– காவ்யா உங்களுக்கு வேணும்னா தோலா தோலாவா தங்கம் வேணும். ஒரு கிராம் தங்கமே இன்னிக்கு என்ன விலை விக்குதுன்னு தெரியும். இதுல தோலா தங்கத்தைப் பத்தி யோசிக்கக்கூட மனசு வராதே.. நடுங்குமே..."

"போதும் தர்மா– போதும். நான் ஏற்கெனவே குழம்பிப் போய் குட்டையா இருக்கேன். இதுல நீ மீன் பிடிக்க நினைக்காதே..."

"நான் மீனும் பிடிக்கலை, குழப்பவும் இல்லை. உள்ளதைச் சொன்னேன். தனிப்பட்ட முறைல இந்த தர்மாவுக்கு காவ்யா சொந்த பொண்ணு மாதிரி. அவளுக்கு நீங்கதான் புருஷனா வரணும்கறதுதான் என் ஆசை. ஆனா விதி வேறவிதமா நினைக்கும்போது யார் என்ன செய்ய முடியும்?"

www.cleanindians.com

"விதியாவது கிதியாவது... இதை எப்படி ஓவர்டேக் பண்றதுங்கறதுதான் இனி என் சிந்தனையே... வறேன்..."

எழுந்து வேகமாக விலகினான். நேராக காவ்யா இருக்கும் அறைக்குத்தான் சென்றான். அவள் ஜன்னல் அருகே நின்று வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"காவ்..."

திரும்பினாள்.

"என்ன பண்ணிட்டிருக்கே..."

"ஒண்ணுமில்ல... ஒரே தலைவலி!"

"தைலம் தடவிக்க வேண்டியதுதானே..."

கேட்டுக் கொண்டே அதைத் தேடப் போனான். டேபிள்மேல் அந்த தேன் கிண்ணம் இருந்து கண்ணில் பட்டது.

"காவ்யா..."

"உம்."

"இந்தத் தேன் கிண்ணத்தை இங்க வெச்சிருக்கியே அங்கையே போட்டுட்டு வர்றதுக்கு என்ன?"

"எந்த தேன் கிண்ணத்தை?"

"எந்த தேன் கிண்ணத்தை... ரேடியாவுல வர்ற தேன் கிண்ணத்தை. நாட்டி! இப்ப நாம அந்த காட்டுக்கு போன இடத்துல ஒரு பொண்ணு கொடுத்தாளே அதைச் சொன்னேன்."

"நாம எப்ப காட்டுக்கு போனோம்... எந்த காட்டுக்கு போனோம்...?"

"சரிதான்... அதுக்குள்ள மறந்து போய்ட்டியா. இல்ல மறந்துட்ட மாதிரி நடிக்கறியா?"

"ஏன் மோகன் எரிச்சல் மூட்றே... நான் ஏன் நடிக்கணும்...?"

www.cleanindians.com



காவ்யா முகத்தை ஒரு மாதிரி வைத்துக்கொண்டு கேட்டது மோகனை மிரட்டியது.

"காவ்யா... வாட்ஸ் ஹேப்பண்ட். உனக்கு என்ன ஆச்சு? நான் என்ன உன் பூர்வ ஜென்மம் பத்தியா கேட்டேன். இன்னிக்கு நடந்ததைத்தானே கேட்டேன்."

"என்ன நடந்தது... அதை முதல்ல சொல்லு."

"நீ என்கூட கார்ல வரலை?"

"வந்தேனா?"

"வந்தேனாவா?"

"பின்ன... நான்தான் சொல்றேன்ல. எனக்கு பாதி தூக்கத்துல எழுந்திரிச்ச மாதிரி இருக்கு. ஒரே தலைவலி. நீ என்னடான்னா உன்கூட நான் வந்ததா கதை விட்டுக் கிட்டிருக்கே."

"அடிப்பாவி... ஒரு முழுப் பூசணிக்காயையே சோத்துல மறைக்கற மாதிரி பேசறியே."

"என்ன உளறுறேன்...? உன்கூட வந்தா வந்தேன்னு சொல்லிட்டுப் போறேன். இதுல மறைக்க என்ன இருக்கு..."

"அப்ப உனக்கு சுத்தமா எதுவுமே ஞாபகத்துல இல்லையா?"

"எதாவது நடந்திருந்தாதானே ஞாபகத்துக்கு வரும்..."

காவ்யா சளைக்காமல் சொன்ன ஒவ்வொரு பதிலும் மோகனை 'சொடேர்... சொடேர்' என்று தாக்கியது.

மிகக் கூர்மையாக உற்றுப் பார்த்தான். அவளோ வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள். நெடுநேரம் அங்கே அமைதி. இடையில் யாரோ வரும் அரவம். மோகன் திரும்பினான். ராமண்ணை ராஜாதான் வந்துகொண்டிருந்தார்.

"மாமா..."

"இங்க என்ன பண்றே?"

"காவ்யாவோட..."

"அவகூடல்லாம் இனிமே பேசாதே... அவளைக் கூட்டிகிட்டு வெளியே சுத்தறதையும் மறந்துடு... ஆமா ஆஸ்திரேலியாவுல வேலை கிடைச்சிருக்காமே."

"ஆமாம் மாமா... நான்கூட சொன்னேனே..."

"போ... போய் அந்த வேலையை ஒழுங்கா பாக்கற வழியைப் பார்..."

"மாமா..."

"என்ன...?"—ராமண்ண ராஜாவிடம் எரிச்சல் பீறிட்டது.

"தாதி தர்மா எல்லாத்தையும் சொன்னா..."

"எதை?"

"கள்ளன் மார்த்தாண்டம் கன்னம் வெச்சு திருடிட்டானாமே..."

"ஓ... அதைக்கூட உன்கிட்ட சொல்லிட்டாளா அவ..."

"என்ன மாமா... மூணாம் மனுஷன்கிட்ட பேசற மாதிரி பேசறீங்க. நான் உங்க தங்கை மகன். மருமகன்..."

"இதோ பார்... உனக்கு இப்ப என்ன வேணும்?"

"எனக்கு... எனக்கு... காவ்யா வேணும்."

"அவ கிடைக்கமாட்டா... அப்புறம்?"

"இல்ல மாமா... இதை நான் ஒத்துக்கமாட்டேன்."

"ஒத்துக்க நீ யாருடா...?"

ராமண்ண ராஜா எப்பொழுதும் அவனை 'டா' போட்டு அழைத்ததில்லை. அவனுக்கும் 'சுரீர்' என்றது.

"மாமா இது அநியாயம்... எங்களை இப்படி ஒண்ணா பழகவிட்டுட்டு பிரிக்கறது ஞாயமில்லை. எனக்கு என்ன குறை?"



"குறை இப்ப உன்கிட்ட இல்லை. என்கிட்டதான். நீ புறப்படு."

"உங்ககிட்டையும் குறை எதுவுமில்லை. உங்க நம்பிக்கைகள் அபத்தமானது."

"அதை நீ விமர்சிக்க வேண்டாம். அனுபவிக்கற எனக்குதான் உண்மை பொய் தெரியும்."

—இருவரிடையேயும் வாக்குவாதம் சூடேறிக் கொண்டே போனது. காவ்யா அது அவர்கள் இருவர் பிரச்சினை என்கிற மாதிரி பார்த்தாள்.

"காவ்யா... கேட்டியா—நீ எனக்கு இல்லையாம்."

—அவன் அவள் பக்கம் திரும்பினான். அவள் அதற்கு பதில் சொல்லாமல் நெற்றியை தேய்த்துவிட்டுக் கொண்டாள். உடம்பும் மனசும் யாரோ அமுக்கிக் கொண்டிருப்பது போல உணர்ந்தாள்.

"காவ்யா உன்னைத்தான்... மாமா சொல்றது காதுல விழுந்திச்சா... நீ என் மோகன் நான் உன் காவ்யான்னு சொன்னியே, மறந்துட்டியா அதையும்..."

—அவன் நரம்பு புடைக்க அலறினான். அப்பொழுது தான் அவர் மேஜைமேல் இருந்த அந்த தேன் கிண்ணத்தைப் பார்த்தார்.

அதை நெருங்கித் தூக்கிப் பார்த்தவர் "இது- இது- இங்க எப்படி வந்தது?"

"இது மாயமான் காட்டுல காவ்யாவுக்கு ஒரு பொண்ணு கொடுத்த தேன் கிண்ணம்."

"மாயமான் காட்டுல கொடுத்ததா... அப்ப அங்க போனீங்களா?"—ராமண்ண ராஜா கேட்டவிதமே பதட்டமாக இருந்தது.

www.cleanindians.com

"ஆமா... அந்த காடுதான் மாயமான் காடுங்கறது தெரியாம போனோம். ஆனா அதுகூட இப்ப காவ்யாவுக்கு ஞாபகம் இல்லை..."

"ஓ... காவ்யாவுக்கு அதுகூட மறந்துபோச்சா... அப்ப அப்ப..."

"என்ன மாமா?"

"அந்த காட்டுக்கு போற யாரும் ஞாபக சக்தியோட திரும்பி வர முடியாதே ஆமா... உனக்கு எல்லாம் ஞாபகத்துல இருக்குதா?"—அவரிடம் கோபம் விலகி ஒரு புதிய ஆர்வம் தொற்றத் தொடங்கியிருந்தது.

"நல்லா... ஒரு விஷயத்தைக் குறிப்பிடணும். அங்க ஒரு வயசான கிழவர் மை மாதிரி ஒண்ணை என் புருவத் துலையும், காவ்யா புருவத்துலையும் பூசினார். என் புருவத்துல பூசினது மழைல கரைஞ்சு போயிடிச்சு. ஆனா காவ்யா நனையில. அதனால ஒருவேளை அவளுக்கு எதுவுமே ஞாபகம் இல்லையோ?"

"கிழவர்... மை... சரி அங்க வேற யாரையாவது பார்த்திங்களா?"

"இல்ல... ஏன் கேக்கறீங்க?"

"அது பதினெட்டு சித்தர்கள் நடமாட்ற மலைப்பா. அவங்கள்ளதான் யாரையாவது பார்த்தியான்னு கேட்டேன்."—மீண்டும் ராஜா குரலில் நடுக்கம் பதட்டம்!

"பதினெட்டு சித்தர்களா... ஆச்சரியமா இருக்கே. அவங்கல்லாம் இப்பவும் இருக்காங்களா என்ன?"

"உன்னையும் என்னையும் மாதிரி உப்பு புளி காரம் திங்கற உடம்பை ஜெயிக்க முடியாதவங்களுக்குதான் அல்ப ஆயுள். ஆனா அவங்களுக்கு அப்படி இல்ல. அவங்கல்லாம் கல்ப மூலிகைகளால சாகாவரம் பெற்று

www.cleanindians.com



அமைதியா அந்த மலைக்காட்டுல வாழ்ந்துகிட்டிருக்காங்க. அவங்களுக்கு அந்த மலை ஜனங்களும் உற்ற துணை.

அது மட்டுமில்ல... அங்க இருக்கறவங்களுக்கு தங்கம்கறது ஒரு சாதாரண விஷயம். காது குடையற கம்பிகூட அங்க தங்கத்துலதான் இருக்கும்."

"என்ன மாமா என்னென்னமோ சொல்றீங்க. இதெல்லாம் எப்படி சாத்யம். உங்களுக்கு எப்படி தெரியும்?"

"அதுவா இப்ப முக்கியம்... அதைவிடு. இப்பகூட நான் அந்த சித்த சாமியார்ல ஒருத்தரைப் பாக்கறது பத்தித்தான் சிந்திச்சுக்கிட்டிருக்கேன்.

அவர்தான் வறுமைல இருந்த இந்த ஜமீனை ஒரு கட்டத்துல கைதூக்கி விட்டு கரை சேர்த்தவர். அப்ப இந்த மாளிகைக்குள்ற வந்த லட்சுமியைத்தான் இப்ப ஒரு கள்ளன் வந்து கொண்டு போயிட்டானே!"

"என்ன மாமா நீங்க... யாரோ ஒரு சாமியார் எப்பவோ என்னவோ சொன்னார். லட்சுமி வந்தா போனான்னுல்லாம் பேசிகிட்டிருக்கீங்க. பதினெட்டு சித்தர் பத்தொம்பது சித்தர்னு சொல்ற எதுவுமே நம்பற மாதிரி இல்லையே மாமா...!"

"இதோ பார்... நீ சின்னப் பையன். உன் வயசைக் கடந்து வந்தவன்தான் நானும். உன் வயசுல நான் எதை நம்பினேன் எதை நம்பலைங்கறது உனக்குத் தெரியாது.

நானும் எவ்வளவோ லாஜிக், இல்லாஜிக்கெல்லாம் பேசியிருக்கேன்.

ஆனா ஒரு விஷயத்தை பின்னால அனுபவப்பட்ட பிறகுதான் தெரிஞ்சுகிட்டேன். எல்லா விஷயத்தையும் நம்மளால புரிஞ்சுக்கவோ புரிஞ்சுக்கிட்டு அதை அளக்கவோ முடியாது. அப்படி முடிஞ்சுட்டா வெற்றி தோல்வியே இல்லாம போயிடும்."

"நான் ஒண்ணு கேட்டா நீங்க ஒண்ணு சொல்றீங்க. உங்களுக்கு இப்ப திருடு போயிடிச்சு. அது திரும்ப கிடைச்சிட்டா அதாவது நீங்க நினைக்கற அந்த லட்சுமி திரும்ப வந்துட்டா உங்க பிரச்சினை தீர்ந்துடுமா? அப்ப நீங்க காவ்யாவை எனக்குக் கல்யாணம் பண்ணித் தருவீங்களா?"

"நிச்சயமா... கப்பலூர்காரன் என்னை நம்பி ஒப்படைச்ச தங்கத்தை தொலைச்சிட்டு நிக்கறேனே...? நான் என்ன மாயமான் காட்டுலையா இருக்கேன். எவ்வளவு தங்கம் வேணும்னாலும் அள்ளி அள்ளி மத்தவங்களுக்குக் கொடுக்க..."

"என்ன சொல்றீங்க நீங்க... அங்க இருந்தா தங்கம் நிறைய கிடைக்குமா?"

"அதுவே ஒரு தங்கக் காடுதானே...?"

"எதை வெச்சு சொல்றீங்க..."

"இதோ இந்த கிண்ணம்கூட தங்கம்தான். சாதாரணமா இதை கொடுத்துருக்காங்களே அதுலையே இது தெரியலியா?"

"அப்படியா...?"—அதை உற்றுப் பார்த்து பின் கையில் வாங்கி கனம் பார்த்து அலமலந்து போன மோகன் "நம்ப முடியில மாமா... இருக்காது" என்றான்.

"சந்தேகமா இருந்தா போய் சோதிச்சுப் பார். அப்புறம் தெரியும்..."

"நிச்சயமா... இப்பவே தங்க நகை ஆசாரிகிட்ட போறேன்..."

ஆவேசமாகத் திரும்பினான். காவ்யா தனக்கு அவர்கள் பேச்சு எதிலுமே சம்மந்தமில்லை என்கிற மாதிரி உட்கார்ந்த இடத்தில் தூங்கிப் போயிருந்தாள்!

6

www.cleanindians.com

## 8

"மாயமான் மலைக்கு செல்ல விதியின் அனுமதி வேண்டுமாம்... இங்கே ஒரு மலைக் கூட்டத்தில் இருக்கும் காடுதானே என்று சாதாரணமாக நினைத்துக் கொண்டெல்லாம் போய்விட முடியாதாம்.

அப்படியானால் போய் வந்த எனக்கு விதியின் அனுமதி இருக்கிறதா என்று கேட்காதீர்கள். நான் அங்கே சிலரிடம் பேசியபோது கேள்விப்பட்டதைச் சொன்னேன்.

அதை நம்புவதும் நம்பாததும் உங்கள் விருப்பம். பொதுவில் விதிபற்றி பெரிய அபிப்ராயம் இல்லாத நான் அங்கே போய் வந்தபிறகு விதியைப் பற்றி நிறைய யோசிக்கிறேன் என்பது மட்டும் நிச்சயம். நிதர்சனமான உண்மை. உடனே எது விதி என்று ஒரு கேள்வி வரலாம்.

இப்படித்தான் ஒரு விஷயம் நடக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்படும் எல்லாமே விதிதான்... உதாரணமாக ஒரு விளையாட்டு இருக்கிறது. அதை எப்படி வேண்டு மானாலும் விளையாடலாம் என்றால் அதில் நீதி நேர்மை இல்லாமல் போய்விடுமல்லவா?

அதேபோல் ஒரு வீடு இருக்கிறது... அதை இப்படி கட்டிக் கொண்டால்தான் சௌகர்யமாக இருக்கும் என்பதும் ஒருவித தீர்மானம்தானே... அதுதானே பிறகு பிளான் பேப்பரில் விதியாக பதிவாகிறது.

இப்படிப் பார்த்துக்கொண்டே போனால் மனிதன் தன் சௌகர்யத்துக்கும் சக்திக்கும் ஏற்றபடி போட்டுக் கொண்டதுதான் விதிகள்.

அதை தப்பும் தவறுமாய் போட்டாலும் அதுவும் ஒரு விதிதான். இப்படி நமது சௌகர்யத்துக்காக போட்டுக் கொள்ளப்படும் ஒன்றில் பிறகு மாற்றங்களைக் கொண்டு வருவதும் பல நேரங்களில் அவசியமாகிறது. மாற்றப்பட்ட பிறகு அதுவும் விதிதான். ஆனால் அதை நமது மதிதான் செய்கிறது.

சில நேரங்களில் நமது முந்தைய விதியை நம்முடைய மதியால் மாற்ற முடியாமலும் போகலாம். அப்போது விதி ஜெயித்துவிட்டது–மதி தோற்றுவிட்டது என்கிறோம். இது தவறு... எப்பொழுதும் விதி என்பது மதியால் உருவாக்கப்பட்டு அதனாலேயே ஆட்சி செய்யப் படுகிறது. அதை மாற்ற முயலும்போது முடியாமல் போனால் மதி தோற்றதாக பொருளில்லை. முன்பு உருவாக்கப்பட்ட விதி வலுவாக உள்ளது என்பதே சரி... இந்த சிந்தனைகளை அந்தக் காட்டில் சாமியார் போன்ற ஒருவரிடம்தான் கேட்டேன்.

எனக்கு இது ஒப்புதல்தான்.

காட்டுக்குள் எனக்கென்ன என்று திரியும் ஒருவரிடம் இருந்த இந்த ஞானம் எனக்கு வியப்பைத் தான் தந்தது."

—பாற்கடல் மாதவன் பேட்டியில் இருந்து.

அந்த ஆசாரி கிண்ணத்தை உரசிப் பார்த்துவிட்டு தன் கருத்த நெற்றியில் ஆச்சரிய ரேகைகளை ஓடவிட்டார்.

"என்ன தங்கம்தானே?"—மோகன் படபடத்தான்.

"தங்கம்... சொக்கத் தங்கம்... மச்சம் ஒச்சமில்லாத துளியும் செம்பு கலக்காத சுத்தத் தங்கம். எப்படி இப்படி கிண்ணுன்னு நிக்குதுன்னுதான் புரியில..."

"ஒரு ஆசாரி உங்களுக்கே புரியலியா?"

www.cleanindians.com



"எல்லாருக்கும் எல்லாம் தெரிஞ்சிடுமா என்ன... நானும் தெரிஞ்சுக்க வேண்டியது எவ்வளவு இருக்கு...?"

"அப்ப இது தங்கம்தான்... சந்தேகமில்லை."

"இதுல எனக்கு சந்தேகம். ஆமா இது எப்படி உங்களுக்குக் கிடைச்சிச்சு...?"

"அதெல்லாம் உங்களுக்கு அனாவசியம். தேங்க்ஸ். நான் வரேன்..."

கிண்ணத்தைப் பிடுங்கிக்கொண்டு பறந்தான். காரில் டேஷ் போர்ட் முன்னால் அதை வைத்த நிலையில் காரை டிரைவ் செய்யும்போது மனதுக்குள் பலவித எண்ண அலைகள். சர்வ சாதாரணமாக ஒரு சொக்கத் தங்கக் கிண்ணத்தை தர முடிகிறது என்றால் அங்கே எவ்வளவு தங்கம் இருக்க வேண்டும்?

மதிப்பு தெரிந்துதான் சும்மா இருக்கிறார்களா... இல்லை மதிப்பு தெரியாமல் இருக்கிறார்களா?

காரின் சீற்றமும், கேள்வியின் சீற்றமும் ஒன்றாக இருந்தது. அந்த மலை பற்றி டி.வியில் கேள்விப்பட்டது முதல் அங்கே நடந்த ஒவ்வொரு சம்பவமும் அடுக்கடுக்காக ஞாபகத்தில் ஸ்லைட்போல விழுந்து விழுந்து அணைந்தது. எலும்பு முறிவிற்கு போட்ட கட்டு அங்கிருந்து கிளம்புவதற்குள் நிவாரணத்தைத் தந்ததுதான் பெரிய ஆச்சரியமாகத் தோன்றியது. அதைவிட ஆச்சரியம் அங்கே ஆடுமாடுகளுடன் ஒரு சிங்கம் படுத்துக் கிடந்தது தான்...

அந்த எழுத்தாளர் வியந்துபோய் பேட்டி கொடுத்ததில் தவறே இல்லை என்று தோன்றியது. அவசரப்பட்டு பேட்டியைப் பார்க்காமல் டி.வியை அணைத்தது பெரிய தவறாகப் பட்டது.

'உண்மையில் மாயமான் மலையில் மாமா ராமண்ண ராஜா சொல்கிற மாதிரி பதினெட்டு சித்தர்கள் இருக்கிறார்களா? எழுத்தாளர் சொன்னதுபோல அது தாருகா வனமா? எந்த வனமாகத்தான் இருந்துவிட்டுப் போகட்டுமே.. எப்படி இயற்கைக்கு முரணாக பல விஷயங்கள் ஒரு காட்டில் இருக்க முடியும்? நிமிடத்துக்கு நூறு வார்த்தை பேசும் படு குறும்புக்காரியான காவ்யா எப்படி ஒரு வார்த்தைகூட பேச முடியாதபடி எல்லாவற்றையும் மறந்து போனாள்?'

ரயில் பெட்டிகள் ஒன்றுடன் ஒன்று தங்களை இணைத்துக்கொண்டு தண்டவாளத்தின் மேல் ஓடுகிற மாதிரி மோகனின் மனதுக்குள் அந்த நடந்து முடிந்த சம்பவங்கள் ஓடின.

கடைசியாய் அவன் பார்த்த ஒரு ஆங்கிலப்படம் தான் அவன் ஞாபகத்திற்கு வந்தது.

www.cleanindians.com

அதில்கூட இப்படித்தான். ஒரு காட்டுக்குள் தங்கம் சர்வ சாதாரணமாக புழங்கியபடி இருக்கும். இறுதியில் பார்த்தால் அதற்குப் பின்னால் ஒரு தங்கக் கடத்தல் கூட்டம் காரணமாக இருக்கும்.

'இந்த மாயமான் மலையின் தங்க விஷயமும் அப்படித்தான் இருக்குமோ?'

மோகனின் மனதுக்குள் எல்லாவிதமான கேள்விகளும் எழும்பின. ஆனால் ஒரு கேள்விக்கும் நெத்தியடியாக விடை தெரியவில்லை.

அங்கே அறிவுக்கு புலப்படாத சக்திகள் இருக்கிற மாதிரியும் தோன்றியது. இல்லாத மாதிரியும் தோன்றியது.

இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தான்.

சமீபத்தில் அங்கே போய் தங்கியிருந்து வித்தியாசமான அனுபவங்களுக்கு ஆளாகி அதை ஒரு டி.வி பேட்டியிலும் பகிர்ந்து கொண்டவர் எழுத்தாளர் பாற்கடல் மாதவன் தான்.



அவரையே நேரில் சந்தித்து இந்தக் கேள்விகளை எல்லாம் கேட்டால் என்ன என்று தோன்றியது! அதுதான் சரி என்றும் ஒரு முடிவுக்கு வந்தவன் காரை அப்படியே ஒரு தினசரி நாளிதழின் அலுவலகத்தை நோக்கிச் செலுத்தத் தொடங்கினான்.

'நிச்சயம் அந்த நாளிதழ்காரர்களிடம் பாற்கடல் மாதவனின் வீட்டு முகவரி இருக்கும். விடக்கூடாது அவரை...!'

அவனுக்குள் ஒரு பிசாசைப் போல வேகம்.

காரிடமும் அது எதிரொலித்தது.

மலைக் காட்டுப்பகுதி!

தாடையைத் தேய்த்தபடி அமர்ந்திருந்தான் ஜெகஜ்ஜால கள்ளன் மார்த்தாண்டம்!

உடம்பில் பல இடங்களில் வெட்டுக் காயங்கள். சிகப்பாய் புழுக்கள் படுத்திருப்பது போல தழும்புகள். அவன் தலைமுடி ஒரு கட்டுக்குள் அடங்காமல் காற்றில் பறந்து கொண்டிருந்தது. அவ்வளவும் சுருள் சுருளான முடிகள்.

ஒரு பருத்த யானை வயிறு போன்ற பாறைமேல் அமர்ந்துகொண்டு ஒரு கையால் நீளமான சுருட்டைப் புகைத்தபடி மறுகையால் தாடையை தேய்த்துக்கொண்டு அமர்ந்திருந்தவன் எதிரில் விஸ்தாரமான மலைக்கரடு.

அதில் அங்கங்கே சில பாறைகள் மேல் அவன் சகாக்கள் துப்பாக்கியும் கையுமாகக் காவலுக்கு நின்றபடி இருந்தனர்.

அவர்களுக்கு நடுவில் ஒரு பருத்த பாறை மறைவின் கீழ் கெட்டில் ஒன்றில் டீ கொதித்துக் கொண்டிருந்தது.

அதற்கான நெருப்பை கிழவி ஒருத்தி ஊதி ஊதிப் பெரிதாக்கிக் கொண்டிருந்தாள்.

சில நிமிடங்களுக்குப் பிறகு கொதித்த டீயை ஒரு குவளையில் ஊற்றி எடுத்துக்கொண்டு மார்த்தாண்டம் அமர்ந்திருந்த பாறை அருகே வந்து அவன்முன் நீட்டினாள்.

அவனும் கைநீட்டி வாங்கிக் கொண்டான். ஆனால் பருகாமல் அதை ஒரு ஓரமாக வைத்தான்.

"குடிலே... ஆறிடப்போவுது."

"ஆறட்டும்... டீத் தண்ணிதானே?"

"அதைக் குடிக்கறதவிட என்னா பெரிய ரோசனை?"

"ஒண்ணுமில்ல ஆத்தா. நம்ம வீரமுத்து சொன்னதைப் பத்தித்தான் யோசிச்சுகிட்டிருக்கேன்..."

"அந்தக் கிறுக்கன் அப்படி என்னத்த சொல்லிட்டான்."

"சொன்னான்... நம்ப முடியாததை எல்லாம்..."

"அவன் ஒரு ஒளறுவாயன். அவன் பேச்சைப் போய் கேட்டுகிட்டு... அப்படி என்னாத்த சொன்னான்?"

"வேணாம் உடு... நானே கொழம்பிப் போய்க் கெடக்கேன்."

"கொழப்பமா... உனக்கா? சிங்கம்டா நீ... உனக்கு போய் கொழப்பம்கிறியே."

"விசயத்தைக் கேட்டா நீயும் குழம்பிடுவே..."

"என்னான்னு தான் சொல்லு. உன்னிய புடிக்க ராணுவத்தை அனுப்பப் போறாங்களாமா?"

www.cleanindians.com



"அதெல்லாம் பிசாத்து விஷயம் ஆத்தா... இது வேற..."

"அட அது என்னதான்னு சொல்லேன்..."

"ஒண்ணுமில்ல... தோலா தோலாவா தங்கம் வெச்சிருக்கற நானே சில்வர் தம்ளர்ல தான் தண்ணி குடிக்கேன். ஆனா ஒரு கிராமத்துல கால்காணி நிலம்கூட இல்லாத ஆதிவாசிக் கூட்டம் ஒண்ணு தங்கக் குச்சியால தான் காது குடையறாங்களாம்... தங்கத் தட்டுலதான் சோறு திங்கறாங்களாம்... நம்புறியா நீ?"

"அந்த கிறுக்குப்பய வீரமுத்து சொன்னானாக்கும்?"

"அவன் சொல்லலை ஆத்தோவ். டிவில சொன்னதைக் கேட்டுட்டு வந்து அவன் சொன்னான்..."

"சினிமாப் பொட்டிய சொல்லுதியாக்கும்... அது மட்டும் என்ன... அதுலதான் செய்தி சொல்றோம்னு மணிக்கு மணி புளுகறாங்களே..."

"எல்லாத்தையும் ஒரேயடியா வழிச்சுப் போட்டு பேசாத ஆத்தா. கொஞ்சம்கூட உண்மையில்லாம ஒருத்தர் டீ.வி.யில பேசுவாராக்கும்..."

"எலே பொச கெட்ட பயலே... அப்படிப் பேசியிருந்தா இந்நேரம் கோணிப்பைய்யோட நூறு பேர் அந்த மலைக்கு போயிருப்பாங்களேடா.

தண்டட்டி போட்டு காது குத்துன கிளவி நான்.

யார்கிட்ட சொல்றே...?"

"அப்படி எல்லாம் போவ முடியாதாம் அங்க... சாமி யாருங்க நிறைய பேர் திரியறாங்களாம். அவங்கள நாம பாத்தாலோ, இல்ல நாம அவங்கள பாத்தாலோ நமக்கு புத்தி பெரண்டு போயிடுமாம்."

"சரிதான்... நம்ம ஊர் சக்கனூர் ஈஸ்வரன் கோவில் குளத்துக்குள்ள தங்கத்தேர் மூழ்கிக் கிடக்குதுன்னு சொல்ற கதை மாதிரியில்ல இது இருக்குது..."

"அதான் ஒரே குழப்பமா இருக்கு..."

"உனக்கு என்னா குழப்பம். அங்க போய் தேட்டையை போட்டா என்னான்னு யோசிக்கிறியா?"

"நான் என்னிக்கு ஏழை பாழை மடியில கை வெச்சிருக்கேன். அது எப்படின்னு தெரியணும் அம்புட்டுதான்..."

"ஒரு கழுதையும் வேணாம். நிலாத்தூர் ஜமீன்ல கை வெச்சதுக்கே அந்த ஜமீன்தார் ஒரு கூட்டத்தை உன்னிய பிடிக்க அனுப்பி வெச்சிருக்கறதா சொல்றாங்க. இதுல நீ போய் சுலபமா மாட்டிக்கிடாதே..."

"நானா மாட்றவன்... என்ன ஆத்தா நீ? காத்தைக்கூட கையால புடிக்கலாம். ஆனா என்னைப் பிடிக்க முடியாது நான் அந்த வீரப்பனுக்கே வித்தை சொல்லித் தருவேன் தெரிஞ்சிக்க..."

www.cleanindians.com

"எலேய்... தைரியமும் தன்னம்பிக்கையும் தான் ஒரு மனுஷனுக்கு முதல்ல தேவை. ஆனால் அதுல திமிறும் மப்பும் கலந்துச்சுன்னு வை... அம்புட்டுதான். இரும்பைத் தண்ணிக்குள்ள போட்டுப் பாரு... துருவேறி மண்ணாப் போயிரும். சும்மா எகத்தாளம் பேசாம ஆகவேண்டியதப் பாரு."

—கிழவி ஞானபாடம் சொல்லிக் கொடுத்துவிட்டு விலகிப் போனாள், போகிற போக்கில்.

"அந்தத் திருவண்ணாமலை அன்னதானத்துக்கு பணத்தை கொடுத்துவிட்டுட்டியா?" என்றும் கேட்டாள்.

"இந்நேரம் அங்க அன்னதானம் நடந்துகிட்டிருக்கும்..."

அவன் பதிலில் அவளிடம் திருப்தி. ஒரு ஓரத்தில் கவிழ்ந்து கிடந்த கூடை ஒன்றுக்குள் கோழிகள் அடைந்து



கிடந்தன. அதில் ஒன்றைப் பிடித்தவளாய் நடையைத் தொடர்ந்தாள்.

இனி அது மார்த்தாண்டத்துக்கான உணவாகிவிடும். மார்த்தாண்டத்தையும் ஒரு கூடைக்கோழியாக அமுக்க எவ்வளவோ பேர் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவன் வல்லூறாய்ப் பறந்து விடுகிறான். துணைக்கு லெஃப்ட் ராமனும், ரைட்டு ஏழுமலையும் இருக்கும்போது அவனுக்கென்ன கவலை?

அந்த லெஃப்ட் ராமனும், ரைட்டு ஏழுமலையும் ஆட்டிடையர்கள் போல் தொரட்டிக் குச்சியும் கையுமாய் அழுக்கு வேட்டிக் கச்சமுடன் அந்த பிராந்தியத்தில் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தனர். வேறு யாராக இருந்தாலும் அவர்கள் வரும் பாதையில் உள்ளே நுழைய முடியாது. போலீஸ் வந்தாலோ கண்ணி வெடிகள் வெடித்து மிதித்தவர்களை கூடையில் அள்ளிக்கொண்டு போகும்படி செய்துவிடும்.

அப்படி ஒரு பந்தோபஸ்த்து... அதை லகுவாகக் கடந்து மார்த்தாண்டம் முன் நின்றபோது மார்த்தாண்டம் முன்னால் அவனையே மறைக்குமளவு சுருட்டுப் புகை. அதை ஏதோ துணியை விலக்குகிற மாதிரி விலக்கிக் கொண்டு மார்த்தாண்டமும் படுத்திருந்த நிலையில் இருந்து நிமிர்ந்தான். 'போன காரியம் என்ன ஆச்சு?' என்று கேட்காமல் ஒரு தினுசாகப் பார்த்தான்.

"அண்ணே... மாயமான் மலைக்காடு இருக்கற இடத்தைத் தெரிஞ்சுகிட்டோம். ஒரு அம்பது குடும்பம் இருக்கும்... ஆதிவாசிக் குடும்பம்தான்! TVல கேட்டதும் நிசம்தான். ஊட்டுக்கு ஊடு தங்கம் சிரழிஞ்சு கிடக்குது. ஆனா என்னான்னு தெரியல காட்டிலாகா காரங்க அதை அவங்ககிட்ட இருந்து எடுத்துக்க எந்த முயற்சியுமே பண்ணாம இருக்குறாங்க.

நான்கூட ஒரு வாட்ச்சர் பயலை நோண்டுனேன். வீணாப் போற கள்ளிங்கள பொறுக்கிட்டுப் போனா அதுக்கு பிராக்கெட் போட்டு காசு கேப்பீங்களே... அவுககிட்ட தங்கமா கொழிக்குதே.. எப்படின்னு கேக்க வேண்டியது தானேன்னேன். உனக்கு அழியற நேரம் வந்துடுச்சி. அதான் நீ இப்படி எல்லாம் பேசறேங்கறான்..."

லெஃப்ட் ராமன் விஸ்தாரமாக விளக்கி முடித்தான்.

அடுத்து ரைட்டு ஏழுமலை.

"அங்கன பூடகமா ஏதோ இருக்குதுண்ணே. மரஞ்செடி கொடிகளை எல்லாம் உழுந்து கும்புட்றாங்க. நான் பாக்கைல ஒரு மரம் இடி விழுந்து எரிஞ்சு போயிருந் துச்சு. அதுக்காக உக்காந்து 'ஓ'ன்னு ஒப்பாரி வைச்சுக் கிட்டிருந்தாங்க. என்னன்னு நைஸா விசாரிச்சேன்... அந்த மரம் அவங்க குலதெய்வமாம்!"

இருவரின் விளக்கத்தையும் தொடர்ந்து மார்த் தாண்டம் ஒரு செருமு செருமினான். பின் கொஞ்சம் போல இருமிவிட்டு மார்பில் உள்ள சளியை அவர்கள் இருவரும் உணரும்படி இழுத்து உறிஞ்சி வாய்க்குக் கொண்டுவந்து ஒரு துப்பி துப்பினான். அப்படியே நாவால் முன் பல் வரிசையை ஒரு வருடல் வருடிக் கொடுத்து விட்டு "தங்கம் அவங்களுக்கு எப்படிக் கிடைக்குதுன்னு தெரிஞ்சிச்சா?" என்று பிரதான அந்தக் கேள்வியைக் கேட்டான்.

"அது- அது.."

"தெரியல.. தெரிஞ்சிக்க முடியல... அப்படித்தானே?"

"ஆமாண்ணே... நான் நினைக்கேன் ரசவாதம் கிசவாதம் பண்ணோணும்.."

"சரி.. இனி நீங்க விட்றுங்க. நானே பாத்துக்கறேன். ஆமா சாமியாருங்க நிறைய பேர் சுத்திகிட்டு இருக்கற



தாவும் அவங்க அன்னியங்களை மலைக்குள்ளார உட்றதில்லைன்னும், அவங்க பார்த்தாலே மயக்கம் வந்துடுது, புத்தி தடுமாறிடுதுன்னுல்லாம் சொல்றதப்பத்தி எதாச்சும் தெரிஞ்சிச்சாடா?"

"இல்லண்ணே.. ஆனா ஒரு விஷயம்ணே. நாங்க பாக்க ஒரு விசயம் நடந்துச்சு. ஒரு மரம் எரிஞ்சு போய் அதுக்காக எல்லாரும் அழுதாங்கன்னு சொன்னேன்ல... அப்ப பதினெட்டு பசுமாடுங்க அங்க இருந்துச்சு. அந்த மலை சாதிகாரங்க அந்த பசுங்களுக்கு பூசை செஞ்சு விழுந்து கும்பிட்டாங்க. அப்பால அதை ஆத்தோரமா விட்டுட்டு திரும்பி வந்துட்டாங்க.."

"எல்லாத்தையும் துண்டு துண்டா கேட்டா சொல்லுங்கடா... நாயிங்களா!"

"தப்புதாண்ணே... நாம இப்ப அங்க போறோ மாண்ணே?"

"நாம போகலே.. நான் போறேன்."

"அண்ணே... தனியாவா?"

"ஆமாண்டா..."

மார்த்தாண்டம் ஒரு தினுசாக அழுத்தமாகச் சொல்லிவிட்டு எழுந்து நின்றான். அப்படியே நடந்து சில பாறைகள் மேல் ஏறி குகை போன்ற அவன் இருப்பிடத் துக்குள் நுழைந்தான். அந்த குகைக்குள் அங்கும் இங்குமாக ஏராளமான வெடி மருந்துகள்; டெட்டனேட்டர்கள்..! அதன்பின் ஒரு குட்டி யானையைப் போட்டு மூடலாம் எனும்படியாய் ஒரு பெரிய மரப்பெட்டி. அவனது மொத்த திருட்டுப் பொருட்களும் அதற்குள்தான் இருக்கின்றன. அதில் கைப்பருமனுக்கான இரும்புப் பூட்டு ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.

www.cleanindians.com

பெட்டிக்கு மேலே அவனது களவுத் தொழிலுக்கும் காவல் வாழ்க்கைக்கும் மிகவும் உறுதுணையாக இருப்பதாக அவன் நம்பும் வீரக் கருப்பச்சாமியின் படம். அந்த சாமி படத்தைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

பின் கோடு போட்ட லுங்கியும் திறந்த மார்புமாய் இருந்துகொண்டிருந்த அவன் வேகமாக உருவத்தையும் மாற்றிக்கொள்ள ஆரம்பித்தான்.

நாடகத்தில் கலைஞர்கள் படுவேகமாக உடை மாற்றிக்கொண்டு வந்து காட்சிக்கு காட்சி அசத்துவார்கள். மார்த்தாண்டம் அந்த மாதிரி தனக்குத்தானே மேக்கப் போட்டுக்கொண்டு தன்னையே மாற்றிக்கொள்வதில் கில்லாடி. அதற்குத் தோதாக டோப்பாக்களும், மேக்கப் பாக்ஸ் ஒன்றும் அந்த மரப்பெட்டி மேலேயே இருந்தன. மாயமான் மலைக்காட்டுக்குக் கிளம்பிவிட்ட அவன் இப்பொழுது எந்த மேக்கப்புக்கு மாறப்போகிறான் என்றுதான் தெரியவில்லை.

www.chennaiindians.com

## 10

"பூமியில் ஒரு மனிதன் பிறப்பதும் வளர்வதும் பின் இறப்பதுமாக உள்ள நிகழ்வுகளுக்குப் பின்னே ஏராளமான விஷயங்கள் இருக்கின்றதாம். ஒரே மாதிரி வாழ்க்கை முறை, ஒரே முகச் சாயல் கொண்டவர்கள், ஒன்றே போல ஆரம்பமும் முடிவும் கொண்டவர்கள் மட்டுமே ஒவ்வொரு காலக் கட்டத்திலும் அன்று நிலவும் மக்கள் தொகையை, ஏழு நாட்களுக்கு முன்பான மக்கள் தொகையுடன் வைத்துக் கழித்தால் வரும் அளவில் இருப்பார்களாம்.



நானும் சராசரியாக ஒரு கணக்கு போட்டு பார்த்தேன். ஏழாயிரம் என்று ஒரு எண்ணிக்கை எனக்கு வந்தது. இந்த ஏழாயிரம் பேருக்கும் ஒவ்வொரு நாளும் பொழுதும் எப்படி அமையும், அவர்கள் ஜாதகம் எப்படி இருக்கும் என்பதை சொல்லிவிடக்கூடிய ஒரு சித்தரை அந்தக் காட்டில் கண்டேன்.

ஓயாமல் எழுதிக் கொண்டேயிருக்கிறார் அவர். இரவு நேரங்களில் உயரமான பாறை ஒன்றின்மேல் போய் நின்றுகொண்டு சில பயிற்சிகள் செய்கிறார். அதில் ஒரு பயிற்சியின்போது ஒரு பறவை போல அவர் பறந்து வான மண்டலத்தை எல்லாம் ஒரு சுற்று சுற்றி வருவார் என்றும் அப்பொழுது எந்த கிரகம் எந்த இடத்தில் இருக்கிறது என்பது தெரிந்து அதற்கேற்ப பலன்களைக் கணித்து அதை அவர் நிறைய பனை ஓலைகளில் எழுதி வைத்து வருகிறார் என்றும் அவரைப் பற்றி இன்னொருவர் சொன்னார். ஆனால் நான் பார்க்கும்பொழுது அவர் வானில் எல்லாம் பறக்கவில்லை. அது எப்படி முடியும் என்றும் எனக்கு தெரியவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். எனக்கு அறுபது வயதாகிறது. மனம் போன போக்கில் போய் வாழ்ந் திருக்கிறேன். ஆசைப்பட்டதை எல்லாம் அனுபவித்திருக் கிறேன். என்னைவிட பத்து வயது கூடுதலான, குறைவான பெண்களிடம் எல்லாம் படுத்து எழுந்திருக் கிறேன்.

அப்பொழுதெல்லாம் மனம் போனபடி இச்சைகளோடு வாழ்வதே வாழ்க்கை என்கிற கொள்கை உடையவனாகவே இருந்தேன். அதெல்லாம் என் சுயவிருப்பம், சுயமான முடிவுகள் என்பதுதான் உண்மையும்கூட... ஆனால் நான் சந்தித்த சித்தர்களில் ஒருவர் சுயவிருப்பம் என்றும் சுயமான முடிவு என்றும் நான் நினைத்த ஒவ்வொரு விஷயத்தின் பின்னாலும் கிரகங்களின் ஆதிக்கம் உள்ளதாகக் கூறினார்.

கிரகங்களே அப்படி நம்மை நினைக்க வைத்து இயக்குகின்றனவாம். சுருக்கமாக சொன்னால் பூமியில் எல்லா உயிர்களும் கிரகங்களின் கைதிகள் ஆவர். நாங்கள் அதனிடமிருந்து விடுதலை பெற்றவர்கள் என்று கூறிச் சிரித்தார்."

—பாற்கடல் மாதவனின் பேட்டியிலிருந்து.

சென்னை!

ஒரு ஃப்ளாட் வீட்டினுள்தான் வசித்து வருகிறார் பாற்கடல் மாதவன்.

ஃப்ளாட் முகப்பில் அவரது பெயர்ப் பலகையில் பார்க்கும்போதே ஒரு பிழை தெரிந்தது.

'பாற்க்கடல் மாதவன்' என்றிருந்தது. தமிழில் வல்லின 'ற்'க்குப் பக்கத்தில் 'க்' வராது. ஒரு பிரபல எழுத்தாளர் எப்படி இது தெரியாமல் இருக்கிறார்?' கேள்வியோடு கதவைத் தட்டினான் மோகன்.

"திறந்துதான் இருக்கு... உள்ள வரலாம்..." என்கிற அழைப்பொலி கேட்டு கதவைத் தள்ள, திறந்துகொண்டது. உள்ளே நுழைந்தான்.

எழுத்தாளர் வீடு என்பது சரியாகத்தான் இருந்தது. செங்கல்லுக்கு பதிலாக புத்தகங்களையே வைத்துக் கட்டியதுபோல வீட்டுக்குள் சுவரே தெரியவில்லை; சுவரை ஒட்டிய அலமாரியில் புத்தகங்கள்தான் தெரிந்தன.

மாதவனும் நடு ஹாலில் ஒரு கார்ப்பெட் மேல் கணக்குப் பிள்ளை மேஜையை போட்டுக்கொண்டு அதன் மேல் பேப்பர்களை பரத்தி எழுதிக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றிலும்கூட புத்தகங்கள்.

"நமஸ்காரம்!"

www.cleanindians.com



"உக்காருங்கோ... என் வாசகரா...?"

"இல்லை."

உடனே ஒரு ஆச்சரியப் பார்வை மாதவனிடம்.

"நான் பொய் சொல்ல விரும்பலை. அதான்..."

"சந்தோஷம். என் வாசகன்கற பொய்யைவிட உண்மையான மனுஷன்கற நிஜம்தான் பெரிசு."

"இவ்வளவு ஸ்போட்டிவா இருக்கற உங்க நேம் போர்டுல ஒரு பிழை..."

"தெரியும்... 'ற்'க்குப் பக்கத்துல இருக்கற 'க்'தானே?"

"கரெக்டா சொல்லிட்டீங்க."

"அது தெரிஞ்சே நான் செய்துருக்கற பிழை; எனக்கு எழுத்து இலக்கணத்தைவிட, உச்சரிப்புல இருக்கற உயிர்மை பெரிசு."

"இருந்தாலும் தப்பான முன்னுதாரணம் ஆயிடுமே...?"

"இல்லை... ஒரு நாளைக்கு என்னைப் பார்க்க சராசரியா இருபது பேராவது வராங்க. அவங்கள்ள இதுவரை இரண்டே பேர்தான் இந்தப் பிழையைப் பற்றி என்கிட்ட பேசினவங்க. ஒருவர் அந்த நாளைய தமிழ்க் கவிஞர். அடுத்து நீங்க. மத்தவங்க கண்ணுக்கு அந்த தப்பு தெரியவேயில்லை. அதை வெச்சு நான்தான் எவ்வளவு பேருக்கு இலக்கணத் தமிழ் தெரிஞ்சிருக்குதுன்னு தெரிஞ்சுக்கறேன்."

மாதவன் மோகனை நன்றாக வளைத்துக் கட்டி அடக்கினார். அவனும் ரசித்தான். அவர் நெற்றியைப் பார்த்தான்.

புதிதாக அவர் குங்குமம் இட ஆரம்பித்திருந்தார்.

"ரொம்ப மாறிட்டீங்க போல இருக்கே?"

"அப்படியா... எந்த வகைல?"

"நெத்தியில குங்குமம்... டி.வி பேட்டியில ஒரே அமானுஷ்ய பஜனை..."

"அப்ப நீங்க வந்துருக்கறது டி.வி பேட்டி பற்றி பேசவா?"

"ஆமாம்... நான் அந்த மாயமான் மலைக்கு ஒரு ஐம்பது அறுபது கிலோ மீட்டர் பக்கத்துல இருக்கற நிலாத்தூர் ஜமீனைச் சேர்ந்தவன்."

"உங்களை ஒண்ணு கேக்கணும்னு... ஜமீன்தார்ங்கற மரியாதை மதிப்பு இப்பவும் இருக்கா?"

"இருக்கு- பெருங்காய டப்பா வாசனை மாதிரி. காசும் பணமும் இருக்கற வரை—அதை வாரி வாரிக் கொடுக்கற வரை எந்த காலத்துலையும் ஜனங்க ஜமீன்களை மதிக்கத் தவறவே மாட்டாங்க..."

"அப்ப உங்க ஜமீனுக்கு நிறைய சொத்து பத்து இருக்குன்னு சொல்லுங்க..."

"தெரியாது. மாமாவைத்தான் கேக்கணும். பாவம் அவர்கூட இப்ப தன் கஜானாவைப் பூரா திருடக் கொடுத்துட்டு வருத்தத்துல இருக்கார்..."—மோகனின் ஆழ்ந்த வருத்தம் மாதவனை வேறு மாதிரி நிமிர்த்தியது.

"புரிஞ்சுபோச்சு... நீங்க எதுக்கு வந்துருக்கீங்கங்கறது புரிஞ்சு போச்சு..."

"புரிஞ்சுபோச்சா...?"

"ஆமாம்... நான் ஒரு மடையன். நான் அவசரப்பட்டு டி.வி பேட்டி கொடுத்துட்டேன்."

"என்ன சார் சொல்றீங்க?"



"ஆமாம்... அந்தப் பேட்டியில மலை ஜனங்களைப் பெருமைப்படுத்தவும், அவங்களுக்கு ஆசையே கிடையாதுன்னு சொல்லவும், தங்கம் வெள்ளியை எல்லாம் பிளாஸ்டிக் மாதிரி பயன்படுத்தறாங்கன்னு சொன்னேன். ஆனா அது நான் சொன்ன பொருளை எதிரொலிக்கல.

அவங்களுக்கு அவ்வளவு தங்கம் எங்க இருந்து வந்திச்சு... எப்படி வந்திச்சுன்னு கவர்மென்ட் அஃபிஷியல்ஸ் எல்லாம் போன் பண்ணி கேக்கறாங்க.

ஒரு நகைக் கடைக்காரர் நான் அந்தத் தங்கத்தை ஒரு நல்ல விலைக்கு எடுத்துக்கறேன் தருவாங்களான்னு கேக்கறார்...

இப்ப நீங்களும் எங்க கஜானா காலி, அது அங்க போய்ட்டு வந்தா நிரம்புமான்னு கேக்கப் போறீங்க. சரிதானே?"

மாதவன் கிட்டத்தட்ட சரியான இடத்திற்குதான் வந்தார். மோகனுக்கு தர்மசங்கடம் ஆகிவிட்டது. இருந்தும் சமாளித்தான்.

"இல்ல சார்... அப்படி எல்லாம் இல்ல... நான் கேக்க வந்தது வேற..."

"இல்ல அதுதான்... லுக் மிஸ்டர். அங்க தங்கம் இருக்கு. நிறைய இருக்கு. ஆனா அது அவங்களுக்கு எப்படி கிடைச்சதுங்கறதெல்லாம் எனக்குத் தெரியாது. தெரிய வேண்டிய அவசியமும் இல்லை.

ஆனா ஒண்ணு... இந்த மாதவன் அங்க போய்ட்டு வந்ததுக்காக ரொம்ப பெருமைப்பட்டுக்கறேன். ஏன்னா— அந்த காடும் அங்க உள்ள ஜனங்களும் எல்லாவிதங்கள்ளையும் படிச்ச இந்த நகரத்து மனுஷங்களைவிட மேலானவங்க."

www.cleanindians.com

"ஒரு தடவை போய் ஒரு பத்துநாள் இருந்ததுலேயே உங்களுக்கு இவ்வளவு தெரிஞ்சு போச்சா?"

"நல்ல கேள்விதான் இது... ஒண்ணு நல்லா தெரிஞ்சுக்குங்க. கெட்ட விஷயங்களை புரிஞ்சுக்கத்தான் அதிக காலம் தேவைப்படும். நல்ல விஷயங்கள், அதுவும் இயற்கை சார்ந்த விஷயங்களை புரிஞ்சுக்க அதிக டைம் தேவையில்லை."

"அது சரி... எப்படி அந்த காட்டை தாருகா வனம்னு சொன்னீங்க?"

"ரொம்ப சிம்பிள்... புராணப்படி தாருகாவனத்துல தான் சனகாதி முனிவர்கள் தவம் செய்துருக்காங்க. ரொம்ப கர்வமா 'நானே கடவுள்—எனக்கெதுக்கு கடவுள்'னு சிவன், விஷ்ணு, பிரம்மாவை இகழ்ந்தும் பேசியிருக்காங்க. அவங்களோட கர்வத்தை அடக்க பிரம்மாவும் முடிவு செஞ்சு சிவன்கிட்ட போய் நிக்கறார். சிவனும் ஒரு திருவிளையாடல் பண்றார். அதன்படி சிவனும் விஷ்ணுவும் ஆண் பெண்ணாகி அந்த முனிவர்களை மயக்கறாங்க. அவங்களும் சுதாரிச்சு உடனே இரண்டு பேரோடையும் மல்லு கட்றாங்க. அந்த யுத்தத்துல கடைசியா அனுப்பின அஸ்த்ரம்தான் புலி. சிவன் அந்த புலியை வதம் பண்ணி அதோட தோலை உரிச்சு போர்வையா போத்திக்கிறார். அப்ப அவர் சொல்றார்:

'எல்லா மிருகங்களையும் வதம் பண்ற மிருகம் புலி. இன்னொரு மாமிசத்தால் தன்னுடைய மாமிசத்தை வளர்க்கற புலி வதம்கற துன்பம் மூலம் மற்ற மிருகங்களை தன்னுடையதாக்கிக்குது. அதனால மற்ற மிருகங்கள் அதன் வயித்துல இரையாகி அதுவும் புலியாகுது. மனித ஆத்மாக்களும் அப்படித்தான்... வாழ்க்கைத் துன்பத்துல உள்ள அவர்கள் எனக்குள் ஒடுங்கி நானாகவே ஆகிறார்கள். இந்த தத்துவத்தை சொல்ற இடம்

www.chennaiindians.com



தாருகாவனம். இந்த தாருகாவனத்துல மட்டும் எந்த மிருகமும் மூர்க்கமா இருக்காது'ங்கறார்...

இது புராணக்கதை!

மாயமான் மலைல நான் ஆடுமாடுகளோட சிங்கம் புலி சகஜமா திரிஞ்சுகிட்டிருந்ததைப் பார்த்தேன். அப்ப இது தாருகாவனமாத்தான் இருக்கணும்னு யூகிச்சேன். சொன்னேன்."

"சரி... மாயமான் மலை ஒரு தாருகாவனமாவே இருக்கட்டும். அதனால என்ன?"

"அதனால என்னவா... என்ன கேள்வி கேட்டுட்டீங்க. புராணமெல்லாம் பொய்... அதன் விஷயங்கள் அவ்வளவும் கட்டுக் கதைன்னு சொல்றவங்களுக்கெல்லாம் ஆதாரமா கிடைச்சிருக்கற விஷயம்ப்பா இது... அது தாருகாவனம்னா புராணத் தகவல்கள் எல்லாம் உண்மைன்னு ஆயிடுதுல்ல..."

"இந்த புராணச் சிறப்பை விடுங்க... அந்த காட்டுல வேற என்ன விசேஷங்கள்...?"

"நிறைய இருக்கு... உலகத்துல எங்கையுமே இல்லாத மூலிகைகள், சர்வ நோய்களைத் தீர்க்கற சஞ்சீவி மூலிகை—அவ்வளவு ஏன் பறவைகளை உணவா விழுங்கற மாமிசத் தாவரம்கூட இருக்கலாம்னு நினைக்கறேன் நான்..."

"இந்த மூலிகை சமாச்சாரமெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். நம்முடைய கோலார் தங்க வயல்லகூட இப்ப தங்கம் இல்லை. சுரங்கத்தை மூட்ற ஒரு நிலை. இந்த நிலைல நம்ம தேசத்துக்கு ஒரு தங்கச் சுரங்கமோ இல்லை தங்கம் பண்ற ரகசியமோ ரொம்ப அவசியம். அதுக்கு அங்க வழி இருக்கா?"

"திரும்ப நீங்க உங்க பொருளாதாரச் சிக்கல் கிட்டையே வந்துட்டீங்க... நீங்க வந்துருக்கறதும்

தங்கத்துக்குதான். இனிமே உங்ககூட பேச நான் தயாரா இல்லை. தயவுசெய்து நீங்க கிளம்பலாம்."

"சார்... நீங்க தவறா புரிஞ்சுகிட்டீங்க. நான் அந்த மலைக்காட்டுக்குப் போன ஒருத்தன். அங்க இருக்கற பழங்குடியினரைப் பார்த்த ஒருத்தன். அவ்வளவு ஏன்— அவங்க பிரசன்ட் பண்ணின ஒரு தங்க தேன்கிண்ணம் இப்பவும் என்கிட்ட இருக்கு... இருங்க காட்டறேன்..."

—மோகன் எழுந்து வெளியில் சென்று காரில் இருந்த அந்தக் கிண்ணத்தை எடுத்து வந்து காண்பித்தான். மாதவனும் அதைப் பார்த்து விக்கித்தவராக அவனைப் பார்த்தார். அவரது முகத்திலும் கோபத்தின் தணிவு.

மோகனும் நைச்சியமாக ஆரம்பித்தான்.

"இப்படி தங்கம் இருக்கறது தெரிஞ்சும் ஒரு எழுத்தாளரான உங்களுக்கு சில சந்தேகங்கள் வராதது ஏன்னுதான் எனக்குப் புரியலை..." என்று கைகளை கசக்கினான்.

"என்ன சந்தேகம்?"

"ஒரு கற்பனையான சந்தேகம்தான்... அங்க ஒரு தங்கக் கடத்தல்காரன் இருந்து போலிசுக்கு பயந்து ஒளிஞ்சு வாழலாம் இல்லையா? தன்கிட்ட இருக்கற தங்கத்தை என்ன செய்யறதுன்னு தெரியாம இப்படி கிண்ணமா, பாத்திரமா செய்து கொடுத்திருக்கலாம் இல்லையா?"

மோகன் அந்தக் கேள்வியைக் கேட்டபோது திறந்து கிடந்த வாசல்புறம் நிழலாடியது போல் இருந்தது. "ஒரு நிமிஷம்..." என்று எழுந்துபோய் வெளியில் பார்த்தார் மாதவன். யாரையும் காணவில்லை. ஆனால் ஒருவித மூலிகைவாசம் மட்டும் மூக்கில் ஏறியது.

மாதவனுக்கு மிகக் கூர்மையான நாசி.



அது நாய்க்கு சமமானது. பொடி போடும் ஒருவர் கூட்டத்தில் இருந்தால் கச்சிதமாய் ஸ்மெல் செய்து கண்டுபிடித்து விடுவார்... பூண்டு ரசம் சாதம் சாப்பிட்டிருந்தால்கூடப் போதும்... என்ன பூண்டு சாப்ட்டீங்களா என்று கேட்பார்.

இப்பொழுதும் அது வேலை செய்தது.

திரும்ப மாயமான் மலைக் காட்டுக்குள் போய் விட்டது போல கூடத் தோன்றியது. அங்கேதான் காடு முழுக்க இப்படி ஒரு மூலிகை வாசம் மூக்கில் ஏறியது. திரும்ப இங்கே...

ஆனால் நின்று கொண்டிருப்பது சென்னையில் உள்ள தன் வீட்டு வாசலில்...

ஒருவேளை பிரமையோ?

அப்படி நினைப்பதைத் தவிர வேறு வழியும் இல்லை. அந்த நினைப்போடுதான் உள்ளே வந்தார்.

"தம்பி உங்ககிட்ட ஒண்ணு கேக்கணும். உங்களுக்கு ஜலதோஷமில்லையே..."

"இல்லை."

"அப்ப சரி... இங்க எதாவது பச்சை வாசனை அதாவது மூலிகை வாசனை வருதா...?"

"இல்லையே..."

"எனக்கு அது வந்தமாதிரி இருந்தது. சரி விடுங்க. ஒரு பத்து நாளா அந்த மலை நினைப்புலயே இருக்கேனா... அந்த பிரமை... சரி நீங்க என்ன கேட்டீங்க..."

"அங்க தங்கக் கடத்தல்காரன் யாரும் இருந்து..."

"இருக்கலாம் தம்பி... அதுக்கும் வாய்ப்பு இருக்கு. ரசவாதத்துக்கும் வாய்ப்பு இருக்கு."

"ரசவாதம்லாம் சாத்தியமா சார்..."

"நீங்க மாயமான் மலைக்கு போய்ட்டு வந்தவர் தானே?"

"நிச்சயமா?"

"அங்க மிருகங்க ஒத்துமையா இருந்ததைப் பாத்தீங்களா?"

"பார்த்தேன்..."

"அது சாத்யம்னா ஏன் இதுவும் சாத்யமா இருக்கக்கூடாது?"

மாதவனின் மடக்கல் மோகனிடம் அழகாக வேலை செய்தது. முகத்திலும் ஒரு ஜொலிப்பு பெருக ஆரம்பித்தது.

"என்ன சிந்தனை?"

"ஒண்ணுமில்ல சார்... இப்படி அபூர்வமான விஷயங்களை வெச்சுகிட்டு இந்தியா ஏழை நாடாவே இருக்கணுமா சார்...?"

"நான் நம்ம தேசத்தை ஒரு ஏழை தேசமாவே நினைக்கல தம்பி..."

"எப்படி சார்... ஒரு தார் ரோடு ஒழுங்கா இல்ல சார் இங்க..."

"நீங்க பொருள் பலத்தை வெச்சு சிந்திச்சு பேசறீங்க; எப்பவும் பொருள் பலம் இருக்கற இடத்துல பெரிசா நிம்மதி இருக்கறது இல்லை. மனுஷனுக்கு வாழ்க்கைல நிம்மதி ரொம்ப முக்கியம்.

பயமே இல்லாம, பசியும் இல்லாம ஏகாந்தமா வாழறது எவ்வளவு பெரிசு தெரியுமா? அது நம்ம யோகிகள்கிட்ட இருக்கு. அவங்க அந்த காட்டுல இருக்காங்க."



"அப்ப இந்திய மக்கள் எல்லாரும் சாமியார் ஆயிடணும்னு சொல்றீங்களா?"

"தப்பு... அப்படி ஆனாலும் தப்பு இல்லை. காலத்துக்கு 'கி.மு., கி.பி'ன்னு இரண்டு பிரிவு இருக்கற மாதிரி இந்த மாதவனுக்கும் மாயமான் மலைக் காட்டுக்குமுன், பின்னுன்னு இரண்டு இருக்கு.

முந்தைய மாதவன் அமெரிக்கா மாதிரி இந்த நாடு ஆகணும்னு ஆசைப்பட்டவன். இப்போதைய மாதவன் அமெரிக்காவும் இந்தியா மாதிரி ஆகணும்னு ஆசைப் பட்றேன்."

"அந்த அளவு என்னை ஒண்ணும் அந்த மலை மாத்திடலை. அங்க நிறைய மாய்மாலங்கள் இருக்கற மாதிரிதான் தெரியுது.

அங்க இருக்கற சாமியார்கள் வாய்க்கு வந்ததைப் பேசி என் மாமா மாதிரி ஜமீன்தார்களையே குழப்பி வெச்சிருக்காங்க.

தலைமுடிக்கும் செல்வத்துக்கும் எதாவது சம்பந்தம் உண்டா?"

"எதுக்கு இந்தக் கேள்வி..."

"என் மாமா குடும்பத்துல எல்லாருக்கும் ஏழு எட்டு அடிக்கு கூந்தல் இருக்கும். என் மாமா மகள் இப்ப அதை பாரமா நினைச்சு பாப் வெட்டிகிட்டா. உடனே வீட்டை விட்டு லட்சுமி போயிடுவான்னும் போய்ட்டான்னும் என் மாமா புலம்ப ஆரம்பிச்சுட்டாரு. கேட்டா அந்த மலைக்காட்டு சாமியார் ஒருத்தர் சொன்னார்ங்கறாரு.

இதெல்லாம் பேத்தலா இல்லை...?"

"அப்ப பலவித குழப்பங்களுக்கு உங்களுக்கு விடை தெரிய வேண்டியிருக்கு. அப்படித்தானே?"

www.cleanindians.com

"நிச்சயமா... அதுக்குத்தான் உங்களை சந்திச்சா எதாவது ஒரு தெளிவு பிறக்காதான்னு வந்துருக்கேன்."

"உங்க அளவு எனக்கு சந்தேகங்கள் கிடையாது. சொல்லப்போனா நல்ல மாற்றங்கள்தான் ஏற்பட்டு இருக்கு."

"அப்படின்னா தலைமுடிக்கும் செல்வத்துக்கும் சம்பந்தம் இருக்குதா...? அந்த சாமியார் சொன்னதுல அர்த்தம் இருக்கா...?"

"இதுக்கு பதிலை அந்த சாமியார்தான் சொல்லணும். இது ரொம்ப சூட்சமமான விஷயம். ஒருத்தர் மேல இருக்கற மரியாதையைக் காட்ட கை கூப்பி வணக்கம் தெரிவிக்கிறோம். சல்யூட்டும் அடிக்கிறோம். அது ஒரு கை அசைவுதானே... அதை வெச்சு அவர் மனசுக்குள்ள மரியாதை இருக்குன்னு எப்படி நம்பறதுன்னு கேட்டா என்ன பதில் சொல்ல முடியும்? ஒண்ணு சொல்றேன் தம்பி...

நகரத்து மனுஷன் பாவம். அவன் புத்திகிட்டயே அவன் கைதியா இருக்கான். அது அவனை நிம்மதியாவே இருக்க விடமாட்டேங்குது.

ஆனா அந்தக் காடு அப்படி இல்லை... அங்க இருக்கற மனுஷங்களும் அப்படி இல்லை. கவலைன்னா என்னன்னே தெரியாது. எவ்வளவு சந்தோஷமா இருக்காங்க தெரியுமா? இங்கதான் எதுக்கெடுத்தாலும் சந்தேகம்... எல்லாத்துலையும் ஆதாரமும் தேவைப்படுது..."

மாதவன் எழுதுவது போலவே சொன்னதிலும் அற்புதமான உட்பொருள்.

'நகரத்து மனிதன் அவனது புத்தியிடமே கைதியாக இருக்கிறான்!'

www.cleanindians.com



'வாவ்... நிஜம்தான்...' ரசித்தான் மோகன்.

"கடைசியா ஒரு கேள்வி..."

"இன்னுமா?"

"அங்க 18 சித்தர்கள் இன்னும் இருக்கறதா சொன்னீங்களே..."

"ஆமாம்... இருக்காங்க... நானும் பார்த்தேன்."

"எங்க?"

"ஒரு அருவிக் கரைல..."

"பேசினீங்களா?"

"சிலர்கூட பேசினேன்... பலர் நான் பேசியும் பேசலை."

"அவங்க 18 சித்தர்கள் தான்னு உங்களுக்கு யார் சொன்னது?"

"நிச்சயமா அவங்க சொல்லலை. நானா தெரிஞ்சுகிட்டேன்."

"ஏன் அது பொய்யா இருக்கக்கூடாது."

"நிச்சயம் பொய் இல்லை... எப்படி அத தாருகா வனம்னு அனுமானிச்சேனோ அப்படித்தான் இதுவும்..."

"அது எப்படி 18 சித்தர்கள் இப்பவும் உயிரோட இருக்க முடியும். அவங்க காலமே வேறயாச்சே?"

"உடம்பை, அதுக்குள்ற இருக்கற மனசை ஜெயிச்சா தானே சித்தராவே ஆக முடியும். ஜெயிச்சவனுக்குக் கிடைக்கற பரிசே இறவாத வாழ்க்கை தானே...?"

"உங்க கருத்து உண்மையானதா இருக்கலாம். அங்க நீங்க பார்த்த சாமியார்கள் அப்படி இல்லாம போலியா இருக்கலாம் இல்லியா?"

"ஏன் தம்பி உங்களுக்கு இவ்வளவு சந்தேகம்... ஒரு விஷயத்தைக்கூட நீங்க பாசிடிவாவே பாக்கமாட்டீங்களா?"

"சந்தேகப்பட்ற விஷயம் பாசிடிவா இருந்தா அப்புறம் அதை பாசிடிவா பாத்துட்டு போறேன். இதுல என்ன தப்பு."

"சரி... இனி உங்க இஷ்டம். ஆனா ஒண்ணு! நான் ஒரு தப்பு பண்ணிட்டேன். அந்த மலைக்கு பெருமை சேர்க்கறதா நினைச்சு அதை காட்டிக் கொடுத்துட்டேன்.

என் பேட்டியைக் கேட்டுட்டு எத்தனைபேர் அங்க போகப் போறாங்களோ... என்னவெல்லாம் நடக்கப் போகுதோ தெரியில..."

மாதவன் அலுத்துக் கொண்டார். நிஜமாலுமே அந்தப் பெருமூச்சு நெஞ்சைச் சுட்டது. மோகனும் இனி கேள்வி கேட்க ஏதுமில்லை என்பதுபோல் எழுந்து கைகளைக் கூப்பி விடைபெற்றுக் கொண்டான்.

வாசல்படியைத் தாண்டும்போது அவன் மூக்கிலும் அந்த பச்சைவாசம் ஏறியது.

ஆச்சரியத்துடன் மூக்கைச் சிணுப்பிக்கொண்டு நடந்தான். மாதவனும் பின்னாலேயே வந்தார். படிகளில் இறங்கி மெயின் கேட்டைத் தொட்டு காரில் ஏறியவனை கையசைத்து அனுப்பிவிட்டு திரும்பவும் படி ஏறினார். திரும்ப வீட்டு வாசல்படியை அடைந்தபோது அங்கே மாயமான் மலைக்காட்டுக் கிழவர் அரசப்பர் நின்று கொண்டிருந்தார்.

'ஓ- அவர் இங்கு இருந்ததால்தான் பச்சை வாசனை அடித்ததா?'

மாதவன் புரிதலோடு "நீங்களா... வாங்க..." என்று கைகளைக் கூப்பினார்.



36508 5389935

அரசப்பர் முகத்திலோ வாட்டம்.

"ஆமா எப்ப வந்தீங்க... உங்களுக்கு எப்படி என் வீட்டு முகவரி தெரியும்...? உள்ற வாங்க...!"

மாதவனின் அழைப்போடு பல கேள்விகள். அரசப்பரும் உள்ளே நுழைந்தார்.

உட்காரச் சொன்னார் மாதவன். ஆனால் மறுத்து விட்டார். காட்டில் பார்த்த அதே தோற்றம். இடுப்பில் ஒரு கோமணம்—கழுத்தில் புலிப்பல் தரித்த பாசிமணி மாலை—சடைபிடித்த தலை. ஆனால் எண்ணெய் பசையே துளியும் இல்லாத பளிச்சென்ற முகம்.

"சும்மா உக்காருங்க அரசப்பரே..."

"இருக்கட்டும்... இருந்தாலும் நீங்க இப்படி பண்ணியிருக்கக்கூடாது..."

"என்ன சொல்றீங்க...?"

"டி.வி பொட்டில பேசினீங்களாமே..."

"ஆமாம் அரசப்பரே... நான் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்டேன். என்னை தூண்டிவிட்ற மாதிரி கேள்விகள். எனக்கும் என்ன பண்றதுன்னு தெரியல."

"நாங்கல்லாம் நிம்மதியா இருந்துகிட்டிருந்தோம். இப்ப எங்க பார் ஒரு கூட்டம் எங்களைத் தேடி அலையுது- அந்த மலை ஒரு பஞ்சாயத்து சபை மாதிரி. வழக்கு இருக்கறவங்கதான் வரலாம். மத்தவங்க வந்தா வழக்கு நடக்காது—வெட்டிப் பேச்சுதான்..."

அரசப்பர் ரத்னச் சுருக்கமாய் ஏன் கூட்டம் திரளக் கூடாது என்பதற்கு அவர் பாணியில் சொன்ன விளக்கம் பளிச்சென்று இருந்தது.

"உண்மைதான்... எந்த மனுஷனும் எவ்வளவு பெரிய சாமர்த்தியசாலியும் மேடைல ஏறிப் பேசும்போது

தன்னையறியாம மனசுல இருக்கறத கொட்டிடுவான். உள்ள எது இருக்கோ அது வெளியே வந்துடும். என் வரையிலும் அப்படித்தான் நடந்திடுச்சு..."

"கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் பண்றீங்க. உங்களுக்கு சாமிங்கள பாக்கணும்னு விதி இருந்ததால வந்தீக... ஆனா இப்ப அதனால காடே நாசமாகப் போகுது..."

"தப்பா எடுத்துக்காதிங்க. எல்லாரும்தான் வரட்டுமே. பெரிசா என்ன ஆயிரும். நீங்க அமைதியா வாழறதப் பார்த்து திருந்தட்டுமே..."

"உங்க ஆசை நல்லாதான் இருக்கு. ஆனா உங்களுக்கு மனுஷங்கள பத்தி சரியா தெரியல. அவங்க எங்களப் பார்த்தா திருந்தமாட்டாங்க. தங்கமும் வைரமும் எங்களுக்கு ஒரு பொருட்டு கிடையாது. ஆசை இல்லாத சாதி நாங்க. அதான் அதை சாதாரணமாக கையாள்றோம். எங்களைப் பாக்கறவங்க எங்ககிட்ட இருந்து அதையா எடுத்துப்பாங்க? எவ்வளவு தங்கம் இருந்தா இவங்க இப்படி இருப்பாங்கன்னுல்ல நினைப்பாங்க?

கைல இருக்கறது கண்ணாடின்னு நிரூபிக்க அதை போட்டு உடைச்சிட்டீங்க. நீங்க நிரூபிச்சுட்டீங்க. ஆனா அந்த கண்ணாடி உடைஞ்சு போச்சுதே..."

மீண்டும் அரசப்பர் தன் பாஷையில் மிகச் சுருக்கமாக ஆனால் பெரிய உண்மை ஒன்றை மாதவனுக்கு உணர்த்தினார்.

"அற்புதம்... எனக்கு என் நல்லெண்ணம் தெரிஞ்ச அளவுக்கு நகர மனுஷங்களோட குரங்கு புத்தி பத்தி தெரியாம போச்சு. மன்னிச்சுடுங்க..."

"மன்னிக்க நாங்க யார்... எங்களுக்கே இனி இந்த காட்டுல இடம் இல்லாம போகப் போகுது."

www.cleanindians.com



"ஐய்யய்யோ..."

"அதுக்கு தோதா எங்க குலதெய்வம் கோவில் மரத்துல இடி விழுந்துடிச்சு. இனி சாமிங்க பார்த்து எதாவது வழி பண்ணாத்தான்..."

"திரும்பவும் மன்னிப்பு கேட்டுக்கறேன். இப்பகூட ஒருத்தர் வந்து உங்களை எல்லாம் சந்தேகப்பட்டுட்டு போறாரு. என்னென்னமோ கேக்கறாரு."

"நானும் கேட்டுகிட்டுதான் இருந்தேன். தலைமுடிக்கும் செல்வத்துக்கும் என்ன சம்மந்தம்னு கேட்ட அந்த தம்பியை எனக்கும் தெரியும்.

கறுப்புத் தலைமுடி சனியோட அம்சம். அந்த கிரகம் அது மூலமாதான் நம்ம உடம்பு வேகமா இறங்கிச் செயல்படும். புரதச்சத்து கூட இருந்தா முடி இருக்கும்னு ஒரு வார்த்தைல உங்க விஞ்ஞானம் சொல்லிடும். அந்த புரதத்தை கொடுக்கற பருப்பும் பழமும் சூரியன் மண்ணோடு சேர்ந்து நமக்கு போட்ற பிச்சை. இருந்தாலும் அது உடம்புல ஒட்ட சனிகிரகம் ஒத்துழைக்கணும். அணைல தண்ணி மட்டத்தை தக்கையை வெச்சு தெரிஞ்சுக்குற மாதிரி தலைமுடியை வெச்சு உடம்புல சனியோட ஆதிக்கத்தை தெரிஞ்சுக்கலாம். தலைமுடியை சாமிக்கு காணிக்கையா தர ஒரு பெரிய காரணம் இருக்கு. தெய்வத்துக்கு சொந்தமாக்கிட்ட ஒண்ணை சனி கருணையோட நடத்துவான். ஆட்டிப் படைக்கறதுல ஒரு அழகு இருக்கும்.

இதனால தலைல முடியில்லாதவங்கல்லாம் பாவம் பண்ணவங்களான்னு அபத்தமாவும் கேக்கக்கூடாது.

தலை வழுக்கைங்கறது உடம்போட உஷ்ணத்தையும் சிந்திக்கிற தன்மையையும் பொருத்தது. தலைல முடி இல்லேன்னாலும் உடம்புல முடி இருக்குது இல்லியா... அது மூலமா கிரகங்கள் தங்கள் வேலையைச் செய்யும்.

இதுக்கு என்ன ஆதாரம்னு கேக்கக் கூடாது. அவங்க அனுபவங்கதான் அவங்கவங்களுக்கு ஆதாரம். இதை நம்பணும்.

அந்த ஜமீன் குடும்பத்து வம்சாவளியில சனியோட ஆதிக்காலம் அதிகம் இருந்தது. அதை பயன்படுத்தி சௌகர்யமா வாழ வழி சொன்னார் சித்தர். அவங்க முடியை வெட்டி எரியும்போது அது குறையும்—தண்ணி குறையும்போது விளைச்சல் குறையறா மாதிரி. அதெல்லாம் நடக்கும்போது அடுக்கடுக்கா அங்க செல்வம் சிதறும்கறதுல்லாம் அஞ்சும் மூணும் எட்டுங்கறது மாதிரி ஒரு கூட்டல் கழித்தல் கணக்கு. அவ்வளவுதான். ஒரே ரத்த சம்பந்தத்துல உறவுகளை உருவாக்கிக்க சொன்னதுக்கும் ஒரு காரணம் இருக்கு. சில வம்சங்களுக்கு சில சுபாவம் மாறாது. அதுல புதுசா வெளியில இருந்து ஒண்ணு வந்து கலந்தா மாறும். அப்படி மாறக்கூடியது நல்லவிதமாவும் மாறலாம் கெட்டவிதமாகவும் மாறலாம்... அதனாலதான் அப்படி ஒரு பூட்டைப் போட்டாரு. சொல்லப் போனா அப்படிச் சொல்லி ஒரு பரீட்சை செய்து பாத்தாரு... இது எனக்குத்தான் தெரியும். ஒருநா ஏன் சாமி இப்படி புதர்மாதிரி தாடி மீசையோட திரியறீங்கன்னு கேட்டேன்... அந்த புதர்தானே உள்ளுக்கும் வெளிக்குமான (ஆகாசம்) ஒயர் கம்பின்னாரு.

அம்மவோட கருவுல அவ கொடுக்கற முடிங்கற அந்த ஒயர்க்கம்பியை மட்டும் கோயிலுக்கு கொடுத்திட்றோமே ஏன்னு கேட்டேன். கொடுத்துட்டு கோவிலோட ஒரு தொடர்பை ஏற்படுத்திக்கிறேல்ல... இந்த கர்பத்துல இருந்து அந்த கர்பத்துக்கு மாத்திக்கறது ஒரு பலத்துக்காகன்னாரு... அப்பதான் எனக்கே புரிஞ்சது.

இப்படி பேசிகிட்டே போகலாம்...

எவ்வளவு விஷயங்க தெரியுமா?



ஒவ்வொண்ணுலையும் எவ்வளவு அர்த்தங்க தெரியுமா?

அரசப்பர் கொட்டித் தீர்த்துவிட்டு ஒரு பெருமூச்சு விட்டார்.

மாதவனிடம் ஸ்தம்பிப்பு.

"சரி நான் வாரேன்... இனியாவது பொறுப்பா நடந்துக்குங்க..."—அரசப்பரும் புறப்படத் தயாரானார்.

"இதைச் சொல்லவா வந்தீங்க...?"

"இல்ல தம்பி... உங்க வாய்க்கு தாமதமாவாவது ஒரு பூட்டு போடலாமேன்னுதான் வந்தேன். ஆனா நீங்களே போட்டுகிட்டதை பேசிகிட்டு இருக்கும்போது கேட்டேன். என் மனசு மாறிடிச்சு. இதேமாதிரி ஒரு பூட்டை அந்த ஜமீன் தம்பிக்கு போட்டும் பலனில்லாம போனதுதான் ஆச்சரியம்."

இந்த பதிலைச் சொல்லும்போது அரசப்பர் இடுப்பில் அந்த மூலிகை மை டப்பி இருந்தது.

"அப்படி ஆனதுலயும் ஒரு நன்மை இருக்கலாம் இல்லியா... இல்லேன்னா அந்தத் தம்பி என்கிட்ட வந்து பேசுமா... இவ்வளவு விஷயம் எனக்கு தெரிய வந்துருக்குமா?"

"வாஸ்தவம்தான்... இனி என்கிட்ட எதுவும் இல்ல. நான் ஒரு சாதாரண வனவாசிதானே. இனி அந்த 18 சாமிங்க பாடு... அந்த ஜமீன் தம்பி பாடு..."

"கவலைப்படாதீங்க அரசப்பரே... நிச்சயமா அந்த சித்த புருஷர்கள் எப்படியாவது அந்த மலைக்காட்டை மக்கள்கிட்ட இருந்து காப்பாத்திடுவாங்க. என் மூலமா இந்த ஹைடெக் உலகத்துல பரவியிருக்கற விஷயங்கள் கடவுள் நம்பிக்கை போலவே இருக்குன்னு ஒரு

கட்சியாவும், இல்லேன்னு ஒரு கட்சியாவும் தான் செட் ஆகும். நீங்க வேணா பாருங்க..."

மாதவன் அரசப்பருக்கே நம்பிக்கை அளித்தார். அரசப்பரும் சிரித்தபடி குடிக்க தண்ணீர் கேட்டார்.

உள்ளே சென்று தண்ணீர் சொம்புடன் வந்தபோது அரசப்பர் இல்லை. வெளியே வந்து பார்த்தபோதும் இல்லை. அவ்வளவு வேகமாக அந்த ஃப்ளாட்டை விட்டு ஓடினால்கூடக் கடக்க முடியாது... 'எப்படி? எங்கே போனார்? தண்ணீர் கேட்டுவிட்டு குடிக்காமல் போன காரணம் என்ன? ஒருவேளை மாயமாய் மறைந்திருப் பாரோ...?

சில மூலிகைகள்தான் அப்படி ஒரு சக்தியை மனி தனுக்குக் கொடுக்கக் கூடியவை ஆயிற்றே...? அப்படித் தான் இருக்க வேண்டும்... இல்லாவிட்டால் வாசற் படியருகே இருந்தபோது நான் பார்த்திருக்க வேண்டுமே...?'

www.cleanindians.com

பாற்கடல் மாதவனின் மனதுக்குள் கேள்விகள் சுழன்று சுழன்று அடித்தன. பரவசமாகவும் படபடப் பாகவும் கூட இருந்தது. அப்படியே போய் அமர்ந்தவர் மனது சித்தர்களிடம் குவிந்தது...

'சித்த மகா புருஷர்களே... வாழ்க்கை, வெளி என்று எல்லாம் கடந்த உங்களால்தான் அந்த மலைக்காட்டை காப்பாற்ற முடியும்... எப்படிக் காப்பாற்றப் போகிறீர்கள்?'

## 11

கிட்டத்தட்ட ஒரு சன்யாசியைப் போலவே இருந் தான் மார்த்தாண்டம். இடுப்பில் கோவணம். கழுத்தில்



ஒரே ஒரு ருத்ராட்சம் கட்டிய மாலை என்று உருமாறி கையில் ஒரு கோலுடன் அவன் மாயமான் மலைக் காட் டில் நடந்து கொண்டிருந்தபோது அருகில் சலசலப்போடு பாய்ந்து கொண்டிருந்தது அந்த மலையின் அருவி நீர்!

பாறைகளின் மேல் அது தாவிக் குதித்து ஓடும் அழகை ரசித்தபடியே நடந்தவன் அப்படியே மலை சனங்களின் குடிசைப் பகுதிப் பக்கமாக வந்தான்.

பல்லாங்குழி விளையாடிக் கொண்டிருந்த சில சிறுவர்கள் அதில் பயன்படுத்திய நவமணிகளால் அவனுக்கு அதிர்ச்சியளித்தார்கள். சிலர் அவனைப் பார்த்து மலைச்சாமியார் என்று கருதி ஓடிவந்து காலில் விழுந்தனர். ஒரு சிரிப்பை மட்டும் உதிர்த்துவிட்டு ஆழம் பார்த்துக்கொண்டே நடந்தான். அரசப்பர் அவர் குடிசைக்கு வெளியே கட்டிலில் அமர்ந்திருந்தார்.

அவரை சில பத்திரிகைக்காரர்கள் குடைந்து கொண்டிருந்தனர். மார்த்தாண்டத்துக்கு சுருக்கென்றது. அந்தப் பக்கமாய் போய் மாட்டிக் கொள்வதைவிட தவிர்ப்பது நல்லது என்று தோன்றியது. வேகமாக விலகி பக்கத்து வாழைத்தோட்டம் ஒன்றில் புகுந்தான். தோட்டத்தில் நிறைய சிகரெட் பாக்கெட்டுகளும் பான்பராக் பொட்டலங்களும் கிடந்தன. வெளியே இருந்து நிறைய பேர் இந்த மலைக்காட்டுக்கு வரத் தொடங்கி விட்டார்கள் என்பது அவனுக்கு புரிந்தது. மற்றவர்கள் முந்திக்கொள்ளும் முன் தான் முந்திக்கொள்ள வேண்டும்.

'தங்கம் இங்கே எப்படிக் கிடைக்கிறது? அது ரசவாதத் தாலா... இல்லை வேறு காரணங்களாலா?'

மனதில் விசுவரூபமெடுத்து நிற்கும் கேள்வியோடு கூர்மையான பார்வையோடு சுற்றிச் சுற்றிப் பார்த்தபடியே நடந்தான்.

ஒரு மலைச்சாதிக்காரன் அவன் எதிரில் வரப்பில் வேலை செய்துகொண்டிருந்தான். அவன் கையில் ஒரு தங்கக் காப்பு மின்னியது. மார்த்தாண்டம் வரவும் மண்வெட்டியைக் கீழே போட்டுவிட்டு பெரிதாகக் கும்பிட்டான்.

"சாமிங்களா... கும்பிட்றேங்க..."

"நல்லாருக்கியாப்பா...?"

"நீங்க இருக்க எங்களுக்கு என்னாங்க குறை?"

"ஆமா கைல என்ன காப்பு... தங்கமா அது?"

"என்ன சாமி... உங்க கூட்டத்தாளுங்க தானே கொடுத்தீங்க. இது தங்கமா பித்தளையான்னுல்லாம் யாருக்குங்க தெரியும்...?"

அவன் பதில் மூலம் தங்கம் சாமியார்களின் சப்ளை தான் என்று பட்சி அவனுக்குள் குரல் கொடுத்தது.

"சும்மாதான் கேட்டேன்... நல்லாரு... நல்லாரு..."

ஆசீர்வதிப்பதுபோல கையை உயர்த்திக் காட்டிவிட்டு அங்கிருந்தும் நடந்தான்.

இந்த சாமியார்கள் எங்கே இருப்பார்கள்?

அவனுக்குள் விசுவரூபமெடுத்தது கேள்வி.

'குகைகள் ஏதாவது இருந்து அதில் இருப்பார்களா...?'

பதிலையும் சொல்லிக்கொண்டது. அப்படியே நடந்தான். அவன் யூகம் பொய் ஆகவில்லை. அவனது நீண்ட நடையில் ஒரு குகை ஒன்று தட்டுப்பட்டது. ஆவலாக உள்ளே எட்டிப் பார்த்தான். சிவலிங்கம் ஒன்றன் முன் ஒரு சாமியார்... உடம்பில் பொட்டுத் துணிகூட இல்லை.

www.cleanindians.com



அந்த லிங்கம்கூட தங்க லிங்கமாய் பளபளத்தது. அவன் கண்ணிலும் ஆசையின் ஒளி... அது அநியாயத்துக்கு விரிந்தது.

அவரும் திரும்பிப் பார்த்தார். சிரித்தார். அருகில் அழைத்தார்.

"சுவாமிகள் யாரோ?"

"நான்... நான்... மார்த்தாண்டசாமி..."

"அமருங்கள்..."

"இருக்கட்டும்... ஆமா இதென்ன தங்க லிங்கமா?"

அவனது கவனமும் கேள்வியும் தங்கம் தங்கம் என்றே இருந்தது.

"ஆம்... கல்லில் செய்து பின் ரசவாதத்தால் அதை சொர்ணமாக்கிக் கொண்டோம்..."

"என்னது... கல்லை தங்கமாக்கினீங்களா... இரும்பைல்ல ஆக்கறதா சொல்லுவாங்க..."

"யாம்... புல் பூண்டைக்கூட தங்கமாக்குவோம்."

"ஓ... நான் அந்த அளவு இன்னும் உயரலை சாமி..."

"உயர வேண்டுமா?"

அந்தக் கேள்வியை அவன் துளிகூட எதிர்பார்க்க வில்லை.

"ஆமாம்... ஆமாம்... ஆமாம்..."

தலையை படுவேகமாய் ஆட்டி ஆமோதித்ததில் தாடி அவிழ்ந்து விழுந்து அவனைக் காட்டிக் கொடுத்தது.

அவரோ சிரித்தபடி "நீ கள்ளன் மார்த்தாண்டம் தானே?" என்று கேட்டு அவனை அதிரவிட்டார்.

"சாமி... உங்களுக்கு எப்படி என்னை..."—அவனும் சுதாரித்தான்.

"அது எதற்கு உனக்கு... எங்கு வந்தாய்? என்ன வேண்டும் உனக்கு?"

"வந்து... வந்து... இந்த காட்டுல தங்கம் சாதாரணமா கிடைக்குதுன்னாங்க... அதான்!"

"தங்கம் வேண்டுமா?"

"அ... ஆமாம் சாமி..."

"உன்னிடம் இல்லாத தங்கமா?"

"அது... அது... அது என்ன இருந்தாலும் திருட்டுத் தங்கம்தானே?"

"அப்படியானால் அதை வீசி எறிந்துவிட்டு வா. உனக்கு நான் ரசவாதம் கற்றுத் தருகிறேன்."

"நிஜமாவா...?"

"நீ அந்தத் தங்கத்தை எல்லாம் தர்மமாகக் கொடுத்து உன் தப்புக்கு பரிகாரம் செய்துவிட்டு ஒரு மனிதனாக இங்கே வந்தால் உனக்கு ரசவாத வித்தையை யாம் கற்றுத் தருவோம். இதில் துளிகூட உனக்கு சந்தேகம் வேண்டாம்."

"சாமி... பேச்சு மாறமாட்டீங்களே...?"

"நான் பேச்சு மாறுவேன் என்று கருதினால் நீ வந்த வழியே திரும்பிவிடு. நான் உன்னை அழைக்கவில்லை. உன் தங்கத்தையும் எனக்குக் கேட்கவில்லை..."

"அது... அது... என்னிய மாதிரி நீங்களும் போ... போ..."

அவன் என்ன சொல்ல வருகிறான் என்பதைப் புரிந்தவர்போல ஒரு மர்மச் சிரிப்பு சிரித்தவர்—

www.cleanindians.com



"என்னையும் உன்னைப்போல போலிச்சாமியார் என்று நினைக்கிறாயா?"

மார்த்தாண்டம் அதிகபட்சமாய் அதிர்ந்தான். அவர் உடனே எழுந்தார்.

"என்னோடு வா..." என்று நடந்தார். அவனும் பின் தொடர்ந்தான்.

இடையிட்டது மலை ஆறு...

"என் கையைப் பிடித்துக்கொள்..."

கட்டளையிட்டார்.

அவனும் பிடித்துக்கொண்டான்.

அப்படியே தண்ணீர் மேல் நடந்து மறுகரைக்கு அவர் செல்ல அவனும் தண்ணீர் மேல் நடந்தான். நடக்கும் போதே திகைத்தான். பிறந்தது முதல் அந்த நொடிவரை அனுபவித்திராத அதிகபட்ச பரவசத்தையும் அடைந்தான். மறு கரைக்கு அப்பால் ஒரு பெரிய அருவி. 'ஹோ'வென்று கொட்டிக் கொண்டிருந்தது. முன்னால் ஒரு பெரிய பாறை. அவர் அந்தப் பாறைமேல் நின்று விழும் அருவியைப் பார்த்து எதோ முணுமுணுத்தார். ஒரு உலக அதிசயம் போல அப்படியே தண்ணீர் விழுவது நின்று உள்பாகம் அப்பட்டமாகத் தெரிந்தது. அதில் நீண்ட குகை... தீப்பந்தங்கள் எரிந்தபடி இருக்க அங்கங்கே பாறைத் திண்டுகள் மேல், பலர் அமர்ந்திருந்தனர். எல்லோருமே ஆளுக்கொரு வேலையாக இருந்தனர். ஒருவர் மூலிகைச் சாறு எடுத்துக் கொண்டிருந்தார். ஒருவர் ஏட்டில் எதையோ எழுதிக் கொண்டிருந்தார். இன்னொருவரோ பத்மாசனத்தில் இருந்தார். ஒருவர் புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். ஒருவர் ரேடியோ கேட்டுக் கொண்டிருந்தார். மார்த்தாண்டம் திக்குமுக்காடினான்.

"வா உள்ளே..." அவனைக் கைப்பிடித்து உள்ளே அழைத்துச் சென்று நிறுத்த அடுத்த நொடி தடைபட்ட அருவி நீர் திரும்பவும் 'ஹோ'வென்று கொட்ட ஆரம்பித்தது.

"இவர்கள் என் சக சித்தர்கள். எண்ணிப்பார்—18 பேர்கள் இருப்போம். அதோ அவர்தான் பாம்பாட்டி... அவர் அழுகணி... அவர் சுந்தரர்... குள்ளமாய் உள்ளவர்தான் அகத்தியர்... அவர் போகர் அவர் கருவூரார்..."

அவர் மார்த்தாண்டத்திற்கு அவர்களை அறிமுகம் செய்து வைத்தார். அவர்கள் நிமிர்ந்து ஒரு பார்வை மட்டும் பார்த்துவிட்டு அவர்கள் காரியத்திலேயே குறியாக இருந்தார்கள்.

"சா... சா... சாமி... உங்க பேர்?" மார்த்தாண்டத்திற்கு பரவசத்தில் பேச வரவில்லை.

"நான்தான் குதம்பைச் சித்தர்..."

"சாமி..."

மார்த்தாண்டம் பொதேல் என்று காலில் விழுந்தான்.

"எழுந்திரு... திருவண்ணாமலையில் நீ செய்த அன்னதான பலன்தான் இன்று உனக்கு எங்கள் தரிசனம் கிடைக்கவே காரணம்... அதுதான் உன் புத்தியில் உன்னை கள்ளத்தனம் செய்து இங்கு அனுப்புவித்தது. இப்பொழுது உன் சந்தேகம் தீர்ந்ததா?"

மார்த்தாண்டம் சரசரவென்று கண்ணீர் விட்டான்.

"சாமி... நான் நீங்கல்லாம் பொய்னு நினைச்சுகிட்டிருந் தேன். களவாணியா இருக்கறதுக்காக ரொம்பவும் வருத்தப்பட்டிருக்கேன்.



பொன்னும் பொருளும் இருந்தா போதுங்களா?

உங்கள மாதிரி தண்ணில நடந்து தங்கமா செய்ய முடியறது லேசுப்பட்ட விஷயங்களா?"

அவர் சிரித்தார். அவன் தலையை வருடிக் கொடுத் தார். அவனுக்குள் புதிதாய் ஒரு சூரியனே நெஞ்சில் உதிக்கிற மாதிரி இருந்தது.

ரோமக் கால்கள் எல்லாம் குத்திட்டி போல சிலிர்த்தன.

உலகமும் வாழ்க்கையும் உடம்பும் அதன் எச்சிலும் மலமும் மிகப்பெரிய பாரமாகத் தோன்றி அவைகளை உதறி இவர்களைப்போல ஆவதே பெரிய விஷயம் என்று ஒரு நொடிப்போதில் புத்தியில் ஞானமேற்பட்டது.

அவர் அவனை திரும்ப அழைத்துக்கொண்டு வெளியில் வந்தார்.

அருவி மீண்டும் வழி விட்டது.

கரைக்கு வந்தனர்.

"போ... உனக்கு இனி தானாய் எல்லாம் புரியும். செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து முடி. பாவங்களுக்குப் பரிகாரம் தேடு... உன் வசம் உள்ள தங்கத்தை எல்லாம் இந்த மலை ஜனங்களுக்குப் பகிர்ந்து கொடு... நீதான் இவர்களிடம் தங்கம் புழங்கவே காரணம் என்று ஊரும் உலகமும் சொல்லும். அந்தப் பொய்யை ஜீரணி... உன்னை சிறையில் போடுவார்கள். சொல்ப காலம்தான். அதன்பின் பலப்பல காலம் நீ எங்களுடன் இங்கே நித்ய வாழ்வு வாழலாம். ஆனால் எக்காரணம் கொண்டும் இந்த உன் அனுபவத்தை பெருமையாக்கிப் பேசி உன்னை உயர்த்திக் கொள்ள முயலாதே. உனக்குள் நாங்கள் இருந்தால் போதும்.

www.cleanindians.com

போட வந்ததுபோலவே போலிச் சாமியாராகவே போட போ..."

அவர் அவனை வார்த்தைகளால் கட்டிப்போட்டு அனுப்பி வைத்தார்.

அவனும் கை கூப்பித் தொழுதவனாக நடந்தான்.

காட்டுக்குள் கால் வைத்தபோது கள்ளனாக வந்தவன் திரும்பும்போது முற்றிலும் மாறியவனாக திரும்பிச் சென்றான்.

அவனை அழைக்கழிக்கும் ஆசை எண்ணங்கள் எதுவும் அவன் மனதில் இல்லை.

சலவை செய்யப்பட்டதுபோல் ஒரு தூய்மை!

திருடனுக்கும் ஒரு கதி மோட்சம்!

அவனுக்குள் அவனையுமறியாமல் கண்ணீர் பெருகி வழிந்தது!

www.cleanindians.com

## 12

ஜமீன்தாரர் ராமண்ண ராஜா கஜானா அறையில் எதற்கோ பீரோவைத் திறந்தார்.

உள்ளே தொலைந்து போயிருந்த அவ்வளவு தங்கங்களும் அடுக்கப்பட்டிருந்தது.

அவருக்குள் ஒரு பனிக்கட்டி வெடித்தாற்போல் இருந்தது.



எப்படி... எப்படி என்றே தெரியாமல் விழித்தபடி நின்றார். மோகனும், காவ்யாவும் செய்தியறிந்து வந்து பார்த்து அவர்களும் ஸ்தம்பித்துப் போனார்கள்.

எப்படியோ தொலைந்து போனது கிடைத்ததே என்று பெருமூச்சு விட்டார்கள்.

மோகன் முகத்தைத் தேய்த்தபடி வந்து சோபாவில் விழுந்தான்.

எதிரில் தினசரி பேப்பர்.

அதில் கொட்டை எழுத்தில்.

'பிரபல கொள்ளைக்காரன்

மார்த்தாண்டம் கைது'

என்கிற செய்தி.

அடுத்த நொடி செய்திக்குள் பாய்ந்தான்.

அது, மாயமான் மலையில் தங்கம் புழங்க அவன்தான் காரணம் என்றது... அவனே அவன் கூட்டத்தவரோடு போலிச் சாமியாராக அங்கே சுற்றிக் கொண்டிருந்தவன் என்றும் சொன்னது.

ஒரு ஓரத்தில் பாற்கடல் மாதவனும் பேட்டி கொடுத்திருந்தார்.

'நான் போலிகளிடம் ஏமாந்துவிட்டேன். அவசரப் பட்டு மிகையாகப் பேசிவிட்டேன்' என்று வருந்தியிருந்தார்.

"காவ்யா..."—மோகன் கத்தினான். அவளும் பாய்ந்து வந்தாள்.

"நான் சொல்லலை... எல்லாமே ஃப்ராடுன்னு பார்."

பேப்பரை நீட்டினான். அவளும் பார்த்தாள். ராமண்ண ராஜாவும் பார்த்தார். சற்றே குழம்பிப் போய் 'இப்படிக்கூட இருக்குமா?' என்கிற கேள்வியோடு ஒரு ஓரமாகப் போய் அமர்ந்தார்.

நம்பியும் நம்பாமல் தடுமாறினார்.

மோகன் எதோ புதுபலம் பெற்றவன்போல "என் யூகம் எப்பவும் பொய்யானதே இல்லை..." என்றபடி காவ்யாவை இழுத்து அணைத்தான்.

அழுத்தமாய் ஒரு முத்தம்.

அது மாயமான் மலை வரை கேட்டது.

www.cleanindians.com

# நான் நீ... ஆத்மா!

## 1

கோவை! ஆசீர்வதிக்கப்பட்ட பூமி!

அப்படித்தான் நினைத்தான் விஷ்ணுவர்தன்.

உச்சியில் இருந்தான் சூரியன். கெடிகாரத்திலும் மணி பன்னிரெண்டு.

ஆனாலும் வியர்க்கவில்லை.

சென்னையில் மார்கழி மாதத்து மாலைப் பொழுதுகள்தான் இப்படி இருக்கும்.

"இங்கே மார்கழியில் குளிர் பிடரியைப் போட்டு உசுப்பிவிடும்" என்றான் கூடவே இருந்த முரளிதரன்— விஷ்ணுவர்தனின் அத்தை மகன். அதன்பின் சென்னையில் இருந்து வந்த களைப்பு தீர முதலில் அவன் குடித்தது அவன் அத்தை பரிமளம் கொடுத்த ஒரு சொம்பு சிறுவாணி தண்ணீரைத்தான்.

அதுவே ஒரு தனி சுகம். கொஞ்சம் இனிப்பு குறைந்த இளநீரைக் குடிக்கிற மாதிரி இருந்தது.

பிராம்மண வீடுகளில் யார் வந்தாலும் முதலில் தண்ணீர்தான் கொடுப்பார்கள்.

உலகத்தில் தோஷம் தாக்க முடியாத ஒரே வஸ்து இந்த தண்ணீர்தான். ஒரு வீட்டுக்குள் எப்படிப்பட்ட மனநிலையில் இருப்பவர்கள் வேண்டுமானாலும் வரலாம். தண்ணீர் தரும்போது அந்த மனநிலையில் ஒரு சாந்தி ஏற்படத் தொடங்கிவிடும்.

விஷ்ணுவர்தனிடம் சாந்தியோடு சந்தோஷமும் சேர்ந்து தளும்பியது.

"போ... போய் கை காலை அலம்பிண்டு வா. பரிமளம்! முதல்ல அவனுக்குக் காபியைக் கொடு..."

அத்திம்பேர் கோபால் விஷ்ணுவர்தனின் அத்தையைப் பார்த்துச் சொன்னார்.

"சமையலே ஆயிடுத்து... இப்ப போய் காபி குடிச்சா வயித்தை அடைக்கும். விஷ்ணு சாப்டுடட்டும்..." என்றாள் அவள்.

அவனும் ஆமோதித்தான்.

கோவை கவுண்டன்பாளையத்தில் இருந்த அந்த வீடு விஸ்தாரமாக இருந்தது.

முகப்பில் போகன்வில்லா பொலிந்து கிடக்க புழக்கடையில் வாழை, நெல்லி, சப்போட்டா என்று அடப்பமாய் மரங்கள்.

விஷ்ணுவர்தனுக்கு அந்த வீட்டை மிகப் பிடித்துப் போய்விட்டது.

இத்தனைக்கும் வாடகை வீடு!

"வீடு நன்னா பெரிசா அழகாயிருக்கு... எவ்வளவு வாடகை?"

www.cleanindians.com



புழக்கடையில் பைப்பைத் திருகிக் கொட்டும் தண்ணீரில் காலை நனைத்தபடியே கேட்டான்.

"ரெண்டாயிரம்... கரண்ட் பில்லு, தண்ணிவரி அது இதுன்னு மூணாயிட்றது..." இது முரளி.

"பரவால்ல... இதே வீடு மெட்ராஸ்ல இருந்தா ஏழாயிரம் எட்டாயிரம் கேட்பா..."

"அப்ப உனக்கு கோயம்புத்தூர் ரொம்ப பிடிச்சுப் போச்சுன்னு சொல்லு..."

"நிச்சயமா... நல்ல க்ளைமேட்... தண்ணி... காத்துப் போக்கான வீடு. மரியாதையான ஜனங்க! ஒருத்தன்ட்ட கவுண்டம்பாளையத்துக்கு எப்படிப் போகணும்னு வழி கேட்டேன். பொறுப்பா 'நேரா போனீங்கன்னா கிருஷ்ணா ஸ்வீட்ஸ் கடை ஒண்ணும் வருங்கண்ணா... அதைத் தாண்டி சோத்துக் கை பக்கம் போயிருங்க... அப்பால பூராப் பூரா கவுண்டம்பாளையம் ஏரியாதானுங்கோ...'ன்னான்.

இப்படியெல்லாம் மெட்ராஸ்ல சொல்லமாட்டா. என்ன ஒரு மரியாதை...!"

முரளி அதை ரசித்தான். பின் இருவரும் திரும்பினர்.

டைனிங் டேபிளில் அத்தை வாழை இலையை விரித்துக் கொண்டிருந்தாள். இலைகூட பெரிதாக இளம்பச்சையில் கவர்ச்சியாக இருந்தது.

"வா... உக்காரு... சாப்டுண்டே பேசலாம்!"

அத்தை அவனைக் கூப்பிட்டு அமர்த்தினாள். முரளியும் கம்பெனி கொடுத்தான். இலையில் முதலில் துளி சர்க்கரை வைத்தாள். பின்பு நேந்தரம் வாழைப்பழம் ஒன்றை முழுதாக உரித்து வைத்தாள். பார்க்கும்போதே பரம சுகமாக இருந்தது.

அருகில் காலியாகக் கிடந்த நாற்காலி ஒன்றில் அவன் அத்திம்பேர் வந்து அமர்ந்துகொண்டார்.

"அப்புறம்.. ஊர்ல அப்பா அம்மா மைதிலி ரேவதி எல்லாரும் சௌக்கியமா?"

"எல்லாரும் சௌக்கியம் அத்திம்பேர்.."

"மைதிலிக்கு வரன் எதான வந்துதா?"

அத்திம்பேரின் அந்தப் பிரதான கேள்விமுன் சோகமாய் ஒரு பார்வை பார்த்தான்.

"என்ன விஷ்ணு.. ஏன் அப்படிப் பாக்கறே?"

"ஒண்ணுமில்ல அத்திம்பேர். அவ எந்த நேரத்துல பொறந்தாளோ தெரியல.. வர்ற வரன்லாம் தட்டிண்டே போறது."

"அப்படி எத்தனை வரன் தட்டிப் போயிடுத்து!"

"அது இருக்கும் ஒரு ஏழெட்டு!"

பகீரென்றது பரிமளத்துக்கு. அன்னக்கரண்டியால் கர்நாடகா பொன்னி சாதத்தை மல்லி மொட்டுக்களாய் தள்ளியபடியே "அட நாராயணா... அவளுக்கு என்ன குறைச்சல்...?" என்றாள்.

"அதான் யாருக்குமே தெரியில.."

"ஜாதகத்துல எதாவது கோளாறா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல. நல்ல சுத்த ஜாதகமாம். இத்தனைக்கும் குருவும் சந்திரனும் சேர்ந்திருக்கற குருச்சந்திர யோக ஜாதகமாம். அப்படி இருந்தா அந்த பொண்ணண்ட எப்பவும் காசு இருந்துண்டே இருக்குமாமே...?"

"அப்படியா?"— அத்திம்பேர் கோபால் ஆச்சரியமாய் தாடையைத் தடவினார்.



"அதான்.. அப்பா உங்களைப் போய் பார்த்திட்டு வரச் சொல்லி அவ ஜாதகத்தையும் கொடுத்து அனுப்பிச்சார்.."

கோபால் அதைக் கேட்டு ஒரு மூன்றங்குலத்துக்கு நிமிர்ந்தார். நெற்றி நிறைய ஆச்சரியம்.

"இங்க காரமடைங்கற ஊர்ல ரங்காச்சாரின்னு ஒரு நரசிம்ம உபாசகர் இருக்காராமே.."

"ஆமாம்..."

"அவரண்ட மைதிலி ஜாதகத்தைக் காட்டி கேட்டுண்டு வரச் சொன்னார்!"

"நீ ஜாகத்தை அப்ப எடுத்துண்டு வந்திருக்கியா?"

"அவ ஜாதகம் மட்டுமில்ல... ரேவதியோடதும் எடுத்துண்டு வந்திருக்கேன்."

"அதான் இப்படி திடுதிப்னு கிளம்பி வந்திருக்கியா?"

விஷ்ணுவர்தன் தலை மேலும் கீழும் ஆடியது.

"நீ முதல்ல நன்னா சாப்டு.. ஜாதகத்தோட வந்துட்டியோல்லியோ... ரங்காச்சாரி மாமா பிட்டுபிட்டு வெச்சிடுவார் பாரு..."

அத்தை புளிக் குழம்போடு சேர்த்து அவனுக்கு நம்பிக்கையும் தந்தாள்.

"என்னவோ அத்தை... ஆனா எனக்கு இந்த ஜாதகத்துல எல்லாம் துளியும் நம்பிக்கை இல்லை.."

அவன் சாதத்தை மென்றபடியே சொன்னதுதான் ஒரு இடி இடித்தது. அத்திம்பேர் கோபால் அதைக் கேட்டு ஒரு சிரிப்பு சிரித்தார்.

"நான் என் மனசுல பட்டதை சொன்னேன் அத்திம்பேர்..."

www.cleanindians.com

"இந்தக் காலத்துப் பய இல்லியா... முரளியும் உன்னைமாதிரிதான்."

அவர் பார்வை அடுத்து அவர் மகனைப் பார்த்தது.

"எனக்கு சுத்தமா நம்பிக்கை கிடையாது. நம் நாட்டுல தான் ஜாதகம் ஜோசியம்னு கூத்தடிக்கிறோம். அமெரிக்கா ஐரோப்பால அப்படின்னா என்னன்னே அவாளுக்குத் தெரியாது. அவாள்ளாம் நம்பளவிடவே நன்னா இருக்கா..."

முரளி தன் அவநம்பிக்கைக்கு சுருதி சேர்த்தான். கோபால் திரும்பவும் சிரித்தார்.

## 2

காரமடையில் அந்த உபாசகர் வீட்டுக்குச் சென்ற போது நல்ல மாலைப் பொழுது!

மேற்குச் சூரியன் நான் ஒரு ஆரஞ்சுப்பழம் என்கிற மாதிரி மஞ்சளும் கொஞ்சம் சிவப்புமாய் கண்களைக் கருவியபடியும் தெரிந்துகொண்டிருந்தான்.

உபாசகர் மனைவியும் புடவைத் தலைப்பை இழுத்துவிட்டுக் கொண்டே அவர்களை அழைத்து வீட்டு முன்னால் உள்ள அறையில் உட்காரச் சொன்னாள்.

"மாமா இருக்காரோல்லியோ?"

"இருக்கார். சந்தியாவந்தனம் பண்ணிண்டிருக்கார். உக்காருங்கோ வந்துடுவார்" என்றாள்.

ஒரு பத்து நிமிஷம் கழித்து நல்ல பத்தாறு வேஷ்டியில் பஞ்சகச்சத்தோடு, ஒரு ஆறு முழ அங்கவஸ்த்ரம் சகிதம் திவ்யமான நாம நெற்றியோடு அவர்கள் பார்க்க வந்த ரங்காச்சாரி என்னும் அந்த உபாசகரும் வந்தார்.



வணங்கினார்கள். அவர் பதிலுக்கு வணங்காமல் தனக்கான பலகை ஒன்றின்மேல் போய் உட்கார்ந்தார். அதன் பின் அவர்களைப் பார்வையால் ஊடுருவ ஆரம்பித்தார்.

அதுவே முரளியையும், விஷ்ணுவையும் என்னவோ செய்தது.

"பெரியவாளை ஒரு முக்கிய விஷயமா பார்த்துட்டுப் போக வந்திருக்கோம்..."—அத்திம்பேர் கோபால் நைச்சியமாக ஆரம்பித்தார்.

"சொல்லுங்கோ... கல்யாணச் சிக்கலா?"

பளிச்சென்று அவரிடம் கேள்வி. அதுவே அவர் சரக்குள்ளவர் என்று சொல்லாமல் சொல்ல "அதேதான்..." என்றபடியே கோபால் மைதிலியின் ஜாதக நோட்டை கையில் எடுத்தார். அவரும் நல்ல தடித்த நவரத்ன மோதிரம் தரித்த தன் வலது கையை நீட்டி வாங்கிக் கொண்டார்.

மெல்லப் பிரித்துப் பார்த்துக் கொள்ளலாம் என்கிற மாதிரி விஷ்ணுவர்த்தனையும் முரளியையும் பார்த்தார்.

பதிலுக்கு இருவரும் அவரை எடையிடுகிற தினுசில் பார்த்தனர்.

"என்ன அம்பி... அமெரிக்கா ஐரோப்பால இருக்கறவாளுக்கு எல்லாம் ஜாதகம் இல்லையா?"

அவர்கள் பார்க்க— அவர் கேட்க கொஞ்சம் போல பகீர் என்றாகத்தான் செய்தது.

வீட்டில் முரளி பேசியது... இங்கே எதிரொலிக்கிறது. எப்படி? புரியாமல் குழப்பமுடன் பார்த்தான் முரளி.

"ஒரு காகிதம்— அதுல பன்னெண்டு கட்டம்— அதுல ஆகாசத்துல இருக்கறதா சொல்லப்பட்ற சூரியன்

சுக்கிரன்கற கிரகங்களோட பேர்... ஒரே பித்தலாட்டம்... இல்ல?"

அவர்கள் இருவர் மனசிலும் இருப்பது அவரிடம் இருந்து எதிரொலி போல் திரும்பி வந்தது.

உடனே முரளி அப்பா கோபாலைப் பார்த்தான்.

மனசுக்குள் 'எங்களைப் பத்தி போன் பண்ணி இவரண்ட முதல்லையே சொல்லிட்டியாப்பா?' என்று கேட்காமல் கேட்டான்.

"போன் கிடையாது என்னண்ட... அப்பாவை அப்படி சந்தேகமா பாக்காதே..."

அவரது அடுத்த பதில் நிஜமாலுமே அவனை ஒரு உலுக்கு உலக்கியது. அதன்பின் கொஞ்சம் போல சிரித்தவர், ஜாதக நோட்டைத் திறந்தார். புருவங்களை இடுக்கிக் கொண்டார். விரல்களை விரித்து மூடி, கூட்டிக் கழித்து ஏதேதோ கணக்கு போட்டார். அப்படியே முகத்திலும் மெல்ல மெல்ல மாற்றங்கள். ஒரு கட்டத்தில் ஜாதக நோட்டை மூடியவர்—

"இந்த ஜாதகருக்குக் கல்யாணம் ஆகியிருக்கணுமே..." என்றார்.

விக்கித்துப் போய் பதிலுக்கு மூன்று பேரும் அவரைப் பார்த்தனர்.

"என்ன பாக்கறீங்க... இந்த ஜாதகருக்குக் கல்யாணம் ஆயிடித்து..."—அவரிடம் அழுத்தம்.

"பெரியவர் என்ன சொல்றேள்... வரன்லாம் தட்டிப் போயிண்டிருக்குன்னுதான் உங்களைப் பாக்கவே வந்தோம்..."— கோபால் இல்லை என்று சொல்லாமல் சொன்னார்.

www.cleanindians.com



"எனக்கு பொய் சொல்லி பழக்கம் கிடையாது தெரியுமோல்லியோ?"

"மன்னிக்கணும். நீங்க பொய் சொல்றதா சொல்லலை. தப்பா சொல்றதாத்தான் நினைக்கிறேன்."

"இதுதானே பொண்ணோட ஜாதகம்?"

"ஆமாம்..."

"சந்தேகமில்லையே...?"

"நிச்சயமா இல்லை..."

"அப்ப ஆயிடித்து."

"ஆயிடித்துன்னா... எப்படி...? அதுவும் எங்களுக்குத் தெரியாம?"

"நான் வெறும ஜாதகத்தை மட்டும் வெச்சு பலன் சொல்றவனில்ல. அந்தப் பெருமாளை தியானிச்சு சரியான்னு ஒருதடவை கேட்டுட்டும் சொல்றவன்கறது உங்களுக்குத் தெரியும்தானே?"

"இல்ல... நான் என்ன சொல்ல வரேன்னா...?"

"நீங்க புறப்படலாம்... இதுக்குமேல நான் பேச விரும்பலை."

உபாசகர் சட்டென்று பதிலோடு எழுந்தார்.

அதற்குமுன்பே விஷ்ணுவர்தன் எழுந்துவிட்டான்.

"அத்திம்பேர் கிளம்புங்கோ... இனி இவரண்ட பேசறதுல அர்த்தமில்லை..."— அவன் குரலில் கணிசமாய் அனல்.

"ஆமாப்பா... நீங்க கிளம்புங்கோ... இவர் உளர்றார்."— முரளி சுருதி சேர்த்தான்.

அவர் கோபப்படவில்லை.

"நீங்க போய்ட்டு திரும்ப வருவேள். அப்ப தெரியும் யார் உளறினதுன்னு..."

அவர் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு உள்ளே போய் விட்டார்.

கோபால் முகம் கணிசமாக கறுத்துவிட்டிருந்தது.

மௌனமாய் எழுந்து வெளியே வந்தார்.

"என்னப்பா... என்ன சிந்தனை?" முரளி கோபம் குறையாமல் கேட்டான்.

"ஒண்ணும் இல்லடா... இவர் இதுவரை தப்பா ஒரு விஷயம்கூட சொன்னதில்லை..."

"அது உங்க பிரமை... வாங்கோ. இங்க கல்யாணம் ஆகமாட்டேங்கறதேன்னு கவலைல வந்தா ஆயிடித்துன்னு சாதிக்கிறாரே..."

"நான் சொல்லலை...? இதெல்லாம் பித்தலாட்டம்."

"அவசரப்படாதே... அவர் உன் மனசுல இருந்ததை அப்படியே சொன்னாரே, எப்படின்னு யோசி!"

"அது எதாவது ட்ரிக்கா இருக்கும். அம்மா நாம வரப்போறதைப் பத்தி தகவல் கொடுக்கறேன்னு சொன்னா இல்லியா... அப்ப கல்யாண விஷயம்னு லீட் கொடுத்திருப்பா... நாங்க புலம்பினதையும் சொல்லியிருப்பா."

"இல்லடா... அப்படியெல்லாம் முன்னையே தெரிஞ்சுண்டு அதைச் சொல்லி கிரெடிட் தேடிக்கற சராசரி மனுஷன் இல்ல இவர்."

"அப்படித்தான்... நீங்க பேசாம வாங்கோ."

"ஒருவேளை ஜாதகம் மாறியிருக்குமோ...?"



"இல்ல அத்திம்பேர்... இதுதான் மைதிலி ஜாதகம். சின்னதுல இருந்தே இந்த நோட்டத்தான் அப்பா வெச்சுருக்கார். எனக்கு நன்னாத் தெரியும்."

அழுத்தம் கொடுத்தான் விஷ்ணுவர்தன்.

அதிர்ந்து போய்விட்டாள் பரிமளம்.

"மாமா அப்படியா சொன்னார்... நிஜமாவா?" என்று திரும்பத் திரும்பக் கேட்டபடி இருந்தாள்.

விஷ்ணுவர்தன் சூட்கேஸை மூடிக்கொண்டிருந்தான்.

ஊருக்குக் கிளம்பிவிட்ட முஸ்தீபு.

"விஷ்ணு! உன் அப்பா அம்மா கேட்டா இவர் உளறினதைச் சொல்லாதே. 'அந்த உபாசகர் ஊர்ல இல்லை. அவரைப் பார்க்க முடியலை. கிளம்பி வந்துட்டேன்'னு சொல்லு."

முரளி அவனிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

"பார்ப்போம்... எதையாவது சொல்லி நான் சமாளிச்சுக்கறேன். ஆனா இந்த விஷயம் மைதிலிக்கு மட்டும் தெரியக்கூடாது. தெரிஞ்சா வருத்தப்படுவா." என்றபடியே சூட்கேஸோடு நிமிர்ந்தான்.

"வந்த வேகத்துல கிளம்பிட்டே... இரண்டு நாள் இருந்துட்டுப் போகலாம்தானே?"

"இல்ல அத்த... ஆபீஸ்ல லீவு கிடையாது. இன்னொரு சமயம் வரேன். உங்களுக்காக இல்லேன்னாலும் கோயம்புத்தூருக்காகவாவது வருவேன். அருமையான ஊர்..." என்றபடியே நடந்து வராண்டாவில் கிடந்த செருப்பைக் காலில் மாட்டிக்கொண்டான்.

கோபாலன் மட்டும் எதுவுமே பேசவில்லை.

முரளி தன் மோட்டார் பைக்கில் விஷ்ணுவர்தனை பஸ் ஸ்டாண்டில் ட்ராப் செய்துவிட்டு வர கூடவே போனான்.

அவர்கள் தலை மறையவும் பரிமளம் கோபாலனிடம் வந்தாள்.

"என்னன்னா... வந்ததுல இருந்து எதுவுமே பேசமாட்டேங்கறேள். மாமா என்ன இப்படி சறுக்கிப்பிட்டார்..."

"அதான் பரிமளம் நானும் யோசிச்சிண்டிருக்கேன்."

"விட்டுத்தள்ளுங்கோ... யானைக்கும் அடி சறுக்கும்னு சொல்லுவா. அவரும் மனுஷன்தானே?"

"தப்பு பரிமளம்... அவர் மனுஷன் இல்ல. அதுக்கும் மேல..."

"அப்படின்னா...?"

"மைதிலிக்கு என்னவோ நடந்திருக்கு...!"

"என்ன சொல்றேள்?"— அலறிவிட்டாள் பரிமளம்.

"பதறாதே... எதுவா இருந்தாலும் போகப் போக தெரியாமலா போய்டப் போறது."

"அப்ப நீங்க அவர் சொல்றதை நம்பறேளா?"

"இப்போதைக்கு இதுக்கு நான் பதில் சொல்ல விரும்பலை. போகட்டும். என்ன நடக்குதுன்னு பார்ப்போம்."

"மண்ணாங்கட்டி... செத்தமுந்திதான் அண்ணா மெட்ராஸ்ல இருந்து போன் பண்ணினார்."

"அப்படியா... நீ சொல்லவே இல்லையே...?"



"முரளி இருந்ததால சொல்லலை..."

"அவன் இருந்தா என்ன... ஏன் இப்படிக் குழப்பறே?"

"குழப்பலை... அண்ணா முரளி பத்திதான் பேசினார்..."

"புரியறமாதிரி சொல்லு."

"இன்னுமா புரியலை? மைதிலிக்கு நம்ப முரளியையே கேக்கறார். கைல வெண்ணெயை வெச்சுண்டு எதுக்கு வெளியில நெய்க்கு அலையணும். நீ என்ன சொல்றேன்னார். அவர் வரட்டும்னான்னேன்."

பரிமளம் பதில் மீண்டும் கோபாலனைக் கட்டிப் போட்டு அதீதமாக யோசிக்கவிட்டது.

"என்ன சிந்தனை... நிரக்க பண்றேன்; ஒரு குறையும் வைக்கமாட்டேங்கறார்."

"பைத்தியம்... நான் அதை நினைக்கல. எப்படி திடீர்னு உன் அண்ணாக்கு இப்பத் தோணித்துன்னுதான் யோசிக்கறேன்."

"முன்னையே மனசுல இருந்ததாம். ஆனா கேட்க சங்கோஜமா இருந்ததாம். அக்கம் பக்கத்துல இருக்கறவாளும் கேட்டுருக்கா போல இருக்கு."

"சரி... வெளிய கண்டவா கால்ல விழறதுக்கு நம்ம கால்லையே விழுந்துடுவோம்னு நினைச்சிருக்கலாம்."

"சரி... உன் விருப்பம் என்ன?"

"என் மருமாளே மாட்டுப் பொண்ணா வரதுல எனக்கு எந்த ஆட்சேபணையுமில்ல. முரளியும் நீங்களும்தான் சரிங்கணும்."

"அப்ப அவன் வரட்டும். கேளு. சரின்னா நான் சொல்ல ஒண்ணுமில்ல."

www.cleanindians.com

"அதைக் கொஞ்சம் சிரிச்சுண்டே சொல்லக்கூடாதா?"

"சிரிக்கற நிலையில இப்ப நான் இல்ல பரிமளா. நான் அந்த உபாசகர் சொன்னதுல இருந்து இன்னும் விடுபடலை."

"அதான் சொன்னேனே... யானைக்கும் அடி சறுக்கும்னு. விட்டுத் தள்ளுங்கோ. முரளி வரட்டும். அவனும் மறுக்கமாட்டான். நிச்சயமாகட்டும். பத்திரிகை அடிச்சு அதை அவரண்ட எடுத்துண்டு போய் கொடுத்து இனிமே கொஞ்சம் பாத்து பலன் சொல்லுங்கோ இல்லேன்னா பேசாம இருங்கோன்னு சொல்லிடுங்கோ..."

பரிமளம் பட்டாசு மாதிரி பொரிந்தாள். அடுத்த அரைமணியில் 'டிர்டிர்டிர்' என்று வாசற்புறம் சப்தம் கேட்டது. முரளி விஷ்ணுவர்தனை பஸ் ஸ்டாண்டில் விட்டுவிட்டு வந்திருந்தான்.

"என்னடா பஸ் கிடைச்சுதா?"

"ரெடியா ஒரு பஸ் புறப்பட்டுண்டு இருந்தது. விஷ்ணு அதில் ஏறிண்டுட்டான்..."

முரளி பதிலோடு சட்டையைக் கழற்றினான். அப்படியே ஆணிக்காதில் மாட்டியபடியே "விஷ்ணுவுக்கு கோபமான கோபம்..." என்றான்.

"என்ன... அந்த உபாசகர் மாமா சொன்னதை நினைச்சா...?"

"ஆமாம்... பின்ன கோபம் வராதா? நான்தான் தைரியம் சொன்னேன். ரொம்ப ஃபீல் பண்ணினான். 'இவ கல்யாணம் ஆனாலும் படுத்துதுடா முரளி... அவளுக்கு என்னடா குறை...? அழகில்லையா? படிப்பில்லையா...? வர்றவாள்ளாம் ஏண்டா வேண்டாம்கறா?'ன்னு ஒரே புலம்பல்...



'நீ ஏண்டா புலம்பறே... யாரும் கிடைக்கலேன்னா என்ன—நானிருக்கேண்டா'ன்னேன்."

முரளி தாழிப்பானை கணக்காக தன் விருப்பத்தைப் போட்டு உடைத்தான்.

பரிமளம் ஒருவிநாடி திக்குமுக்காடிவிட்டாள்.

"முரளீசா..." என்றாள் ஒருவித கூவலாய்.

"ஆமாம்மா... பாவம்மா மாமா... பாவம்மா மைதிலி."

"அப்ப உனக்கு சம்மதமா?"

"உங்க சம்மதத்தைச் சொல்லுங்கோ..."

"எங்க சம்மதமா... உன் சம்மதத்துக்காக தாண்டா இப்ப காத்துண்டிருந்தோம். உன் மாமாவும் போன்ல பேசினார். நீ நானிருக்கேன்னு சொன்னது அசரீரியா அவர் காதுல விழுந்துடுத்து போல... பரிமளா, முரளியை என் பொண்ணுக்கு தரையான்னு கேட்டார்."

"அப்படியா... முதல்ல சரின்னு சொல்லும்மா. அப்படியே இந்த ஜாதகம் கீதகம் எல்லாத்தையும் தூக்கி எறியச் சொல்லு. ஜாதகமாம் ஜாதகம்."— அவனிடம் உற்சாகம் தளும்பிற்று. பரிமளமும் தொலைபேசியை நோக்கி ஓடினாள்!

## 3

பஸ்ஸிலிருந்து உதிர்ந்த விஷ்ணுவர்தனை சென்னையை ஆட்டிப் படைத்தபடி இருக்கும் புழுக்கம் குப்பென்று ஆக்ரமித்தது. காதோரமாய் ஒரு அங்குல நீளத்துக்கு வியர்வைப் பாம்பு.

www.cleanindians.com

வழித்துப் போட்டபடியே ஆட்டோ பிடித்தான். அண்ணாசாலையிலிருந்து திருவல்லிக்கேணிக்கு நாப்பது ரூபாய் கேட்டான் ஆட்டோக்காரன். மறுத்தபோது 'பெட்ரோல் விலை, ஆயில் விலை, தினக்கூலி' என்று மூக்கைச் சிந்தினான். பிறகு முப்பது ரூபாய்க்கு ஒப்புக் கொண்டு ஆட்டோவை சீறவிட்டான்.

மாடுகள் வழிமறிக்க, சாணவாசம் மூக்கைச் சடைக்க விட ஹைரோடிலிருந்து பிரியும் குட்டிச் சந்துக்குள் உள்ள வீட்டு முன்னாலும் போய் நின்றான்.

இறங்கி உள்ளே நுழையும்போதே அவன் அப்பா சந்தானம் புன்னகையோடு பேப்பரை மடித்தபடி பார்த்தார்.

ரேவதியும் 'அண்ணா வந்தாச்சு' என்று அடுக் களைக்குள் இருக்கும் கோமளம் காதில் விழும்படி கத்தினாள்.

எல்லோர் முகத்திலும் ஒருவித சந்தோஷ மின்னல். அது விஷ்ணுவர்தனுக்கு ஆச்சரியமாகக்கூட இருந்தது. ஆனால் மைதிலி மட்டும் உம்மென்று இருந்தாள்.

"அப்பா..."

"நீ எதையும் சொல்லாதே.. அந்த உபாசகர் ஊர்ல இல்லைங்கறது தெரிஞ்சுபோச்சு. உன் அத்தை போன் பண்ணிச் சொன்னா. போகட்டும்.. உனக்கொரு சந்தோஷ சமாச்சாரம்..."

"என்னப்பா?"

"மைதிலிக்கு ஒரு வரன் ஆயிடித்து."

"என்னது... செட் ஆயிடித்தா...? நேத்து நான் கோயம்புத்தூர் போயிருக்கும்போது யாராவது வந்து பொண்ணு பார்த்துட்டு போனாளா?"



"அதெல்லாம் ஒண்ணுமில்லடா. நீ போய் கால் கை அலம்பிண்டு வா சொல்றேன்."

"நீங்க முதல்ல சொல்லுங்கோ... மாப்ளை யார்.. எந்த ஊர்?" விஷ்ணுவுக்குள் மனது முயலாட்டம் துள்ளியது.

"எல்லாம் உனக்கு நன்னா தெரிஞ்ச பிள்ளை யாண்டான்தான்." சந்தானமும் யார் என்று சொல்லாமல் பீடிகை போட்டார்.

"அய்யோ... யார்னு முதல்ல சொல்லுங்கோப்பா..."

"முரளி அத்தான்தான்...." பதில் பக்கவாட்டில் ரேவதியிடம் இருந்து வந்தது.

"என்னது... முரளியா... நம்ப கோயமுத்தூர் முரளியா?" —விஷ்ணு பரவசச் சிகரம் ஏறியபடியே கேட்டான்.

"ஆமாண்டா... நேத்து பூரா எனக்குள்ள ஒரே உளைச்சல். அந்த உபாசகர் என்ன சொல்வாரோங்கற கவலை. பார்த்தேன்... நானே உன் அத்தைகிட்ட கேட்டுப்புட்டேன். அவாளுக்கும் சம்மதம். முரளியே என்னண்ட பேசினான்... சாரி.. அவன் இனி என் மருமான் இல்ல... மாப்பிள்ளை இல்லையா— மரியாதையான்னா கூப்டணும். மாப்ளையே என்னண்ட பேசி மாமா நானிருக்கேன் கவலைப்படாதீங்கோன்னார். மலை மாதிரி மறிச்சுண்டிருந்த விஷயம் பனியாட்டம் விலகிடித்து.. இப்ப எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?"

அவர் உற்சாகத்துடன் பொங்கி வழிய, விஷ்ணுவும் "மைதிலீ ஈ ஈ..." என்று அவளைத்தான் நோக்கி ஓடினான்.

அவளோ அவனை மலங்க மலங்கப் பார்த்தாள்.

"என்னடி அப்படிப் பார்க்கறே... அந்த படவா என்னண்டகூட சொல்லலை. எவ்வளவு பெரிய சர்ப்ரைஸ்.."

அவன் தோளைப் பற்றிக்கொண்டு உற்சாகமாய் சிரித்தான்.

அவளும் அரைச் சிரிப்பு சிரித்தாள்.

"நன்னா சிரியேன்.. எவ்வளவு சந்தோஷமான விஷயம் இது...?"

"ஆமாண்டா விஷ்ணு.. அந்த பார்த்தசாரதி பெருமாள் நம்பளைக் கைவிடலை."

அவன் அம்மா கோமளம் பதிலும் காபி தம்ளருமாக வந்தாள்.

"இப்பதாம்மா எனக்கு உசுரே வந்திருக்கு. எப்படியோ அந்த உபாசகர் மூஞ்சியில கரியைப் பூசினாச் சரி."

அவனை மீறி உபாசகர் பற்றி வார்த்தைகள் வந்து விட்டன. சரேலென்று ஒரு அம்புப் பார்வை பார்த்தார் சந்தானம். பின் "என்னடா சொல்றே.. அவர் மூஞ்சில எதுக்குக் கரி பூசனும்?" என்றார் சின்ன பதட்டத்தோடு...

"அது... அது... ஒண்ணுமில்லேப்பா..." விஷ்ணுவும் சமாளிக்கப் பார்த்தான்.

"இல்ல.. நீ எதையோ மறைக்கறே.."

"அது ஒண்ணுமில்லப்பா.. நீங்க விடுங்கோ. நான் ஒரு மடையன். வாய் தவறி உளறிட்டேன்."

"கரி பூசணும்னு சொன்னது உளறலா எனக்குத் தெரியல. என்ன விஷயம்? அவரைப் பார்த்தியா பார்க்கலையா?"

"அது– அது..."

"சும்மா சொல்லுடா... அவர் எதான எசகு பிசகா சொல்லி அது எங்களுக்கு தெரிஞ்சா வருத்தப்படுவோம்னு மறைக்கிறியா...?"

www.cleanindians.com



சடாரென்று ஒரு மாற்றம் சந்தானத்திடம். விஷ்ணுவுக்கும் 'இனி எதற்கு மறைத்துக்கொண்டு' என்று தோன்றியது.

"சாரிப்பா... நீங்க சொல்றதுதான் உண்மை." என்றான் சற்று நிதானமாக.

"என்ன சொன்னார் அப்படி?"

"விடுங்கோ... அவர் என்ன சொன்னா என்ன... நமக்குதான் ஒரு வழி தெரிஞ்சுடுத்தே."

"நீ அவர் என்ன சொன்னார்ங்கறத சொல்லு. நீ சொல்லலை... நானே அவரைப் பார்க்க இப்ப கிளம்பிடுவேன்."—மிரட்டினார் சந்தானம்.

"ஒண்ணுமில்லப்பா... இந்த ஜாதகத்துக்குக் கொஞ்சம் லேட்டாதான் கல்யாணம் ஆகும்னார். அவ்வளவுதான்."

"நிஜமாத்தான் சொல்றியா?"

"ஆமாம்ப்பா. நீங்க வேணும்னா அத்திம்பேர்கிட்டகூட கேளுங்கோ..."

"சத்தியமா அதைத்தான் சொன்னாரா?"

திரும்பவும் சந்தானம் குரலில் சந்தேக இழை.

"என்னப்பா நீங்க... அவர் என்ன சொன்னா என்ன இப்போ... அதான் முரளி சம்மதம் சொல்லிட்டானே?"

"அது அப்புறம்... அவர் லேசுப்பட்ட மனுஷன் இல்லடா. அந்த நரசிம்ம பெருமாளே அவர் நாக்குல நின்னு பேசுவார்னு கேள்விப்பட்டிருக்கேன். அவர் சொன்னா சொன்னபடிதான் நடக்கும். அதுல எனக்கு நம்பிக்கை இருக்கறதாலதான் இந்த நொண்டிக்காலோட

போக வேண்டாமேன்னு உன்னை அனுப்பினேன். நீ உண்மையைச் சொல்லு."

சந்தானம் கிடுக்கிப்பிடி போட விஷ்ணுவர்தன் முதலில் தயங்கினான். மைதிலியோ அவன் மேலேயே கண்ணாக இருந்தாள்.

"அது வந்துப்பா..."

"எது வந்து...? எதுவா இருந்தாலும் சொல்லு."

"அவர் நாக்குல நரசிம்மர் பேசறார் நாராயணன் பேசறார்ங்கறதெல்லாம் பொய்ப்பா. அவர் ஒரு உளறல் பேர்வழி."

"இப்ப நீ விஷயத்தைச் சொல்லப்போறியா இல்லையா?"

www.cleanindians.com

சந்தானம் நாற்காலியைத் தள்ளிவிட்டுக் கொண்டு எழுந்து நின்றார். தடுமாறவும் செய்தார். ஒரு காலில் அடிபட்டு கட்டுப் போடப்பட்டிருந்தது... அதில் எழுந்த வேகத்தில் ரத்தம் கசிந்தது. அந்த கட்டு காரணமாகத்தான் அவர் கோவைக்கு செல்லவில்லை.

"அப்பா..."

"சொல்லித் தொலையேண்டா..."

கோமளமும் துடுப்பு போட்டாள்.

"நம்ம மைதிலிக்கு..."

"உம்... நம்ம மைதிலிக்கு...?"

"எப்பவோ கல்யாணம் ஆயிடித்தாம்!"

அவன் சொன்ன மறுநொடி மைதிலி கண்கள் செருக அப்படியே மயங்கிக் கீழே விழுந்தாள். அடுத்த நொடி அத்தனைபேர் கவனமும் அவள் பக்கம்தான் திரும்பியது.

## 4

தினமும் காலையிலே ஒருமுறை பைக்கைத் துடைத்துவிடுவான் முரளி.

பளபளவென்று அதன் 'மட்கார்டுகள்' மின்னுவதை சற்று தள்ளி நின்று ஒரு பார்வையும் பார்ப்பான்.

அதில் ஒரு சந்தோஷம். இன்றும் அப்படிப் பார்த்துக்கொண்டு நின்றபோது பக்கத்தில் கிறீச்சிட்டபடி வந்து நின்றது ஒரு ஆட்டோ.

உள்ளேயிருந்து சந்தானமும், விஷ்ணுவும்தான் இறங்கினார்கள்.

ஆச்சரியம், அதிர்ச்சி இரண்டும் சேர்ந்து வந்து அவனை ஆக்ரமித்தது.

"மாமா... விஷ்ணு... என்ன இது சர்ப்ரைஸ் விசிட்?"

அவன் கேள்வி முன்னால் இருவருமே இறுக்கமாய் வெறித்தபடி நின்றனர்.

கோபாலனும், பரிமளமும்கூட எட்டிப் பார்த்து ஆச்சரியப்பட்டு உள்ளே அழைத்தனர்.

"வாண்ணா... வாவா... வா விஷ்ணு."

"வாங்கோ..."

இருவரும் சோர்வாய் நடந்து உள்ளே சென்றனர்.

"என்னண்ணா... என்ன இது ஒரு போன்கூட பண்ணாம?"

பரிமளம் ஆரம்பித்தாள்.

பதிலுக்கு மளுக்கென்று துளிர்த்துவிட்ட கண்ணீரோடு விஷ்ணு அவளைப் பார்த்தான்.

"விஷ்ணு என்னதிது... ஏன் அழறே—என்னாச்சு?" பதறினாள் பரிமளம். ஆனால் கோபாலன் பதறவில்லை. கூர்மையாகப் பார்த்தார்.

"அத்தே..."

"என்னப்பா?"

"எப்படித்தே சொல்வேன்...?"

"என்ன விஷ்ணு... என்ன நடந்தது?"

"அந்த உபாசகர்..."—அதற்கு மேல் பேசமுடியாமல் மிடறுகட்டினான் விஷ்ணுவர்தான்.

"நான் சொல்றேன்..."—கோபால் இடைவெட்டினார்.

சந்தானமும் அவரை கவனித்தார்.

"அவர் சொன்ன மாதிரியே மைதிலிக்குக் கல்யாணம் ஆயிடித்தாக்கும்?"

"ஆமாம்... ஆமாம் மாப்ள... அந்த சண்டாளி என் தலைல பெரிய பாறாங்கல்லா தூக்கிப் போட்டுட்டா மாப்ளை..."

சந்தானம் நெஞ்சைத் தேய்த்துக்கொண்டே கதறினார்.

"அய்யோ அண்ணா நெஜமாவா?"

"ஆமாம் அத்த... எங்களுக்குத் தெரியாம ஆறு மாசமா சமாளிச்சிருக்கா. இப்ப வயித்துல மூணு மாசம் வேற?"

"நாராயணா..."



"அத்தோட, வந்த வரன்களை எல்லாம் அவதான் கலைச்சு விட்டுருக்கா. இது தெரியாம வரன் தட்டிண்டு போறதா நாங்க நினைச்சிட்டோம்.

கடைசில உபாசகர் சொன்ன விஷயத்தை நான் சொல்லும்படியாயிடுத்து. அவளோதான் மயங்கி விழுந்துட்டா. என்னவோ ஏதோன்னு பதறிப்போய் தெருவுல இருந்த டாக்டர் ஒருத்தரைப் போய் கூட்டிண்டு வந்து காட்டினோம். அவர்தான் அவ மாசமா இருக்கான்னு சொன்னவர்."

விஷ்ணுவர்தன் நடந்து முடிந்ததை சுருக்கமாக விளக்கி முடித்தான்.

சந்தானம் கண்களில் கண்ணீர்ப் பிரவாகம்.

"சரி... பையன் யாராம்... கேட்டேளா?"

கோபாலன் பிரதானமான அந்தக் கேள்வியைக் கேட்டார்.

"சொல்லாம இருப்பாளா... அதான் தலைக்கு மேல போய்டுத்தே."

"யாரு... எங்க இருக்கான்?"

"எங்க தெருவுலதான் இருக்கான். வக்கீல் நாராயணனோட மூத்த பிள்ளை மனோஜ்!"

"நல்லவேளை... நம்ப ஜாதியா போய்ட்டான். அப்புறம் என்ன... அவனண்ட போய் பேச வேண்டியதுதானே?"

முரளி ஆவேசமானான்.

"போகாம இருப்போமா... அடுத்த அஞ்சாவது நிமிஷமே ஓடினேன். ஆனா அவன் என்ன சொல்றான் தெரியுமா?"

www.cleanindians.com

"என்ன... என்னத்தடா சொன்னான் அந்த கடங்காரன்?"

"மைதிலி பொய் சொல்றாளாம். அவ வயித்துக் குழந்தைக்கும் அவனுக்கும் சம்பந்தமே இல்லையாம்."

"அடச் சண்டாளா... அப்படியா சொன்னான்?"

"ஆமாம். சாதிக்கறான். குழந்தை பொறக்கட்டும். டெஸ்ட் பண்ணுங்கோ அப்பத் தெரியும்கறான்."

"என்ன தைரியம்... அவளைக் கெடுத்து ஒரு குழந்தையையும் கொடுத்துட்டு இப்படிப் பேச எப்படிடா அவனுக்கு மனசு வந்தது?"

"இவளுக்கு எங்க போச்சு அத்தை புத்தி... தெருவே சிரிக்கறது அத்தை..."

"சரி இப்ப என்ன பண்ணப் போறேள்?"

"ஒண்ணும் தெரியில. ஸ்தம்பிச்சு நிக்கறோம். அந்த உபாசகர்தான் எதான வழி காட்டணும்."

சந்தானம் இறுதியாக உபாசகரிடம் வந்து நின்றார். கோபாலனும் அவர் சொன்னதை நினைத்துப் பார்த்தார். அப்படியே முரளியையும், விஷ்ணுவையும் பார்த்தார். இருவர் தலையும் தாழ்ந்திருந்தது.

இருந்தும் முரளி கேட்டான். "எப்படிப்பா அவரால அன்னிக்கு அவ்வளவு சரியா சொல்ல முடிஞ்சது...?"

"அதான் உபாசனையோட சக்தி."

"உபாசனைன்னா...?"

"இப்ப அதுக்கெல்லாம் பதில் சொல்லிண்டிருக்க நேரமும் இல்ல. பொறுமையும் இல்ல. முதல்ல ஒரு வா சாப்டுங்கோ. கிளம்பிப் போய் அவரைப் பார்ப்போம்.

www.cleanindians.com



நிச்சயம் ஒரு நல்ல வழியைக் காட்டுவார்."

கோபாலன் ஒரு முடிவைச் சொன்னார். அவர்களிடமும் பதிலில்லை!

## 5

லேசாக வானம் கருத்திருந்தது.

மழை வரலாம் என்பதற்கான அறிகுறி. காற்றும் கொஞ்சம் அடங்காப் பிடாரித்தனமாய்தான் வீசிக் கொண்டிருந்தது.

உபாசகர் ரங்காச்சாரி வீட்டு மையத்தில் அக்னி ஹோத்ரம் செய்துகொண்டிருந்தார்.

ஒரு சிறிய ஹோமகுண்டம். அதில் இரண்டு சாணத்தட்டைகள். கொஞ்சம் மரச்சிராய். நடுவில் ஒரு கற்பூரத் துண்டு.

அதைக் கொளுத்தி தீ மூட்டியதில் சாணத் தட்டைகள் பற்றிக் கொண்டன. புகை கசிந்து அந்த ஹால் எங்கும் ஒரு ஆவி ரூபம் சுற்றிவர ஆரம்பித்தது.

அவரும் அருகே அமர்ந்து அக்னிஹோத்ர மந்திரத்தை சொல்லியபடி இருந்தார். அதிகபட்சம் ஐந்து நிமிடம்தான். பிறகு மனைவியைப் பார்த்தார். அவள் அந்த ஹோம குண்டத்தை அப்படியே ஒரு துணியை அண்டக் கொடுத்து தூக்கிக்கொண்டு விலகினாள்.

அதைப் பார்த்தபடியே கோபாலன்—முரளி, விஷ்ணு, சந்தானம் சகிதம் உள்ளே நுழைந்தார்.

உபாசகரும் பார்த்துவிட்டு ஒரு சிரிப்பு சிரித்தார். அப்படியே "வந்துட்டேளா?" என்று இளக்காரம் ததும்பிய கேள்வி.

"மன்னிக்கணும்... நீங்க சொன்ன மாதிரியே ஆயிடித்து. அதான்..."—கோபாலன் மென்று துப்பினார்.

"நான் சொன்ன மாதிரி ஆகலை, ஆனதைத்தான் நான் சொன்னேன்..."—திருத்தினார் அவர்.

"எப்படியோ நடக்கக்கூடாதது நடந்துடுத்து. அடுத்து என்ன பண்றதுன்னு தெரியல. பெரியவாதான் ஒரு நல்ல வழியைக் காட்டணும்."

பேசிக்கொண்டே ஒரு ஜமக்காள விரிப்பில் அமர்ந்தனர். உபாசகர் தனக்கான பலகையில் அமர்ந்து கொண்டு கோபாலனை உன்னிப்பாகப் பார்த்தார்.

அவர்களும் கூர்மையாகப் பார்த்தனர்.

விஷ்ணுவர்தன் மட்டும் கூடுதல் கூர்மையைக் காட்டினான்.

"என்ன அம்பி இப்ப என்ன கேள்வி கேட்கப் போறே?" அவனைத்தான் கேட்டார். அவர் கேட்டதற்காக முன்போல உஷ்ணமாகாமல் அவனும் வாயைத் திறந்தான்.

"இதை எல்லாம் எப்படி நீங்க சொல்றேள்?"

"எதை எல்லாம்?"

"என் தங்கைக்கு கல்யாணம் ஆயிடித்துங்கற விஷயத்தைத்தான் சொல்றேன்."

"அவ ஜாதகம் சொல்லித்து..."

"ஜாதகம் அதை எல்லாம் சொல்லுமா என்ன?"



"உன் சாவுத் தேதியும் நிமிஷமும்கூட சொல்லும்."

"எப்படி?"

"மேப்பைப் பார்த்து ஊர்களைத் தெரிஞ்சுக்கற மாதிரிதான்..."

"அதுவும் இதுவும் எப்படி ஒண்ணாகும்?"

"மாதிரின்னுதான் சொன்னேன்... ஒண்ணுன்னு எங்க சொன்னேன்?"

சந்தானத்துக்கு தேவையில்லாத விஷயம் பேசப்படுகிற மாதிரி தோன்றியது. மைதிலி எதிர்காலம் என்னாகும் என்கிற கேள்விதானே இப்போது பிரதானம்?

"மன்னிக்கணும்... விஷ்ணு நீ செத்த சும்மா இரு. என் பொண்ணு எதிர்காலம் பத்தி சொன்னா தேவலை..."—கத்தரித்தார்.

"சொல்றேன்... சொல்றேன்..."—அவரும் சொன்னபடி கண்களை மூடிக்கொண்டு த்யானிக்கத் தொடங்கினார். சில நிமிடங்கள் வரை அது நீடித்தது. பின் கண்களைத் திறந்தபோது கண்ணிரண்டும் சிவந்து விட்டிருந்தது. ரத்தச் சிவப்பு!

"இது உங்க குடும்ப சாபம்..."—அவர் பதில் அவர்களை அதிர வைத்தது.

"சாபம்னா...?"

"உங்க வம்சா வழியில யாராவது தீக்குளிச்சு செத்துப் போயிருக்காளா?"

—கோபாலனும், சந்தானமும் உடனே தீர்க்கமாக யோசித்தனர். விஷ்ணுவும் முரளியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

www.cleanindians.com

"ஒரு ஆத்மா தெரியறதே.. என்னை வாழவிடாத உங்க குடும்பத்துல ஒரு பொண்ணையும் வாழ விடமாட்டேன்னு சொல்றதே?"

அடுத்து அவர் சொன்னது அவர்களை வியர்க்க வைத்தது.

"உண்மைதான்..."—சந்தானம் பலமில்லாத குரலோடு வாய் திறந்தார்.

"உண்மைதான்னா... எப்படி?"

"எங்க வம்சா வழியில என் அண்ணாவோட மாட்டுப் பொண் ஒருத்தி என் மன்னியோட கொடுமை தாங்காம தீக்குளிச்சு செத்துப் போயிட்டா..."

சந்தானம் பதில் விஷ்ணு, முரளி இருவரையும் கீறியது. அவர்களுக்குத் தெரிய அது ஒரு சமையல் கட்டில் நடந்த தீ விபத்து... ஆனால் அதன் பின்னால் இப்படி ஒரு உண்மையா?"

"அப்ப அந்த பொண்ணுதான் மறிக்கறா. அவதான் இப்ப உங்க பொண்ணு புத்தியைக் கெடுத்தது..."

"அண்ணா, மன்னி பண்ணதுக்கு எங்களுக்கு தண்டனையா?"

"அவாளுக்கும் தண்டனை உண்டு. உங்க எல்லாருக்குமேகூட உண்டு. பரம்பரையே கஷ்டப் பட்டாகணும்..."

"அய்யோ... விமோசனமே கிடையாதா?"

"இருக்கு... ஆனா அதுக்காக ரொம்ப மெனக்கெடணும்."

"என்ன பண்ணணும்... சொல்லுங்கோ?"

www.cleanindians.com



"பெருமாளை உங்க ஆத்துல குடியேற வைக்கணும். முடியுமா?"

"பெருமாளையா... இந்த உலகத்தையே படைச்சவனுக்கு என் ஆத்துல இடமா.. என்ன சொல்றேள்?"

"அவன் உங்க ஆத்துல குடியேறினா அந்த ஆத்மாவோட அலைச்சலுக்கும் ஒரு முடிவு வரும். உங்க பொண்ணுக்கும் ஒரு வழி பொறக்கும்."

"பெருமாளை எப்படி எங்க ஆத்துக்கு குடியேற வைக்கறது...?"

சந்தானமும் உபாசகர் ரங்காச்சாரியும் பேசிக்கொள்வது விஷ்ணுக்கு வியப்பாக இருந்தது.

'பெருமாள் முதலில் எங்கே இருக்கிறார்?

அப்படியே இருந்தாலும் அவர் வீட்டுக்கு வருவதற்கு யார் தடை செய்ய முடியும்.

அப்படியே அவர் வந்தாலும் அண்ணா மன்னியால் விளைந்த அந்த பாவம் எப்படி புண்ணியமாகிவிடும்...?

ஆத்மா... அப்படி இப்படி என்கிறாரே...?

அந்த ஆத்மாவுக்கு எங்கள் மேலென்ன கோபம்...?

எங்களை இம்சிப்பதால் அதற்குத்தான் என்ன லாபம்?

இதெல்லாம் என்ன... தொட்ட இடத்தில் எல்லாம் லாஜிக் இடிக்கிறதே?'

விஷ்ணு கேள்விகளுக்குள்—விழுந்து புரண்டு நெளிந்தான்.

அதெல்லாமும் அவருக்குள் தோன்றியிருக்க வேண்டும். பேச்சின் நடுவே விஷ்ணுவை ஒரு பார்வை பார்த்தார்.

"உனக்கு எல்லாமே வேடிக்கையா, விநோதமா இருக்கு– இல்ல?"—கேள்வியும் கேட்டார்.

"ஆமாம்.. ஆத்மாங்கறேன், தடுக்கறதுங்கறேன், லாஜிகலா பார்த்தா ஒரே குழப்பமா இருக்கு.."

"எல்லா விஷயத்தையும் லாஜிக்கா பார்க்கக்கூடாது. லாஜிக்குங்கறது என்னன்னு தெரியாம லாஜிக் பத்தியும் நினைக்கக்கூடாது."

"சரி நான் இப்ப கேக்கறேன்.. எது லாஜிக்?"

"அது ஒரு ஒண்ணாங்கிளாஸ் படிப்பு மாதிரி புத்தியை சுருக்கி வெச்சிருக்கற ரொம்ப சின்ன விஷயம்!"

"எப்படி?"

"வரிசையா என் கேள்விக்கு பதில் சொல். உனக்கு ஒருவேளை புரிய வரலாம்."

"கேளுங்கோ.."

விஷ்ணு தயாரானான்.

"அய்யோ.. இவன் ஒருத்தன்"—பதறினார் சந்தானம்.

"கொஞ்சம் பொறுமையா இருங்கோ. அவர் என்ன சொல்றார்னு கேட்போம். பிளைண்டா எதுக்கு ஒரு விஷயத்தை நம்பணும். புரிஞ்சுக்கத்தான் முயற்சி செய்வோமே.."

கோபாலன் இடைவிட்டு சமாதானம் செய்தார். உபாசகர் ரங்காச்சாரியிடம் கேள்விகள் ஆரம்பமானது.

"நீ யாருப்பா?"

"நான்.. நான்.. விஷ்ணு."

"அது உனக்கு வெச்ச பேர். உண்மைல நீ யார்?"



"மனுஷன்."

"மனுஷன்னு உனக்கு எப்படித் தெரியும்?"

"இந்த உலகம் அப்படித்தானே சொல்றது..?"

"அப்ப இந்த உலகம் சொல்லித்தான் உனக்கே உன்னைத் தெரிஞ்சுதா?"

"இப்படிக் கேட்டா எப்படி? நாமா எப்படி ஒரு விஷயத்தை தெரிஞ்சுக்க முடியும்?"

"அப்படியா.. அப்ப இந்த உலகத்துல இருக்கற எல்லா விஷயங்களையும் நீ தெரிஞ்சுண்டுட்டியா?"

"அது எப்படி முடியும்? ஒரு அளவு தெரிஞ்சு வெச்சுண்டிருக்கேன்.."

"சரி... இந்த உலகம் சொல்லித்தான் தெரிஞ்சுண்டேன்னு முதல்ல சொன்னே? எல்லாத்தையும் தெரிஞ்சுக்க முடியாது.. ஒரு அளவுதான் தெரிஞ்சுக்க முடியும்னும் சொன்னே.. அப்ப தெரிஞ்சுக்க வேண்டியது நிறைய இருக்குதானே?"

"நிச்சயமா?"

"சரி... நீதான் மனுஷன்னு சொன்னப்போ நீ மறுக்கலையே?"

"எப்படி மறுக்க முடியும்.. நான் மனுஷன்தானே?"

"உன்னை மனுஷன்னு இந்த உலகம் சொன்னதை ஒத்துண்ட நீ அது சொல்ற எல்லாத்தையும் ஒத்துக்கறியா?"

"அது எப்படி முடியும்.. நீங்களே ஒத்துப்பேளா?"

"ஏன்?"

"நமக்கு புத்தின்னு ஒண்ணு இருக்கே. அது ஒத்துக்கணுமே?"

www.cleanindians.com

"ஏன் அந்த புத்தி ஒத்துக்கமாட்டேன்கறது?"

"அது யோசிக்கறது... உண்மையை ஒத்துக்கும்—பொய்யை எப்பவும் அது ஒத்துக்காது."

"எது உண்மை... எது பொய்னு உனக்கு எப்படித் தெரியும்?"

உபாசகர் அவனை சற்று யோசிக்க வைத்தார். ஆனால் விஷ்ணு சளைத்துவிடவில்லை.

"என் மனசுக்கு எது உண்மையோ அதுதான் உண்மை. எது பொய்யோ அது பொய்" என்றான்.

"ஒரு உதாரணம் சொல்லேன்..."

"இப்ப இங்க நான் இருக்கேன்... நீங்க இருக்கேள். என் அப்பா, அத்திம்பேர் இருக்காங்க, முரளி இருக்கான். இது உண்மை. ஆனா கண்ணால பார்க்க முடியாத ஆத்மான்னு ஒண்ணு இருக்கறதா நீங்க சொல்றது பொய்."

"அப்ப பாக்க முடிஞ்சாதான் உண்மையா?"

"நிச்சயமா?"

"மின்சாரத்தை கண்ணால பாக்க முடியறதில்ல. காத்தையும் கண்ணால பாக்க முடியறதில்ல. அப்ப அது பொய்யா?"

"ஆனா அது இருக்கறதை வெளிச்சத்தை வெச்சும் சுவாசிக்கறதை வெச்சும் உணர்றோமே?"

"கொஞ்சம் முந்தி பாக்க முடிஞ்சாதான் உண்மைன்னே. இப்ப உணருவதையும் உண்மைங்கறியோ..."

"மன்னிக்கணும். உணர்ந்தாலும் போதும். உண்மை உண்மைதான்."



"உங்க குடும்பத்தால பாதிக்கப்பட்ட ஒரு ஆத்மா தன்னைக் கவனின்னு ஞாபகப்படுத்தவும், நியாயம் கேட்டும் உங்களுக்குக் கஷ்டங்களைக் கொடுத்திருக்கு. அதை உணர்ந்து அதை ஒத்துக்க வேண்டியதுதானே?"

"இந்த கஷ்டத்துக்குக் காரணம் அந்த ஆத்மாதான்னு எப்படி நம்பறது?"

"அப்படியா... இல்லேன்னு எப்படி நம்பறே? அதுக்கு முதல்ல பதிலைச் சொல்."

"அந்த மனோஜ் என் தங்கைக்கு நம்பிக்கை துரோகம் பண்ணியிருக்கான். இது அதனால வந்த பிரச்சினை. இதுக்கு எப்படி எப்பவோ செத்துப்போன யாரோட ஆத்மாவோ காரணமாக முடியும்?"

"எவ்வளவோ பெண்கள் இந்த உர்ல இருக்கச்சே, அவன் ஏன் உன் தங்கைகிட்ட மட்டும் நம்பிக்கை துரோகம் பண்ணினான்?"

"இது என்ன அபத்தமான கேள்வி? என் தங்கையை சுலபமாக ஏமாத்திட முடியும்னு அவன் நம்பியிருக்கலாம்."

"இப்பதான் நீ விஷயத்துக்கு வரே... உன் தங்கையை ஏமாத்திட முடியும்னு அவன் நம்பினதும், அதற்குத் தகுந்த மாதிரி அவள் ஏமாந்ததும் இருக்கே... அங்கதான் சூட்சமம் இருக்கு."

—உபாசகர் ரங்காச்சாரி பிரச்சினையின் மையத்துக்கு வருகிற மாதிரி தெரிந்தது. எல்லோருமே கூர்மையாக கவனித்தார்கள்.

"எப்படி?"—இந்தமுறை சந்தானம் கேட்டார்.

—உபாசகரும் விளக்கத்தைத் தொடர்ந்தார்.

"மனுஷ மன நிலைங்கறது ஒரு சமுத்ரம் மாதிரி... சதா அலைபாஞ்சுண்டு இருக்கும். எப்பவும் எதாவது ஒரு

www.cleanindians.com

சிந்தனை... இல்லை யோசனை... இல்லைன்னா துக்க உணர்ச்சி, இல்லைன்னா சந்தோஷ உணர்ச்சி. அதுவும் இல்லைன்னா அடுத்து என்ன செய்யறதுங்கறத பத்தியே யோசிச்சபடி இருக்கும்.

இப்ப மணி ஒண்ணு. இரண்டு மணிக்கு நீங்களோ நானோ என்ன நினைப்போம்னு யாராலையாவது சொல்ல முடியுமா?"—கேட்டார்.

"அது எப்படி முடியும்?"

"ஏன் முடியாது?"

"இடைப்பட்ட ஒரு மணி நேரத்துல எது வேணா நடக்கலாம். அப்படி நடக்கற சம்பவங்களை ஒட்டித்தானே எண்ணங்கள் இருக்கும்?"

"அப்ப மாறிக் கொண்டேயிருப்பதுான் மனம்... இல்லையா?"

"அதுதான் அதோட இயல்பும்கூட..."

"இந்த மாற்றங்களுக்கும் நாம் காரணமில்லை. நம்மைச் சுத்தி நடக்கற விஷயங்கள்தான். இல்லையா?"

"நிச்சயமா?"

"எதைப் பத்தியும் நினைக்காம, ஒரே நினைப்பா நாராயணான்னோ, நமச்சிவாயான்னோ சொல்லிண்டு தியானத்துல இருந்தா மனசு மாறாது தானே?"

"அ- அ- ஆமாம்..."

"ஆனா நாம அப்படி இருக்கறதில்லை. அது யோகிகள் செயல்; நமக்கெதுக்கு அதுன்னு வயித்துக்காகவும், வசதிக்காகவும் அதையும் இதையும் செஞ்சிண்டு ஓடிண்டே இருக்கோம். அப்படித்தானே...?"

www.cleanindians.com



"ஆமாம்."

"இந்த ஓட்டத்துக்கு நடுவுல மாறிண்டே இருக்கற மனோநிலை தான் கெட்ட சக்திகளுக்கு ரொம்ப பிடிச்ச விஷயம்..."

உபாசகர் பிரச்சினையின் மையப்புள்ளியை நெருங்கி விட்ட மாதிரி தோன்றியது. அவரே தொடர்ந்தார்.

"கெட்ட சக்திங்கறது ஒரு மாயை. அது எப்பவும் அனுபவப்பட்ட பிறகுதான் திருந்தும். மாயை வசப்பட்ட மனசுக்கு நல்லதெல்லாம் கெட்டதாவும், கெட்டதெல்லாமும் நல்லதாவும் மாறி மாறி தெரியும்... மாயை ஆக்ரமித்த மனிதன் அது ஆட்டி வைக்கற மாதிரிதான் ஆடுவான்... உன் தங்கையும் ஆடினா. அதுதான் நடந்தது."

விஷ்ணு அதைக் கேட்டு சிரித்தான்.

"ஏம்ப்பா சிரிக்கறே?"

"இல்ல... நான் மனோஜ் செஞ்சதை கொழுப்புன்னு சொன்னேன். என் தங்கைக்கும் புத்தி கெட்டுப் போச்சுன்னேன். அதை நீங்க நீட்டி முழக்கி மாயைன்னு சொல்லியிருக்கேள். ஆனா அதுக்கு ஆத்மா எப்படி காரணம்கறதைத்தான் சொல்லலை..."

"எச்சரிக்கையாவும் புத்திசாலித்தனமாவும் இருக்கறது அருள். அதுக்கு நேர் எதிரா இருக்கறதெல்லாம் இருள். இந்த இருட்டுலதான் கெட்ட ஆத்மாக்கள் பூந்துண்டு பல வேலைகளைச் செய்யும்."

"சரி... ஒரு வாதத்துக்காக நான் இன்னொரு கேள்வி கேட்கறேன். எங்க குடும்பத்துல எவ்வளவோ பேர் இறந்து போயிருக்கா... அப்படி இறந்துபோன ஒரு ஆத்மா வந்து இதைத் தடுத்து விலக்கலாமில்லியா?"

"வாரேவா... அப்படி ஒரு நல்ல ஆத்மாதான் உங்களை என்னண்ட இழுத்துண்டு வந்துருக்கு... அதைப் புரிஞ்சுக்கோ..."

"இது எனக்கு சாமர்த்தியமான பதிலாத்தான் தெரியறது. என் வரையில இதெல்லாம் ஆத்மாக்களோட செயல்தான்னு நான் நம்பணும்னா நான் அழுத்தம் திருத்தமா உணரணும். உங்க விளக்கங்கள் எனக்கு நம்பிக்கை தரமாட்டேங்கறது."

முரளியும் போட்டு உடைத்தான்.

"போறுண்டா... நீ எதையும் நம்ப வேண்டாம். நாங்க நம்பறோம். நீ இப்படியே கேள்வி கேட்டுண்டு இரு. ஸ்வாமி... அவனை விட்றுங்கோ... உங்க தொண்டை தண்ணி வத்தறதுதான் மிச்சம். எங்களுக்கு ஒரு வழியைச் சொல்லுங்கோ.

எப்பவோ நாங்க செஞ்ச பாவம்தான் எங்க பொண்ணு இப்ப ஏமாந்து நிக்கறா. அவ நல்லபடியா வாழணும். இந்த தப்பு சரியாகணும். அதுக்கு ஒரு வழியைச் சொல்லுங்கோ..."

முரளியின் அப்பா கோபாலன் இடையில் புகுந்து முரளியையும் அடக்கியவராக உபாசகர் முன்னால் கைகளைக் கூப்பினார்.

உபாசகர் முகத்தில் ஒரு மந்தகாசமான புன்னகை. முரளிக்கும் என்னவோ போலாகிவிட்டது.

சந்தானமும் கோபாலன் சொன்னதற்கு ஒப்புதல் அளித்தார்.

"ஆமாம்... என் மச்சினர் சொல்றதுதான் சரி. எங்களுக்கு ஒரு வழி காட்டுங்கோ. தப்பு நடந்துடுத்து.

www.cleanindians.com



அந்த தப்பைச் செய்த மனோஜ மனசு மாறணும் என் பொண்ணை ஏத்துக்கணும். வழி இருக்கா?"

உபாசகர் பதில் கூறவில்லை.

எழுந்து தனது பூஜை அறை நோக்கிச் சென்றார்!

## 6

அங்கே அறையில் ஆஞ்சநேய மூர்த்தி விக்ரகம் ஒருபுறம். நரசிம்மமூர்த்தியின் விக்ரகம் ஒருபுறம். முன்னால் பஞ்ச தீபங்கள் அணைந்துவிடுவது போல் எரிந்து கொண்டிருந்தன.

பக்கத்திலேயே ஒரு பாத்திரத்தில் நெய் இருந்தது. அதில் ஒரு கரண்டி மொண்டு விளக்கில் விடவும் தீபங்கள் புத்துயிர் பெற்ற மாதிரி ஒளிரத் தொடங்கின.

அதைப் பார்த்தபடியே கண்களை மூடினார்.

ஒரு நிமிடம்.

இரு நிமிடம்.

மூன்று நிமிடம்.

முப்பது நிமிடங்கள்...

36508
5388932

வெளியே சந்தானமும் கோபாலனும் தவித்தபடி இருந்தனர். முரளியும் விஷ்ணுவும் வீட்டுக்கு வெளியே போய் மல்லிகைப் பந்தல் ஒன்றின் கீழ் நின்றபடி இருந்தனர்.

"அந்த தடியனைப் பிடிச்சு டீ. என்.ஏ டெஸ்ட் பண்ணி கோர்ட் முன்னாடி நிறுத்தணும். அதுதான் புத்திசாலித் தனம்.

இவர் என்னடான்னா இவரைப் பிடிச்சு தொங்கிண்டு இருக்கா..." என்றான் முரளி.

"அவசரப்படாதே முரளி.. இவரண்ட ஏதோ சக்தி இருக்கு. இல்லேன்னா நமக்கெல்லாம் தெரியாத ஒரு விஷயத்தை போன தடவை வந்தப்ப சொல்லியிருப் பாரா?" என்றான் விஷ்ணு.

"அதுதான் என்னையும் குழப்பறது.... சக்தி இருக் குன்னா அந்த சக்தியால நம்மைப் படுத்தற அந்த ஆத்மா வை காட்ட வேண்டியதுதானே... அப்படி காட்டிட்டா நான் எதுக்கு நூறு கேள்வி கேட்கறேன். இவரும் எதுக்கு கேள்வி பதில், கேள்வி பதில்னு ஜிலேபி பிழியணும்?"

"பொறு.. என்ன சொல்றார்னு பார்ப்போம்."

"என்னத்த சொல்வார்...அந்த மனோஜோட தலைமுடி, இல்ல சட்டைன்னு எதையாவது கொண்டு வாங்க. நான் பூஜைல அதை வெச்சு செய்வினையால அவன் மனசை மாத்தறேன்னுவார். அதுக்கு பத்தாயிரம் இருபதாயிரம் செலவாகும்னு பணத்துல வந்து நிப்பார். எவ்வளவு கதை படிச்சிருக்கேன் தெரியாதா? எல்லாம் ஏதோ ட்ரிக்கு!"

முரளி புலம்பிக் கொண்டிருக்க உபாசகரும் பூஜை அறையை விட்டு எழுந்து வந்தார். சந்தானமும் கோபாலனும் ஆவலாதியோடு பார்த்தனர்.

"ஹரித்வார் தெரியுமா?"—உபாசகர்தான் கேட்டார்.

"தெரியும்.. புண்ணிய ஷேத்ரம்தானே?"

"அதுவேதான்.. அங்க போய் கங்கைல ஒரு முழுக்கு போடுங்கோ. அப்படியே உங்க பித்ருக்கள் எல்லாருக்குமா சேர்த்து அங்க ஒரு தர்ப்பணமும் பண்ணிடுங்கோ..."

"சரி.."



"முழு நம்பிக்கையோட சத்ய தர்மத்தை மனசுல நிரப்பிண்டு போங்கோ."

"நிச்சயமா!"

"நடந்துட்ட தப்புக்கு முதல்ல பரிகாரம் தேடுங்கோ. அதாவது உங்க பொண்ணை அங்க இருக்கற யாராவது ஒரு சன்யாசிக்கு தத்து கொடுத்துடுங்கோ."

"தத்தா?"—பகீர் உணர்வோடு கேட்டார் சந்தானம்.

"ஆமாம்.. அப்படி இல்லேன்னா ஒரு ஏழைக் குழந்தை யை நீங்க தத்து எடுத்துக்கணும். இது பரவால்லியா?"

"ஏழைக் குழந்தையன்னா...?"

"நிர்கதியா நிக்கற ஒரு ஏழைக் குழந்தையை தத்து எடுத்துக்கணும். குறிப்பா தப்பான உறவுல பொறந்து குப்பைத் தொட்டியில வீசி எறியறாளே... அப்படி ஒரு குழந்தையை.. அதுவும் பெண் குழந்தையை..."

"ஏன் அப்படி?"

"மனசார அந்த தப்பை சரியாக்க முயற்சி செய்யுங்கோ. இதெல்லாம் நடக்கும்போதே உங்களுக்கு வழி தானா தெரியும். உங்க செயல் மனசார நடக்கற விஷயமா இருக்கற பட்சத்துல நான் சொன்னபடி அந்தப் பெருமாள் உங்களைத் தேடி வருவார். அவர் வந்துட்டாலே போதும். சிலர் புத்தியைப் பிடிச்சுண்டு ஆட்டற மாயை விலகிடும். அப்புறம் எல்லாம் நல்லபடியா நடக்கும்."

அவர் சொன்னது சந்தானத்தையும் கோபாலனையும் கட்டிப் போட்டுவிட்டது. முரளியும் விஷ்ணுவும்கூட அரண்டுவிட்டனர்.

அவர்கள் நினைத்த மாதிரி பணம் காசு பக்கம் போகாமல் இப்படி ஒரு வழியைக் காட்டுகிறாரே–

வித்தியாசமாக வேறு இருக்கிறதே?

இது எப்படி பிரச்சினையை தீர்க்கும்... புரிய வில்லையே?

## 7

வீடு முழுக்க அதே பேச்சாகத்தான் இருந்தது.

"நல்ல காரியத்தைத்தான் பண்ணச் சொல்லியிருக்கார். ஒரு குழந்தையை தத்து எடுத்து அதுக்கு லைஃப் கொடுக்கறது நல்ல விஷயம்தானே?"

விஷ்ணு கேட்டான்.

"அது சரி... அந்த மாதிரி ஒரு குழந்தைக்கு எங்க போறது? இல்லாத ஊருக்குன்னா அவர் வழியைக் காட்றார்..."

பரிமளம் கையைக் கசக்கினாள். சந்தானமும், கோபாலனும் மௌனமாகவே இருந்தனர்.

முரளிக்கு எரிச்சலாக வந்தது.

"கல்யாணத்துக்கு வழி கேட்டுப் போனா அவர் பாட்டும் என்னென்னவோ உளறியிருக்கார். இருக்கற பிரச்சின போறாதுன்னு இது வேறையாக்கும்?" அலறி னான். ஆனால் சந்தானம் அவன் பக்கம் திரும்பவே யில்லை.

சிந்தனையிலே இருந்தார்.

"என்னண்ணா யோசனை... என்ன பண்ணப் போறேள்?"—பரிமளம் அவரை நிமிண்டினாள்.



"ஒண்ணும் புரியல. குழப்பமா இருக்கு..."

"இதோ பாருங்கப்பா... இந்த உபாசகர் சொன்னதை எல்லாம் தூக்கி ஒரு மூலைல போடுங்கோ. உடம்பு சரி யில்லைன்னா டாக்டர்கிட்டதான் போகணும். எங்கையோ போய் யாரையோ பார்த்தா உடம்பு சரியாகாது.

நம்ம மைதிலி விஷயத்துக்கு தீர்வு போலீஸ் கம்ப்ளைண்ட்தான். சட்டப்படி அவர் நடவடிக்கை எடுக்கட்டும். டிஎன்எ. டெஸ்ட்டுன்னு ஒண்ணு இருக்கு. அது அந்த கடன்காரன்தான் அப்பாங்கறதை சொல்லிடாதா?"

விஷ்ணு தனக்குத் தெரிந்த நியாயத்தைப் பேசினான். அவனும் முரளி பக்கம் சாய்ந்துவிட்டது அதில் நன்றாகவே தெரிந்தது.

"எனக்கும் தெரியும்டா... அதால அவ புருஷன் அவன் தாங்கறது வேணும்னா தெரிய வரலாம். ஆனா அவன் அவளோட சேர்ந்து மனசு ஒத்து வாழ்வானா?

உறவு உருப்பட்டா போதுமா... அதுல அன்பும் பாசமும் இருக்க வேண்டாமா?"

"அப்படின்னா இதை ஒரு ஆக்சிடென்ட்டா நினைச்சு மறந்துடுவோம். அவ வயித்துல வளர்ற சிசுவை அபார்ஷன் பண்ணி அழிச்சுடுவோம்... வேற கல்யாணம் பண்ணி வைப்போம்."

"ரொம்ப சுலபமா சொல்லிட்டே... யார் அவளை கல்யாணம் பண்ணிப்பா?"

"சரி... கல்யாணமே வேண்டாம். அவ தப்புக்கு தண்டனையா அவ காலம் பூரா தனியாவே இருந்துட்டு போகட்டும்."

www.cleanindians.com

"நான் தப்பைத் திருத்தி அதை சுபமாக்க யோசிக்கறேன். நீ அதை அதிகமாக்கவே வழி சொல்றியே."

"சுபமாக்கறதுன்னா எப்படி?

வீட்ல இருக்கற பொண்ணுக்கே ஒரு வழி தெரியில. இதுல வெளிய இருந்து ஒரு பொண்ணு- அதுவும் கெட்டுப் போனவளுக்கு பொறந்த ஒரு பொண் குழந்தையைக் கொண்டுவந்து அதை வளர்க்கறதுன்னா கேனத்தனமா இல்லை? யாராவது கேட்டா சிரிக்கமாட்டா?"

"இப்பவும் சிரிச்சுண்டு தானேடா இருக்கா?"

"அந்த சிரிப்பு அதிகமாகும்னு சொல்றேன்."

"இல்ல விஷ்ணு. உபாசகர் சொன்னதுல அர்த்தம் இருக்கு. காலம் நமக்கு ஒரு பரிட்சை வெச்சுருக்கு. ரொம்ப கஷ்டமான பரிட்சை. அதை நம்பிக்கையோட எழுதணும். எழுதிட்டா நிச்சயம் வெற்றிதான்னு என் மனசு சொல்றது?"

www.cleanindians.com

"பைத்தியக்காரத்தனம். பரிட்சையும் இல்ல ஒரு புடலங்காயும் இல்ல."

"இதோ பார்- இப்படி எல்லாம் சுத்தாதே. நமக்கு இப்ப இருக்கற சக்தியால சண்டைதான் போட முடியும். சமாதானம் அதுல உருவாகாது. சமாதானம்கறது அருள்டா. அது பெருமாளா பார்த்து நமக்கு தரும் விஷயம்.

அதைக் கேட்டு கையேந்தறதுன்னு நான் முடிவு செய்துட்டேன்."

"அப்படின்னா- குழந்தையைத் தேடி தத்து எடுத்துக்கப் போறேனா?"

"ஆமா- நான் ஒரு நிர்கதியான குழந்தைக்கு வாழ்க்கை தந்து பெருமாள்கிட்ட மன்னிப்பு கேட்கப் போறேன். அப்புறம் அவர் தானா வழி விடுவார்."



"முட்டாள்தனம். பைத்தியக்காரத்தனம்..."

"எது? குழந்தையை தத்து எடுத்துக்கறதா?"

"அது இல்ல. அதை இப்ப செய்யறதுதான் முட்டாள்தனம்."

"நல்லது எப்ப நடந்தாலும் நல்லதுதான். அது முட்டாள்தனமாகாது. புத்திசாலியா இருந்து எதை சாதிச்சோம்? பிரச்சினைன்னா வந்து கழுத்தை சுத்திண்டு இருக்கு."

"அந்த உபாசகரை உதைக்கணும். இல்லாத ஊருக்கு வழியைக் காட்டி உங்களைக் குழப்பிட்டார்."

"அதிகம் பேசாதே. போய் வேலையைப் பார். ஹரித்வார் போக டெல்லிக்கு டிக்கெட் ரிசர்வ் பண்ணு-"

"குழந்தையை தத்து எடுத்துக்கணும்னு சொல்லிட்டு ஹரித்வார் போறேங்கறேளே...?"

"முதல்ல கங்கைல ஸ்னானம். பித்ரு பரிகாரம். அப்புறமா அடுத்த வேலையே அதுதான்."

"அதுக்குள்ற இங்க இவளுக்கு குழந்தையே பொறந்துடும்."

"பொறக்கட்டும். அதையும் வளர்ப்போம்."

"இது அந்த சண்டாளன் வாரிசு."

"என்ன பண்றது...? சண்டாளன் என் பொண்ணுக்கு புருஷனா போயிட்டானே?"

"வேண்டாம்ப்பா... போலீஸ் கம்ப்ளைண்ட் கொடுப்போம். இல்லேன்னா எனக்குத் தெரிஞ்ச ஒரு ரவுடி இருக்கான். அவனுக்கு பணம் கொடுத்தா அவன் அவனை நாலு போடு போட்டு வழிக்குக் கொண்டு வந்துடுவான்."

"வழிக்கு வருவான். மனசு ஒப்பி சந்தோஷமா வாழ்வானா... அதை யோசிச்சியா ?"

"நீங்க இப்படி கங்கைல குளிக்கறதால, குழந்தையை தத்து எடுக்கறதால மட்டும் அவன் திருந்திடுவானா...?"

"டேய்! இது பரிகாரம். நம்பிக்கையோட செய்யணும். அதேசமயம் அதுல ஆத்மார்த்தமும் இருக்கணும். உபாசகர் சொன்ன மாதிரி இருளோட வேலை இது. அருள் அதிகரிக்கும்போது தன்னால சரியாகும்."

"ஆகாதுங்கறேன்..."

"சரி, இதோட பேச்சை நிறுத்து. உன் அவ நம்பிக்கையை என்மேல திணிக்காதே. நான் என் வழியில போறேன்."

சந்தானம் தீர்மானமாக சொல்லிவிட்டு கோபாலனைப் பார்த்தார்.

www.cleanindians.com

கோபாலனிடம் ஆமோதிக்கும் விதமாக புன்னகை.

"அத்திம்பேர்! நீங்களும் இவருக்கு ஜால்ராவா?"

"எதுவும் பேசாதே விஷ்ணு. பிரயாணத்துக்கு ஏற்பாடு செய். மைதிலிங்கற துன்பமும் பாவமும் ஒருபக்கம் இருக்கட்டும்... யாத்திரைங்கற புண்யமும் குழந்தைங்கற பரோபகார பரிவும் முதல்ல உள்ள வரட்டும். என்ன நடக்கறதுன்னுதான் பாத்துடுவோமே?"

கோபாலனும் அழுத்தம் தரவும் விஷ்ணுவால் அதற்குப் பிறகு எதுவும் பேச முடியவில்லை!

## 8

டெல்லி ரயில் நிலையம்!

ஜேஜே என்று இருந்தது.

பத்து பயணிக்கு ஒரு பிச்சைக்காரர் என்று திரிந்து கொண்டிருந்தனர்.

இந்தியத் தலைநகரில் இல்லாதவர்களின் ஆக்ரமிப்பு!

வேடிக்கை பார்த்தபடி பிளாட் ஃபாரத்தில் ஏறும்போதே பாய்ந்து வந்தான் ஒரு கைட்.

முகத்தைப் பார்த்தே 'மதராஸி' என்று தெரிந்தவனாக 'ரூம் வேண்டுமா?' என்று கேட்டான்.

சந்தானத்திடம் சதர்ன் ஹோட்டலில் தங்கச் சொல்லி அனுப்பியிருந்தார் கோபாலன்.

'அது நம்ம தமிழ்நாட்டுக்காரா ஹோட்டல். இட்லி தோசை எல்லாம் கிடைக்கும். அவாளே பத்ரி, கேதார் நாத்துக்கெல்லாம் டூரும் அரேஞ்ச் பண்ணித் தருவா. வசதியா இருக்கும்' என்றிருந்தார்.

கைடிடம் சதர்ன் ஹோட்டலுக்கு வழி கேட்டபோது—

"அங்கே இடமில்லை..." என்றான் அழுத்தமாக. அப்படியே அருமையான வேறு ஒரு ஹோட்டல் இருக்கிறது என்று இழுத்துக்கொண்டு போனான். அவனிடமிருந்து தப்பிக்கவே முடியவில்லை. கூட்டமும் நெருக்கியடித்தது.

விஷ்ணுவுக்கும் மைதிலிக்கும் எரிச்சலாகக்கூட வந்தது.

மைதிலி ஒரு கற்சிலை நடந்து வருகிற மாதிரிதான் நடந்து வந்தாள்.

சுரத்தே இல்லை... மௌனம் அதிகம். உற்சாகம் துளியும் இல்லை! எப்படி இருக்கும்?

"ஊமைக்கோண்டா இருந்து தலைல நெருப்ப அள்ளிக் கொட்டிட்டியேடி" என்று சந்தானம் மட்டும் முணு முணுத்துக் கொண்டேதான் வந்தார்.

அவளும் ஒரு முடிவோடு வருகிற மாதிரிதான் இருந்தது.

கைட் அவர்களை ஸ்டேஷனுக்கு நேராக உள்ள சந்தடியான ட்ராவல் ஏஜென்சிக்காரரிடம் கூட்டிக் கொண்டு போனான்.

அவர் அவர்கள் எதிரிலேயே ஒரு ஐம்பது ரூபாயை அவன் கையில் திணித்தார்.

சந்தானத்துக்கும், விஷ்ணுவுக்கும் புரிந்துவிட்டது.

"தும் மத்ராஸி?"—அந்த ஏஜென்சிக்காரர்.

அவர்கள் தலையாடியது.

"ரூம் வேணுமா?"—அடுத்த வரியே தமிழில்.

"ஆமாம். சதர்ன் ஹோட்டலுக்குப் போகணும்."

"அங்க ரூம் ஃபுல். வேற ஒரு நல்ல ஹோட்டல் சொல்லவா?"

"தேங்க்ஸ்; நாங்களே பாத்துக்கறோம்."

"நீங்களே பாத்துக்கிறீங்கன்னா... எப்படி? புரியலை."

"நாங்க போய் கேட்டுக்கறோம். வி டோன்ட் வான்ட் புரோக்கர்."

www.cleanindians.com



"டோன்ட் ஓர்ரி... நீங்க எனக்கு ஒண்ணும் கமிஷன் தர வேண்டாம்."

"அப்ப நீங்க என்ன இலவச சேவையா செய்யறீங்க?"

"இல்ல... நாங்க லாட்ஜ்காரங்கிட்ட டோட்டலா வாங்கிடுவோம். இது ஒரு நெட் ஓர்க். எங்க ரூம் இருக்கு, இல்லைன்னு எங்களுக்குத்தான் தெரியும். நாங்க அவங்க ஏஜென்சி மாதிரி..."

"ரூம் புக்கிங் இங்க ஒரு தனித் தொழிலா ஆயிடிச்சா?"

"டெஃபனட்லி... கண்ட லாட்ஜில தங்கி தீவிரவாதி களால உங்களுக்கு பாதிப்பு வந்துடக்கூடாது இல்லையா?"

அவர் பயமுறுத்தினார். சந்தானமும் விஷ்ணுவும் கொஞ்சம் யோசித்தனர்.

யாரையும் யோசிக்க வைக்கும் அஸ்த்திரமாயிற்றே? வேறு வழியின்றி தலையசைத்தனர்.

பிறகு ஒரு ஆட்டோ வந்தது. அந்த ஏஜென்சிக்காரர் கொடுத்த ஒரு விசிட்டிங் கார்டுடன் கன்னாட் பிளேஸில் உள்ள மதன் என்னும் ஹோட்டலில் போய் தங்கினர். ரிசப்ஷனிலேயே கேட்டார்கள்:

"டெல்லி சுத்தி பாக்கணுமா... வி வில் அரேஞ். பெர் ஹெட் ஜஸ்ட் த்ரீ ஹண்ட்ரட் ருபீஸ்."

"இல்ல... நாங்க பத்ரிநாத் போகணும்."

"நோ பிராப்ளம். வி.வில் அரேஞ்!"

அறைக்குள் அடைப்பமாக இருந்தது. மைதிலி கட்டிலின் மூலையில் போய் காலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்து விட்டாள்.

சந்தானம் ஹரித்வார் கிளம்ப டிக்கெட் ரிசர்வ் செய்துவிட்டு வருவதற்காக புறப்பட்டுப் போனார்.

விஷ்ணு டி.வி.ஐ தட்டிவிட்டு அதில் கவனமானான். ஒரு கொடுமையாக அதன் மெகா சீரியலில் ஒருத்தி மைதிலி போலவே கர்ப்பமாகி அழுது கொண்டிருந்தாள்.

'தூத்தேறி..' கோபத்தோடு சீரியலை ஆஃப் செய்தான். மைதிலி தலைகுனிந்து இரு கால்களுக்கு இடையே முகத்தை மறைத்திருந்தாள்.

"மைதிலி..."—அழைத்தான்.

நிமிர்ந்தாள்.

"ஏன் உம்முன்னு இருக்கே... கலகலப்பா இரு."

அவள் தொடர்ந்து வெறித்தாள்.

"கவலப்படாதே... இந்த ஹரித்வார் கூத்தெல்லாம் முடிஞ்சுடட்டும். அப்பா குழந்தை கிழந்தைன்னு ஏதோ பினாத்திண்டு இருக்கார். கெட்டுப்போன ஒருத்தியோட நிர்கதியான குழந்தை என்ன மார்க்கட்லயா கிடைக்கறது... அதெல்லாம் நடக்கப் போறதில்லை.

நான் அந்த மனோஜைப் பார்த்து இரண்டுல ஒண்ணு பண்றேன். போட்ற போடுல அவன் உன் காலடில வந்து விழணும், விழுவான்!"

அவள் உடனே விரக்தியாக சிரித்தாள்.

"ஏன் மைதிலி... நான் சொல்றதுல உனக்கு நம்பிக்கை இல்லையா?"

"இல்ல விஷ்ணு... அதுக்கெல்லாம் உனக்கு அவசியமே இருக்காது."—அவள் ஏதோ ஒரு புதிய முடிவுடன் பேசினாள்.

www.cleanindians.com



"அப்படின்னா... புரியல எனக்கு?"

"ஒண்ணும் இல்ல... இந்த பேச்சையே இனி எடுக்காதே விட்று."

"பைத்தியம். நான் விடலாம். உன் வயிறு வளராம இருக்குமா? அது விடாதே..."

அவள் கண்களில் உடனே கண்ணீர் துளிர்த்தது.

"இப்ப அழுது என்ன பிரயோஜனம்? அல்ப சுகத்துக்கு மயங்கிட்டியே..."

அவன் எரிச்சலோடு வார்த்தைகளால் குத்தவும் செய்தான்.

"நான் மயங்கல. நீ கொஞ்சம் சும்மா இரு. நடந்தது என்னன்னு உனக்குத் தெரியாது."—அவளிடம் விசும்பல்.

"என்னன்னுதான் இப்ப இங்க சொல்லேன். தெரிஞ்சுக் கறேன்."

"வேண்டாம் விடு. எதுவும் கேக்காதே..."

"இப்படி மூடி மறைக்காதே. அதான் எல்லாம் வெட்ட வெளிச்சமாயிடிச்சே?"

"நான் கருத்தரிச்சுருக்கறதுதான் உனக்குத் தெரியும். ஆனா அது ஒண்ணும் மோகத்துல நடந்துடலை..."

"மோகத்துல நடக்கலைன்னா... கற்பழிப்பா?"

"அதுவும் இல்லை..."

"நீ புரியறமாதிரி பேசமாட்டியா?"

"எங்க இரண்டுபேர் வரையிலும் இது ஒரு விபத்து..."

"விபத்தா?"

"ஆமாம். மனோஜ் ரொம்ப நல்லவர். எங்க இரண்டுபேரோட காலேஜ் ஃப்ரெண்ட் கைலாசம்கறவன்

ஸ்டேட்ஸ்ல வேலை கிடைச்சு போனான். போறதுக்கு முந்தி ஒரு பார்ட்டி வெச்சான். அதுல முத்தரசுங்கறவன் அவனோட லவ்வரை கவுக்கறதுக்காக பெப்ஸில மயக்க மாத்திரையை கலந்துட்டான்.

எங்க தலையெழுத்து அந்த பாட்டில் மாறிவந்து அந்த பெப்ஸியை நானும் மனோஜும் குடிக்கும்படியாயிடுத்து. முழுசா குடிச்சிருந்தா மயங்கி விழுந்திருப்போம். பாதி பாதி குடிச்சதால அரை மயக்க நிலை. அது எங்க இரண்டு பேரையுமே கவுத்துடுத்து.

இருந்தும் மனோஜ் அதுக்கு பொறுப்பெடுத்துண்டு ஊத்துக்கோட்டை பக்கத்துல இருக்கற நாகலாபுரம் வேதநாராயணப் பெருமாள் கோவில்ல வெச்சு என் கழுத்துல தாலியைக் கட்டினார்!"

"அப்படிப்பட்டவன் இப்ப ஏன் உன்னை தன் பொண்டாட்டி இல்லேங்கறான்?"

"அவரோட அப்பா தூக்குல தொங்கிடுவேன்னு மிரட்டினா அவரால என்ன பண்ண முடியும்?"

"கைவிட்டா நீ தூக்குல தொங்குவே... நம்ம அப்பா தூக்குல தொங்கிடுவார்ங்கற பயமெல்லாம் அவனுக்கு இல்லையா?"

"இருக்கு... ஆனா அதுக்கு சக்தி இல்லை. நாமளும் அப்படி நடந்துக்கலையே."

"அப்ப செத்துப் போயிருக்கணும்னு சொல்லாம சொல்றியா?"

"நீங்க யாரும் சாக வேண்டாம். தப்பு என்மேல. நான் பாத்துக்கறேன்..."

"பாத்துக்கறேன்னா... தூக்குல தொங்கிடுவேன்றியா?"

www.oceanindians.com



"இன்னமும் தொங்காம இருக்கறதுக்காக வருத்தமும் பட்றேன்."

"முண்டம்... இதுக்காகவா கங்கை ஹரித்வார்னு வந்திருக்கோம்?"

"எதுல குளிச்சாலும் என் பாவம் போகாது. பரம பவித்ரமா ஒரு முதலிரவுல நல்ல முகூர்த்தத்துல நடக்க வேண்டிய ஒரு தாம்பத்திய உறவு ஒரு பாட்டில் பெப்ஸியால தடம் மாறிடுத்து. என் ஜாதகம் அப்படி..."

"வருத்தப்படாதே... இதை எல்லாம் நீ முன்னாலேயே சொல்லியிருக்கலாம். அந்த மனோஜ் அப்பன் கால்ல விழுந்து கெஞ்சியிருப்பேன்."

"உங்களை அந்த கர்வம் பிடிச்சவர் கால்ல விழ வைக்க எனக்கு இஷ்டமில்லை."

"பைத்தியம்... பைத்தியம். ஆமா அந்த மனுஷனுக்கு அப்படி என்ன ஒரு வைராக்கியம். நாம எதுல குறைஞ்சு போயிட்டோம்?"

"நம்மாத்துக்கு வாழ வந்த ஒரு பொண்ணை வாழ விடாம பண்ணி தற்கொலைக்குத் தூண்டினோமே அந்த கோபம்."

"அந்த விஷயம் அவருக்கும் தெரியுமா?"

"உனக்கும் எனக்கும்தான் தெரியாது. அவர் வக்கீல். அவருக்கு எல்லாம் தெரிஞ்சிருக்கு. காலம் என் கோர்ட்டுக்கு உன்னை அனுப்பியிருக்கு. தண்டிக்காம விடமாட்டேன்னுட்டார் அவர்."

"பெரியவர் தப்புக்கு நீயா கிடைச்சே?"

"நானான்னா...? பரம்பரை தொடர்பு வேணும். பூர்வீக சொத்தும் வேணும். ஆனா அவா பாவத்துல மட்டும் பங்கு கிடையாதோ?"

மைதிலி தீர்க்கமாகச் சொன்னாள். முதல் முறையாக விஷ்ணுவின் மனதில் உபாசகர் சொன்ன உண்மை ஒருமுறை எதிரொலித்தது.

'எத்தனை கச்சிதமாக இது தற்கொலை செய்து கொண்ட ஒரு ஆத்மாவால் வந்தது' என்று கூறிவிட்டார்.

அப்படியே ஒரு ஓரமாகப் போய் உட்கார்ந்தான்.

"என்னண்ணா... ஏன் பேசமாட்டேங்கறே?"

"என்னத்த பேசறது. உபாசகர் உளர்றார்னு நினைச்சேன். இப்பன்னா தெரியறது உண்மை."

"இன்னும் பல உண்மைகள் உனக்கு போகப் போகத் தெரியும் பாரு."

"என்ன மைதிலி புதிர் போட்றே?"

அவன் கேள்விக்கு அவள் பதில் சொல்லவில்லை. மனக் கண்ணில் கங்கையில் மூழ்குவதை மட்டும் ஒருமுறை நினைத்துப் பார்த்தாள்.

'பெருமாளே... நான் அப்படியே போயிடணும். போறும் இந்த வாழ்க்கை... போறும் இந்த அவமானம்!'

மனத் தட்டுக்குக் கீழே ரகசியமாகப் புலம்பினாள். அது அவனுக்குப் புரியவில்லை.

அதேசமயம் கதவு திறக்கப்படும் சப்தம். சந்தானம் உள்ளே நுழைந்துகொண்டிருந்தார்.

"டிக்கெட் ரிசர்வ் பண்ணிட்டேன். டயமில்ல. குளிச்சுட்டு உடனே கிளம்ப வேண்டியதுதான்" என்றார்.

"அப்பா..."—விஷ்ணு அவள் சொன்னதை எல்லாம் சொல்வதற்காக அவரை ஏறிட்டான்.

www.cleanindians.com



"என்னப்பா...?"

"என்னென்னமோ நடந்துருக்குப்பா. அந்த உபாசகர் சொன்னதெல்லாம்..."

"என்னடா இது திடீர்னு... அது இப்பதான் உனக்கு தெரிஞ்சுதா?"

"வேண்டாம்ணா... எதுவும் சொல்லாதே. நானே அப்றமா சொல்லிக்கிறேன்."

"இல்ல... நான் இப்பவே சொன்னாத்தான் என் மனசு ஆறும்."

"அய்யோ அண்ணா... கிளம்பற வழியைப் பாரு. போகும்போது ரயில்லகூட பேசிக்கலாம்."

"என்னம்மா என்ன விஷயம்?"

"போகும்போது சொல்றேன்பா. நீங்க கிளம்புங்கோ. அண்ணா நீ போய் முதல்ல குளியேன்..."

பேச்சோடு அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டாள். சந்தானம் மகளைக் குழப்பத்தோடு பார்த்தார்.

## 9

விஷ்ணுவுக்கு மிகப் பிடித்த கோயமுத்தூர்.

கோபாலன் வீட்டில் தொலைபேசி மணியடித்தது. முரளிதான் எடுத்தான்.

"முரளி நான் விஷ்ணு பேசறேன்—டெல்லியில இருந்து..."

"நல்லபடியா போய்ச் சேர்ந்தீங்களா?"

"அதெல்லாம் ஒரு பிராப்ளமும் இல்லை. இங்க டெல்லிக்கு வந்தபிறகுதான் மைதிலி ஒரு உண்மையைச் சொன்னா. எனக்கு பயங்கர ஷாக். அவ சொன்னதைக் கேட்டா நம்ம உபாசகர் சொன்னதெல்லாம் உண்மைங்கற மாதிரி ஆயிடித்து."

விஷ்ணு போனிலேயே சுருக்கமாக அவள் சொன்னதை சொல்லி முடித்தான்.

"ஆச்சரியமா இருக்கே. இதை ஏன் அவ இங்க சொல்லாம அங்க சொல்றா?"

"அவ எங்க சொன்னா என்ன...? நானா சொல்ல வெச்சேன். ஏதோ ஒருவிதத்துல அந்த தற்கொலை விஷயம்தான் இவளுக்கு பிரச்சினையா வந்துருக்கு. ஆச்சரிமாயில்ல...?"

"சரி இப்ப அதைச் சொல்லத்தான் போன் பண்ணியா?"

"அதுக்கு மட்டும் இல்ல... எனக்கென்னவோ அந்த உபாசகர்கிட்ட ஏதோ சரக்கு இருக்குற மாதிரி தோண்றது. இங்க மைதிலியும் மர்மமா ஏதோ முடிவுல இருக்கா. ஆகையால நீ அவரைப் பார்த்து நான் சொன்னதைச் சொல்லி அடுத்து நடக்கற எல்லாம் நல்லபடியா நடக்கணும்னு வேண்டிக்கோயேன்."

"நீயா இப்படிப் பேசறே...? அவர் பண்றதெல்லாம் ட்ரிக்குன்னே..."

"இப்பவும் ஒரு மூலையிலே அந்த சந்தேகம் இருக்கு. அதேசமயம் மைதிலியை நினைச்சா பயமா இருக்கு. கொஞ்சம் அவர் என்னதான் சொல்றார்னு பார்ப்போமே..."

"இன்னும் உன் மனசு முழுசா மாறலைன்னு சொல்லு..."



"எப்படி மாறும்... அவர் சொல்ற ஆத்மாவைப் பார்க்காதவரை நான் நம்பமாட்டேன். அதேசமயம் அவர்கிட்டேயும் சரக்கு இருக்கு. அது நமக்கு உதவணும். நாம அவரைப் பயன்படுத்திக்கணும். அதானே புத்திசாலித் தனம்."

"இதைத்தான் நம்பாம நம்பறதுங்கறது! ஓ.கே... நீ அவளை கவனமா பார்த்துக்கோ. அவ பேசினத வெச்சுப் பார்த்தா அவ மனசுல தற்கொலை எண்ணம் இருக்கற மாதிரி தெரியறது. அவகிட்ட சொல்லு... நான் இப்பவும் தயாராதான் இருக்கேன். அந்தக் குழந்தையோட அவளை ஏத்துக்கறேன். இந்தக் குழந்தையும் உபாசகர் சொன்ன மாதிரி ஒரு நிர்க்கதியா நிக்கற கெட்டுப் போயிட்ட ஒருத்தியோட குழந்தைதானே...

எதுக்காக வெளிய எங்கியோ தேடிண்டு போகணும்?"

"முரளி ஈ ஈ..."

"பதட்டப்படாதே... மைதிலி மனசுல அந்த மனோஜ் இருக்கான். இது காதலால் வந்த வினைன்னு நினைச்சிண்டிருந்தேன். ஆனா அது அப்படி இல்லைன்னு தெரிஞ்சிடுத்து.

அவ என் மாமா பொண்ணு. நல்ல பொண்ணும்கூட. இந்தமாதிரி இக்கட்டுல கை கொடுக்காத சொந்தம் என்ன சொந்தம்?"

"முரளி... ரொம்ப தேங்க்ஸ்டா. நாங்க இன்னும் கங்கைல முழுக்குகூட போடலை. ஆனா அதுக்குள்ற ஒரு விமோசனத்துக்கு நீ வழியைக் காமிச்சுட்டே."

"புகழ்ச்சி அப்புறம். நீ மைதிலியை கவனமா பார்த்து கூட்டிண்டு வா. நான் சொன்னதை இப்ப சொல்லாதே. இங்க வந்தபிறகு நானே அவகிட்ட பேசறேன்.

அந்த வக்கீல் நம்மைப் பழி வாங்கிட்டதாவே இருக்கட்டும். என்ன?"

"தேங்க்ஸ்டா... ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்டா."

"வழியாம போனை வை."

முரளி போனை வைத்துவிட்டுத் திரும்பினான். பரிமளம் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தாள்.

"அம்மா..."

"எல்லாத்தையும் கேட்டுண்டுதான் இருந்தேன்."

"உனக்கு ஆட்சேபணையில்லையே?"

"இப்பதாண்டா உன்னைப் பெத்தது நினைச்சு பூரிச்சு போறேன். இந்தக் குடும்பத்துலதான் ஒரு பொண்ணு அநியாயமா தற்கொலை பண்ணிண்டா. இதே குடும்பத்துலதான் ஒரு தற்கொலை பண்ணிக்கப் போற பொண்ணும் நல்லபடி வாழப் போறா. உன் முடிவு ரொம்பச் சரிடா கண்ணா."

"அப்பா...?"

"அவருக்கென்னடா. தங்கம். இதுக்கெல்லாம் மறுப்பே சொல்லமாட்டார். அவர் ரத்தம் உனக்கு. அதான் காசு, பணம், அழகு, அந்தஸ்துள்ள பொண்ணுதான் வேணும்னு அலை மோதாம கெட்டுப் போயிட்டாலும் மைதிலிய ஏத்துக்கறே."

"கெட்டுப் போயிட்டான்னுல்லாம் சொல்லாதம்மா. பாலா தயிரா கெட்டுப் போறதுக்கு...? உடலுறவுங்கறது ஒரு அனுபவம். அவ்வளவுதான்!"

"அது சரி... இதைக் கேட்டா விபச்சாரிகள்ளாம் அப்புறம் நீங்கதான் எங்க தலைவர்னு கொண்டாட ஆரம்பிச்சுடப் போறா..."

www.cleanindians.com



"பேஷா சரின்னு சொல்வேன். செக்ஸ் ஒண்ணும் பாவமில்லம்மா. அது ஒரு ப்ளசன்ட் எக்ஸ்பீரியன்ஸ்."

"டேய்... நான் உன் அம்மாடா. என்கிட்ட போய் அந்த கண்றாவியைப் பத்தி எல்லாம் பேசிண்டு. இருந்தாலும் ஒண்ணு சொல்றேன்...

அந்த ப்ளசண்ட் எக்ஸ்பீரியன்ஸ்லதான் உயிர்கள் உருவாகறது. அது உயிர்களையும் உறவுகளையும் உருவாக்கி அளிக்கற ஒரு உன்னதமான விஷயம். அதுல ஒரு உயிருக்கு அப்பன் யாருன்னே தெரியாத ஒரு கொடுமை ஏற்பட்டுடக் கூடாதுன்னுதான் வரைமுறைகளை உருவாக்கி கற்புன்னு ஒண்ணையும் சொல்லியிருக்கா.

அந்த கற்புல ஆணைவிட பொண்ணுக்கு பங்கு அதிகம். அது ஏன் அப்படி? இரண்டு பேருக்கும் சமம் தானேன்னு நீ உடனே சமத்துவம் பேசலாம். பொம்பள தான் கருவை வயித்துல சுமக்கறவ. ஆம்பளை அப்படிக் கிடையாது. இப்ப மைதிலி விஷயத்துலயே பார். அவன் பொறுப்பவிட இவ பொறுப்பு அதிகம். அவன் என்னுது இல்லைன்னு கை கழுவிட்டான். இவளால முடிஞ்சதா?

அவன் வரைல ஒருநாள் நடந்த ஒரு அஞ்சு நிமிஷ சுகமான விஷயம்தான் இது. ஆனா இவ வரையில அது பத்து மாச கர்பமா விரிஞ்சு அதுக்குப் பிறகும் பிள்ளைங் கற ஒரு உறவோட அம்மா அம்மான்னு அது கூட வரப் போறது.

ஒருநாள் அப்பா யார்னு கேட்கும்போது தெரியாதுன்னு இவ சொன்னா அந்தக் குழந்தை மனசு என்ன பாடுபடும்னு யோசிச்சுப் பார்.

யாருக்கு பொறுப்பு அதிகம்?"

பரிமளம் ஒரு பிடி பிடித்தாள். முரளி ஸ்தம்பிப்பில் இருந்தான்.

"இப்ப சொல்லு... இது ப்ளசன்ட் எக்ஸ்பீரியன்சா டேஞ்சரஸ் எக்ஸ்பீரியன்ஸா?"

"படு டேஞ்சரான எக்ஸ்பீரியன்ஸ் தாம்மா..."

"யாருக்கு இதுல பொறுப்பு அதிகம்?"

"பெண்களுக்கு தான்..."

"யார் இதுல ஒசத்தி...?"

"பெண்கள்தான்..."

"உயர்வாகவும், உயரத்துலேயும் இருக்கற எங்களுக்கே நாங்க அங்க இருக்கறது எங்கள்ளையே பலருக்கு தெரியல. ஆணுக்கு சமமா எங்களுக்கும் எல்லாம் வேணும்னு அவனோட போட்டி போட கீழ இறங்கறோம்... வேடிக்கையா இல்ல?"

"அம்மா... நீ பேசினது ஒரு கட்டுரைம்மா... அதுக்கு லட்ச ரூபா முதல் பரிசு தரலாம்..."

"ஐஸ் வைக்காம குளிச்சுட்டு கிளம்பு. போய் உபாசகரைப் பார்த்துட்டு வருவோம்."

"இந்த தடவை அவர் என்னப் பார்த்தா அடிச்சாலும் அடிச்சிடுவார். ஆமா எப்படிம்மா அவர் இப்படி எல்லாத்தையும் முன்னாலையே சொல்றார்."

"உபாசகர் இல்லையா?"

"உபாசகர் இல்லையான்னா...? எப்படி?"

"உபாசனைன்னா என்ன?"

"யாருக்குத் தெரியும். நீயே சொல்லு."



"சதா ஒரு குறிப்பிட்ட தெய்வத்தையே துதிச்சு மனசு முழுக்க அந்த தெய்வத்தையே நிரப்பிக்கறதுக்குப் பேர்தான் உபாசனை!"

"அப்படி மனசு முழுக்க தெய்வம் நிரம்பிட்டா யாருக்கு என்ன நடக்கும்னு சொல்லிட முடியுமா?"

"இதுக்கு பதிலை அவர்தான் சொல்லணும்."

"உனக்குத் தெரியாதா?"

"தெரியும். ஆனா என்னால உனக்கு புரியற மாதிரி விளக்க முடியாது."

"பரவால்ல... கற்புக்கு நீ கொடுத்த விளக்கத்தை விடவா? சும்மா சொல்லு. புரிஞ்சுக்க முயற்சி செய்யறேன்."

"இதோ பார் முரளி. எல்லா விஷயத்தையும் புரிஞ்சுண்ட பிறகுதான் நம்பறதுன்னு வெச்சுக்காதே. அது ரொம்ப மட்டமான புத்தி.

கார் ஓட்டணும்னு ஆசைப்பட்டா நம்பிக்கையோட இறங்கி ஓட்டக் கத்துக்கற மாதிரிதான் இது. அது எப்படி ஓட்ட ஓட்ட ஒட்டிக்கிறதோ அதுமாதிரி பக்தி சார்ந்த விஷயங்கள்ளாம் அதுல மூழ்க மூழ்க தானா அர்த்தமாகும். அப்படி அர்த்தமானாதான் நிலைக்கும். போ... போய் குளிச்சுட்டு வா."

பரிமளம் அவனைத் துரத்தினாள். முரளி பிரமிப் போடு பார்த்தான்.

'நாலு சுவத்துக்குள் அடைபட்டிருப்பவள். கெமிஸ்ட்ரி, சயின்ஸ், அல்ஜிப்ரா, சைக்காலஜி என்று எதையும் படிக்காதவள்... எப்படி இப்படிப் பேசுகிறாள்?'

பிரமிப்பு அவன் முகத்தில் பொங்கி வழிந்தது. அவனுக்குத் தெரியாது—வாழ்க்கை கல்லூரிகளுக்கெல்லாம் பெரிய கல்லூரி என்பது!

www.cleanindians.com

## 10

ஹரித்வார்!

கங்கை பொங்கிப் பெருகிக் கொண்டிருந்தாள்.

வெளிர் நீல நிறத்தில் உடம்பை உறைய வைக்கும் குளிரோடு எந்த உஷ்ணத்தையும் க்ஷணத்தில் தணித்து தன் வயப்படுத்திவிடும் ஆற்றலுடன் ஓடிக் கொண்டிருந்தாள்.

பார்க்கவே பரவசமாக இருந்தது.

குளிர் அவளுக்கு ஒரு பாதுகாப்புக் கவசமாக இருக்க வேண்டும்.

இல்லாவிட்டால் அவளுக்கிருக்கும் அழகுக்கும் தூய்மைக்கும் ஆற்றில் ஒருவர் இறங்கினால் அத்தனை சுலபத்தில் மேலேற மாட்டார்.

இறங்குபவர் தூய்மையாவார். ஆனால் அவளோ அழுக்காவாள்... இங்கே பலர் இறங்கவே தயங்கிக் கொண்டிருந்தனர்.

தடதட திபுதிபுவென்று மேட்டிலும் அவள் ஓடி வருவதிலும் ஒருவித குதிரைத்தனம் இருந்தும் சில சாதுக்கள் மட்டும் அவள் குளிரால் எங்களை எதுவும் செய்துவிட முடியாது என்கிற மாதிரி கரையோர படித்துறைகளில் அங்கங்கே இடுப்பளவு நீரில் நின்று கொண்டிருந்தனர்.

உலகின் ராஜ நதி!

பரமனின் சடையில் இருந்து துள்ளிவரும் அவனது சிரதீர்த்தம். முதன்முதலாக அந்த தீர்த்த நதியை

www.cleanindians.com



கரைவெளி ஒன்றின் முன்னால் நின்று பார்த்த விஷ்ணுவுக்கு பரவசமாக இருந்தது.

மைதிலியும் உடன் இருந்தாள்.

கங்கையில் செத்துப் போவது என்பது இந்துக்களுக்கு மோசமான விஷயம் இல்லை. மோட்சமான விஷயம். அது தனக்கு வாய்க்கப் போவதாக ஒருமுறை தனக்குள் நினைத்துக் கொண்டாள். வாழும்போதுதான் பாவியாகி விட்டேன். சாகும்போதாவது ஒரு நல்ல மார்கம் கிடைக்கிறதே என்கிற சமாதானமும் அவளிடத்தில் தெரிந்தது.

அவள் போல கங்கையை ஒரு பாவம் தீர்க்கும் நதியாக விஷ்ணு நினைக்கவில்லை. தண்ணீரில் என்ன பாரபட்சம்?

'ஸ்ரீரங்கத்து காவிரியும் நதிதான்!

அமெரிக்காவின் மிஸிஸிபியும் நதிதான்!

மனிதர்கள்தான் தங்களுக்குள் ஏழை பணக்காரன் என்று இனம் பிரித்துக் கொள்கிறார்கள் என்றால் நதியிலுமா அது தொடர வேண்டும்? கங்கை மட்டும் உயர்ந்தது—வைகை எல்லாம் செகண்ட் கிரேடுதான் என்பது எந்த வகையில் சரி...?'

விஷ்ணு கங்கையைப் பார்த்தபடி அந்தக் கேள்வியிலும் இருந்தான். சாது ஒருவர் கோமணத்துடன் வந்தபடி இருந்தார்.

அவனருகே வந்தவர் நின்றார்.

"இந்த ஆறுமட்டும் எந்த விதத்துல ஒசத்தி? எல்லா தண்ணியும் தண்ணிதானே... தண்ணில கூடவா வேறுபாடுன்னு நினைக்கற போல தெரியுதே?" என்று அவனுக்குள் இருந்த கேள்வியை நல்ல தமிழில் அவன் எதிரில் திருப்பிக் கேட்டார்.

திக்குமுக்காடல் விஷ்ணுவிடம். மைதிலியும் அதிர்ந்தாள்.

சந்தானம் சற்றுத் தள்ளி படித்துறை ஒன்றில் அமர்ந்து கொண்டு தர்ப்பண காரியங்களில் ஈடுபட்டிருந்தார்.

"என்னப்பா... என் கேள்வி சரிதானே?"

அந்த கோவணாண்டி விடுவதாக இல்லை. குடைந்தார்.

"அ... ஆமாம்... அது சரி எப்படி நான் நினைக்கறத அப்படியே சொல்லிட்டீங்க?"

"இந்த ஹரித்வார் பக்கமாக வந்து மனசை அடக்கி யோகம் பண்ணினா நீயும்தான் சொல்வே...?"

"அப்படியா?"

"என்ன அப்படியா...? விஞ்ஞானமோ, கணக்கோ பள்ளிக்கூடம் போய் படிச்சாதானே பிடிபடும்?"

அவன் தலை ஆடியது.

"அதை ஒத்துக்கற நீ... என் மாதிரி யாராவது பேசினா மட்டும் சந்தேகப்பட்டு 'ட்ரிக்'குன்னா என்ன அர்த்தம்?"

விஷ்ணுவுக்கு விதிர்த்தது. உபாசகர் அவன் உள்ளத்தை படம்பிடித்து சொன்னபோது உதிர்ந்த வார்த்தையல்லவா அது?

"நீங்க என்ன சொல்றீங்க?"

"யோகக் கல்வி பத்தி தெரியாம, குறிப்பா உடம்பு, மனசு பத்தி எல்லாம் தெரியாம என்மாதிரி மனுஷங்க கிட்ட கேள்வி கேட்காதே. மீறி கேட்கறதா இருந்தா நம்பிக்கையோட கேள். உன் விஞ்ஞானம் ஒண்ணும் பெரிய புடலங்கா இல்லை.

www.cleanindians.com



இந்த பூமியில இல்லாத எந்த ஒரு பொருளையோ இல்ல இருக்கற விஷயங்களோட வடிவத்தையோகூட நீங்க யாரும் உருவாக்கிடலை. செல்ஃபோனோ, அணுகுண்டோ எல்லாம் பூமியில அங்கையும் இங்கையுமா கிடைக்கற ஒண்ணுதான்...

மின்சாரமும் ஒண்ணும் பெரிய கண்டுபிடிப்பு கிடையாது. காலகாலமா ஆகாயத்துல மேகங்களுக்கு நடுவுல அது இருந்துகிட்டுதான் இருக்கு. உலகத்துலையே பெரிய ட்யூப் லைட் வானத்துலதான் இருக்கு. அதோட பேர்தான் மின்னல்!"

அந்த சாது புரட்டினார். விஷ்ணுவுக்கு தலையில் குட்டு விழுந்த மாதிரி இருந்தது. மைதிலிக்கும் உற்சாகமாகிவிட்டது. அவளுக்கு 'எனக்கு மோட்சம் தரும் கங்கையை பற்றி ஒன்றும் தெரியாது. உலகமே சொல்கிறது, கங்கை ஒரு புனித நதி என்று... அது எப்படி? எதனால்' என்று கேட்டு வைப்போமா? என்று நினைத்த மாத்திரத்தில் அவள் கேட்காமலே பதிலைச் சொல்லத் தொடங்கினார் அந்த கோவணாண்டி மனிதர்.

"எல்லா நதியும் நதிதான். ஆனா கங்கையோட சிறப்புக்கு மட்டும் பல விசேஷ காரணங்கள் இருக்கு.

மற்ற நதிநீர் எல்லாம் மண்ணுல விழுந்தும் மலையில விழுந்தும் தாவரங்கள் மேல பட்டும் ஓடிவரும். ஆனா கங்கை மட்டும் பனிமேல மட்டும் விழுந்து அது உருகி ஓடிவர்ற ஒரு விஷயம்.

பனிங்கறது நெருப்பைவிட சூடான ஒண்ணு. நெருப்பு ஒரு முந்திரிக் கொட்டை. அதுல விழற ஒண்ணு சாம்பலாயிடும். ஆனா பனி அப்படி இல்லை. சிரஞ்சீவியா அப்படியே வெச்சிருக்கும். இப்பவும் எத்தனை லட்சம் சன்யாசிகளோட உடம்பு இந்தப் பனிமலைல

சமாதியாயிருக்கு தெரியுமா? லட்சம் வருஷமானாலும் கெட்டுப் போகாத உடல்கள் நூறு நூறு இந்த இமயமலைல புதைஞ்சுருக்கு. அந்த யோகிகள் உடம்பை எல்லாம் தழுவி வர்ற தண்ணீர் இது!

நம்ம ஊர் மழை மேகத்தைவிட உயரமான இடத்துல உருவாகி வர்ற தண்ணியும்கூட... சரி... இதெல்லாம் எப்படி ஓசத்தியாகும்னு கேக்கறியா?"

அவரே கேள்வியும் கேட்டார்.

"இல்ல... நீங்க நிறுத்தாம சொல்லுங்கோ. கங்கை பத்தி எங்களுக்கு எதுவுமே தெரியாது." மைதிலி பரவசத்தோடு சொன்னாள்.

"தெரிஞ்சுக்கணும்னுதானே சொல்றேன். ஜலத்துக்கு மட்டும்தான் கோள்களோட கதிர்களையும், திருஷ்டி, சூதகம், ஆசை, பாசம்கற உணர்ச்சி வைப்ரேஷன்களையும் அறுத்துவிட்ற சக்தி இருக்கு.

இந்த மனித உடம்புக்கும் அந்த வானத்துக்கும் நூல் கட்டினமாதிரி ஒரு தொடர்பு இருக்கு. அது காற்று மாதிரி, கண்ணால பார்க்க முடியாது. தண்ணியில மூழ்கி எழும்போது மட்டும் அது அறுந்து, பின்பு நம்மை தொத்திக் கிட்டு அது தொடரும்.

அந்த தொடர்பில்லாம ஒரு உயிரும் இந்த பூமியில இல்ல. அதை ஒரு போனுக்கும் இன்னொரு போனுக்கும் உள்ள தொடர்பு மாதிரின்னும் சொல்லலாம். போன் தொடர்பு மூலமா தாத்தா பாட்டி தெரிஞ்சவங்க தெரியாதவங்கன்னு எல்லாரும் பேசற மாதிரிதான் இந்தத் தொடர்பு மூலமா நவகிரகங்கள் நம்மை ஆட்டி வைக்கறாங்க.

இந்த கங்கைல நாம தலை முழுக்கு போடும்போது அந்த தொடர்பு அறுந்து நாம ஜலப் பிராணன்

www.cleanindians.com



ஆயிட்றோம். அதாவது பஞ்ச பூதத்துல ஒண்ணான நீராக மாறிட்றோம். தண்ணீரை இந்த கிரகதி தொடர்பு, நம்முடைய வினைத் தொடர்பு, திருஷ்டிங்கற பார்வைத் தாக்கம், தீட்டுத் தாக்கம் எல்லாம் எதுவும் செய்ய முடியாது. அதாவது நீராடும்போது நாம் அவற்றின் பிடியில் இருந்து விடுபட்றோம். அப்படி விடுபட்ற அந்த நொடிகள்ள நம்ம சரீரத்துல சேமிப்பாயிருக்கற கதிர்களும் ஜலத்துல கரைஞ்சு வெளியேறிடுது.

கரை ஏறும்போது நாம புதிய சரீரம் உடையவர்களா இருக்கோம். திரும்பவும் அந்த பிரபஞ்சத் தொடர்பு ஏற்பட்டு இயங்கறோம்.

அதனாலதான் கோவிலுக்கு போறதும், தீர்த்தமாடுதலும் மிகமிகப் பெரிய உன்னதமான விஷயமா சொல்லப் பட்டுது. யாராவது செத்துட்டதா தகவல் வந்தாலே தலைக்கு குளிக்கறோமே... ஏன்? அந்த சூதகச் செய்தி நம்ம காதுல உடம்புல தங்கி துக்கத்துல நம்மை புதைச்சுடக் கூடாதுன்னுதான். தலை முழுக்குங்கறது சாதாரண விஷயமில்ல. அப்படித் தலை முழுகும்போது மந்திரங்கள் சொல்லி இறைவனைத் தொடர்பு கொண்டு நம்ம சரீரத்தையே இறைவனா மாத்திக்கறது அதைவிட பெரிய விஷயம். அப்படியே சூரிய நமஸ்காரம், சந்தியா வந்தனம் பண்றதெல்லாம் சேரும்போது பல மடங்கு பலன் அதிகரிக்குது.

குளிச்ச கையோட இதை உடனே செய்தா ரொம்ப நல்லதுன்னுதான் நதிக்கரைகள்ள கோவில்கள் முளைச்சுது.

கடவுள் இருக்கா இல்லையாங்கற கேள்விக்கு என்னோட ஒரே பதில் நீ இருக்கேல்ல... அப்ப கடவுளும் இருக்கார். நாற்காலியைப் படைச்சது தச்சன், கட்டடத்தைப் படைச்சது கொத்தன்னா மனுஷனைப் படைக்க ஒருத்தன் இருந்துதானே தீரணும்?"

அந்த கோவணச் சித்தர் மடை திறந்த வெள்ளமாகி விட்டார். சிலிர்த்துப்போன மைதிலி பொதேரென்று அவர் காலில் விழுந்தாள். ஆனால் அப்படி எல்லாம் செய்வது மிக அதிகப்படியாகத் தோன்றியது விஷ்ணுவுக்கு. இருந்தும் அவர் கருத்துக்களில் நிச்சயம் பட்டவர்த்தனமான பல உண்மைகள் இருப்பதைத் தெரிந்துகொண்டான்.

அவர் அவளுக்கு ஆசி அளிப்பதுமாதிரி கைகளை உயர்த்தினார்.

தர்ப்பணாதிகள் முடிந்து சந்தானமும் கரை ஏறிவந்து நின்றார்.

"உங்க பொண்ணா?"—அவரிடம் கேள்வி.

"ஆமாம்... நீங்க?"

"என் பேர் நரசிம்மன். ஊர் சோழங்கிபுரம். குடும்ப வாழ்க்கை பிடிக்கலை. பெரிய கோபக்காரன். அதான் மனசை அடக்க இந்தப் பக்கமா வந்துட்டேன்."—கேட்காமலே பல விஷயங்கள் வெளியில் வந்து விழுந்தன. அதில் மறைவாகப் பல அர்த்தங்கள்!

"உங்களைச் சந்திச்சதுல ரொம்ப சந்தோஷம். இங்க எங்க தங்கியிருக்கீங்க?"

"ஆஸ்ரமங்களுக்கா இங்க பஞ்சம்? அதுல ஒண்ணுல இருக்கேன்."

"ரொம்ப சந்தோஷம்..."

"நீங்களும் என் ஆஸ்ரமத்துக்கு வந்து சாப்பிட்டுட்டு போலாமே?"

"பேஷா... அதுக்கு கொடுத்துன்னா வெச்சிருக்கணும்."

"கங்கா ஸ்நானம் இப்பதான் நடந்ததா?"



"ஆமாம். நான் பாக்யசாலி. ஒரு தப்புனால எனக்கு இந்த பாக்யம் கிடைச்சது. என் பித்ருக்களுக்கும் இந்த கங்கைலையே தர்ப்பணம் பண்ணி முடிச்சுட்டேன்."

"கவலையே வேண்டாம்... நிச்சயமா அவங்க தாகம் அடங்கி உஷ்ணமும் குறைஞ்சிருக்கும். அந்தத் தொடர்புல ஓட்ற உயிர்க் கண்ணிகள்தானே நீங்களும். ஊர் பூரா விளக்கெரிஞ்சாலும் உங்க வீட்டுக்குன்னு உள்ள கம்பத்துல ஃப்யூஸ் சரியா இருந்தாதானே வீட்டுக்குள்ள இருள் இல்லாம இருக்கும்."

பொட்டில் அடித்து கழுத்தில் மின்னியது அவரது பதில்.

சந்தானத்துக்குள் ஒரு புத்துணர்ச்சி பாய்ந்த மாதிரி இருந்தது.

"ரொம்ப மனக் கஷ்டத்தோட வந்தேன்... உங்க பேச்சு பெரிய மருந்தா இருக்கு... என் பொண்ணையும் ஆசிர்வாதம் பண்ணுங்க. அது கஷ்டமும் நீங்கணும்."

"கர்ப்பிணியாம்மா நீ?"

அடுத்து அவர் கேட்டது அவர்களை ஒரு உலுக்கு உலுக்கியது.

"எப்படித் தெரியும்னு உடனே கேட்காதே தம்பி. அது ஒண்ணும் கம்ப சூத்ரம் இல்ல. முகத்தைப் பார்த்தாலே அது தெரியும். பாக்கத் தெரியணும்."

அவரது பதிலால் மேலும் சிலிர்ப்பு.

"நீ கங்கைல இறங்காதே குழந்தை. உனக்கு அது நல்லது இல்ல. அவசியமும் இல்லே..."

அவர் அவளது தற்கொலை நினைப்பைத் தெரிந்து கொண்டு தடுப்பது மாதிரி பேசினார்.

மைதிலிக்கும் புரிந்துவிட்டது.

"இல்ல... என் பாபம் போகனும். நீங்க பெருமை பொங்கச் சொன்ன கங்கைல குளிக்க எனக்குத் தகுதி யில்லையா என்ன?"

"பாவிகளுக்காகதாம்மா இந்த கங்கையே இருக்கா. இந்த உலகத்துல நெருப்பு மட்டும்தான் இருக்கு; தண்ணியே இல்லைன்னா என்னாகும். யோசிச்சுப் பார். பாவ நெருப்புக்கு கங்காஜலம்தான் ஃபயர் எஞ்சின்.

ஆனா இந்த ஜலம் இப்ப உனக்கு அவசியமில்ல. உன் குழந்தையோட ஒருநாள் நீ வருவே. அப்ப குளி. உன் புருஷனும் அப்ப உனக்கு துணைக்கு இருப்பார். குடும்பமா ஸ்நானம் பண்ணுங்களேன். இப்ப எதுக்கு?"

அவர் அவள் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று சொல்லாமல் சொன்னார். சந்தானத்துக்கு அது புரிந்து விட்டதோ என்னவோ மலாரென்று சாது காலில் விழுந்தார். கண்களிலும் ஆனந்தக் கண்ணீர்.

"இல்ல– நான் குளிப்பேன்... குளிக்காம வரமாட்டேன். என் பாவம் இன்னியோட போய்டப் போறது. என் அப்பாவுக்கு அண்ணாவுக்கெல்லாம் இனி நல்ல காலம்."

"பைத்தியம்– பெரியவர் பேச்சைக் கேளு. நட– என்னோட. விஷ்ணு நீ போய் ஸ்நானம் பண்ணிட்டு வாடா..."

சந்தானம் அவனை விரட்டினார். அவளை அழைத்துக் கொண்டார்.

"அதோ அந்த ஆஸ்ரமம்தான்... அம்பி நீ குளிச்சுட்டு தெய்வத்தோட வா... நான் ஒருத்தன்... தெய்வமாகி வா..."

—கோவணக்காரர் பேச்சில் திரும்பவும் ரகசியமான உட்பொருள்!

## 11

விஷ்ணு அவர் பேச்சைக் கேட்டு உள்ளுக்குள் சிரித்தபடி இருந்தான். மைதிலியைக் குளிக்கவிடாமல் அவர் செய்ததில் அவனுக்கும் சந்தோஷமாகத்தான் இருந்தது.

அவள் அப்படியே போய்விடுவாள் என்கிற பயம்.

கங்கையும் சுழன்று புரண்டு சீறிக் கொண்டிருந்தது.

கோவணக்காரர் சொன்ன கருத்தோடு கங்கையைப் பார்த்தான். இளநீலமாய் நீர்... உண்மைதான்! மற்ற நதி நீரெல்லாம் மேகம் தரும் தண்ணீரால் ஓடுவது. இது மட்டும் உறைந்த பனிநீரால் உருவாகி ஓடுவது. ஆனால் அதற்கு ஆயிரம் மெருகை தன் கற்பனையால் சேர்த்திருக்கிறார். எப்படியோ... எதிரே ஒரு மினரல் வாட்டரின் அதிரலான ஓட்டம்.

அற்புதம்!

ஓடிப்போய் தொபேல் என்று விழுந்தான். உடம்பெல்லாம் உறைந்து போகும் அளவு சில்லிப்பு. உச்சி மண்டையில் மின்னல் வெட்டுகிற மாதிரிகூட இருந்தது.

இருந்தும் உற்சாகமாய் குளித்தான். மூழ்கினான்... அடிப்படுகை வரை போக முயன்றான். அவ்வளவு ஆழம் ஒன்றுமில்லை. பாறைகள் திட்டுத் திட்டாய் தெரிந்தன. கூழாங்கற்கள் காலை நிரடின. சில கற்கள் வெகு அழகாக வேறு இருந்தன.

பகல் வெளிச்சத்தில் சூரிய ஊடுருவலில் அதை நன்றாகப் பார்க்க முடிந்தது. முங்கி முங்கி அவைகளை

www.cleanindians.com

எடுத்தான். அதில் ஒன்று ஒரு சிறிய சிலை போலவே இருந்தது. கையில் சங்கு சக்ரமுடன் அந்த விஷ்ணு இருப்பது போலவே.

விஷ்ணுவின் கரத்தில் விஷ்ணு.

ஆச்சரியமாகப் பார்த்தபடி கரை ஏறினான். இறங்கிக் கொண்டிருந்த ஒருவர் அவன் கையில் இருந்த கல்லைப் பார்த்து கன்னத்தில் போட்டுக் கொண்டார். ஹிந்தியில் "இங்க கிடைச்சதா?" என்று கேட்டார். அவன் தலை ஆடி ஆமோதித்தது.

"நீ அதிர்ஷ்டசாலி. இது சாளக்ராமம். இது இருந்தால் ஒரு வீடே கோவிலாகிவிடும். பாவிகளுக்கு இது கிடைக்காது. கிடைத்தவர்களோ பாவம் செய்யமாட்டார்கள்" என்றார். அவனுக்கு பாதி புரிந்தது. மீதி புரியவில்லை. அத்தோடு நடந்தான்.

கோவணக்காரர் சொன்னது காதில் எதிரொலித்தது 'தெய்வத்தோடு வா... தெய்வமாகி வா! என்றாரே இதைத்தானோ... மனுஷர் சரக்குள்ளவர்தான்...'

அவருக்கு ஒரு பாராட்டை மனதில் படித்தபடி நடந்தவன் எதிரில் புதியதாக இன்னொருவர்.

வேட்டி சட்டை, நெற்றியில் ஸ்ரீ சூரணம் சகிதம்! மைதிலியைக் கைவிட்ட மனோஜின் அப்பா வக்கீல் நாராயணன்.

"விஷ்ணு..."—அவர்தான் அழைத்தார்.

"மாமா நீங்களா...?"—அவனிடமும் துடிப்பு.

"நீ எங்கப்பா இங்கே...?"

"நான்... நான்... நீங்க எங்க?"



"கங்கைக்கு எதுக்கு வருவா? பண்ண பாவத்தை எல்லாம் தொலைக்கத்தான்."

"மாமா நீங்களா இப்படிப் பேசறேள்?"

"நான்தான் பேசறேன்... காலம் என்னை அப்படிப் பேச வெச்சுடுத்து..."

"அப்போ... அப்போ..."

"மனோஜ் விஷம் குடிச்சு தற்கொலை பண்ணிக்கப் பார்த்தான். நல்லவேளை தடுத்துட்டேன். பெரியவா தப்புக்கு உங்களை நான் பழிவாங்க நினைச்சது தப்பு.

பெருமாள்தான் பெரிய நீதிபதி.

ஆனா நானோ அது நான்தான்னு நினைச்சுட்டேன். அவ்வளவு ஆங்காரம். போகட்டும்னுதான் உங்களைத் தேடிக்கொண்டு வந்தேன்."

"மாமா... மாமா..."— விஷ்ணுவின் உதடு துடித்தது. கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

"இது என்ன உன் கைல... சாளக்ராமமா?"

"அதெல்லாம் தெரியாது. கங்கைல மூழ்கினப்ப கிடைச்சது."

"நீ ரொம்ப கொடுத்து வெச்சவன். விடாம ஆத்துல வெச்சு பூஜை பண்ணினா ரொம்ப நல்லது. எனக்கு ஒரு ஆசை."

"என்ன மாமா? சொல்லுங்கோ. எதுன்னாலும் பண்றேன். நான் இப்ப ரொம்ப சந்தோஷத்துல இருக்கேன் மாமா..."

"இந்த சாளக்ராம பெருமாளை உன் தங்கைக்கு சீதனமா தரியா...?"

www.cleanindians.com

"இதையா... இதையா கேக்கறேள்... இது ஒரு பெரிய விஷயமா. இந்தாங்க பிடியுங்கோ..."

"இது தான்ப்பா பெரிய விஷயம்... காசு பணமா பெரிசு?"

"இந்தாங்க... இப்பவே வாங்கிக்குங்கோ. இங்கையே இருங்கோ. நான் போய் அப்பா, மைதிலியை கூட்டிண்டு வரேன்.

அதோ அந்த ஆஸ்ரமக் குடிசைலதான் அவாள்ளாம் இருக்கா. உங்களைப் பார்த்தா, நீங்க சொன்னதைக் கேட்டா அப்படியே பூரிச்சு போயிடுவா."

"நல்லது... போய் கூட்டிண்டு வா."—அவரின் விடை பறந்தது.

"அப்பா... மைதிலி... அப்பா"—குரல் அவனுக்கு முன்னால் சென்றது. உடம்பால் பின்னால்தான் செல்ல முடிந்தது. ஆஸ்ரமத்தில் இருந்து சந்தானமும் வெளியில் ஓடிவந்தார். மைதிலியும் வந்தாள்.

"என்னடா என்ன விஷயம்?"

"அப்பா நம்ம கவலை தீர்ந்ததுப்பா. கஷ்டம்லாம் நீங்கிடுத்துப்பா."

"உணர்ச்சி வசப்படாம விஷயத்தைச் சொல்லுடா முதல்ல..."

"வக்கீல் நாராயண மாமா இல்ல... அதாம்ப்பா நம்ம சம்பந்தி. இதோ இவளோட மாமனார்..."

"அவருக்கென்ன...?"

"அவரைப் பார்த்தேன். அவர் மைதிலியை ஏத்துக் கறேன்னுட்டார்..."

www.cleanindians.com



"எங்க... எப்போ?"—கேள்வியோடு அவர் பார்வையும் கங்கை ஆற்றங்கரையைப் பார்த்தது.

மைதிலிக்கும் கண்களில் மளுக்கென்று ஜலம். "வாங்கோ காட்றேன். நான் குளிச்ச படித்துறைகிட்டதான் அவரும் இருக்கார். வாங்கோ."—அவர் கைகளைப் பற்றி இழுத்துக்கொண்டு ஓடினான் விஷ்ணு.

மைதிலியும் பின்னாலேயே ஓடினாள்.

அந்த கோவணாண்டி நரசிம்மம் முகத்தில் மட்டும் ஒரு அர்த்தபுஷ்டியுள்ள புன்னகை.

படித்துறையில் யாருமில்லை!

ஒரு படிமேல் அவன் கண்டெடுத்த அந்த சாளக்ராம உருவம்.

ஓடிப்போய் அதைக் கையில் எடுத்தவன் அவரைத் தேடினான்.

"எங்கடா... எங்க அவர்?"

சந்தானமும் தேடியபடி கேட்டார்.

"இப்ப... இப்ப தாம்பா பார்த்துப் பேசினேன். இதோ இந்த கல் விக்ரகத்தையும் கேட்டார். கொடுத்தேன். ஒரு வேடிக்கை என்னான்னா இதை நான் மைதிலிக்கு சீதனமா தரணுமாம். அதுக்கென்னன்னுட்டேன்."

"எல்லாம் சரி... அவரைக் காணோமே."

"அய்யோ... சத்யமா பார்த்தேன்ப்பா. ஊர்ல மனோஜ் தற்கொலை பண்ணிக்கப் பார்த்தானாம். அதனால மனசு மாறி மைதிலியை சேர்த்து வைக்கறேன்னாராம். அதுக்காக நம்மைத் தேடித்தான் இங்கையே வந்தாராம்."

"எல்லாம் சரிடா... அவர் எங்க? வந்துருந்தா இங்க இருக்கணுமே?"

"அதாம்ப்பா எனக்குத் தெரியில..."

"இல்ல... நீ பொய் சொல்றே—மைதிலிக்கு மனதைரியம் வரட்டும்னு நடிக்கறே..."

"அய்யோ அப்பா சத்யமா நான் அவரைப் பார்த்தேன்பா."

"போடா... சொன்னதையே கிளிப்பிள்ளை மாதிரி திருப்பிச் சொல்லிண்டு. இதோ பார் உன் நல்ல எண்ணத்தைப் பாராட்றேன். ஆனா அதுக்காக பொய் சொல்லாதே. அதுவும் கங்கைக் கரைல நின்னுண்டு. வா பேசாம."

சந்தானம் அவனைப் பிடித்து இழுத்துக்கொண்டு நடந்தார்.

ஒரு கையில் விஷ்ணு. மறு கையில் மைதிலி.

விஷ்ணுவின் கையில் அந்த கல் விஷ்ணு!

www.cleanindians.com

## 12

தயங்கித் தயங்கி வெளியே நின்ற முரளியை உபாசகரே வந்து உள்ளே அழைத்தார்.

"வாப்பா உள்ற... ஏன் வெளியவே நின்னுட்டே?"

"இல்ல... உங்களப் பார்க்கவே எனக்கு முகமில்லை. அதான்."

"பைத்தியக்காரா... உன்னை மாதிரி கேள்வி கேக்கறவாளைத்தான் எனக்குப் பிடிக்கும். ஏன்னு கேட்டாதான் எதுக்குங்கறது தெரிய வரும். என்ன ஒரு விஷயம்... அந்த



ஏன்கற கேள்வியை பணிவா நம்பிக்கை யோட கேக்கணும். திமிரா அவநம்பிக்கையோட கேட்கக் கூடாது."

பதிலோடு உள்ளே அழைத்துச் சென்றார். "சொல்லு—நான் என்ன பண்ணணும்?"

"என் மாமா, விஷ்ணு, மாமா பொண்ணு மூணு பேருமே நீங்க சொன்ன மாதிரி ஹரித்வார் போயிருக்கா. போன இடத்துலதான் சில உண்மைகள் தெரிய வந்தது. அது நீங்க சொன்ன மாதிரி அந்த செத்துப் போன ஆத்மாவால வந்த பிராப்ளம்தான். அதேசமயம் மைதிலி தற்கொலை எண்ணத்துல இருக்கா..."

"அப்படியா?"

"என்ன மாமா அப்படியான்னு ரொம்ப கேஷுவலா கேக்கறேள். விஷ்ணு ரொம்ப பயப்பட்றான். எல்லாம் நல்லபடியா முடியணுமேன்னு துடிக்கறான்."

"அதான் நீ முடிச்சிட்டியே..."

"நானா?"

"இல்லையா பின்னே... அவ வயித்துக் குழந்தையோட அவளை ஏத்துக்க தயாராயிட்டியே. இது போதாதா? அதுதானே நான் சொன்ன பரிகாரம். அது மனசார நடந்துடுத்தே..."

"அது... அது... உங்களுக்கு எப்படி?"

"எல்லாம் உங்கம்மா சொன்னா..."

"ஆமாம் மாமா... பாவம் மாமா அவ!"

"இது போதும். நீ கோவிலுக்குப் போக வேண்டாம். பூஜை பண்ண வேண்டாம் பாவம்னு உருகக் தெரிஞ்சிருக்கே. இது போதும்..."

"அடுத்து என்ன மாமா ஆகும்?"

"ஒரு நல்லது இன்னொரு நல்லதைத்தான் வழி நடத்தும். அதான் நல்லது நடக்க ஆரம்பிச்சிடுத்தே..?"

"அவ நல்லபடியா திரும்பி வரணும் மாமா..."

"வந்துண்டேன்னா இருக்கா..."

"வந்து கல்யாணமும் நல்லபடி நடக்கணும்."

"எதுக்கு இரண்டு தடவை... அதான் ஒரு தடவை நடந்துடுத்தே. அது போறும்."

"அப்ப கல்யாணமெல்லாம் வேண்டாம்கறேளா?"

"அவசியமில்லேங்கறேன்."

"சரி மாமா... நீங்க சொன்னா சரி. மைதிலி நன்னாருக்கணும்."

www.cleanindians.com

"நீயும் நன்னாருப்பே. அமோகமா இருப்பே. அதான் பெருமாளே வரப்போறாரே..."

"புதிராவே எப்பவும் பேசறேள்."

"விஷயம் புதிரா இருந்தா பேச்சும் புதிராத்தானே இருக்கும்?"

"ஒண்ணுமே புரியலை..."

"எல்லாமே புரியும் பாரு..."

"அப்ப பயப்பட வேண்டாம்கறேள்?"

"பயப்படறதும் ஒரு தோஷம்டா குழந்தை. தோஷம் இருக்கலாமா?"

"சரி. இப்பவே என் பயத்தை விட்டுட்றேன்."

"அப்படிச் சொல்லு... நம்பிக்கை விளக்கை உன் மனசுல ஏத்து. அது எப்பவும் எரியட்டும். பாக்கற இடமெல்லாம் அப்புறம் பிரகாசமா தெரியும்."



"சந்தோஷம் மாமா... நான் உத்தரவு வாங்கிக்கறேன்."

"போயிட்டு வா... இந்த 'ஏன் எதற்கு, எப்படி'யை மட்டும் எப்பவும் விட்டுடாதே..."

"நிச்சயமா. அதேசமயம் நீங்க சொன்ன நம்பிக்கையோட அதைக் கேப்பேன்."

"அதுக்கு அவசியமே இனி வராது. பாரேன்."

அவர் பதிலில் ஆயிரமாயிரம் நிதர்சனங்கள். அவனுக்குப் புரியவில்லை. ஆனால் இனி நடப்பது எல்லாம் நல்லதாக இருக்கும் என்று மட்டும் தோன்றியது!

## 13

சென்னை சென்ட்ரல்!

ஸ்டேஷனுக்கு கோமளம் வந்திருந்தாள்.

"என்னடி இது நீயே ஸ்டேஷனுக்கு வந்துருக்கே? எங்களுக்கு வர வழி தெரியாதா என்ன?"

"இல்லன்னா... எனக்கு ஒரே சந்தோஷம். நீங்க எப்ப வருவேள்னு துடிச்சிண்டிருக்கேன். அதான் பொறுக்காம வந்துட்டேன்."

"அதை போன்ல சொல்லியிருக்கலாமே."

"நீங்க போன இடத்துல எங்க இருக்கு போன்...? இன்னிக்கு இந்த வண்டியில வரப்போறது மட்டும்தானே தெரியும்?"

"சரி விஷயத்தை சொல்."

"நீங்க ஹரித்வார் போன வேளையோ, இல்லை கங்கைல குளிச்ச வேளையோ மைதிலியோட சிக்கல் சுத்தமா தீர்ந்துடுத்து."

"என்னடி சொல்றே?"

"அவா ஆத்துல மைதிலிதான் எங்காத்து மாட்டுப் பொண்ணுன்னு ஒத்துண்டுட்டா. வக்கீலும் வந்து என் கால்லையே விழுந்தார்."

"நிஜமாவா... அப்ப விஷ்ணு சொன்னது உண்மைதான் போல இருக்கு."

"விஷ்ணு என்ன சொன்னான்?"

"அவர் அங்க ஹரித்வாருக்கேன்னா வந்துட்டார். வந்தவர் இவனைப் பார்த்து 'மன்னிச்சுடு. நான் உன் தங்கையை ஏத்துக்கறேன்'னு சொன்னாராமே..."

"என்ன சொல்றேள் நீங்கோ...? அவர் எப்படி ஹரித் வார் வர முடியும்?"

"ரயில்ல ஏறிதான். என்ன கேள்வி இது?"

"அய்யோ, புரியாம பேசறேளே. நாம இப்ப அவாத் துக்குத்தான் நேரா போகணும். அப்படி ஒரு சூழ்நிலை."

"என்னன்னு சொல்லேன்."

"அவர் வைகுண்ட பிராப்தி அடைஞ்சு நாலு நாளாறது!"

"என்னது?" அந்தக் கேள்விக்குப் பிறகு சந்தானத்திடம் வார்த்தை வரவில்லை.

"அம்மா... முந்தாநாள் தாம்மா அவரைப் பார்த்துப் பேசினேன். நீ என்னம்மா சொல்றே?"

www.cleanindians.com



"போடா பைத்தியம். சாவுக்கு போய்ட்டு வந்தவ நான். எனக்குத் தெரியாதாக்கும். என்னைப் பார்த்து பேசிட்டு போனவருக்கு ஹார்ட் அட்டாக் வந்துடுத்து. போய்ட்டார். நீ என்ன அவரைப் பார்தேங்கறே! வேற யாராவது அவரை மாதிரி இருந்திருப்பா."

"இல்லம்மா... அவர்தான்... அவரேதான். மனோஜ் தற்கொலை பண்ணிக்கப் பார்த்தான். தடுத்துட்டேன் னுல்லாம் சொன்னாரே..."

"நிஜமாவா... மாப்ள தற்கொலை பண்ணிக்கப் பார்த்தது என்னவோ வாஸ்தவம்தான். ஆனா இங்க செத்துப்போன அவர் அங்க எப்படி?"

கோமளம் உதட்டைப் பிதுக்க விஷ்ணுவுக்கு மெல்ல புரிய ஆரம்பித்தது.

உபாசகர் ஒரு கல்லில் பல மாங்காய்களை அடித்து விட்டதும் தெரிந்தது.

ஆத்மாவைப் பார்த்தால்தான் நான் நம்புவேன் என்று சொன்னதன் எதிரொலியோ?

கேள்வியோடு சிலிர்த்தவன் தன் ஹேண்ட் பேக்கை இறுக்கப் பிடித்தான். அதில்தான் அந்த சாளக்ராம மூர்த்தி இருக்கிறார். அவனிடம் பாதாதிகேசம் சிலிர்ப்பு.

"பெருமாளே...எனக்கு எல்லாத்தையும் புரிய வெச்சுட்டேள்... உனக்கு நான் எப்படி நன்றி சொல்வேன். என்ன கைம்மாறு செய்வேன்..."

சரசரவென்று கண்ணில் நீர் வர அப்படியே ஒடிந்து விழுந்து அமர்ந்தான்!

உபாசகர் விஷ்ணு சொன்னதை எல்லாம் கேட்டுவிட்டு சிரித்தார்.

"நீ பொய் சொல்றே..

செத்துப் போனவால்லாம் உயிரோட வரவே முடியாது. நீ கப்ஸா விட்றே.." என்றார்.

"மாமா...நீங்களா இப்படிச் சொல்றேள்?"

விஷ்ணுவின் குரலில் சுரத்தே இல்லை.

"பைத்தியம்... இப்படித்தான் உலகம் சொல்லும். அனுபவிச்சவனுக்கு மட்டும்தான் இது அதிசயம். மத்தவாளுக்கு இது எப்பவும் ரகசியம்தான்."

உபாசகர் கண்களை சிமிட்டியபடி சொன்னார்.

ஆனால் அதில்தான் எத்தனை உட்பொருள்?

# விடவே விடாது!

## 1

"பார்ப்பது பேசுவது அதாவது ஒளி, ஒலி என்னும் இரண்டுதான் உயிர்களுக்கே ஆதாரம்.

இதில் ஒளிகூட பிரதானமில்லை. ஒலியே பிரதானம். இந்த ஒலியைக் கொண்டதுதான் நாம் பேசும் மொழிகள் மற்றும் மந்திரங்கள்!

மந்திரங்களில் சில விசேஷ ஒலியமைப்பு கொண்ட மந்திரங்கள் உண்டு. இவை ஆவிகளை வசப்படுத்தி இழுத்து வருபவை.

இந்த மந்திரங்களில் தேர்ந்தவர்கள் சில புத்த பிட்சுக்கள்!"

பால்டால்!

காஷ்மீரத்தின் ஸ்ரீநகருக்கு எண்பது கிலோ மீட்டரில் இருக்கும் ஒரு சிறிய ஊர்.

அதற்காக நமது பச்சப்பட்டி, புளியம்பட்டிகளை உதாரணமாக சொல்ல முடியாது.

வானத்துக்கே ஒட்டடை அடிக்கக் கிளம்பிவிட்டது போன்ற ஆல்ஃபைன் மரங்கள், நானும் கொஞ்சம்

www.cleanindians.com

முயற்சிக்கிறேனே என்கிற மாதிரி காற்றிலாடும் யூகலிப்டஸ் இலைகளுக்கு நடுவே பச்சைப்பசேல் தனமாக கண் ணடித்துக் கொண்டிருந்தது.

இமய மலைச்சாரலின் ஒரு சின்னத் துண்டுப் பகுதி தான் பால்டால். எனவே தூங்கு மூஞ்சித்தனமாய் பல மலைக்குன்றுகள் பனிக்கட்டிகளால் நெய்த போர்வை யையும் சேர்த்தே போர்த்திக்கொண்டிருந்தன.

சூரியனாகப்பட்டவன் சென்னையில் நம்மை யெல்லாம் பெண்டு கழட்டுகிற மாதிரி இங்கே செயல்பட முடிவதில்லை.

எனவே அவனும் சோர்வாக தன்னால் ஆட்டி வைக்கப்பட முடியாத அந்த ஊரில் பேருக்கு வெளிச் சத்தை பெய்து கொண்டிருந்தான்.

அந்த பசுமையான பிராந்தியத்தில் வளைவான தார்ச் சாலைகளும் நல்ல அழகு!

இந்திய மண்ணாக இருந்தாலும் உலகைச் சேர்ந்த டூரிஸ்ட்கள் வந்து போகும் இடமாயிற்றே...? எனவே சாலைகள் சுத்தமாக மேடு பள்ளம் இல்லாமல் இருந்தன.

அதிலும் பால்டாலில் இருந்து லடாக் நோக்கிச் செல்லும் மலைப்பாதை ஏதோ சொர்க்கத்துக்கு செல்லும் பாதை போல இருந்தது.

அதில்தான் தொழிலதிபர் அருணாச்சலாவின் காரும் சீறிக்கொண்டிருந்தது.

ஊரும் காடும் அழகாக இருந்து என்ன பிரயோஜனம்?

அருணாச்சலாவைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. வருஷம் 300 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி மட்டுமே செய்யும் பெரிய பிசினஸ் மேக்னட்.

www.cleanindians.com



மாதமானால் 2400 பேர் அவர் கையால் சம்பளம் வாங்குகிறார்கள்.

மத்திய அரசிலிருந்து மாநில அரசுவரை எல்லோருமே அவர் பாக்கெட்டில்... ஏதாவது ஒரு ஆங்கிலப் பத்திரி கையின் அட்டையில் அடிக்கடி இடம் பிடித்துக் கொண்டே இருப்பவர்.

நிறைய HRD மேனேஜர்கள் 'எங்கள் ரோல்மாடல் மிஸ்டர் அருணாச்சலாதான்' என்று கூறியிருக்கிறார்கள்.

ஒரு பிரபல நடிகர் கூட அருணாச்சலாவை அப்படியே இமிடேட் செய்து நடித்து மத்திய அரசின் சிறந்த நடிகருக்கான விருதே வாங்கிவிட்டார்.

அப்படிப்பட்ட அருணாச்சலாவையும் ஒரு கவலை கவ்விக் கொண்டிருந்தது.

அதன் எதிரொலிதான் அவரது தாடை முடிகள்!

ஒரு கான்ஃப்ரன்ஸில் கலந்துகொள்ள டெல்லி வந்தபோது மொழுமொழுவென்று ஷேவ் செய்த திலீப்குமார் போலத்தான் இருந்தார்.

கான்ஃப்ரன்ஸ் முடிந்து அவரது பி.ஏ கார்த்திகேயன் காதைக் கடித்த பிறகுதான் இப்படி ஆகிவிட்டார்.

கார்த்திகேயன் காரின் முன் சீட்டில் அமர்ந்திருந்தான். காருக்குள் அருணாச்சலா இருப்பது தெரியக்கூடாது என்பதற்காக கார் கண்ணாடிகளுக்கு கூல்ஃபிலிம் ஒட்டப்பட்டிருந்தது.

ஆனால் உள்ளே இருந்து வெளியே ஊடுருவ முடிந்தது. அவனும் அமைதியாக ஊடுருவியபடியே வந்தான். அருணாச்சலா தன் போர்ட்டபிள் கம்ப்யூட்டரில் கணக்கு வழக்கு பார்த்தபடியே வந்துகொண்டிருந்தார். அருகில்

தேவதாஸ் பட CD கிடந்தது. அவ்வப்போது அதன் பாடல்களால் காதையும் நனைத்துக் கொண்டார். ஞாபகமாக செல்ஃபோனை ஆஃப் செய்து வைத்திருந்தார்.

கார் சீறிக்கொண்டே இருந்தது.

ஏனோ அந்த மலைப் பாதையில் கைப்பிடிச் சுவரே இல்லை. அதுதான் ஸ்ரீநகர் ஸ்டைல் என்று யாரோ சொன்னது ஞாபகத்தில் வந்தது. விழுந்தால் அதல பாதாளம்தான். ஜன்னல் கண்ணாடி வழியாக எட்டிப் பார்த்த அருணாச்சலாவுக்கு கொஞ்சம் வயிற்றைக் கலக்கியது.

டிரைவரைப் பார்த்தார். மொய்தீன் என்று பெயர். ஸ்ரீநகரைச் சேர்ந்தவன். 6 அடி உயரம், கருடன் மூக்கு, ட்ரிம் செய்த தாடி இவைகளுடனான காஷ்மீரத்து முஸ்லீம் பிரிவைச் சேர்ந்தவன். மலைப் பாதைகளில் ஓட்டிப் பழக்கப்பட்டவன் என்று அவனைப் பிடித்திருந்தார்கள். விரைப்பாகக் காரைச் செலுத்திக்கொண்டிருந்தான். அருணாச்சலா கார்த்திகேயனைக் கூப்பிட்டார்.

"கார்த்தி..."

"சார்..."

"என்னய்யா இது... ரோடு ரொம்ப பயங்கரமா இருக்குதே..."

"ஆமாம் சார்..."

"நீ ஆமோதிக்கறத்துக்காக நான் ஆதங்கப்படலை. இந்த டிரைவர் லடாக் வரை ஜாக்ரதையா ஓட்டுவானா?"

"ரொம்ப அனுபவசாலி சார்... ஒரு பிராப்ளமும் வராது."

"எதுக்கும் ஸ்லோவாவே போகச் சொல்லு..."

www.cleanindians.com



36508
5383932
கொளத்தூர், சென்னை

"ஓ.கே. சார்..."

"ஆமா எப்ப போய்ச் சேருவோம். எதாவது ஐடியா இருக்கா..."

"எர்லி மார்னிங் ஐந்து மணிக்கெல்லாம் போயிடலாம் சார். இங்க அஞ்சு மணிக்கெல்லாம் விடிஞ்சிடுது. அதோட அப்ப போனாதான் அந்த பிட்சுவைப் பார்க்க முடியும்."

"ஏன்... கொஞ்சம் லேட்டா போனா பார்க்க முடியாதா?"

"இல்ல சார்... காலைல அஞ்சு மணியில இருந்து ஆறு மணி வரைதான் அவர் குகையை விட்டு வெளிய வருவார். அப்ப சந்திச்சாதான். அதுக்குப் பிறகு குகைக்குள்ற போய்டுவார்..."

"நாமளும் குகைலையே போய் பார்ப்போமே?"

"இல்ல சார்... அப்படி எல்லாம் குகைக்குள்ள போய்ட முடியாது... அந்த பிட்சு தியானத்துல உக்காந்துட்டா கடவுளே வந்தாலும் கலையமாட்டார்னு சொன்னாங்க."

"என்னய்யா என்னென்னவோ சொல்றே... இதுக்குத்தான் நான் இந்த மாதிரி விஷயங்கள்ள எல்லாம் இறங்கறதே இல்லை. பேசாம நம்ம G.Mஐ அனுப்பியிருக்கலாம்..."

"அப்படி இல்ல சார்... G.Mஆல நம்ம அசைன்மென்ட்டை முடிக்கவே முடியாது."

"இந்த சதாசிவம் ஒரு கிறுக்கன்யா... இவன் செத்ததால இப்படி புத்த பிட்சுவை எல்லாம் தேடிப் போக வேண்டியிருக்கு. ஹூம்!" சலித்துக்கொண்டார் அருணாச்சலா.

## 2

"இமாலய மலைவெளிகளில் லே'வை ஒட்டி 'ஷிகாரா' என்று ஒரு மலை இருக்கிறது. அசப்பில் மண்டை ஓடு போலவே இருக்கும். இந்த உலகை ஆட்டுவிக்க விரும்பும் துர்தேவதைகளின் வாசஸ்தலமாக அந்த மலை கருதப்படுகிறது.

இந்த மலையின் பக்கம் மிகத் துணிச்சலாக செல்லக் கூடியவர்கள் சில புத்த பிட்சுக்கள் மட்டுமே.

மிகவும் கொடிய ஆசார முறைகளை உடைய இந்த பிட்சுக்கள் தங்கள் யோக பராக்ரமங்களால் உயிரின் ரகசியத்தையே தெரிந்து வைத்திருப்பவர்கள்.

இவர்களின் கண்களுக்கு அந்த துர்தேவதைகள் தெரியும் என்பதோடு, அவை இவர்கள் இடும் கட்டளைக்கு ஏற்ப செயல்படும் என்பதும் நம்ப முடியாத உண்மைகளாகும்!"

மாவுப் பையை உதறின மாதிரி பனி மழை பெய்து கொண்டிருந்தது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சையாகவோ கறுப்பாகவோ ஒரு விஷயத்தைக் கூடப் பார்க்க முடிய வில்லை. எங்கு பார்த்தாலும் பனிப்படுக்கை. நடுக்கும் குளிரும் ஒரு ராணுவ அணிவகுப்பே நடத்திக்கொண் டிருந்தது.

அதிசயமாக 'ஷிகாரா' என்னும் ஒரே ஒரு குன்றுப் பகுதி மட்டும் துளிகூட பனியால் ஆக்ரமிக்கப்படாமல் வெறும் கல்குன்றாய் தனியாகத் தெரிந்தது.



அதன் படுத்த ஒரு பாறைமேல் ஒரு கிழட்டுக் கழுகு. அதன் கழுத்தில் துளிகூட முடி இல்லை. கழுத்தும் கிட்டத்தட்ட ஒரு சாணுக்கு ஒரு கைப்பிடிக்குள் அடங்கி விட்ட அரக்கு நிற இரும்புத் துண்டு போல இருந்தது.

அது யாருக்கோ காத்திருப்பதுபோலத் தெரிந்தது. குறிப்பிட்ட ஒரு திசையையே பார்த்துக் கொண்டிருந்தது.

அந்த பனி மலைக் காட்டில் ஒரு ஜீப் ஓடியிருக்கிறது என்பதற்கு அடையாளமாய் டயர்ச சக்கரங்கள் உழுது போட்டது போல ஒரு பாதைக்கீறல்.

அதன் மேல் ராணுவத்தின் எல்லைப் பாதுகாப்புப் படையினரின் ட்ரக் ஒன்று நெடுந்தொலைவில் வந்தபடி இருந்தது.

நெருங்க நெருங்கத்தான் அதில் ஒரு இருபதுக்குமேல் வீரர்கள் இருப்பதும், நடு நாயகமாய் ஒருவர் மட்டும் மெஷின்கன்னுடன் ட்ரக்கின் நடு முதுகில் நின்று கொண் டிருப்பதும் தெரிந்தது.

அந்த ட்ரக்கும் அந்த குன்றுப் பக்கமாக வரவும் சற்று வேகம் எடுத்தது. அந்த வேகம் தாளாமல் நாலாபுறமும் பனிக்கட்டிகள் உடைந்து சிதறி ஒரு வெள்ளைப் புகை மூட்டத்தையே தற்காலிகமாக உருவாக்கிக் காட்டின.

ட்ரக் வேகமெடுக்கும் சமயம் அந்த ட்ரக்கில் உள்ள வீரர்கள் ஒருவித அச்சத்துடன் அந்த மலையைப் பார்த்தார்கள். சிலர் சிரித்தார்கள்.

ஹிந்தியில் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

"இந்த ஷிகாரா மலைலதான் எல்லா துர் ஆத்மாக் களுக்கும் குடி இருக்குன்னு சொல்றதை என்னால நம்ப முடியலை..." என்றார் மேஜர்சந்தர்பால் என்பவர்.

www.cleanindians.com

"அப்படியா... அப்படின்னா இறங்கி அந்த மலை மேல ஏறி ஒரு கல்லை எடுத்துகிட்டு வர தைரியம் இருக்கா உனக்கு?" பிரதாப் என்பவர் திருப்பிக் கேட்டார்.

"கல் என்ன... விட்டா ஒரு மூட்டை மணலே கூட அள்ளிகிட்டு வந்துடுவேன்..."

"மூட்டை எல்லாம் எதுக்கு... ஒரு கல்துண்டு. ஒரே ஒரு கல்துண்டு போதும் மேஜர் சந்தர்பால்."

"ஓ.கே. ட்ரக்கை நிறுத்துங்க... நாமல்லாம் பாகிஸ் தானோட மிசைல்களுக்கே பயப்படாதவங்க இந்த மலைக்குன்றைப் பார்த்து பயப்படறது கேவலம்."

ட்ரக் நின்றது. மேஜர் சந்தர்பால் என்பவரும் கீழே குதித்தார்.

www.cleanindians.com

"வேண்டாம் மேஜர்... அங்க போன யாரும் திரும்ப கீழே இறங்கினதே இல்லை."—என்றார் பிரகாஷ் என்பவர்.

"நோ... ஐ வான்ட்டு கோ... பனியே இல்லாத இந்த குன்றுல ஒரு டென்ட்போட்டு ஒரு டெலக்ஸ் கோபிக்வியூ பில்டிங்கையே கன்ஸ்ட்ரக்ட் பண்ணலாம். அவசியபட்டா இந்த Zoneக்கு தேவையான உணவைச் சமைக்க ஒரு கேன்டீன் கூட இங்க கன்ஸ்ட்ரக்ட் பண்ணலாம்."

"இப்படி பல திட்டங்களை ஏற்கெனவே பிரிகேடியர் ஒருத்தர் போட்டார். ஆனால் அதுக்காக அந்த மலைமேல ஏறின அவர் திரும்ப வரவேயில்லை. நாம அவரோட நினைவு நாளை அனுஷ்டிச்சுகிட்டு இருக்கோம் மேஜர்."

"பிரிகேடியர், கர்னல்னு நீங்க யாரைப் பத்திச் சொன்னாலும் ஐடோன்ட்கேர். நான் சந்தர்பால். என்வழி தனி வழி..."



"வேண்டாம். நாம இன்னும் ஒரு மணி நேரத்துக் குள்ள லே' கேம்ப்புல இருந்தாகணும். கர்னல் ராம்நாயக் கோட ஃபேர்வெல் பார்ட்டி நமக்காக காத்துகிட்டுருக்கு. விசேஷமா அதுல டில்லி கேபரே டான்சர் ஷில்பாவோட டான்சும் இருக்கு."

"கட்டாயமா அதுல கலந்துக்கறோம். அப்படி கலந்துக்கும் போது என்கைல நீங்க மிரட்டலா சொன்ன இந்த ஷிகாரா மலையோட கல் ஒண்ணாவது இருந்தா தானே எனக்கு பெருமை...?"

மேஜர் சந்தர்பால் தான் ஒரு விடாக்கண்டன் என்கிற மாதிரி பேசிவிட்டு நடந்தார். ட்ரக்கிலுள்ள வீரர்கள் விதிர்ப்புடன் பார்த்தார்கள்.

ராணுவ வீரர்களுக்கு மலை ஏறுவது என்பது ஒரு சுண்டைக்காய் விஷயம். அதிலும் சந்தர்பால் அந்தப் பனிமலையில் ஆக்சிஜன் பற்றிக் கவலைப்படாமல் பல சிகரங்களின் உச்சியைத் தொட்டு அங்கே நம் இந்திய தேசியக் கொடியை பறக்கவிட்டு மகிழ்ந்தவர்.

எனவே விறுவிறுவென்று தாவிக்குதித்து மேலேறினார். அந்த பாறைக் கழுகும் பார்த்துக் கொண்டேயிருந்தது. நடுநடுவே பாறைகள் அவரை மறைத்தன. மறைத்த பாறைகளின் மேல் எல்லாம் ஏறி திரும்பிப் பார்த்தார். இரு கைகளையும் ஆகாசத்திற்கு உயர்த்தி உற்சாகத்தை பதிவு செய்துகொண்டார்.

சில இடங்களில் பாறைகளுக்கு நடுவில் மண் வாகு மிக ஈரமாக சேறுபோல இருந்தது. கறுப்பாகவும் இருந்தது. அதை எல்லாம் பார்த்துக்கொண்டே நடந்தார்.

பாறைகளில் எல்லாம் கூட உப்பு பூத்திருந்தது. பனிக்கட்டி உறையாமல் கரைந்துவிட அந்த இடத்தில்

மண்ணில் ஏதோ அமிலச்சத்து இருக்க வேண்டும் என்று புத்தியில் ஒரு கவுளி சொல்லிற்று.

ஆனால் இதை ஆராயாமல் இந்த ஷிகாராவை ஆவிகளின் சாம்ராஜ்யமாக்கிவிட்டார்களே என்று ஒரு மெல்லிய கோபமும் அவருக்குள் கனன்றது.

ஒரு பாறைமேல் நின்றுகொண்டு அதை எதிரொலித்தார். "மேஜர் பிரதாப்... பிரிகேடியர் பிரகாஷ்... சோல்ஜர்ஸ் இங்க எந்த அதிசயமும் இல்ல... இங்க நம்ப எண்ணெய் வள ஆராய்ச்சிக்காரங்க வந்து ஆராய்ஞ்சா பெட்ரோல் கிடைக்கலாம்...நீங்க எல்லாம் தப்பா புரிஞ்சுகிட்டு இருக்கீங்க..."

வாய்க்கு பக்கத்தில் இரு கைகளை அடைத்து ஒரு கூவலோடு அவர் கத்தியது மிகமிக தேய்ந்து ட்ரக்கில் இருப்பவர்களைப் போய் சேர்ந்தது. அவரால் பிரிகேடியர் பிரகாஷ் என்று அழைக்கப்பட்டவர் ட்ரக்கிலிருந்து ஒரு டெலஸ்கோப்பை எடுத்து கழுத்தில் மாட்டிக்கொண்டு சந்தர்பாலை கவனிக்க ஆரம்பித்தார்.

விரல் நுனிகள் லென்ஸை ஒடுக்கி தூரப்புள்ளியாய் தெரிந்தவரை சமீபமாக்கி விஸ்தரித்துக் காட்டத் தொடங்கியது. அதேசமயம் பிரகாஷின் அந்த கூரிய பார்வையில் சந்தர்பாலின் தலைக்கு மேலே கறுப்பாக புகை போல சில உருவங்கள் பறக்கின்ற மாதிரியும் இருந்தது.

"மைகாட்..."- பிரகாஷ் உதடிரண்டும் பதறியது.

"என்ன மிஸ்டர் பிரகாஷ்...?" மேஜர் பிரதாப் அருகே இருந்துகொண்டு கேட்டார்.

"ஒண்ணுமில்ல...கறுப்பா சில உருவங்க மேஜர் சந்தர்பால் தலைக்கு மேல வவ்வால் மாதிரி பறந்துகிட்டு இருக்கு பிரதாப்..."

www.cleanindians.com



"கொண்டாங்க..." பிரதாப் அந்த டெலஸ்கோப்பை வாங்கிப் பார்த்தார். அவர் பார்த்தபோது பாறைமேல் நின்றுகொண்டிருந்த சந்தர்பாலைக் காணவில்லை. கறுப்பு உருவங்களும் தெரியவில்லை.

"எங்க பிரகாஷ்...சந்தர்பாலையே இப்ப பார்க்க முடியலையே...?"

"அங்கதானே நின்னுகிட்டிருந்தாரு...?"

"இல்லையே... பாருங்க..."

டெலஸ்கோப் திரும்ப கை மாறியது. பாறைதான் தெரிந்தது. அதே சமயம் வானவெளியில் யாரோ அவசரமாகக் கூப்பிட்ட மாதிரி திமுதிமுவென்று கருமேகக் கூட்டம் வரத் தொடங்கி ஒரு மின்னல் சவுக்கும் சொடேர் என்றது.

"ஓ... திஸ் ஈஸ் மான்சூன் ரைன். இவ்வளவு அடர்த்தியா வந்தா மழை ரொம்ப பலமாக இருக்கும்னு அர்த்தம். இப்ப பார்த்து இந்த ஆள் வேற போய்த் தொலைஞ்சுட்டாரே...?"

பிரகாஷ் பதற மழையும் திடமான நீர்ச் சொட்டுக்களாக தரை இறங்கி மொத்தமாக அவர்களை ஆக்ரமிக்கப் பார்த்தது.

"சார் இனியும் இங்க இருக்கறது ஆபத்து... லேண்ட்ஸ்லைட் ஆனா பனி நம்மை அப்படியே மூடிடும்..."

"ஓ.கே... கிளம்புங்க... கமான் க்விக்!"

அவர்கள் திரும்பவும் ட்ரக்கினுள் அடங்க ட்ரக் அங்கிருந்து மீண்டும் சீறத் தொடங்கியது. பிரதாப் சொன்னது போலவே நூறு யானைகள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட மாதிரி ஒரு இடி சப்தம். மின்னல் ஒன்று

ஒரு பனி மேல் சட்டிபோல் இறங்க அப்படியே ஒரு ராட்சஸப் பாளம் பெயர்ந்து சரிய, ஓடும் ட்ரக்கின் பின்புறம் திடுதிடுவென்று பனிக்கட்டிகள் ஓடிவந்து விழுந்து குவிந்தன.

அவர்கள் அத்தனை பேர் கண்களும்கூட முட்டை போல அகண்டு போயின.

"சந்தர்பால் அவசரப்பட்டுட்டார்... நாம அவரை இழந்துட்டோம்..."

ட்ரக்கினுள் பிரதாப் கைகளைக் குத்திக் கொண்டார்! ட்ரக்கும் முடிந்த வேகத்தில் இருந்தது. பல இடங்களில் பனிப் பாளங்களின்மேல் ஏறி அப்படியே ஆழ அமிழ்ந்து சேற்றில் சிக்கிக்கொண்ட மாதிரி பற்றுதல் இன்றிச் சுழன்று பின் எப்படியோ க்ரிப் கிடைத்து உருண்டது.

ஏறத்தாழ ஒரு பத்து கிலோமீட்டர் தூரம் வரை வந்த பிறகு ஓரளவு சமதளத்தை அடைந்து நிலப்பரப்பும் அங்கங்கே புற்களோடு கண்ணில் பட்டது.

ட்ரக்கை நிறுத்தச் சொல்லிவிட்டு திரும்பிப் பார்த்த போது ஷிகாரா மலையே தெரியாதபடி மழை மேகங்கள் அதை மூடியிருந்தன.

எல்லோரும் அமிலத்தைச் சப்பினது போன்ற முகபாவங்களில் இருக்க ட்ரக் டிரைவர் சந்தர்பாலுக்காக ஜீசஸ் என்றபடி சிலுவை போட்டுக் கொண்டான்.

ஆனாலும் நிசப்தம்!

"இன்னிக்கு நடக்கப்போறது ஃபேர்வெல் பார்ட்டி இல்ல. சந்தர்பாலுக்கான நினைவாஞ்சலிக் கூட்டம். கமாண்டர் நம்மளை எல்லாம் காச்சி எடுக்கப் போறாரு. என் ரெக்கார்ட்ல ஒரு கரும்புள்ளியும் விழப்போகுது..."

www.cleanindians.com



பிரதாப் குரலில் வருத்தம் நசுக்கிக்கொண்டு வெளிப்பட்டபோது அவர்கள் காதில் சன்னமாக ஒரு கொரட்டுச் சப்தம்.

சப்தம் வந்த திக்கில் எல்லோர் பார்வையும் திரும்பியது. புத்த பிட்சு ஒருவர் தன் இடக்கரத்தில் பிட்சுக்கள் பூஜை செய்யும் கவண்கல் போல சுழற்றிச் சப்தமெழுப்பும் கொரட்டுக் குச்சி ஒன்றைப் பிடித்து அதை சுழற்றியபடியே நடந்துகொண்டிருந்தார்.

அத்துவான பனிமலைக் காட்டில் கழுத்தை வளைத்துக் கட்டியிருந்த ஒரு காவி வேட்டி ஒன்றோடும் மொட்டைத் தலையோடும் அவர் இருந்தார்.

அந்த மலைக்காட்டில் அங்கும் இங்குமாக புத்த பிட்சுக்களின் ஆன்மாலயங்கள் உண்டு. சீனபாணியிலான கூம்புக் கூரையோடு கூடிய புத்தர் கோவில்களும் பிட்சுக் கள் தங்கும் விகாரங்களும்கூட சில இடங்களில் இருந்தன.

பிட்சுக்களும் ஏகாந்தமாய் மலைச்சித்தர்கள் போல குளிரோ மழையோ எங்களுக்கு ஒரு பொருட்டே இல்லை என்கிற மாதிரி திரிவார்கள்...

இதெல்லாம் அங்கே காவலில் இருக்கும் ஜவான் களுக்கு புதியதே அல்ல. இருந்தாலும் மழை வளைத்துப் பிடித்திருக்கும் ஷிகாரா குன்று நோக்கி அந்த பிட்சு நடந்து செல்வது ட்ரக்கில் இருக்கும் வீரர்கள் மனதில் ஆச்சரியத்தையும் கிலியையும் மூட்டியது.

பார்த்துக்கொண்டே நின்றார்கள். அந்த பிட்சுவும் ஒரு கட்டத்தில் கண்களை விட்டு மறைந்துவிட்டார். ட்ரக் மீண்டும் புறப்பட்டது!

3

'எரிக் வான் பானிசன்' என்று ஒரு மேல் நாட்டுக்காரர். இவரது ஆய்வுகள் மிக விநோதமானவை. இவரது கண்டுபிடிப்பில் அமெரிக்காவும், ஐரோப்பாவும் அரண்டு போயிருக்கின்றன என்றால் மிகையே இல்லை.

பானிசன் பூமியில் மட்டுமே உயிரினங்கள் இருப்ப தாக ஆய்வாளர்கள் நம்பிக்கொண்டிருப்பதை மறுக்கிறார்.

நம்மால் அறியப்படாத உலகங்களும் பிரபஞ்ச வெளியில் இருக்கின்றது என்பது அவர் கருத்து. ஒரு வயல்வெளியில் மூன்று கால்களை உடைய பறக்கும் தட்டுக்கள் இறங்கியதன் தடயங்கள் புகைப்படமாகவே எடுக்கப்பட்டு அவரால் வெளியிடப்பட்டது.

அவை பறக்கும் தட்டுக்களாக இருக்காது. இந்த பூமியில் வாழ்ந்து உயிரை விட்ட ஆன்மாக்களின் சேட்டையாக இருக்கும் என்று சிலர் அதுபற்றிக் கூறிய போது பலரும் சிரித்தனர்.

எது உண்மை?"

நள்ளிரவு!

லே' செல்லும் பாதை ஒரு முடிவுக்கு வந்தமாதிரி தோன்றியது. பனிப்புகை ஒரு ராட்சஸப் பந்துபோல வழியை மறித்தது.

டிரைவரும் இதற்கு மேல் காரில் பயணிக்க முடியாது என்பதுபோல காரை நிறுத்தினான். குளிர் தாங்காமல் கைகளை பரபரவென்று தேய்த்துக் கொண்டான்.



அருணாச்சலா பத்து மணிக்கெல்லாம் உறங்கப் போய்விடுவார். அவர் இரவில் விழித்திருந்த நாட்கள் மிக சொல்பம்.

வேர்ல்ட் கப் கிரிக்கெட் மேட்சுகளின் போது ஆர்வம் தாளாமல் TV முன் உட்கார்ந்து கவனித்திருக்கிறார்.

அப்படிப்பட்டவரே அன்று காருக்குள் விழித்திருந்தார்.

குளிர் அவரைத் தூங்கவிடவில்லை.

இந்த அளவுக்குக் குளிரும் என்று அவர் எதிர்பார்த் திருக்கவில்லை. கார் நிற்கவும் விசாரிக்கத் தொடங்கினார்.

"என்ன கார்த்தி... ஏன் கார் நின்னுபோச்சு?"

"அவ்வளவுதான் சார்... இதுக்குமேல போக முடியாது. ரோடே தெரியலை பாருங்க..."

"இது தெரியாம ஏன்யா என்னைக் கூட்டிகிட்டு வந்தீங்க?"

அருணாச்சலா குரலில் கணிசமான கோபம்.

"சாரி சார்... எப்படியும் போயிடலாம்கற நம்பிக்கை..."

"மண்ணாங்கட்டி. இப்ப என்ன பண்றது? பக்கத்துல எதாவது ட்ராவலர்ஸ் பங்களா இருக்கா?"

அவர் கேள்வியை கார்த்திகேயன் காஷ்மீரியில் மொழி பெயர்த்து டிரைவரிடம் கேட்டான். டிரைவர் "தனக்கும் இந்தப் பக்கம் புதியது." என்றான்.

"இடியட்... என்னய்யா இப்படி பண்ணிட்டே? இப்ப என்ன பண்றதாம்?"

www.cleanindians.com

அவரின் ஆத்திரம் மீண்டும் காஷ்மீரிக்கு மாறியது. டிரைவரிடமும் பதில்.

"நார்மலா லே'வுக்கு தரை வழியில போறது ரொம்ப ரொம்ப கஷ்டம். விமானம்தான் சரியான வழி. அதுவும் சீஸன்லதான் போகும்..."

"உன்னோட இந்த பதிலை நான் இப்ப என் M.Dகிட்ட சொன்னா ஓங்கி அறைவார்."

"நான் என்ன சார் பண்ண... நீங்கதான் ரொம்ப அவசரம்னு கூப்பிட்டுகிட்டு வந்தீங்க."

"எல்லாம் சரிய்யா... குளிர் வேற வாய்ல இருக்கற எச்சிலையே ஐஸா மாத்தப் பாக்குது. இப்ப எதாவது ஒரு நல்ல வழியைச் சொல்லு..."

"எனக்குத் தெரியலை சார். பேசாம கம்பளி இருந்தா போத்திகிட்டு காருக்குள்ளையே படுப்போம். விடியட்டும். சூரியன் வந்துட்டா பனி விலகி கொஞ்சம் பாதை தெரியலாம்..."

"அப்பகூட தெரியலாம்னுதான் சொல்றே... காலைல 5 மணிக்கு போனாத்தான்யா நாங்க சந்திக்க ஆசைப்பட்ட அந்த பிட்சுவைப் பார்க்க முடியும்."

"சாரி சார்... எனக்கு இதுக்கு வழி சொல்லத் தெரியலை..."

"சரி இன்னும் எவ்வளவு தூரம் இருக்கு?"

"மூணு மணி நேரம் பயணிக்கணும் சார். கி.மீ ஸ்டோனைக்கூட பார்க்க முடியல. அவ்வளவு மிஸ்ட்."

கார்த்திகேயனும், டிரைவரும் மாற்றி மாற்றி காஷ்மீரியில் பேசிக்கொண்டது அருணாச்சலாவுக்கு எரிச்சலைத் தந்தது.



"என்ன கார்த்தி... என்ன ரப்ச்சர்? என்ன சொல்றான் டிரைவர்?"

"பக்கத்துல ஒரு டிராவலர்ஸ் பங்களா இருக்காம். அங்க தங்கிக்கலாம்கறான்."

கார்த்திக் தடாலடியாக புளுகினான்.

"அப்ப காரை அங்க விடவேண்டியது தானே?"

"ஒரு அடிகூட எடுக்க முடியாதுங்கறான். எதிர்ல பாருங்க கார் பானட்கூட தெரியல..."

கார்த்திக் கையைக் காட்ட அருணாச்சலாவும் பார்த்தார். காரின் டேஷ் போர்டு கண்ணாடிக்கு அப்பால் சாம்பிராணி போட்டதுபோல பனிப் புகையின் ஆக்ரமிப்பு.

"நீ ஒரு இடியட்யா... பேசாம வண்டிய திருப்பு. பால்டாலுக்கே போவோம்..."

"முடியாது சார்— எங்க பார் மிஸ்ட்டா இருக்கும்போது எப்படி சார் வண்டியை எடுக்க முடியும்?"

கார்த்திக் பணிவான குரலில்தான் சொன்னான்.

"இடியட் இடியட்..." அருணாச்சலா முகம் சிவந்து போனது. பெருமூச்சு விட்டார். அந்த காற்றுக்கே பனிப் புகை சிகரெட் புகைபோல வெளிப்பட்டது.

தன் பிரவுன் நிற கோட்டை இறுக்கிக் கொண்டார். டையையும் இறுக்கினார்.

"சரி... ஷால் எதாவது இருக்கா சூட்கேஸ்ல...?"

"டிக்கில கம்பளியே இருக்கு சார்..."

"முதல்ல இறங்கி எடு... குளிர் தாங்க முடியல பார். நிச்சயம் நான் நாளைக்கு காச்சல்ல விழப் போறேன்.

www.cleanindians.com

கல்கத்தா கான்ஃப்ரன்ஸ், கன்யாகுமரில நம்ம டிப்போ பில்டிங்கோட கிருகப்பிரவேசம்னு எதுக்கும் நான் போகப் போறதில்ல பார்..."

"இல்ல சார்... போயிடலாம் சார்."

"ஆமா பரலோகத்துக்கு போயிடலாம்தான்..."

அவர் அலுத்துக்கொள்ள கார்த்தி காரைவிட்டு இறங்க முனைந்தான். காரின் கைப்பிடியே ஐஸாக மாறி கவ்வியது.

திறந்த நொடி குபுகுபுவென்று மிஸ்ட் உள்ளே நுழைந்தது. வேகமாக மூடியவன் பின்புறம் சென்று டிக்கியைத் திறந்தான். உள்ளே வாட்டர் கேன், ரஜாய், கம்பளி என்று அத்யாவசியப் பொருட்கள். மளமளவென்று ஒரு சிவப்பு ரஜாயையும் கம்பளியையும் எடுத்தான். திரும்ப டிக்கியை மூடிவிட்டு திரும்ப நிமிர்ந்தான்.

டிக்கியைத் திறந்து மூடிய சப்தத்தைத் தவிர ஒரு குண்டூசி விழும் சப்தம்கூட இல்லாத நிசப்தம். அதற்கு நடுவே டக்டக்கென்று ஷூ காலோடு யாரோ நடக்கின்ற மாதிரி ஒரு சப்தம் கேட்டது.

ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது.

பார்வை தானாக சப்தம் வந்த திக்கைப் பார்த்தது. மேஜர் சந்தர்பால்தான் தன் ராணுவ உடையில் விரைப்பாக நடந்து கொண்டிருந்தார்!

"வாவ்...!" கார்த்திகேயனுக்குள் ஒரு புதிய தெம்பு. அருகில் எதாவது ராணுவக் குடியிருப்பு இருக்கிறதா என்ன?

மனதில் எழும்பிய கேள்வியோடு "சார்..." என்றான். அதுவும் பலமாக... ஆனால் அவரோ பனிப் புகைப் படலத்துக்குள் திரும்பவும் மறைந்துவிட்டிருந்தார்.



கார்த்திகேயனும் சில அடி தூரம் ஓடிச் சென்று பார்த்தான். இருட்டில் கண்கள் கரித்தன. அந்த மிதியடி சப்தமும் கேட்கவில்லை! கைக்கெடிகாரத்தைப் பார்த்தான். மணி பன்னிரெண்டு.

## 4

"ஆய கலைகள் அறுபத்தி நான்கு என்பார்கள். இதில் ஜால வித்தை தனிரகம். எல்லோருக்கும் இது கைவந்துவிடாது. ஒருவர் ஜாதகத்தில் அதற்கு இடமிருக்க வேண்டும். ஜாதகம் அனுமதிக்கும் ஒருவர் தானாக இந்த பாதைக்கு வந்துவிடுவார். அவருக்கு ஸ்தூலம் சூட்சமம் எல்லாம் தன்னால் புரியும். மற்றவர்கள் இதெல்லாம் பொய் என்று ஒரு வார்த்தையில் கூறிவிட்டு ஒதுங்கிச் சென்றுவிடுவார்கள். உலகம் தோன்றிய நாள் முதலாக இப்படித்தான் நடந்து வருகிறது!"

பரப்பளவிலும் கொள்ளளவிலும் ஆனாலும் பெரியது அந்த மயானம்!

ஊருக்கு தெற்கில் அடர்ந்த மரக்கூட்டங்களுக்குக் கீழே கூம்பு கூம்பான சமாதிகளோடு கிடந்தது.

நான்கைந்து எரிமேடைகள்!

சதா அவையும் கனன்றுகொண்டே இருக்கும். இதனால் ஓரளவு வெளிச்சமும் மிதமான புகையுமாகவே அந்த மயானம் எப்பொழுதும் இருந்தது.

செங்கோட்டு சாமி என்பவன்தான் வெட்டியான். ஆனால் அவனேகூட நள்ளிரவுகளில் அங்கே தங்க அச்சப் பட்டவனாக ஏழு எட்டு மணிக்கே மயானத்தை விட்டுக் கிளம்பிவிடுவான்.

www.cleanindians.com

வெறிச்சோடிக் கிடக்கும் அந்த மயானத்துக்கு சில மாந்திரீகர்கள் மட்டும் அவ்வப்போது வருவதுண்டு. அவர்கள்கூட காப்பு கட்டிக்கொண்டு கையில் சக்கைப் பிரம்புடனும் அதன் நுனியில் சதங்கை மணிகளுடனும் தான் வருவார்கள்.

அப்படித்தான் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான், தர்மன் என்னும் ஒரு மாந்திரீகன். கறுப்புப் போர்வையால் உடம்பை மூடியவனாக கையில் பிரம்புடன் அது அவ்வப்போது சிணுங்க அவன் நடந்து வரும்போது லேசாய் புழுதி பறந்தது.

காலில் கவனமாக ஜாதிபத்திரி மரத்தின் பாதக் குரடுகளை அணிந்து கொண்டிருந்தான். சில வேர்கள், சில மரங்கள் துர் ஆத்மாக்களுக்கு சிம்ம சொப்பனம். கிட்டவே அண்டாது.

மயான முகப்பில் ராட்சஸர்களின் பம்பைத் தலைபோல இரண்டு தூங்கு மூஞ்சி மரங்கள்.

இதில் துளிர்க்கும் தேன் காய்களை சில குருவிகள் கொத்தித் தின்னும். அணில் கூட்டத்துக்கும் இந்த தூங்கு மூஞ்சி மரம் என்றால் கொள்ளைப் பிரியம். சௌகர்யமாக மரப்பட்டை இடுக்குகளில் புகுந்துகொண்டு தூங்க முடியும். இப்படி அவை தூங்கக்கூடும் என்பது தெரிந்தே சாரைப் பாம்புகளும், பச்சைப் பாம்புகளும்கூட அந்த மரத்தில் இரவானால் ஒரு ஊர்வலத்தை நடத்திப் பார்க்கும்.

சுவர் கோழிகளுக்கும் இந்த மரம் ஒரு அடைக்கல வீடு. இண்டு இடுக்குகளில் உட்கார்ந்து கொண்டு இரவு முழுக்க ரீங்காரமிட்டபடி இருக்கும். பாம்புகளுக்கும் மிகப் பிடித்த உணவு, பாம்போடு போட்டி போட ஆந்தைகள் படை எடுப்பதும் இந்த மரங்களிடம்தான்...



இத்தனை பிரதாபம் கொண்ட மரத்தடியில்தான் மயான நுழைவாயில் சுவரும், கிராதிக் கதவும் அமைந் திருந்தது.

அந்தக் கதவை ஒட்டி மயான வெட்டியான் செங்கோட்டுசாமி நின்றுகொண்டிருந்தான். ஏழு எட்டு மணிக்கே ஓடிவிடுபவன் மாந்திரீகன் தர்மனுக்காகத்தான் காத்திருக்கிறான் என்பது தர்மன் வரவும் அவன் பணிவாகக் கும்பிடுவதில் தெரிந்து போயிற்று.

"நல்லாருக்கியாலே..."—தர்மனிடம் விசாரிப்பு.

"ஏதோ பொழப்பு நடந்துகிட்டிருக்குதுங்க சாமி."

"ஒண்ணும் உபத்ரவமில்லையே..?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. இங்க தங்கினாத் தானுங்களே..."

"ஏண்டா பயப்பட்றே... சுட்டுப் பொழைக்கறது தாண்டா உன்னோட விதி. உன்னை எந்த உசுர் என்ன பண்ணிட முடியும்?"

"அப்படி இல்லீங்க.. மனசுக்கு பிடிக்கலீங்க. இப்பல்லாம் முந்தி மாதிரியும் கட்டைங்க வரதில்ல. எல்லாரும் எலெக்ட்ரிக் சுடுகாட்டு பக்கம் போயிட்றாங்க. பால் தெளிப்பு, பத்தா நாள் காரியம்லாமும் ஒரே நாள்ள முடிச்சிட்றாங்க. காலம் ரொம்ப மாறிப் போச்சுங்க..."

"நீதான் அப்படி சொல்றே... புகையப் பார்த்தா ஒண்ணுக்கு நாலு வெந்துகிட்டிருக்கற மாதிரி தெரியுதே..."

"அது இன்னும் சாஸ்த்ரத்துல நம்பிக்கை உள்ளவங் களோட கட்டைங்க..."

www.cleanindians.com

"அந்த நம்பிக்கை உள்ளவங்க எப்பவும் இருப்பாங்க. போகட்டும். கன்னிக் குழி விழுந்ததா கேள்விப்பட்டுதான் உன்னை காத்திருக்கச் சொன்னேன். எங்க புதைச்சுருக்கே...?"

"நேரா போங்க... ஈசான்ய மூலைல பாத்தாலே தெரியும்..."

"என்ன வயசு இருக்கும்?"

"ஒரு இருவத்தஞ்சு முப்பது இருக்கலாம். கல்யாணம் ஆகலைங்கற கவலைல விஷம் குடிச்சிடுச்சாம்..."

"ரொம்ப சௌகர்யமாகப் போச்சு. அப்ப நான் வரட்டா...?"

தர்மன் கேட்க செங்கோட்டு சாமி தலையை சொரிந்தான்.

"உன்னைத் திருத்தவே முடியாதுடா..." என்றபடியே ஒரு நூறு ரூபாயை எடுத்து கையில் வைத்தான்.

"சாமி ஈஈ..."

"என்னடா...?"

"கட்டாதுங்க. நீங்க போன பின்னால அதை திரும்ப போட்டு பழையமாதிரியே புதைக்கணும். நிறைய வேலை இருக்கு. விடியக்கறுக்கல்லையே பால் ஊத்த வந்துடு வேன்னு வேற சொல்லிட்டு போயிருக்குறாங்க..."

"எப்பவும் இதே பல்லவியைப் பாடு."

அலுப்புடன் இன்னொரு நூறு ரூபாயை எடுத்து வைத்தான். செங்கோட்டுசாமியும் ஆனந்தமாக பல்லைக் காட்ட தர்மன் மயானப் பாதையில் நடக்கத் தொடங்கி விட்டான்!



www.cleanindians.com



மணி ஒன்று!

ஆண்டியப்பன் டீக்கடை அந்த வேளையிலும் திறந்திருந்தது.

செங்கோட்டுசாமி கைத்தடியோடு வரவும் ஆண்டி யப்பன் ஒருமாதிரி பார்த்தான்.

"என்னலே பாக்கறே... ஒரு டீயைப் போடு."

"போடறது இருக்கட்டும். காட்டுல இருந்துதான் வாரீகளோ?"

"அதெல்லாம் உனக்கெதுக்கு...?"

"அது சரி... நான் கொட்டக் கொட்ட முழிச்சுகிட்டு கடையைத் திறந்து வெச்சிருக்கறது இரண்டாவது ஆட்டம் முடிஞ்சு வாரவங்களுக்கு. உன்னை மாதிரி சுடுகாட்டுல பேய் பிசாசோட மாரடிக்கறவங்களுக்குக் கிடையாது."

"ஆரம்பிச்சுட்டியா... அதெல்லாம் ஒண்ணும் கிடை யாது ஆண்டியப்பா. முனிசிபாலிடியில குப்பைங்களப் போட்டு எரிக்கற மாதிரிதான் நான் உடம்புங்களை எரிக்கறேன். பேயு, பிசாசுங்கறதெல்லாம் டுபாக்கூர். பொய்யி..."

"டீ குடிக்கறதுக்காக என்கிட்ட புளுகாதே. தர்மர் சாமி போனதை நானும் பார்த்தேன். ஒண்ணும் இல்லாட்டி அவர் எதுக்கு அப்பப்ப சுடுகாட்டுக்கு வர்றாரு..."

"அந்த ஆள் ஒரு டுபாக்கூர். பேயப் பிடிக்கறேன், குடுவைல அடக்கறேன்னு ஊரை ஏமாத்தத்தான் அந்த ஆளும் இப்படி எல்லாம் பண்றான்."

"ஊரை ஏமாத்தற ஆள் எதுக்கு அர்த்த ராத்திரியில அதுவும் கன்னிப் பொண்ணுங்கள புதைக்கற அன்னிக்கா

பார்த்து வரணும். வீட்ல இருந்துகிட்டே டபாய்க்கலாமுல்ல..."

"எல்லாம் ஒரு ஷோதான்..."

"நீ என்ன சொன்னாலும் சரி... நான் நம்பமாட்டேன். நீ இடத்தைக் காலி பண்ணு. உன்மேலகூட பொண நாத்தம் அடிக்குது."

"அட நம்பு ஆண்டியப்பா. அந்த ஆள் ஒரு வக்ரம் பிடிச்சவன். தேவடியாகிட்ட போற மாதிரிதான் கன்னிப் பொணங்களைத் தேடி வர்றான். பூசை, அதை மடக்கிப் பிடிக்கறதுங்கறதெல்லாம் சும்மா உதார்..."

—ஒரு டீக்காக செங்கோட்டுசாமி பேசிய பேச்சை நம்புவதா இல்லை புறந்தள்ளுவதா என்றே ஆண்டியப்பனுக்குத் தெரியவில்லை.

www.cleanindians.com

நல்லவேளை கிணங்கிணிங் என்று பல சைக்கிள்களின் சப்தம் ஒலிக்க பக்கத்து தியேட்டரில் படம் முடிந்து ஒரு கோஷ்டி அவன் கடையை நோக்கி வந்தது.

அதற்குமேல் செங்கோட்டு சாமிக்கும் அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. முறைத்தபடியே கிளம்பிப் போனான்.

## விடிந்துவிட்டது!

கும்முட்டி அடுப்பில் வைத்திருந்த பால் சுண்டிப் போயிருந்தது. பித்தளை வெந்நீர் பாய்லரும் அவிந்து போய் டொக்கு டொக்கு என்று சொட்டிக் கொண்டிருந்தது. கல்லா மேஜைமேல் உட்கார்ந்தபடியே தூங்கிவிட்டிருந்தான் ஆண்டியப்பன்.

சொடேரென்று முதுகில் யாரோ அடித்த மாதிரி இருந்தது. விழுந்தடித்தபடி எழுந்தான்.



எதிரில் கறுப்புப் போர்வையும் தலைப்பாகைத் தலையுமாக தர்மன்.

"சாமி ஈ..."

"என்ன சாமிஈ... என்னடா கடை நடத்தறே? இப்படியா தூங்கறது...?"

"கொஞ்சம் அசந்துட்டேன் சாமி..."

"சரி சரி ஒரு டீயை போடு..."

"ஆகட்டுங்க..."—அவனிடம் நல்ல வேகம். அப்படியே கேள்வியும்...

"சுடுகாட்டுப் பக்கம் போன மாதிரி தெரிஞ்சிச்சே. பூசை எல்லாம் முடிஞ்சிச்சுங்களா?"

—ஆண்டியப்பன் கேள்வி தர்மரை சிருட்டென்று அவனைக் குத்துப் பார்வை பார்க்கவிட்டது. அந்தப் பார்வையில் 'உனக்கெப்படித் தெரியும்' என்னும் கேள்வி.

"ரவைல அந்த வெட்டியான் பய வந்தான்; அவன்தான் சொன்னான்..."—டீயைக் கலக்கியபடியே மென்று விழுங்கினான் ஆண்டியப்பன்.

"என்னன்னு சொன்னான்...?"

"அதான்... சுடுகாட்டுல விடியவிடிய நீங்க ஏதோ பூசை பண்ணதா?"

"அவ்வளவுதான் சொன்னானா... இல்லை இன்னும் ஏதாவது சொன்னானா...?"

"கோவிக்காதீங்க சாமி. உங்க கையால கொடுத்த எந்திரத்தை மாட்டுனதுல இருந்துதான் என் கடைக்கும் நாலு பேர் வர்றாங்க. உங்ககிட்ட நான் பொய்

சொல்வேனா..."—பதவிசான பேச்சோடு அந்த அரக்கு வண்ண திரவத்தை தர்மன் எதிரில் நீட்டினான்.

"சமாளிக்காதே.. செங்கோட்டுசாமி என்ன சொன்னான்னு நான் இப்ப அப்படியே சொல்லவா?"

"சாமி ஈ ஈ."

"பேயு, பிசாசு எல்லாம் டுபாக்கூர்னு சொன்னானா...?"

"சாமி ஈ ஈ..."

"நான் வக்ரம் பிடிச்சவன், தேவடியாகிட்ட போற மாதிரி கன்னிப் பொணத்துகிட்ட வரேன்னானா...?"

"அ- ஆமா! அப்படியே சொல்றீங்களே..."

"இதென்ன புடலங்கா... என் சடைக்குட்டிகிட்ட கேட்டா உன் கல்லாவுல இப்ப எவ்வளவு சில்லரை இருக்குன்னும் சொல்லிடும்."

"நிசமாவா...?"

"நம்ப முடியல இல்ல... கொஞ்சம் பொறு..."

தர்மன் தன் கைவசம் உள்ள குச்சியின் நுனியை நெற்றிப் பொட்டருகே கொண்டு சென்றான். எதையோ முணுமுணுத்தான்.

பின் சில நொடிகளுக்குப் பிறகு குச்சியை விலக்கியவனாக "முந்நூத்திப் பத்து ரூபாய் நாப்பது காசு இப்ப உன் கல்லாவுல இருக்கணும். எண்ணிப் பார்த்துட்டு சொல்லு பார்ப்போம்..."

தர்மன் சொன்ன மறுநொடியே ஆண்டியப்பன் கல்லாவை விருட்டென்று இழுத்து எண்ணிப் பார்க்க ஆரம்பித்தான். எண்ணி முடித்தவன் முகத்தில் வியப்பின் குதிதாண்டவம்.



"என்ன?"

"கரெக்டா இருக்கு சாமி. எப்படி சாமி... எப்படி சொன்னீங்க?"

"அதான் சடைக்குட்டியோட சக்தி."

"யார் சாமிச அது சடைக்குட்டி?"

"நீ அதை எல்லாம் தெரிஞ்சிக்காதே. உனக்கெதுக்கு அதெல்லாம். அதேசமயம் அந்த செங்கோட்டு சாமி வந்தா உள்ற விடாதே..."

"நான் எப்பவுமே அவனை கிட்ட சேக்கறது இல்லீங்க. ஆனா பொணம் எரிக்கற அவனே பேய் பிசாசெல்லாம் ஒண்ணுமில்லேன்னு சொல்றதுதான் ஏன்னு புரியல."

"எல்லார் கண்ணுக்கும் தெரிய அது என்ன LIC கட்டடமா... எனக்கே அதைப் பார்க்க நாப்பது வருஷம் ஆச்சு. பத்து கோடி தடவைக்கும் மேல ஜெபிச்சு உரு ஏத்திகிட்ட பின்னாலதானே பாக்க முடிஞ்சிச்சு..."

"என்னென்னமோ சொல்றீங்க...?"

"நான் எங்கடா சொன்னேன். இன்னும் எவ்வளவோ இருக்குடா இந்த பூமியில. சாத்தானோட பூஜை விளக்கும் ஒண்ணு இருக்கு. அது மட்டும் எங்க இருக்குன்னு தெரிஞ்சுட்டா போதும். நான் இப்படி சுடுகாடு எங்கேன்னு தேடி வந்தெல்லாம் சிரமப்படவே வேண்டாம். இந்த செங்கோட்டுசாமி மாதிரி பிச்சைக்கார பசங்க வாய்லையும் விழுந்து எழுந்திருக்க வேண்டாம்."

"அந்த விளக்குல என்னங்க இருக்கு... அது என்ன அலாவுதீன் விளக்குங்களா?"

"அலாவுதீன் விளக்கு வேற... இது வேற... அதைத் தேய்ச்சா பூதம் வரும். இதைத் தேய்க்கல்லாம் வேண்டாம். இதோட எட்டு திரில விளக்கை ஏத்தி..."

www.cleanindians.com

தர்மர் ஆவலாக சொல்ல வாயெடுத்து பிறகு தப்பு தப்பு என்கிற மாதிரி அப்படியே பாதியில் நிறுத்தியவர், "விடு... இதெல்லாம் எங்களோட போகட்டும்" என்றபடியே கையைச் சொடக்கி ஒரு எலுமிச்சம் பழத்தை வரவழைத்து அதை அவன் எதிரில் நீட்டினார்.

"எதுக்கு சாமி?"

"பிடி... இதை இப்படி முன்னால ஒரு நூல்ல கட்டு. வியாபாரம் இன்னும் சூடு பிடிக்கும். இந்த எடம் என்ன வாடகையா?"

"ஆமாங்க..."

"மூணு மாசத்துல இதை நீ வாங்கிடுவே..."

அவன் அதைக் கேட்டுப் பரவசப்பட, டீயை ஒரே வாயில் உறிஞ்சியவராக கிளாஸை வைத்துவிட்டு சிரித்தபடியே நகர்ந்தார்.

www.cleanindians.com

வித்தியாசமான மாந்திரீகர்தான்!

## 5

**"தொலைந்து போனது கிடைக்க வேண்டும் என்றால் தொலைத்த இடத்தில் தேட வேண்டும் என்பார்கள். அந்த இடத்தைத் தவிர்த்து உலகம் முழுவதும் தேடினாலும் தொலைந்து போனது கிடைக்காது.**

**சூட்சமமான விஷயங்களும் இப்படித்தான். இதற்கென்று ஒரு பார்வையும், தேடலும் இருக்கிறது. அதில் வராதவரை சூட்சம விஷயம் ஒரு அசுரப் பொய்யாகவே நம்மை நினைக்க வைக்கும்!"**



அந்த காலைப் பொழுதில் ஓரளவு பனிமூட்டம் விலகி பாதையும் தெரிந்தது.

அருணாச்சலா அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த கார் டிரைவர் மெல்லக் கண் திறந்து பார்த்தான். கார்க் கண்ணாடி மேலெல்லாம் பொட்டுப் பொட்டாக பனி நீர்த்துளிகள்.

அவன் உதட்டில் கொட்டாவி பிரிந்தது.

அதனால் லேசான சப்தமும் உருவாகி, அது அருகிலேயே அமர்ந்த நிலையில் இருந்த கார்த்திகேயனை எழுப்பியது.

"ஸலாம் மாலிக்..." என்றான் டிரைவர்.

"ஸலாம் ஸலாம்..." என்றபடியே கார்த்திகேயனின் பார்வை பின் பக்கமாய் திரும்பி அருணாச்சலாவைப் பார்த்தது.

கம்பளிக்குள் ஒரு தெருப் பிச்சைக்காரன் சுருண்டு படுத்திருக்கிற மாதிரி படுத்திருந்தார். மிக மெலிதாக குறட்டையையும் உதடுகள் வெளிப்படுத்திக் கொண்டிருந்தன.

"எழுப்புங்க... கிளம்புவோம். இனிமே கவலை இல்லை" என்றான் டிரைவர்.

"அதுசரி... ஆனா அந்த பிட்சுவை இன்னிக்கு பார்க்க முடியாதே. நாளைக்குக் காலைலதானே பார்க்க முடியும்?"

"அவரைப் பார்க்கவா ஸ்ரீநகர்ல இருந்து வர்றீங்க..."

"மெள்ளப் பேசு... சார் தூங்கட்டும்..."

மெலிதாக சொல்லிவிட்டுக் காரை விட்டு வெளியே வந்தான். டிரைவரும் இறங்கி சப்தமில்லாமல் கதவை மூடினான்.

பிறகு பரபரவென்று கைகளைத் தேய்த்துவிட்டுக் கொண்டு பெருமூச்சு விட சிகரெட் புகை போல பனிப்புகை ஒரு அரையடி தூரம் ஓடியது.

"மொய்தீன்! நேத்து ராத்திரி இந்தப் பனிக்கூடத்துக்கு நடுவுலையும் ஒரு மிலிட்டரிக்காரரைப் பார்த்தேன்..."

"சொன்னீங்களே.. எனக்கென்னவோ இங்க பக்கத்துல மிலிட்டரி கேம்ப் இருக்கற மாதிரியே தெரியல..."

"அவர் நடந்துதான் போனார். ஷூ சப்தமும் கேட்டது. அப்படின்னா பக்கத்துல நிச்சயமா கேம்ப் எதாவது இருக்கணும்."

"போய்ப் பார்க்கலாமா?"

"பார்ப்போம்... சார் கார்லயே தூங்கிகிட்டு இருக்கட்டும்..."

சொன்னபடி பேண்ட் பாக்கெட்டுக்குள் கையை விட்டுக்கொண்டு நடந்தான். நீண்ட தார்ச்சாலை.. இரு பக்கமும் மலைச்சரிவு. சரிவுகளில் அங்கும் இங்குமாய் சில பெயர் தெரியாத தாவரங்கள்.

சரிவின் ஆழத்தில் பனிநீர் ஆறாக ஓடும் அற்புதம் வேறு. புசுபுசுவென்று நுரை ததும்ப வெளிர் நீலத்தில் அது ஓடும் அழகு மனதை சொக்கவிட்டது.

பாதை எங்கும் ஈரம் வேறு..

"மிலிட்டரிக்காரரைப் பார்த்தேன்னீங்களே ஷூ போட்ருந்தாரா?" டிரைவர் மொய்தீன் நடந்தபடியே கேட்டான்.

"என்ன கேள்வி இது? இந்த மலைல ஷூ போடாம நடக்க முடியுமா..? அதுலையும் மிலிட்டரிக்காரங்களுக்கு ஷூவும் பெல்ட்டும்தான் பிரதானம்..."



"கரெக்ட் சார்... நீங்க ரொம்ப நல்லா காஷ்மீரி பேசறீங்க. எங்க கத்துக்கிட்டீங்க?"

"அத விடு.. என் எம்டி கிட்ட பீஏவா இருக்கணும்னா பத்து பாஷை தெரிஞ்சிருக்கணும். அவர் ஒண்ணும் சாதாரண ஆள் இல்ல. இவ்வளவு தூரம்லாம் அவர் கார்ல வந்ததே கிடையாது."

"மாலிக் பெரிய பிஸினஸ் மேனா?"

"ஆமாம் மொய்தீன்.. அவர் மேல ஒரு சின்ன கீறல் விழுந்தாலும் என் வேலை போயிடும். அவர் அவ்வளவு பெரிய புள்ளி..."

"அப்ப நீங்க ஃப்ளைட்ல போயிருக்கலாமே..?"

டிரைவர் மொய்தீன் லாஜிக்காகக் கேட்டது கார்த்திகேயனைக் கொஞ்சம் இடித்தது.

"அது எனக்குத் தெரியாதா.. காரணமாத்தான் அவர் கார்ல வந்திருக்கார். அவர் இப்படி வந்ததே யாருக்கும் தெரியாது. தெரியவும் கூடாது."

"ஏன் மாலிக்?"

"இதோ பார்.. நீ ஒண்ணு என்னை மாலிக்னு சொல்லு. இல்ல அவரைச் சொல்லு. குழப்பாதே"

"நாங்க உங்களை மாதிரி எங்களுக்கு வேலை கொடுக்கற எல்லாரையும் மாலிக்குனுதான் சொல்வோம். அது எங்க வழக்கம்..."

"சரி சரி.. ஷூ தடயம் எங்கையாவது தெரியுதா பார். அது கேம்ப் இருக்கற இடத்தை நமக்குக் காட்டலாம்.."

www.cleanindians.com

கார்த்திகேயன் அவனைக் கத்தரித்தான். பார்வையும் ஷூ தடயங்கள் எங்காவது தென்படுகின்றதா என்று பார்த்தன...

தார்ச்சாலையில் தடயங்கள் தெரியவில்லை. பக்கத்தில் அதல பாதாளச் சரிவு. அதில் நிச்சயமாக அந்த மிலிட்டரிக்காரர் இறங்கியிருக்க வாய்ப்பும் இல்லை.

கார்த்திகேயனும் விடாமல் பார்வையை விரட்டினான். நாலாபுறமும் ராட்சஸ சைஸ் வெள்ளைக் குல்லாய்களாக பனிமலைகள்!

நெடுந்தூரம் வந்ததில் ஒரு இடத்தில் இறங்கி நடக்க முடிந்தது போல சரிவு.

அதில் ஷூக்களின் தடயம்!

"ஏய் மொய்தீன்... இங்க பார்!"

கார்த்திகேயன் உற்சாகமானான். ஆனால் அந்த தடயங்கள் நேராக ஷிகாரா மலைக்குன்றை நோக்கித்தான் நீண்டிருந்தன.

எல்லா இடத்திலும் பனிப்பாளம் இருக்க ஷிகாரா குன்று மட்டும் துளியும் பனியின்றி காலை வெய்யிலில் பளீர் என்று துப்புரவாக பாறைகளோடு கண்ணில் பட்டது.

"என்னய்யா... அந்த ஒரு மலைல மட்டும் கொஞ்சம் கூட பனியே இல்ல..."

"அட ஆமாம்..."

"இந்த தடயங்களும் அங்கதான் போகுதாட்டம் இருக்கு. வா போய் பார்ப்போம்..."

"இப்ப அங்க எதுக்குங்க? உங்க எம்.டி. கார்ல முழிச்சுகிட்டா நம்மைத் தேடலாம்."

www.cleanindians.com



"எனக்குத் தெரியும் அவர் இப்ப முழிக்கமாட்டார். மிலிட்டரி கேம்ப் கண்ணுல பட்டா காபியோ, டீயோ கிடைக்க வழி இருக்கு. அதோட அவரைப் பார்த்தா சந்தோஷப்படுவார்..."

"எங்கங்க... எதிர்க்க அந்த மலைதானே தெரியுது- ஆமா புத்த பிட்சுவை தேட்றீங்களே எதுக்குங்க?"— டிரைவர் மொய்தீன் பிரதான கேள்வியை முதல் தடவையாகக் கேட்டான். கார்த்திகேயனுக்கு கொஞ்சமாய் நெஞ்சை அடைத்தது.

சாதாரண சந்திப்பாகவோ, இல்லை மதிப்பு மிக்க சந்திப்பாகவோ இருந்தால் பதிலும் தயக்கமே இல்லாமல் அதற்கு ஏற்ப உடனேயே வரும். ஆனால் இதுவோ அப்படி இல்லையே... அருணாச்சலா பார்க்க விரும்புவது ஒரு அந்தரங்க மர்மமான விஷயத்துக்காக... எனவே பதில் சட்டென்று தோன்றாதபடி ஒரு திணறல் கார்த்திகேயனிடம் கூடு கட்டியது. டிரைவர் மொய்தீனோ அதைப் புரிந்துகொண்டு அப்படியே விடாமல் தொடர்ந்தான்.

"நீங்களோ ஹிந்தூஸ்... நீங்க போய் ஒரு புத்த பிட்சுவைப் பார்க்க நினைக்கறது ஆச்சரியமா இருக்கு சார்..." என்றான். அதற்கு மட்டும் கார்த்திகேயனிடம் ஒரு உடனடி பதில்.

"புத்தர் நம்ம நாட்டைச் சேர்ந்தவர் மொய்தீன். அடிப்படையில அவரும் ஒரு இந்துதானே..."

"ஓ நீங்க அப்படி வர்றீங்களா...?"

"அப்படியேதான். இதற்கு மேல என்னைக் கேள்வி கேட்காதே. இப்பவே நான் ஒருநாள் கூடப்போற கவலைல இருக்கேன்.

என் பாஸ் வரைல ஒருநாள்ங்கறது ரொம்பப் பெரிய விஷயம். ஒரு நாள் வேஸ்ட் ஆனாலும் எவ்வளவு விஷயங்கள் ஸ்தம்பித்துப் போகும் தெரியுமா?"

நடந்தபடியே கேட்டான். மொய்தீனுக்கு நாள் மதிப்பெல்லாம் ஒன்றும் பெரிதே இல்லை.

"ஏதோ உங்களால ஒரு சவாரி கிடைச்சு வந்திருக்கேன் சார்... வாஸ்தவத்துல காஷ்மீர்ல நாங்கள்ளாம் ஈ ஓட்டிகிட்டிருக்கோம்..."

"ஏன்யா... அங்ககூட ஈ இருக்குதா என்ன?"

"விளையாடாதிங்க சார்... எங்க ஊரோட பலமே டூரிஸ்ட்களோட விசிட்தான். தீவிரவாதிகளுக்கு பயந்து கிட்டு யாரும் வர்றதில்லை. இதனால எங்களுக்கு எவ்வளவு சிரமம் தெரியுமா?"

"சிரமப்படற நீங்க ஏன்யா தீவிரவாதிகளை உள்ற விட்டீங்க...?"

"என்ன சார் நீங்க... யாராவது தெரிஞ்சு உள்ள விடுவாங்களா? எங்க ஊர் அழகைப் பார்த்து உலகமே கண்ணு வெச்சுடுச்சு. அதனால வந்த விளைவுதான் இது. எங்க ஊர்ல நூத்துக்கு தொண்ணூத்தி ஒன்பது பேர் இந்தியாவைத் தன் தாய் நாடாகவும் தீவிரவாதத்தை விஷமாகவும் தான் சார் நினைக்கறோம்."

"பரவால்லியே... நல்ல பற்றுதலோட பேசறியே. வெரிகுட். ஆமா... எப்படி இவ்வளவு மலைக்கூட்டத்துல இந்த ஒரு மலைமேல மட்டும் துப்புரவா பனியே இல்லை..."

"ஒருவேளை இது ஷிகாராவோ என்னவோ?"

"ஷிகாராவா?"



"ஆமாம் சார்... ஸ்ரீநகர்ல படகு வீடுகளை ஷிகாரான்னு சொல்வாங்க. அந்த பேர் இந்த பகுதியில ஒரு மலைக்கும் இருக்கறதா கேள்விப்பட்டிருக்கேன். இந்த ஷிகாராவுல உலகத்தோட கெட்ட சக்திகள்லாம் வசிக்கறதா ஒரு நம்பிக்கை..."

மொய்தீன் அப்படியும் இப்படியுமாக கஷ்டம் கவலைகளைப் பற்றிப் பேசிவிட்டு அப்படியே அந்த ஷிகாரா பற்றியும் தெரிந்தவன் போல் பேசியது கார்த்தி கேயனை மிரளச் செய்தது.

நடையைத் தேக்கினான்...

மேஜர் சந்தர்பாலின் பூட்ஸ்கால் தடயங்களும் அங்கங்கே தெரிந்தன.

"என்ன மொய்தீன் சொல்றே நீ... அப்ப இந்த மலை பேய் மலையா?"

"சார்... இருக்கலாம்னுதான்சொன்னேன். உடனே பயந்துட்டீங்களே சார்..."

"சரி எது வேணா இருக்கட்டும்... ஷூ தடயம் அங்கங்கே தெரியுது பார்..."

"திரும்பவும் சொல்றேன் சார்... நிச்சயம் இந்தப் பக்கத்துல எந்த கேம்பும் இருக்க வாய்ப்பு இல்லை. பேசாம நாம திரும்பி நடப்போமே...?"

"பயப்பட்றியா...?"

"இல்ல சார்... நேரமாகுதுல்ல. அதைச் சொன்னேன்."

"நேரமானா ஆகட்டும்... எப்படியும் இன்னிக்கு நாங்க புத்தபிட்சுவைப் பார்க்கப்போறதில்ல. நாளைக்குதான். வந்த இடத்துல என்னதான் இருக்குதுன்னு தெரிஞ்சுக் கத்தான் முயற்சிப்போமே..."

கார்த்திகேயனிடம் உற்சாகம் பீறிட்டது. ஷிகாரா மலைக்குன்றும் கொஞ்சம் கொஞ்சமாக தூரம் குறைந்து அவனை வரவேற்றது. நடுவில் நடந்துகொண்டிருந்த பாதைகளில் பனிப்பாளங்கள் வழி மறித்தன. அதன்மேல் கால் வைத்தபோது மிக மிருதுவாக இருந்தது.

"பார்த்து சார்..."

"எங்க பார் ஒரே பனியா இருக்கு... அப்படியே உட்கார்ந்து சறுக்குவோமா?"

"என்ன சார் இது... சின்னக் குழந்தை மாதிரி..."

"அப்பப்ப சின்னக் குழந்தையாவும் ஆகணும் மொய்தீன். அப்பதான் மனசு லேசாகும்..."

சொன்னபடியே கார்த்திகேயன் அந்த பனிப்பாறைகள் மேல் அமர்ந்தான். ஜீன்ஸ் பேண்ட்டை மீறி புட்டங்களில் சிலுசிலுப்பு ஊடுருவியது. உச்சி மண்டைவரை ஒரு மின்னோட்டமே நிகழ்த்தியது அது. எழுந்திருங்க சார்... உட்காராதீங்க... அப்புறம் பேண்ட் காயறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடும்..."

மொய்தீன் படபடத்தான். கார்த்திகேயனும் எழுந்து கொண்டான். ஒரே சிலிர்ப்பாக இருந்தது. காதுமடலில் ஈரக்காற்று சரிகமப பாடிற்று. 'ஸ்ஸ்ஸ்...' என்று தொண்டைக்குழி கடந்தது சப்தம்.

"எவ்வளவு அழகா இருக்கு இந்த இடம்... வாவ்!"

"போதும் சார்... திரும்புவோம். அங்க கார்ல உங்க எம்.டி. எழுந்திடப் போறாரு..."

"போலாம்... அவர் கேட்டா காபி டீ கிடைக்குதான்னு பாக்கப் போனேன்னு சொல்லிக்கலாம்..."



மெல்ல நடந்தபடியே பதிலுக்கு பதில் சொன்னபோது ட்ரொயிங்... ட்ரொய்ங்ங்...' என்று ஒரு சப்தம். நிசப்தமான அந்தப் பகுதியில் அந்த சப்தம் துல்லியமாகவே கேட்டது.

"என்ன சப்தம் மொய்தீன்?"

"தெரியலியே..."

இருவரும் சப்தத்துக்குக் காரணம் தெரியாமல் பார்வையை சுழலவிட ஒரு மறைவான பனிப்பாறை பின்னால் இருந்தபடி வந்துகொண்டிருந்தார் பிட்சு ஒருவர்!

அவரைப் பார்க்கவும் இருவரிடமும் திகைப்பு. அவரும் அவர்களைப் பார்த்து திகைத்தது மாதிரி இருந்தது. நெருங்கினார். தன் சப்பையான முகத்தில் பூசினது போன்ற கண்களில் ஒருவித தீர்க்கமுடன் இருவரையும் பார்த்தார்.

"ஹலோ..." கார்த்திகேயன் நட்போடு வாய் திறந்தான்.

"ஹூ ஆர் யூ...?" அவரிடம் ஆங்கிலத்தில் கேள்வி. கார்த்தியும் உற்சாகமாக பதில் சொன்னான்.

"நாங்க மெட்ராஸ்ல இருந்து வர்றோம். என் பேர் கார்த்திகேயன். லே'வுக்கு போய்கிட்டிருக்கோம்."

"இங்க எங்க போறீங்க...?"

"ஜஸ்ட்... ஜஸ்ட் ஒரு வாக்... அதோ அந்த பனியே இல்லாத மலைக்கு..."

"நோ... திரும்புங்க... அங்கெல்லாம் போக வேண்டாம்."

"அது சரி... நீங்க...?"

"பார்த்தா தெரியலியா? நான் ஒரு பிட்சு."

"அது தெரியுது... நீங்க எப்படி இங்க?"

www.cleanindians.com

"இது எங்க பிரதேசம்... நாங்க எங்க வேணா போவோம்."

"நீங்க போகலாம்... நாங்க போகக்கூடாதா?"

கார்த்திகேயன் அவரை மடக்கிவிட்டது மாதிரி கேட்டான். அவர் குத்துவது போல தொடர்ந்து பார்த்தார்.

"ஆமா... இங்க எங்கையாவது உங்க மடாலயம் இருக்கா... அங்க நாங்க சாப்பிட சூடா எதாவது கிடைக்குமா?"— அப்படியே பேச்சை மாற்றினான்.

"பிளாக் டீ கிடைக்கும். பரவால்லியா?"

"அய்யோ... அது அமிர்தமாச்சே... என் M.Dக்கும் பிளாக் டீன்னா ரொம்ப பிடிக்கும்..."

"அப்ப மிஸ்டர் அருணாச்சலாவும் வந்துருக்கார்னு சொல்லு."

பிட்சுவின் கேள்வி கார்த்திகேயனை ஒரு இடி இடித்தது.

"உங்களுக்கு... உங்களுக்கு எப்படித் தெரியும் அவரை...?"

"அவர் வரப்போறதா தகவல் வந்தது. அதான் அவரைத் தேடி நடந்துகிட்டிருக்கேன்..."

"அப்போ நீங்க... நீங்க..."

"நான்தான் பிட்சு லீ யுவான்..."

"ஓ... யூ... யூ... நீங்கதான் லீ யுவானா? அப்ப நாங்க லே'கிட்ட வந்துட்டோமா?"

"லே... தூரதான் இருக்கு... நான்தான் நீங்க பாதி வழியில தேங்கிட்டது தெரிஞ்சு உங்களைப் பார்க்க வந்து கிட்டிருக்கேன்..."



"எப்படி... எப்படி உங்களுக்கு நாங்க பாதி வழியில தேங்கிட்டது தெரியும்?"

"இப்போ இந்த கேள்விக்கு பதில் சொல்றதா பெரிசு? கமான்... அங்க உங்க M.D அருணாச்சலா காருக்கு வெளியே தவிச்சுகிட்டிருக்கார். அவரைப் போய்ப் பார்ப்போமே..."

லீயுவான் என்னும் அந்த பிட்சு மிக அழகாக அவன் கேள்வியைக் கத்தரித்துவிட்டு முன்னால் நடந்தார்.

அதை நடை என்றுகூட சொல்ல முடியாது... ஒருவித மாராத்தான் ஓட்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.

கார்த்திகேயனாலும், மொய்தீனாலும் அவரைப் பின் தொடரவே முடியவில்லை. ஆக்ஸிஜன் அவ்வளவாக இல்லாத காற்று அவனை மிகவே சோதித்து பெரிதாக மூச்சிரைக்கச் செய்தது!

தட்டுத்தடுமாறி நடந்து காரை நெருங்கியபோது பிட்சு சொன்னதுதான் உண்மை. அருணாச்சலா காருக்கு வெளியே புகை பிடித்தபடி டென்ஷனோடு நின்று கொண்டிருந்தார்.

பிட்சுவைப் பார்க்கவும் புருவத்தில் வளைசல். பிட்சு உடம்பை வளைத்து வரவேற்றார்.

"வெல்கம்... வெல்கம் மிஸ்டர் அருணாச்சலா..."

"என்னை... என்னை எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"டில்லில மிஸ்டர் குப்தா சொல்லித்தானே என்னைப் பார்க்க நீங்க வந்துருக்கீங்க. ஐ நோ... ஐ நோ..."

"அப்போ... நீங்க... நீங்க...?"— அருணாச்சலா நெற்றியைத் தேய்க்க, கார்த்தி தமிழில் இடைவெட்டினான்.

www.cleanindians.com

"சார் இவர்தான் நாம தேடிவந்த பிட்சு லீயுவான்."

"மைகாட்... இங்க எப்படி? நீதான் போய் கூட்டிகிட்டு வந்தியா?"

"இல்ல சார்... சும்மா கொஞ்ச தூரம் வாக் போனோம். வழியில பார்த்தோம். எப்படியோ நம்மை அடையாளம் தெரிஞ்சுகிட்டு விசாரிச்சார். எப்படின்னுதான் தெரியலை."

"என்னைய்யா சொல்றே... அப்ப நாம லே'கிட்ட வந்துட்டோமா?"

"இவரைக் கேட்டா இல்லேங்கறார். எது எப்படியோ பிட்சு லீயுவான் ஒரு அதிசய மனிதர்னு குப்தா சொன்னது சரியாத்தான் இருக்கு..."

"அப்ப கும்புடப்போன தெய்வம் எதிர்லையே வந்துடிச்சுன்னு சொல்லு..." அருணாச்சலா பரவசமடைய பிட்சுவுக்கும் அது புரிந்திருக்க வேண்டும்.

"நான் தெய்வமில்ல மிஸ்டர் அருணாச்சலா. சாதாரண மனுஷன். வெரி புவர்மேன்."

"யார்? நீங்களா...? இந்த நடுக்கற குளிர்ல உடம்புல ஒரு காவி வேட்டியோட இருக்கற நீங்க புவர்மேனா... நோ... நோ..."

கார்த்தி புகழ்வதுபோல் சிலிர்த்தான்.

"ஓ.கே... லெட் அஸ் மூவ். முதல்ல பிளாக் டீ. அப்றமா நீங்க வந்த விஷயம் பத்தி பேசுவோம்..."

"வாங்க கார்லையே போய்டலாம். போகலாம்ல?"

"வித்ப்ளெஷர்!"

கார் அடுத்த பத்தாவது நொடி கிளம்பியது. பாதையிலும் மிஸ்ட் விலகி வழி துல்லியமாகத் தெரிந்தது!

## 6

"உலகில் எவ்வளவோ ஆராய்ச்சிகள்! மண்ணைப் பொன்னாக்குவதிலே இருந்து பெண்ணை ஆணாக் குவது வரை எவ்வளவோ முயற்சிகள்.

இதில் உயிர் பற்றிய ஆராய்ச்சி மட்டும் ஒரு பெரிய கண்ணாமூச்சி விளையாட்டாகவே இன்றுவரை இருந்து வருகிறது.

'இறப்பு என்றால் என்ன?'

'இறப்பதற்கு முன்வரை இயங்கு சக்தியாகத் திகழ்ந்த உயிர் இறந்தபிறகு என்னாகிறது...? இறக்காமல் வாழவே முடியாதா...?' போன்ற கேள்விகளுக்கு விஞ்ஞானத்திடம் தெளிவான பதில் இல்லை. ஆனால் மெய்ஞானம் முடியும் என்கிறது... சராசரி வாழ்க்கைக் காலமான நூறு வருடம் என்பதை எவ்வளவோ மெய்ஞானிகள் பல நூறு வருடங்களுக்கு நீட்டித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வித்தை தெரியாதவரை அதை ஒரு கற்பனையாகத்தான் நினைக்க முடியும். வித்தையைக் கற்றவர்களோ, 'இது சொல்லிப் புரியவைக்கும் ஒன்றல்ல—சுய அனுபவம்' என்கின்றனர்.

எது உண்மை?"

அது என்னவோ தெரியவில்லை. மாயம், மந்திரம் என்று வாழ்பவர்கள் ஜனக் கூட்டத்தோடு சேர்ந்து வாழ்வதே இல்லை. தனியாக ஒரு மலை அடிவாரம் பக்கமாகவோ இல்லை ஏதோ ஒரு காட்டுக்குள்ளேயோ புகுந்துகொண்டு விடுகின்றார்கள்.

www.cleanindians.com

தர்மனும் தன் குடியிருப்பை ஒரு மலையடி வாரத்தில்தான் அமைத்துக் கொண்டிருந்தான். ஆஸ்ரமம் போல ஒரு குடிசை– சுற்றிலும் மரங்கள். முன்னால் நிறைய கார்கள்.

உள்ளே சின்னதாக துர்க்கையம்மனுக்கு ஒரு சன்னதி. அதன் முன்னால் ஒரு அலங்காரமான பலகை மேல் உட்கார்ந்துகொண்டு வந்திருப்பவர்களோடு பேசிக்கொண் டிருந்தான்.

வெளியே மரநிழலில் லோகநாதன் என்னும் பத்திரிகையாளன் ஒருவன் ஜோல்னா பை தொங்கும் தோளோடு தர்மன் குறி சொல்வதையும், எலுமிச்சம் பழத்தை மந்திரித்துத் தரும் அழகையும் நோட்டம் போட்டுக் கொண்டிருந்தான். ஆச்சரியம், அதிர்ச்சி, குழப்பம் என்று பல உணர்ச்சிகளும் மாறி மாறி லோகநாதன் முகத்தில் விளையாடிக் கொண்டிருந்தன.

சஃபாரி சூட்டில் ஒரு தொழிலதிபர். அவரது கார் டிரைவர் அவர் எதிரில் நிற்கக்கூட அச்சப்பட்டான். அப்படி ஒரு ஆளுமை. அப்படிப்பட்டவரே தர்மனின் காலில் விழுந்து எழுந்தபோது ஆச்சரியமாக இருந்தது. "நீங்க சொன்ன டயத்துலதான் அக்ரிமெண்ட் போட்டேன். அப்படியே டெண்டருக்கும் எழுதிக் கொடுத்தேன். எனக்கே அது கிடைச்சுடுச்சு. சாமி சொன்னா சொன்னது தான்கறது சரியாப் போச்சுங்க" என்று அவர் சொன்ன தெல்லாம் லோகநாதனுக்குள் சுழன்றடித்துக் கொண்டே யிருந்தது.

இறுதியாக அவனையும் தர்மன் கூப்பிட்டுவிட்டான்.

"தம்பி... நீங்கதானே லோகநாதன்கறவர்...?"

"ஆமாம்."

www.cleanindians.com



"சாமி கூப்பிடுது–" தர்மனின் உதவியாளர் கூப்பிட உள்ளே நுழைந்தான்.

'என் பெயர் எப்படி உங்களுக்குத் தெரியும்' என்று கேட்கத் தோன்றினாலும் அது ஒரு பெரிய விஷயமில்லை என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

"வா தம்பி... உக்கார்..." தர்மனும் கைகாட்டி எதிரில் அமரச் சொன்னான். லோகநாதனும் அமர்ந்தான்.

"என்ன விஷயம் சொல்லுங்க...?"

"என்ன விஷயமா...? என் பேரைக் கண்டுபிடிச்சு கூப்புட முடியுது. நான் எதுக்கு வந்திருக்கேன்கறது தெரியலியா?"

"ஏன் தெரியாம...? உழைச்சு பொழைக்காம மாயம், மந்திரம்னும், பில்லி சூனியம் ஏவல்னு ஏதேதோ சொல்லிகிட்டு வர்றவங்க போறவங்கள ஏமாத்திப் பொழைக்கறதும் ஒரு பொழப்பா– எப்படி அந்த பொழப்ப சாமர்த்தியமா ஒரு திடத்தோட நான் நடத்தறேன்னு தெரியணும்... சரிதானே?"

"பரவால்லியே... என் மனசுல இருக்கறத அப்படியே சொல்லிட்டீங்களே... உங்களுக்கு ஃபேஸ் ரீடிங், டெலிபதி இதெல்லாம் தெரியும்னு நினைக்கறேன்."

"எனக்கு வெங்கடாசலபதியைத் தெரியும். டெலி பதின்னா என்னன்னே தெரியாது. இப்படி எல்லாம் மனசுல இருக்கறத புட்டுப் புட்டு வைக்கறதுக்குப் பேர் தான் உங்க இங்கிலீஷ்ல டெலிபதின்னு சொல்வீங்களோ?"

"அப்படியும் சொல்வாங்கன்னு வெச்சுக்குங்களேன். ஆனா டெலிபதிங்கறது ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்காம, டெலிபோன் உதவியில்லாம பேசிக்கற ஒரு வித்தைன்னு சொல்வாங்க. எவ்வளவு தூரம் உண்மைன்னு தெரியாது."

"அப்ப உங்களுக்கு எல்லாத்துலையுமே ஒரு சந்தேகமும் இருக்குன்னு சொல்லுங்க..."

"சந்தேகப்படாம யார் இருக்காங்க சொல்லுங்க பார்ப்போம்... சந்தேகப்பட்டாதானே கேள்வி கேட்க முடியும்."

"சரி இப்ப உங்களுக்கு என்ன தெரியணும்...?"

"உங்க மாயம் மந்திரம்லாம் எந்த அளவு உண்மை?"

"அவ்வளவும் பொய்!"

பொட்டிலடித்தது தர்மனின் பதில்.

"பொய்யா...?"

"ஆமாம்... பொய்யேதான். எல்லாமே தகிடுதத்தம்."

"இல்ல... எனக்காக நீங்க வேணும்னே சொல்றீங்க?"

"அட என்ன தம்பி நீங்க... எதுக்கு வெட்டிப் பேச்சுன்னு நான் ஒரு வார்த்தைல பதில் சொன்னா அதைக்கூட சந்தேகப்பட்றீங்களே...?"

"அப்ப நீங்க சொன்னதை நான் அப்படியே பத்திரிகைல எழுதவா?"

"இல்லாட்டி மட்டும் எல்லாம் பெரிய உண்மைன்னு புகழ்ந்தா எழுதப் போறீங்க...?"

"அப்ப வெறுத்துப் போய்தான் இப்படி சொல்றீங்களா?"

"வெறுக்கறதுக்கு என்ன இருக்குது... ஏமாறத் தயாரா இருக்கறவங்களை ஏமாத்த வேண்டியது. ஏமாத்த முடியாதவங்ககிட்ட சரண்டர் ஆயிட வேண்டியது. இதுதான் எங்க பாலிசி..."

www.cleanindians.com



தர்மன் மிக சாதாரணமாக படுபடு கேஷுவலாகச் சொன்னான். லோகநாதனுக்குள் திணறல். நிறைய வாக்குவாதங்கள்... விளக்கங்கள்... என்று இந்த சந்திப்பு போகும், ஒரு சுவாரஸ்யமான கட்டுரை கிடைக்கும் என்று நினைத்தால் இந்த மனிதன் இப்படி பொசுக்கென்று முருங்கைக் கட்டை போல விஷயத்தை ஒடித்து விட்டானே...

வெறித்தான்.

சற்று முன்வரை எல்லாமே பொய் நம்பிக்கைகள் என்று நினைத்துக் கொண்டிருந்தவன் கொஞ்சம் புத்திசாலித்தனமாகவும் யோசிக்கத் தொடங்கினான். உலகில் தப்பான யாரும் இவ்வளவு தைரியமாகத் தங்கள் தப்பை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அதில் கொஞ்சம் வெட்கமும், தயக்கமும் நிச்சயமாக இருக்கும். தர்மனிடமோ சுத்தமாய் அது இல்லை.

தன்னிடம் விவாதம் செய்ய விருப்பமில்லாததால் ஒருவேளை இப்படிப் பேசுகிறானோ...?

"என்ன தம்பி... எனக்கு உங்ககிட்ட விவாதம் பண்ணப் பிடிக்காம நான் ஒரு வார்த்தைல முடிச்சுகிட்டதா நினைக்கறீங்களா?"

தர்மன் லோகநாதனின் மனதை அப்படியே படம் பிடித்தான்.

"அது... அது..."

"என்ன தயக்கம்... என்னை எந்த கணக்குல எடுத்துக்கறதுன்னே தெரியல... அப்படித்தானே?"

"ஆமாம்."

"அப்படி வாங்க வழிக்கு... எதையும் புரிஞ்சுக்க முயற்சி செய்யுங்க. முன்னாடியே ஒரு முடிவுக்கு வந்து அதுல நின்னுகிட்டு எதையும் பாக்காதீங்க..."

"அப்படின்னா...?"

"மாந்திரீகமும் ஒரு விஞ்ஞானம்தான் தம்பி..."

"இப்பதான்... இப்பதான் நீங்க நான் எதிர்பார்த்த விஷயத்துக்கு வர்றீங்க. எப்படி... எப்படின்னு சொல்லுங்களேன்."

"அணுகுண்டைப் பத்தி கேள்விப்பட்டிருக்கீங்களா?"

"எதுக்கு இப்ப இந்தக் கேள்வி...?"

"இல்ல... கேள்விப்பட்டிருக்கீங்களான்னு கேக்கறேன்."

"நிறைய... 'புத்தர் சிரித்தார்'னு கோட்வேர்ட்ல நம்ப வாஜ்பாய் கவர்ன்மென்ட் கூட அணுசக்தியை பரிசோதனை செய்து பார்த்தாங்களே?"

"அந்த குண்டை எப்படி செய்யறதுன்னு விஞ்ஞானிங்க கிட்ட கேட்டா அவங்க சொல்வாங்களா?"

"அது எப்படி... அது டாப் சீக்ரெட்டாச்சே..."

"அவங்க சொல்லலைங்கறதால அது பொய் இல்லையே...?"

"நிச்சயமா..."

"மாந்திரீகம் ஒரு விஞ்ஞானம்னு நான் சொல்றதும் அப்படித்தான். இதுவும் ஒரு டாப் சீக்ரெட். என்னால சொல்ல முடியாது."

"இல்ல... இல்ல... இது சாமர்த்தியமான பதில். நீங்க பயங்கர புத்திசாலி. என்னை இப்படி எல்லாம் சொல்லி

www.cleanindians.com



கட்டிப் போட முயற்சிக்காதீங்க. மாந்திரீகத்தை நான் புரிஞ்சுக்க விரும்பறேன்."

"அப்படின்னா என்கிட்ட ஒரு மாணவனா சேருங்க. அதுக்கு முன்னாடி உங்க ஜாதகத்தைக் கொண்டுகிட்டு வாங்க. அதையும் பார்த்துட்டு பிறகு சொல்றேன்."

"ஜாதகம் எதுக்கு?"

"எல்லாரும் எல்லாத்தையும் படிச்சு தெரிஞ்சுக்க முடியாது. மாயா சாஸ்த்ரம் படிக்க கர்மவினைல இடம் இருக்கணும்."

"இது... இதுவும் சாமர்த்தியமான பதில். எந்த ஒரு விஷயத்தையும் கத்துக்க ஆர்வமும் அக்கறையும் இருந்தா போதும். கூடவே உழைப்பு. அந்த விஷயம் தானா வசப்பட்டுடும்..."

"அதெல்லாம் இந்த ஒரு வித்தைக்கு மட்டும் பொருந்தாது..."

"இல்ல... பொருந்தும். மனுஷன் முயற்சி செஞ்சா முடியாதது எதுவும் இல்லை."

"அப்படியா?"

"என்ன அப்படியா...? நிலாவுல கால் வைக்கல? செவ்வாய் கிரகத்துக்கே சாட்லைட் அனுப்பலையா?"

"அப்படியா?"

"திரும்பத் திரும்ப அப்படியான்னா என்ன அர்த்தம்? மனுஷ சக்தியால எது முடியாது? ஒரு இல்லிட்ரேட்... படிப்பு வாசனையே இல்லாத நீங்க மாயம் மந்திரம்னு என்னென்னமோ பண்ணலாம். என்னால முடியாதா?"

"அப்ப மனுஷனால என்ன வேணா பண்ண முடியுமா?"

"எது முடியாது..? அதைச் சொல்லுங்க?"

"சரி.. நான் ஒரு விஷயத்தைச் சொல்றேன். வீட்டுக்கு வீடு நடக்கற விஷயம்தான். அரசாங்கமே இதைத் தடுக்க என்னடா பண்ணலாம்னு மண்டைய பிச்சுகிட்டிருக்கிற ஒரு விஷயம். அதைச் சொல்றேன். உங்களால முடியுமான்னு சொல்லுங்களேன்.."

"வீட்டுக்கு வீடு நடக்கற விஷயமா...? என்ன சொல்றீங்க?"

"குழந்தைப் பிறப்பதான் சொல்றேன். அது எந்த வீட்ல நடக்கலை?"

"அப்ப நான் குழந்தை பெத்துக்கணுமா?"

"கரெக்ட்.. உங்க முயற்சியால நீங்க கருத்தரிச்சு பத்து மாசம் சுமந்து ஒரு குழந்தையைப் பெத்துக் காட்டணும். முடியுமா?"

"இல்ல.. நீங்க திரும்பவும் விதண்டாவாதம் பண்றீங்க. ஒரு ஆண் எப்படி பிள்ள பெத்துக்க முடியும்?"

"முயற்சி.. உழைப்பு.. அப்படி இப்படின்னீங்க?"

"இயற்கைக்கு எதிரா எது செய்தாலும் உருப்படாதுங்கறது உங்களுக்குத் தெரியாது?"

"மாந்திரீகமும் அப்படித்தான். இது மட்டுமில்ல... இதைப் போல பல விஷயங்கள் இருக்கு தம்பி."

"நீங்க ஒரு ஆண். உங்களால இந்த மாய மந்திரங்கள்ள ஈடுபட முடியும்னா, நானும் ஒரு ஆண் என்னாலையும் முடியும்!"

"அப்படியா?"

www.cleanindians.com



"திரும்பவும் 'அப்படியா'ன்னு நக்கலா கேக்காதீங்க. என் தன்னம்பிக்கையை நீங்க என்ன பண்ணினாலும் எதுவும் செய்ய முடியாது.

எனக்கு ஒண்ணு உங்க விஷயமெல்லாம் மாய்மாலங்கறது தெரியணும். இல்லை அது உண்மைன்னா அது எப்டின்னு தெரியணும்."

"சரி.. உங்களுக்கு ஒரு பரீட்சை வைக்கறேன். அதுல நீங்க பாஸ் பண்ணிட்டா உங்களை நான் சேர்த்துகிட்டு வித்தைகளை சொல்லித் தரேன். எனக்கும் எனக்குப் பிறகு பேர் சொல்ல ஒரு சிஷ்யன் இல்லையேங்கற குறை இருக்கு.."

"குட்... என்ன பரீட்சை...? முதல்ல அதைச் சொல்லுங்க."

"இரண்டு பேரும் ஆண்னு சொன்னீங்கள்ள..?"

"இல்லையா பின்னே?"

"உருவத்துல ஆணா இருந்து பிரயோஜனமில்ல. உள்ளத்துலையும் ஒரு ஆணா இருக்கணும்."

"ஏதாவது வீர தீரச் செயல் செய்து அதை நிரூபிக்கணுமா?"

"ஆமா கத்தி கபடான்னு எதுவும் இல்லாம, முண்டா தட்டாம, முட்டி மோதாம நாம ஆம்பளைங்கறத காட்டற ஒரு பரிட்சை இருக்கு. அந்தப் பரிட்சைதான் மாந்திரீகத்துலையே ரொம்ப முக்கியமான பரிட்சை.."

"என்ன பரிட்சை அது?"

"இன்னிக்கு போயிட்டு நாளைக்கு ராத்திரி வாங்க. இரண்டு பேரும் சேர்ந்தே பரிட்சை எழுதுவோம்."

"மாறமாட்டீங்களே..."

"நீங்க மாறாம இருந்தா சரி..."

"அப்ப நான் இப்ப புறப்பட்றேன்."

"பாத்து போய்ட்டு வாங்க..."

தர்மன் விடை கொடுத்தான்.

லோகநாதனும் எதோ கூரை ஏறி கோழியாவது பிடிக்க முடிந்ததே என்கிற மாதிரி அங்கிருந்து புறப்பட்டான்!

தர்மன் முகத்தில் ஒருவித மர்மச் சிரிப்பு.

## 7

"உடம்பில் இருவகை சக்தி இருக்கிறது. ஒன்று ஓடியாடி உழைக்கத் தேவையான இயக்கச் சக்தி. இது சாப்பிடும் உணவுப் பொருளாலும் உடம்பிற்கு அளிக்கும் ஓய்வினாலும் கிடைப்பது.

இன்னொன்று அந்த இயக்க சக்தியை அப்படியே மாற்றி உடம்பை ஆளும் மனோசக்தி.

இந்த மனோசக்திதான் பெரியது.

இந்த சக்தி அதிகரிக்கும்போது உடம்பை ஆட்டிப் படைக்கலாம். சுண்டுவிரலால் ஒரு இரும்பு உருண்டையை சுண்டிவிட்டு ஓட விடலாம். வெறும் பார்வையாலேயே ஒரு இரும்புக் கம்பியை வளைக்கலாம்.

இந்த உச்சத்திற்கு வந்தவர்களுக்கு உடம்பும், ஆன்மாவும் தனித்தனி என்பது தானாக விளங்கி விடுமாம்!"



சூரியன் உச்சியில் இருந்தான்! அந்த பனிப் பள்ளத் தாக்கில் குளிரும் சற்று கட்டுப்பாட்டில் இருந்தது.

அண்ணாந்து பார்த்த பிட்சு லீயுவானுக்கு துளிகூட கண்களில் கூச்சமில்லை.

அப்படியே எதிரில் இருக்கும் அருணாச்சலாவையும், கார்த்திகேயனையும் பார்த்தார்.

பின் தனது மடாலயத்துக்குள் அவர்களைக் கூட்டிச் சென்றார்.

மடாலயம் பிலாய் மரத்துண்டுகளால் ஈரத்தாக்கு தலுக்கு ஈடு கொடுக்கும் விதமாக இருந்தது.

பீடம் ஒன்றில் யோக புத்தர் உருவம் ஒன்று.

முன்னால் கொத்து ஊதுபத்திகள் புகைக் கோடுகள் போட்டுக்கொண்டிருந்தன. இதமான மணம். ஒரு ஈச்சம் பாய் தரையில் விரிந்திருந்தது. பிட்சு அதில் இருவரையும் அமரச் சொன்னார். ஆனால் அருணாச்சலா கார்த்தி கேயனை 'நீ வெளியே போய்விடு..' என்கிற மாதிரி பார்க்க அவனும் புரிந்துகொண்டு வெளியேறினான். பிட்சு முகத்தில் ஒரு நூலிழைச் சிரிப்பு.

"நான் வந்திருக்கறது ஒரு முக்கியமான விஷயத்துக் காக.. அது என்னைத் தவிர யாருக்கும் தெரியக்கூடாது.." அருணாச்சலா அந்த சிரிப்புக்குக் காரணம் சொன்னார்.

"பணம் காசு சேர்ந்துட்டாலே எல்லாமே ரகசியம் தானே?"— பிட்சுவும் பதில் சொன்னார். அதில் குத்தல் இருந்தது.

"நீங்க முற்றும் துறந்தவர். நாங்க அப்படி இல்லையே.."

"சரி விஷயத்துக்கு வாங்க. நான் என்ன செய்யணும்?"

www.cleanindians.com

"இறந்துபோனவங்களோட நீங்க பேசுவீங்கன்னு கேள்விப்பட்டேன். முதல்ல நான் அதை நம்பலை. எங்க ஊர்லகூட ஆவிகூட பேசறேன்னு நிறைய பேர் இருக்காங்க. மை போட்டுப் பாக்கறது, குறி சொல்றதுன்னும் நிறைய பேர் இருக்காங்க..."

"அவங்க மேலெல்லாம் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?"

"ஆவி இருக்குன்னு சொல்றதையே நான் நம்பத் தயாரா இல்லை. அப்படி இருக்க எப்படி நான் அவங்களை நம்புவேன்."

"என்மேல மட்டும் எப்படி நம்பிக்கை வந்தது?"

"அதுக்குக் காரணம் என் உயிர் நண்பர் குப்தாதான். குப்தா ஒரு பிசினஸ் மேக்னட். இந்தியாவோட துணித் தேவைல பாதியை அவர் ஒருத்தரே பூர்த்தி செய்யறார். ஃபாரினுக்கும் எக்ஸ்போர்ட் பண்றார். அவர் மகன் ஒரு ஆக்சிடெண்ட்ல செத்துப் போய்ட்டான். பல முக்கியமான டாக்குமெண்ட்டுகள் அவன்கிட்ட இருந்தது. அதுக்கெல்லாம் மதிப்பு வெச்சா பல கோடி போகும். அது எங்க இருக்குன்னு தெரிஞ்சுக்க முடியாம அவர் தத்தளிச்சப்போ நீங்க குப்தாவுக்கு உதவி செய்து அவர் மகனோட ஆவிகூட பேசி அந்த டாக்குமெண்ட்டெல்லாம் ஸ்விட்சர்லாந்துல ஒரு பேங்க் லாக்கர்ல இருக்கறதைக் கண்டுபிடிச்சு சொன்னீங்களாம். இதை குப்தா என்கிட்ட சொன்னப்போ என்னால நம்ப முடியலை..."

"இப்ப நீங்க எதைத் தெரிஞ்சுக்கணும்?"

"என் நண்பன் சதாசிவம் திடீர்னு ஹார்ட் அட்டாக்ல செத்துப் போயிட்டான். அவனுக்கு என்னைப் பத்தின ஒரு சீக்ரெட் தெரியும்..."



...ளத்தூர், சென்னை

"அது என்ன சீக்ரெட்...?"

"அது... அது..."

"தயக்கமா இருந்தா சொல்ல வேண்டாம். இப்ப நீங்க அந்த சதாசிவத்தோட பேசணுமா?"

"ஆமாம்... அவன் ஆத்மாவோட பேச முடிஞ்சா நான் அந்த சீக்ரெட்டை தெரிஞ்சுக்குவேன்."

"நல்லது... இப்ப நீங்க சதாசிவத்தோட பேசணும் அவ்வளவுதானே?"

"ஆமாம்..."

"அதுக்கு முதல்ல உங்களுக்கு நம்பிக்கை அவசியம்."

"நம்பித்தானே வந்திருக்கேன்..."

"இல்லை... சந்தேகத்தோட அரை மனசா வந்திருக்கீங்க..."

"எப்படியோ வந்திருக்கேன்ல...?"

"எப்படியோ வந்திருக்கறது தப்பான ஒண்ணு. முழு நம்பிக்கை... அது இல்லேன்னா என்னால அவரைக் கூப்பிட முடியாது."

"தப்பா எடுத்துக்காதிங்க... கண்ணால பாத்து காதால கேட்கறது மேலேயே சந்தேகப்பட்றதுதான் மனுஷ ஜென்மம். அப்படி இருக்க எப்படி நம்பிக்கை வரும்? சதாசிவம் ஆத்மா இங்க வந்து என் கண்முன்னே தெரியட்டும். நான் நம்பறேன்."

அருணாச்சலா உண்மை பேசினார். ஆனால் பிட்சுவோ சிரித்தார்.

"நான் ஒண்ணும் தப்பா பேசலையே... என் மனசுல பட்டதை சொல்லியிருக்கேன்."

www.cleanindians.com

"குப்தா இப்படி எல்லாம் அவநம்பிக்கையோட பேசலை. அதனாலதான் அவர் மகனை அவரால பார்க்க முடிஞ்சது. அது தெரிஞ்சும் நம்பிக்கை வரலைன்னா எப்படி அருணாச்சலா?"

"மன்னிக்கணும். எந்த ஒரு விஷயத்தையும் நூறு சதம் நம்பறவன் ஜெயிக்க முடியாது. ஒரு சதம்... ஒரே ஒரு சதமாவது எச்சரிக்கையா நம்பாமலும் இருக்கணும். குப்தாகூட தப்பா எதையாவது புரிஞ்சு சொல்லியிருக்க லாம்னு ஒரு சின்ன சந்தேகம் எனக்குள்ள..."

மீண்டும் சிரித்தார் பிட்சு.

மெல்ல எழுந்திருந்து ஒரு இருட்டு அறைக்குள் சென்றார். திரும்பி வந்தபோது அவர் கையில் ஒரு மரப்பெட்டி.

அருணாச்சலா எதிரில் அதைத் திறந்தார்.

உள்ளே ஒரு தினுசான உலோக விளக்கும் அதில் எட்டு குழிகளும் இருந்தன.

கூடவே ஒரு வெண்பந்து போன்ற கண்ணாடிப் பந்து. அந்த கண்ணாடிப் பந்தை அரைகோளமாக அப்படியே வெட்டிப் பிரிக்க முடிந்தது. இப்போது இரண்டு அரைக் கோளங்கள். ஒன்றுக்குள் அந்த எட்டுக்குழி விளக்கை வைத்தவர் அதில் வாசனையான ஒருவித எண்ணெயை விட்டு திரி போட்டு திரியின் நுனியை நிமிண்டிவிட்டார். பின் வாயருகே கையைக் கொண்டு சென்று மூடியபடி சிருட்டென்று நாக்கை நீட்டினார். தீப்பெட்டியை உரசினது போல நாக்கின் நுனியில் ஒரு தீபச்சுடர்!

அருணாச்சலா வெலவெலத்துவிட்டிருந்தார். நாவில் எரியும் தீபச்சுடரை அப்படியே ஆட்காட்டி விரலில் பிடித்து அந்த எட்டுக்குழி விளக்கையும் ஏற்றினார்.

www.cleanindians.com



"எப்படி... எப்படி நாக்குல நெருப்பு வந்தது? ஹவ் இட் ஈஸ் பாசிபிள்?"

அருணாச்சலாவும் தன் அதிர்வைக் கேள்வியாக்கி னார். பிட்சு பதில் சொல்லவில்லை. விளக்கைப் பார்த்தார். விளக்கில் எட்டு தீபச்சுடர்கள். அதை அப்படியே மீத முள்ள கண்ணாடிக் கோளத்தால் மூடினார். கண்ணாடிப் பந்துக்குள் விளக்கின் சுடர்கள் ஒளிவிட்டதில் அந்தக் கண்ணாடிப் பந்தே ஒரு ஒளிக்கோளம் போலானது.

அந்த இடமே புதிய ஒளியால் மாறிப்போனது. பிட்சு கண்களை மூடி தியானிக்கத் தொடங்கியிருந்தார். அருணாச்சலாவுக்கு ஒன்றும் புரியவில்லை. மொத்தத்தில் இது ஒரு வித்தியாசமான அனுபவம் என்பது மட்டும் அருணாச்சலாவுக்குப் புரிந்தது.

பிட்சுவின் கையிரண்டும் வரம் கேட்பது போல் உயர்ந்திருந்தன. உதட்டில் ஏதோ முணுமுணுப்பு. அது என்ன பாஷை என்றே தெரியவில்லை.

நிசப்தத்தில் பிட்சுவின் பிரார்த்தனை மட்டும் தொடர்ந்து கொண்டிருந்தது. வெளியே கார்த்திகேயன் நகத்தைக் கடித்துக் கொண்டிருந்தான். மொய்தீன் நெருங்கி வந்து கேட்டான்.

"என்ன சார் நீங்க உள்ள போகலையா?"

"முட்டாள்... நான் அவரோட வேலைக்காரன். அவர் வந்துருக்கறது ஒரு ரகசியமான விஷயத்துக்கு. என்னை கிட்ட விடுவாரா?"

"அப்படி என்ன சார் ரகசியமான விஷயம்?"

"கோடீஸ்வரங்ககிட்ட பல ரகசியங்கள் இருக்கும். எதுவும் யாருக்கும் தெரியாது... ஏன்... என் M.D. மனசுல என்ன இருக்குன்னு அவர் மனைவிக்கேகூட தெரியாது."

"அந்த ரகசியங்களுக்கும் இந்த பிட்சுவுக்கும் என்ன சம்பந்தம்?"

"மொய்தீன்... நீ ஒருநாள் சம்பளத்துக்கு கார் ஓட்ட வந்தவன். கூட ஒரு நூறு ரூபாய் கேள் தரேன். இப்படி உனக்கு சம்பந்தம் இல்லாத கேள்விகள் கேட்காதே..."

"அதுக்கில்ல சார்... அந்த ஷிகாரா மலைக்குன்று பற்றி, இங்க இருக்கற சில பிட்சுக்கள் பற்றி நான் நிறைய கேள்விப்பட்டிருக்கேன். இவங்க பயங்கரமானவங்க."

"என் M.D. அதைவிட பயங்கரமானவர். அது உனக்குத் தெரியாது."

"சரி எனக்கென்ன வந்தது... நீங்க சொன்னமாதிரி நூறு ரூபா கூடவே தந்திடுங்க..."

"ஆயிரம் ரூபாயே தரேன். இப்படி எங்களுக்குக் கார் ஓட்டினதைப் பத்தியோ இங்க வந்ததைப் பத்தியோ யார் கிட்டையும் மூச்சு விடக்கூடாது நீ."

"ரொம்ப சந்தோஷம் சார்..."

வெளியே கார்த்திகேயனும், மொய்தீனும் குசுகுசுத்துக் கொள்ள உள்ளே பிரார்த்தனை தொடர்ந்து கொண்டிருந்தது.

அதற்கு ஒரு முடிவு வந்தமாதிரி அந்த கண்ணாடிக் கோளத்தின் ஒரு பாதி மூடிய நிலையில் இருந்து தானாகக் கீழே விழுந்தது.

தீபச்சுடர்களும் காற்று பட்டது போல சடசடவென்று ஆடின. பிட்சு அதைப் பார்த்துவிட்டு பரவசமானார். தன் சின்னக் கண்களை முடிந்த அளவு அகலமாக்கி "வந்துட்டியா சின்... வந்துட்டியா?" என்றார். சடாரென்று அருணாச்சலா பக்கம் திரும்பி "அருணாச்சலா அந்த

www.cleanindians.com



செத்துப்போன சதாசிவம் போட்டோ இருக்கா?" என்று கேட்டார்.

"இல்ல... திடீர்னு கேட்டா அவர் போட்டோவுக்கு நான் எங்க போவேன்..."

"சரி... அவர் சம்பந்தமான ஏதாவது ஒரு பொருள் இருக்கா...?"

அருணாச்சலா உடனே தன் சட்டைப் பாக்கெட்டில் இருந்து ஒரு பார்க்கர் பேனாவை எடுத்து "இது... அவர் எனக்கு பிரசண்ட் பண்ணின பேனா..." என்றபடியே கொடுத்தார்.

"சந்தோஷம்... கொண்டாங்க..." வாங்கிக்கொண்ட பிட்சு மளமளவென்று ஒரு நோட்டை எடுத்துவந்து அதை அருணாச்சலாவிடம் கொடுத்து "இதுல நீங்க கேட்க நினைக்கறதை எழுதுங்க... எழுதிட்டு நோட்டை மூடி வெச்சுடுங்க... மற்றதை சின் பார்த்துப்பார்..."

"அது யார் சின்?"

"சின் ஒரு மகா யோகி. சமாதியான பிறகும் எங்களுக்கு உதவிகிட்டிருக்கறவர். அவர் போய் உங்க சதாசிவத்தோட ஆன்மாவை கூட்டிகிட்டு வந்து உங்க கேள்விக்கு பதில் சொல்ல வைப்பார்..."

"எப்படி?"

"இந்த நோட்ல முதல்ல கேள்விகளை எழுதுங்க. கீழே உங்க நண்பரே வந்து பதிலை எழுதிக்காட்டுவார்..."

"நிஜமாவா?"

"சீக்கிரம்... விளக்கு அணையறதுக்குள்ள எழுதுங்க. அடிக்கடி சின்னை கூப்பிட்றதும் நல்லதில்ல. உம் சீக்கிரம். விளக்கு அணைஞ்சுட்டா திரும்ப சின்னை பத்து பதினஞ்சு நாளைக்குக் கூப்பிட முடியாது..."

"அப்படி ஒரு சக்தியா இந்த விளக்குக்கு?"

"ஆமாம்... இதைக் கொண்டு யார் வழிபாடு செய்தாலும் சின்னோட ஆத்மா வந்து உதவும். உம் சீக்கிரம்... உங்க கோரிக்கையை விலாவரியா எழுதுங்க..."

பிட்சு தூண்ட அருணாச்சலாவும் மளமளவென்று முதலில் ஆங்கிலத்திலும், பிறகு அந்த பிட்சுவுக்கு புரிந்தாலும் புரிந்துவிடும் என்று தமிழிலும் எழுதத் தொடங்கினார்.

'உயிர் நண்பர் சதாசிவத்துக்கு!

எப்படி இருக்கிறீர்கள்... உங்கள் மரணம் எனக்கு பெரிய இழப்பு. ஒருநாள் கூடுதலாக நீங்கள் உயிரோடு இருந்திருந்தாலும் என் வாரிசு யார் என்பது தெரிந்து போயிருக்கும். முறைப்படி நான் திருமணம் செய்துகொண்ட அமிர்தத்துக்கும் எனக்கும் குழந்தையே பிறக்காது என்பது உங்களுக்கும் தெரியும். இந்த நிலையில் சிறு வயதில் என்னால் கெடுக்கப்பட்டு பின் என்னால் கைவிடப்பட்ட மாயவரம் வனஜா கருக்கலைப்பு செய்யாமல் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றுப் போட்டுவிட்டு இறந்துவிட்டதாகக் கூறிய நீங்கள் அந்த குழந்தை யார், எங்கே இருக்கிறது என்பதை மட்டும் இறுதிவரை சொல்லவேயில்லை. எனது பல கோடி சொத்தும் வாரிசு இல்லாத நிலையில் கட்டிக் காக்கப்பட முடியாமல் போய்விடுமோ என்று அச்சமாக உள்ளது. என் மகன் இருக்குமிடம் உங்களுக்கு மட்டுமே தெரியும். நாளை கூறுகிறேன் என்று சொல்லிவிட்டு முதல்நாளே மாரடைப்பிலும் இறந்து போய்விட்டீர்கள். நான் இப்பொழுது தவித்தபடி இருக்கிறேன். என் மகன் யார்? எங்கே இருக்கிறான்? தெரிவியுங்கள். அவனை நான் தத்து எடுத்துக்கொள்வது போல என் மகனாக்கிக் கொள்கிறேன். எனக்கென்று ரத்தமும் சதையுமாக ஒரு வாரிசு இருக்கும்போது யாரையோ தத்து எடுத்துக்கொள்வதில் எனக்கு உடன்பாடில்லை. அவசியம் எனக்கு உதவவும்!

இப்படிக்கு
உங்கள் அருமை நண்பன்
**அருணாச்சலா!'**



ஒரு கடிதம் போலவே எழுதிய அருணாச்சலா அந்த நோட்டையும் மூடினார்.

பார்த்துக்கொண்டே இருந்த பிட்சு "சரி... நாம இப்ப ஒரு பத்து நிமிஷம் கண்களை மூடிப்போம். சின் உங்க நண்பரோட ஆத்மாவை கூட்டிக்கிட்டு வந்து இந்த நோட்டுல பதிலை எழுதிக் காட்டுவார். அதை எந்தக் காரணம் கொண்டும் நாம பார்க்கக் கூடாது. அப்படிப் பார்த்தா அது பெரிய ஆபத்து. பாக்கறவங்களுக்குக் கண் பார்வையும் போயிடலாம். எச்சரிக்கை... கண்களை மூடிக்குங்க..." என்றார். அருணாச்சலாவும் கண்களை மூடிக்கொண்டார்.

ஒன்று...

இரண்டு...

மூன்று...

நான்கு...

ஐந்து...

ஆறு...

ஏழு...

எட்டு...

www.cleanindians.com

ஒன்பது...

பத்து...

பதினொன்று...

பதினொராவது நிமிடத்தில் நிச்சயம் பத்து நிமிடம் ஆகியிருக்கும் என்கிற அனுமானத்தோடு கண்களைத் திறந்த அருணாச்சலா கைக் கெடிகாரத்தைப் பார்த்தார். பதினொரு நிமிடங்களே ஆகிவிட்டிருந்தன...

பிட்சுவும் புன்னகையோடு மூடியிருந்த நோட்டை எடுத்து நீட்டி திறந்து பார்க்கச் சொன்னார்.

அருணாச்சலாவிடம் அபரிதமிதமான படபடப்பு. துடிதுடிப்பு... ஒருபுறம் முட்டாள்தனமாய், பைத்தியக் காரத்தனமாய் செயல்படுவது போல ஒரு நினைப்பு. மறுபுறம் அய்யோ இப்படி நம்பிக்கை இல்லாமல் சிந்திப்பதால் ஒருவேளை சதாசிவத்தின் ஆத்மா வராமல் போய்விடுமோ என்கிற எச்சரிக்கை கலந்த பயம்.

கலவையான உணர்ச்சிகளோடு நோட்டைத் திறந்தவருக்கு குப்பென்று வியர்த்தது. உள்ளே அழகிய தமிழில் சதாசிவத்தின் அச்சு அசலான கையெழுத்தில் பதில்.

'மை டியர் அருணாச்சலா! வாழ்த்துக்கள்.

நான் இறந்த பிறகும் நீங்கள் இப்படி என்னோடு தொடர்பு கொள்ள வருவீர்கள் என்று எதிர்பார்க்கவேயில்லை. மிகவும் நன்றி. எவ்வளவோ கடமைகள் எனக்கிருக்க நான் விதி வசத்தால் உடம்பை இழந்துவிட்டேன். இருந்தாலும் உங்கள் தொடர்பு இப்பொழுது எனக்கு ஒரு பலம்.

உங்கள் மகன் யார் என்பதை நிச்சயம் கூறுவேன். அதற்குமுன் ஒரு முக்கிய செய்தி. இந்த



விளக்கு 'சின்' என்னும் ஒரு யோகியின் சத்திய விளக்காகும். இது யார் வசம் இருக்கிறதோ அவர்களுக்கு சின்னின் உதவியும் உண்டு.

அப்படிப்பட்ட இந்த சத்திய விளக்கு இன்னும் ஒரு மூன்று மணி நேரத்தில் அனாதையாகப் போகிறது. அதாவது இதைக் கொண்டு உங்களுக்கு உதவிக் கொண்டிருக்கும் இந்த பிட்சு மரணிக்கப் போகிறார். நல்லவேளை... நீங்கள் வந்தீர்கள். சற்று காத்திருங்கள். பிட்சு மரணமடைந்த பிறகு இதை எடுத்துக்கொண்டு கிளம்பிவிடுங்கள். இது உங்களிடம் இருந்தால் எனக்கும் வசதி. நானும் உங்களுடன் தொடர்ந்து பேசி எனது கடமைகளை முடித்துக் கொள்கிறேன்.

நீங்கள் சென்னை திரும்பிய பிறகு என்னை மறுபடி அழையுங்கள். உங்கள் மகன் பற்றி கூறுகிறேன். தைரியமாக செயல்படுங்கள். இந்த விளக்கைப் பறிக்க சில ஆவிகள் முயலலாம். உங்களை ஷிகாரா மலைப் பகுதிக்கும் இழுக்கலாம். போய்விடாதீர்கள். அங்கே போனவர்கள் உயிரோடு திரும்ப முடியாது. எச்சரிக்கை. மீண்டும் உங்களுக்கு என் வாழ்த்துக்கள்.

அன்புடன்
உங்கள் நண்பன்
சதாசிவம்.'

கடிதத்தைப் படித்த அருணாச்சலாவுக்கு குபீர் என்று வியர்த்தது. பிட்சுவோ துளையிடும் பார்வையோடு அவரை ஊடுருவியபடி இருந்தார்.

"பிட்சு ஜீ..."

www.cleanindians.com

"என்ன.. பதில் கிடைச்சிடுச்சா..?"

"கிடைச்சிடுச்சு... ஆனா..."

"என்ன...?"

"ஒண்ணுமில்ல.. நாங்க இன்னிக்கு இங்க தங்கிட்டு நாளைக்கு போகலாம்தானே?"

அருணாச்சலா விளக்கை அடையும் ஆசையுடன் சாமர்த்தியமாகக் கேட்ட அந்தக் கேள்வி முன்னால் பிட்சுவிடம் சிரிப்பு தொடர்ந்தது.

"பிட்சு ஜி.. நீங்க சிரிக்கறதப் பார்த்தா..."

"சிரிக்காம என்ன பண்ண... 'சின்' என்னோட குரு. அவர் மூலமா என் விதி முடியப்போவது எனக்கும் தெரியும் அருணாச்சாலா..."

"ஜீ..."

"பதறாதீங்க... உங்க நண்பர் நல்லவரில்லை, அதனாலதான் உங்களை இந்த விளக்கை எடுத்துக்கச் சொல்றார். அவரது ஆசை அடங்கலை. அவர் பேச்சை நீங்க கேட்காதீங்க."

"ஜீ..."

"நீங்க இந்த விளக்கோட இந்த பனிமலையை விட்டுப் போகமுடியாது. போக முயற்சி செய்தா உங்களை ஷிகாரா மலை ஆவிகள் விடாது. உங்க உயிரும் போயிடும். நீங்களும் செத்து அவரோட சேரணும்கறதுதான் அவர் விருப்பம்..."

"அப்படியா?"

"கடைசிவரை உங்க மகன் யாருங்கற கேள்விக்கு அவர் பதில் சொல்லவேயில்லை. ஆன்ம சொரூபத்துலையும் அவர் ஒரு வியாபாரியாதான் இருக்கார். இது உங்களுக்குப் புரியலையா?"

www.cleanindians.com



"புரியுது.. நல்லா புரியுது. எனக்கு எல்லாமே நம்ப முடியாத ஒரு கனவு போலத்தான் இருக்கு. இப்பதான் என்ன பண்றதுன்னே எனக்குத் தெரியலையே."

"குழம்பாதீங்க. எண்பது வருஷ யோக வாழ்க்கை உடையவன் நான். என் பேச்சைக் கேளுங்க. சின் என் குருநாதர். அமைதிக்காகவும் நன்மைக்காகவுமே இந்த விளக்கை நான் பயன்படுத்தணும்கறது அவர் விருப்பம். அதனாலதான் ஒரு சேவையா நான் இதை செய்துகிட்டிருக்கேன். உங்களைப் போன்ற கோடீஸ்வரங்க மரணத்துக்குப் பிறகு என்னாவோம்கறது தெரியாததால பணம் சேக்கற ஆசையில நிறைய பாவங்களை செய்திட்டீங்க. என்கிட்ட வந்து ஆன்மாக்களோட பேசும்போது உங்களுக்கு மரணத்துக்குப் பிறகும் ஒரு வாழ்க்கை முறை இருக்குங்கறது தெரிய வந்து பாவபுண்ணியத்துக்கு பயந்து நல்லவிதமா நடந்துக்குவீங்க.. அந்த மாற்றத்துக்கு நானும் என் குருநாதரும் பயன்பட்றதுல எங்களுக்கும் ஒரு ஆத்ம திருப்தி.

குப்தாவும் அப்படித்தான்! இப்ப அவர் பணம் சேக்கறதுல குறியா இல்லாம புண்ணியம் செய்யறதுல குறியா இருக்கார். செய்த பாவங்களுக்கும் பரிகாரம் தேடிக்கிட்டிருக்கார்.

நீங்களும் அப்படித்தான் நடந்துக்கணும். பேராசைப் பட்டு ஆத்மாக்களைக் கொண்டு ரகசியங்களை தெரிஞ்சுக்க முயற்சிக்கக்கூடாது.

அப்படிச் செய்தா அந்த பாவம் உங்களை விடவே விடாது..."

"ஒத்துக்கறேன்... என் நண்பர் பேச்சே அவர் எப்படிப்பட்டவர்கங்கறத சொல்லாம சொல்லிடிச்சு.

நானும் நீங்க சொல்றபடியே நடந்துக்கறேன். எனக்கு ஒரே ஒரு உதவி மட்டும் செய்ய முடியுமா?"

"என்ன...?"

"என் மகன் யார்.. எங்க இருக்கான்கறது எனக்குத் தெரிஞ்சா போதும். இதைக்கூட நான் செய்த பாவத்துக்கான பரிகாரமாத்தான் கேக்கறேன். அந்த பாவம்தான் எனக்கு ஒரு மகன் இருந்தும் என்னை அனாதையா தவிக்க விட்டுகிட்டிருக்கு.."

"கவலைப்படாதீங்க... என் குருநாதர் அதற்கு உங்களுக்கு உதவி செய்வார்.."

"இப்பவே.. இப்பவே அவர்கிட்ட கேட்டு சொல்லுங்களேன்."

"அப்படியே ஆகட்டும்.. நீங்க கொஞ்சம் வெளிய போய் காத்திருங்க. நான் உங்களைக் கூப்பிட்றேன்."

பிட்சு லீ யுவான் பணிவாகப் பேசி வாயிலை நோக்கி கையை நீட்டினார்.

அருணாச்சலாவும் பதட்டம் குறையாமல் எழுந்து வெளியேறினார்!

www.cleanindians.com

## 8

**"ஜாதகம் என்பது ஒரு மனிதனின் வரி வடிவம். மனிதன் என்பவன் பஞ்சபூதக் கலவை. இதனுள் ஆத்மா என்பது அனைத்தையும் இயக்கி இயங்கும் சக்தி. ஒரு ஜாதகம் என்பது அந்த ஜாதகரின் பஞ்சபூதக் கலவையை மறைமுகமாகச் சொல்வதோடு அவரது பூர்வீகம்,**



**முன்வினை, நடப்பு, எதிர்காலம் என்று எல்லாவற்றையும் அறுதியிட்டுச் சொல்லக்கூடியது.**

**ஜாதகம் என்பது ஒருவகையில் சங்கேத பாஷையும்கூட. இதைப் படித்து அதனுள் இருப்பதை அறிந்துகொள்வது என்பது கல்வியும், ஞானமும் கூடவே அருளும் கலந்த ஒரு விஷயமாகும்.**

**இதில் ஒன்று இருந்து ஒன்று விடுபட்டாலும் ஜாதகத்தை துல்லியமாக அறிய முடியாது.**

**ஜாதகம் சாஸ்த்ரம் இந்த உலகத்திற்கு அருளப் பட்டதும் இரண்டு காரணங்களுக்காகவே...**

**ஒரு ராஜ்யத்தை ஆளும் அரசனையன்றி மற்றவர்கள் ஜாதகத்தை திருமணப் பொருத்தத்திற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.**

**அரசன் மட்டும் ஜாதகத்தை நாட்டு மக்களின் நலன் கருதி சில முக்கிய முடிவுகள் எடுக்கப் பயன்படுத்தலாம்.**

**இதற்கன்றி ஜாதகம் மூலம் பலா பலன்களை அறிந்துகொள்ள முயலுதல் பெரிய பலன்களைத் தராது என்பது சில ஞானியர் கருத்து."**

லோகநாதன் தனது சூட்கேஸைக் குடைந்து கொண்டிருந்தான். டைரி ஒன்றைத் தேடிப் பிடித்து அதில் ஒரு தொலைபேசி எண்ணையும் கண்டுபிடித்து ஓடிப் போய் தொலைபேசியைச் சுழற்றினான்.

அந்த எண்கள் கன்யாகுமரியில் ஒரு வீட்டுக்குள் சப்தமிட்டு அங்கிருந்த குமாரநாடார் என்பவரை 'ஹலோ' சொல்ல வைத்தது.

"அய்யா நான் லோகு பேசறேன்.."

"நல்லது... சொகமா இருக்கியா?"

"இருக்கேங்க. நீங்க எப்படி இருக்கீங்க?"

"நல்லாருக்கேன்பா... என்ன ஆச்சு... ஏதோ ஒரு பத்திரிகைல வேலைக்கு சேரப் போறதா சொன்னியே சேர்ந்திட்டியா?"

"இல்லய்யா... அவங்க இப்ப எனக்கு சில வேலைங்க கொடுத்திருக்காங்க. அதை நான் நல்லபடியா முடிச்சுட்டா வேலை கிடைச்சிடும்."

"என்ன வேலை தம்பி...? அவங்க பத்திரிகைய உன் கைல கொடுத்து வித்துட்டு வரச் சொல்றாங்களாக்கும்."

"இல்லையா... இது எழுத்து வேலை. வித்தியாசமா பேட்டி, கட்டுரைங்க எழுதித் தரச் சொல்லியிருக்காங்க. நெத்தியில் அடிச்சமாதிரி இருக்கணும்னும் சொல்லிட் டாங்க. அதுக்குதான் முயற்சி பண்ணிகிட்டிருக்கேன்."

"நீ புத்திசாலி. எல்லாம் நல்லா பண்ணிடுவே..."

"எல்லாம் உங்க ஆசிர்வாதம்யா... அப்பறம்யா ஒரு முக்கியமான விசயம். அதுக்குத்தான் போன் பண்ணேன்."

"என்ன லோகு?"

"ஐயா எனக்கு என் ஜாதகம் வேணும். கிடைக்குமா?"

"ஜாதகமா... எதுக்குப்பா இப்ப உனக்கு அது?"

"காரணம் இருக்குய்யா. நான் விபரமா நேர்ல சொல்றேன். என் ஜாதகம் உங்ககிட்ட இருக்குதா?"

"இல்லையே தம்பி... உன்னை அந்த கிறித்தவ ஆஸ்பத்திரியில இருந்து நான் தத்து எடுத்துகிட்டு வந்தப்போ உன் பிறந்த தேதியைத்தான் சொன்னாங்க."

"அப்ப அது இருந்தா ஜாதகம் கணிச்சுடலாமா?"



"தாராளமா... என்ன திடீர்னு ஜாதகம் ஜோசியம்னு போய்ட்ட. எதிர்காலம் எப்படி இருக்கும்னு தெரிஞ்சுக்கற ஆசை வந்துடிச்சா?"

"அப்படித்தான் வெச்சுக்குங்களேன். என் பிறந்த தேதியைக் கொஞ்சம் சொல்லுங்களேன்."

"சரியா ஞாபகம் இல்லையே லோகு... ஆங் உன் பள்ளிக்கூட சர்டிபிகேட்டுல பார். இருக்கும்."

"அந்த தேதி போதுங்களா?"

"தேதி மட்டும் போதாது. பொறந்த இடம் நேரம் தெரியணும். நீ மெட்ராஸ்ல பொறந்தவன். காலைல சூரிய உதயத்தும்போது பொறந்ததா சொன்னது ஞாபகத்துல இருக்குது."

"அப்ப காலைல ஆறு மணிங்களா?"

"இருக்கலாம்... இருந்தாலும் அன்னிக்கு தேதிக்கு சூரிய உதயம் எத்தனை மணிக்கு நடந்திருக்கும்னு ஜோசியக் காரங்களை கேட்டா சொல்லிடுவாங்க. முன்னையாச்சும் பேப்பர் பேனா கூட்டல் கழித்தல்னு உசுரை விடணும். இப்பதான் கம்ப்யூட்டருங்க வந்துடுச்சே. தகவல் சொன்னா போதும் அடுத்த நிமிஷம் உன் ஜாதகத்தை அது டைப் பண்ணியே கொடுத்துப்புடுமே..."

"நல்லதுய்யா. நான் பாத்துக்கறேன். நீங்க உங்க உடம்பை கவனமா பாத்துக்குங்க. அத்தாச்சி, ரேகா, ரேகா பசங்கள ரொம்ப விசாரிச்சதா சொல்லுங்க."

"ஜாதகம் கணிச்சு பாத்த பிறகு என்ன பலன் சொன் னாங்கன்னு சொல்லு. எனக்குத்தான் இன்னும் வேளை வரலை."

www.cleanindians.com

"ஆரம்பிச்சுட்டீங்களா... நீங்க ரொம்ப நாள் இருக்கணும்யா. எனக்குக் கல்யாணம், அப்புறம் பேரன் பேத்திய பாக்கறதுன்னு எவ்வளவு இருக்குது."

"அப்ப பொண்ணு பாருன்னு சொல்லாம சொல்றியா?"

"முதல்ல வேலைய்யா. முத மாசம் சம்பளம் வாங்கிட்டு நேர்ல வரேன். அப்புறம் நீங்க சொல்ற பொண்ணு கழுத்துல தாலியைக் கட்டறேன். சரிங்களா?"

"சந்தோஷம்... வேற ஒண்ணுமில்லையே..."

"இல்லைய்யா... வெச்சுட்டறேன்."

ரிசீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தான். அடுத்த குறி கம்ப்யூட்டரில் ஜாதகம் கணிக்கும் இடம் எங்கே என்று தேடுவதுதான்...

சௌகர்யமாக அந்த STD பூத்திலேயே ஒரு விளம்பர நோட்டீஸ் கை கொடுத்தது. அவனுக்கும் 'அப்பாடா' என்று இருந்தது!

துர்க்காதேவி சிலைமுன் நிஷ்டையில் இருந்தான் தர்மன். ஜாதகத்துடன் லோகநாதன் வரவும் கண்களைக் கூடத் திறந்து பார்க்காமல் "வாங்க தம்பி..." என்றான். லோகுவும் அவன் எதிரில் அமர்ந்தான். கையில் ஜாதகக் காகிதம். தர்மன் கண்களைத் திறக்காமலே "கைல இருக்கற அந்த ஜாதகத்தை ஆத்தா சிலையோட திருவடிகிட்ட வை..." என்றான்.

லோகநாதனுக்கு ஆச்சரியத்துக்குமேல் ஆச்சரியம் தவணையில் வரும் காவேரி நீர்மட்டம் போல ஏறிக் கொண்டே போனது.



மெல்லக் கண்களைத் திறந்தவன் ஒரு மாதிரி லோகுவைப் பார்த்தான். அந்தப் பார்வையே நீ ஒரு விடாக்கண்டன் என்றது.

"நீங்க கேட்ட ஜாதகம். அதப் பாத்துட்டு சொல்லுங்க."

"ஜாதகம் இருக்கட்டும்— ஒரு பரீட்சை இருக்குன்னு சொன்னேனே. மறந்துட்டீங்களா?"

"அந்தப் பரீட்சையையும் மறக்கல. ஜாதகம் அனுமதிக்கணும்னு சொன்னதையும் மறக்கல. அதான் கஷ்டப்பட்டு ஜாதகத்தைக் கண்டுபிடிச்சு கொண்டு வந்துருக்கேன்."

"உங்க ஜாதகத்தைக் கண்டுபிடிக்கறதே உங்களுக்கு கஷ்டமான விஷயமா இருந்துருக்கா?"

"ஆமாம்... நான் அப்பா அம்மா இல்லாத ஒரு அனாதை. கன்யாகுமரியிலுள்ள ஒருத்தர் என்னை ஆஸ்பத்திரியில இருந்து தத்து எடுத்து வளர்த்து ஆளாக்கினார்.

'கன்னத்தில் முத்தமிட்டால்' சினிமாவுல வர்ற மாதிரியே பதினைஞ்சு வயசு இருக்கும்போது நான் யார்ங்கற உண்மையையும் சொல்லிட்டார். விடுங்க... அதெல்லாம் ஒரு கதை. பரீட்சை என்ன அதைச் சொல்லுங்க..."

"ரொம்ப சுருக்கமா உங்க வரலாற்றை சொல்லிட்டீங்களே... சபாஷ். இந்தப் பரீட்சை உங்க மனசு எவ்வளவு திடமானதுன்னு தெரிஞ்சுக்கற பரீட்சை. இப்படி ஒரு பரீட்சை பற்றி நான் இத்தனை நாள்ள யோசிச்சதுகூட இல்ல. ஆனா நேத்து உங்க பேச்சு, என் பதில் எல்லாமா சேர்ந்து என்னை இந்தப் பரீட்சைக்கு தயார்படுத்திடிச்சு."

"பீடிகை போதும்... பரீட்சை என்ன சொல்லுங்க."

"சொல்றேன். அந்த அறைக்குள்ற போங்க. அங்க ஒரு பொண்ணு இருக்கா. அவளை நீங்க ஓவியமா வரையணும்."

"ஓவியமாவா...? ஒரு பொண்ணைப் பார்த்தா...? நான் ஓவியன் இல்லையே..."

"அது எனக்கும் தெரியும். உங்களால முடிஞ்ச அளவு வரையுங்க... அது போதும்."

"அய்யோ எனக்கு சாதாரணமா ஒரு யானை படம் போடக்கூட வராது."

"தம்பி... இது உங்களுக்கு ஓவியம் வரையத் தெரியுமாங்கறதுக்கான பரீட்சை இல்ல. எந்த தடுமாற்றமும் இல்லாம இப்ப என்ன நிலைல இருக்கீங்களோ அந்த நிலைல நீங்க மாறாம இருக்கீங்களான்னு தெரிஞ்சுக்கத் தான் வரையச் சொல்றேன்."

"ஓவியம் வரையப் போனா நான் மாறிடுவேனா... புரியலையே..."

"அந்தப் பெண் உருவம் உங்களை மாத்த முயற்சி எடுக்கும். மனக்கட்டுப்பாடு இருந்தா நீங்க மாறாம இருந்துடலாம்..."

"அப்படின்னா?"

"பேசிகிட்டே இருந்தா எப்படி...? வாங்க நானும் வரேன். நான் எப்படி இருக்கேன்னு நீங்க பாருங்க. நீங்க எப்படி இருக்கேன்னு நான் பாக்கறேன்."

"நீங்க சொல்றத பார்த்தா அந்தப் பெண் நிர்வாணமா..."

"உங்க யூகம் சரி. அவங்க ஓவியம் வரைய மாடலா போஸ் கொடுக்கறவங்க. மற்றபடி தப்பானவங்க கிடையாது."



"அய்யோ..."—லோகுவின் உதட்டில் அரற்றல். உடம்பிலும் லேசான நடுக்கம்... நெற்றிப் பொட்டிலும் படுவேகமான வியர்வைத் துளிர்ப்பு.

"என்ன தம்பி... என்ன யோசனை?"

"இல்ல... நீங்க இப்படி ஒரு பரீட்சை வைப்பீங்கன்னு நான் ஓரஞ்சாரமாகூட யோசிச்சு பாக்கலை."

"ஆண்மைன்னா என்ன தம்பி? ஒரு பெண்ணோட காமத்தை அடக்கறதுதான்னு சொல்வாங்க. ஆனா தனக்குள்ற காமத்தை அடக்கிக்கறதுதான் உண்மையான ஆண்மை. அதுக்கு மனசும் உடம்பும் ஒத்துழைச்சாதான் இந்த வித்தைக்குள்ளையே நுழைய முடியும்."

பேச்சோடு எழுந்து அவன் தோளில் கை போட்டு அவனை அழைத்துச் சென்றார். அறைவாசல் வரை சென்ற லோகநாதனும் அதற்குமேல் உள்ளே செல்ல தயங்கினவனாக "இல்லை... நான் வரலை... என்னால முடியாது."

"ஏன்... நேத்து அந்த பேச்சு பேசினீங்க...?"

"வாஸ்தவம்தான். நான் நீங்க பரீட்சைன்னு சொன்னதை சரியாப் புரிஞ்சுக்கலை. இப்பவே நான் என் தோல்வியை ஒத்துக்கறேன். ஒரு பெண்ணை நிர்வாணமா பார்த்துட்டு உணர்ச்சி வசப்படாம மரக்கட்டையா இருக்க என்னால முடியாது. என்னால மட்டுமில்ல என் வயசுப் பசங்க யாராலையும் முடியாது. அப்படி இருந்தா அவங்களுக்கு இந்த சமூகத்துல வேற பேர்."

அவன் பதிலைக் கேட்டு சிரித்தான் தர்மன். மளாரென கதவைத் திறந்தான். உள்ளே யாரும் இல்லை. லோகுவுக்கு பலத்த ஏமாற்றம்.

www.cleanindians.com

"என்னங்க... பொண்ணு, மாடல்னுல்லாம் சொன்னீங்க. யாரையும் காணோமே..."

"சும்மா சொன்னேன் தம்பி. தைரியமா அறைக்குள்ள நீங்க போனாலே ஜெயிச்சிருப்பீங்க. நான்லாம் எட்டிக்காயை தினம் அரைச்சு கொஞ்சம் கொஞ்சமா சாப்பிட்டு ஸ்கலிதத்தை கல்லாக்கிட்டவன். அதனாலதான் என்னாலையே காமத்தை ஜெயிக்க முடிஞ்சது. இப்ப புரியுதா... எல்லாத்தையும் எல்லாராலையும் பண்ண முடியாதுங்கறது..."

தர்மனின் கேள்வி முன் லோகநாதனின் தலை கொஞ்சம் போல குனிந்தது.

"மந்திர சாஸ்த்ரம் ஒரு சமுத்ரம்... அதுவும் சுறாவும் திமிங்கலமும் நீந்தற சமுத்தரம். அசாத்திய மனோதிடம், உபாசனா சக்தி, காமம், பசி இவைகளை ஜெயிக்கற ஆற்றல்— இதெல்லாம் இதுக்கு பிரதானம்... போகட்டும்... உண்மையை கூச்சப்படாம ஒத்துக்கிட்ட ஒண்ணே போதும். வாங்க... ஜாதகத்தைப் பார்ப்போம்..."

தர்மன் திரும்பச் சென்று துர்க்காதேவி சிலைமுன் உள்ள பலகை மேல் அமர்ந்தவனாக சிலையின் காலடியில் இருந்த ஜாதகக் காகிதச் சுருளை எடுத்து விரித்தான்.

அதில் கட்டங்கள்... கிரகங்களின் வீட்டு நிலைகள். கூர்ந்து பார்த்து கூட்டிக் கழித்தவன் முகத்தில் மளமள வென்று ஆச்சரிய வரிகள் விழ ஆரம்பித்தன.

"என்னங்க... என் ஜாதகம் என்ன சொல்லுது?"

"நீங்க ஒரு அனாதைன்னு சொன்னீங்கள்ல?"

"அதுதான் உண்மைன்னாலும் குமார நாடாரய்யா என்னை தன் மகனாதான் நினைக்கறார். என்னை தத்து



எடுத்துகிட்ட பிறகு ரேகான்னு எனக்கு ஒரு தங்கச்சியும் பிறந்தா. அப்படிப் பார்த்தா நான் அனாதை இல்லைங் கறதுதான் உண்மை."

"அதுமட்டுமில்ல தம்பி... நீங்க ஒரு கோடீஸ்வரனாகப் போறீங்க. உங்க எதிர்காலம்..."

பெரிதாக ஏதோ சொல்ல வந்த தர்மன் சட்டென்று தன் வாய்க்கு பூட்டு போட்டுக் கொண்டான்.

"என்னங்க... என்ன சொல்லுது என் ஜாதகம்?"

"ஒண்ணுமில்ல. நீ அமோகமா இருப்பே. அதுக்கு மேல இப்ப எதுவும் உனக்கு தெரிய வேண்டாம்."

"ஏதோ கோடீஸ்வரன் அப்படி இப்படின்னீங்களே...?"

"ஆமா... கூடிய சீக்கிரம் கோடீஸ்வரனாவே."

"வேண்டாம்... எனக்கு பத்திரிகைல சப்-எடிட்டர் வேலை கிடைச்சா போதும்."

தர்மன் பதிலுக்கு மர்மமாய் சிரித்தான். அப்படியே "இந்த நிமிஷம் நீ என் சிஷ்யப் பிள்ளை... என்னடா வாங்க போங்கன்னு பேசினவன் திடீர்னு வா போங்கறானேன்னு நினைக்க வேண்டாம். குரு சிஷ்யனுக்கு நடுவுல எதுக்கு சம்பிரதாய மரியாதை...?"

"அப்ப இந்த மாந்திரீக விஷயங்களை எனக்குப் புரிய வைக்கப் போறீங்கன்னு சொல்லுங்க..."

"நிச்சயமா...!"

"அதுக்கு எவ்வளவு நாளாகும்...?"

"நாளா...?"

"ஆமாம்... நான் கட்டுரை எழுத வேண்டாமா?"

www.cleanindians.com

"இது ஒருநாள் இரு நாள்ள கத்துக்கற விஷயமில்ல தம்பி. வருஷங்கள் ஆகும்."

"சரிதான். அப்ப நான் இந்த ஜென்மத்துல கட்டுரை எழுத முடியாதுன்னு சொல்றீங்க..."

"எழுதலாம்... எழுதலாம்... இப்ப என்ன சீக்கிரமா நீ இதைப் பத்தி தெரிஞ்சுகிட்டு கட்டுரை எழுதணும். அவ்வளவுதானே?"

"ஆமாம்..."

"ஒரு ஒருமாசம் பொறு. அதுக்குள்ள உன் வாழ்க்கையே தலைகீழா மாறப்போகுது. அந்த மாற்றத்துக்குப் பிறகு நீ கட்டுரை, அந்த ஆசிரியர் வேலைன்னு எதையும் யோசிக்கமாட்டே..."

"இது என்ன... ஜாதகம் சொல்ற விஷயமா? இல்ல உங்க ஃபோர் தாட்—அதாவது அமானுஷ்ய சக்தியால சொல்றீங்களா?"

"எப்படி வேணா எடுத்துக்கோ. நான் சொல்றபடி நடந்தா உனக்கு சந்தோஷம்தானே?"

"முதல்ல நடக்கட்டும் பிறகு பார்ப்போம்..."

"பத்திரிகைக்காரங்களுக்கு உண்டான அதே சந்தேகத்தோட பதில் சொல்றியே..."

"சந்தேகப்படணும். ஒரு சதமாவது சந்தேகப்பட்டாதான் எச்சரிக்கையா இருக்க முடியும்."

கிட்டத்தட்ட அருணாச்சலா பிட்சு லீ யுவான் எதிரில் சொன்ன அதே டயலாக். தர்மன் பதிலுக்கு ஒன்றும் சொல்லவில்லை. ஊன்றி மட்டம் பார்த்தான்.

"சரி நான் சில கேள்விகள் கேட்கலாமா?"



"கேளு..."

"மாந்திரீகம்னா என்ன... வளவளன்னு இல்லாம ஒரு வார்த்தைல பதில் சொல்ல முடியுமா?"

"சொல்லலாமே.. மாயக்கலை. இதுக்கு தலைவன் சனியோட பையன் மாந்தி. அதாவது குளிகன்."

"மாயக்கலைன்னா மனுஷ சக்தி தேவை இல்லையா?"

"மனுஷ சக்தியோட இன்னொரு பக்கம்தான் மாய சக்தி."

"எப்படி...?"

"பல வருஷம் தவமிருந்து தெரிஞ்சுக்க வேண்டியதை சாமர்த்தியமா எப்படின்னு ஒரு கேள்விய கேட்டு தெரிஞ்சுக்கப் பாக்கறியே..."

"சரி... இறந்த உடனே உயிர் எங்க போகுது—அது ஆவியா நடமாடும்கறது உண்மையா?"

"உண்மை இல்லாமலா செத்த பொணத்தை போட்டுகிட்டு அந்த அழு அழறோம். அப்புறம் சமக்கிரியை, தர்ப்பணம், திவசமெல்லாம் பண்றோம்."

"சரி... ஆவி இருக்குன்னா ஏன் அதை பார்க்க முடியலை?"

"பாத்தாதான் நம்புவியா?"

"அப்படித்தான்னும் வெச்சுக்குங்களேன்."

"காத்தை பாக்க முடியல... அப்ப அது இல்லையா?"

"பாக்க முடியலேன்னாலும் உணர்றோமே...?"

"ஆவிகள் இருக்கறதையும் உணரத்தான் செய்யறோம்..."

"எப்படி? எப்படி?"

www.cleanindians.com

"நம்ம முன்னோர்கள் ஆவி தாம்ப்பா பல சமயங்கள்ள நம்மை பல ஆபத்துல இருந்து காப்பாத்துது. அவங்களை நாம நினைக்க மறந்தா நமக்கு சில கஷ்டங்களை கொடுத்து ஞாபகப்படுத்தறதும் அதுங்கதான்."

"இதெல்லாம் யூகம். காற்று இருக்கறதை எப்படி சுவாசிச்சு ஒவ்வொரு வினாடியும் உணருகிறோமோ அப்படி ஆவிகளை உணர வழி இருக்கா?"

"வழி இருக்கு- ஆனா உணர்ந்து என்ன பண்ணப் போறே?"

"இது என்ன கேள்வி. ஒரு நம்பிக்கைதான்."

"வேண்டாம் நம்பாதே விட்டுடு! உன்னை யார் நம்பச் சொன்னது. நம்பி என்ன ஆகணும்?"

"பதில் சொல்லத் தெரியலைன்னா அந்த விஷயத்தை பொசுக்குன்னு இப்படி முடிக்கறது உங்களுக்கு வழக்கமா போச்சு. நான் யாரும் எழுதாத விதத்துல இந்த அமானுஷ்யங்கள வெச்சு கட்டுரை எழுத விரும்பறேன். அதான் இப்படி கேட்கறேன்."

"எவ்வளவோ விஷயம் இருக்கே கட்டுரை எழுத... நீ ஏன் இந்த விஷயத்தைத் தேர்வு செய்தே?"

"இதுலதான் த்ரில் இருக்கு- இதப்பத்திதான் யாருக்கும் சரியா எதுவும் தெரியல. அது மட்டுமில்ல... ஏனோ சிறு வயசுல இருந்தே இந்த விஷயம் பத்திதான் நான் அதிகம் யோசிக்கறேன். எனக்கொரு நண்பன் இருந்தான். வாட்டசாட்டமா ரொம்ப அழகா இருப்பான். ஆட்டம் பாட்டம் எல்லாத்துலையும் சூரன். ஒருநாள் பொட்டுல அடிபட்டதுல பொசுக்குன்னு உயிர் போயிடிச்சு. உயிரோட அவன் இருந்தவரை எப்படியெல்லாம் இருந்தான். பிணமா அவனைப் பார்த்தப்போ என்னால நம்ப முடியலை. எது இப்படி இவனை சடலமாக்கிச்சு?



எது அப்ப அவனை விட்டுப்போய் அவன் பொணமானான்கற கேள்வில விழுந்து அல்லாடினேன்.

அதுமட்டுமில்ல... உலகமே உயிர் பயத்தை பிரதானமா நினைக்குது. உயிர்... எது உயிர்? அது என்ன? எப்படி இருக்கும்? அதை தெரிஞ்சுகிட்டே ஆகணும்கற வெறி இந்த நிமிஷமும் எனக்குக் குறையலை..."

"இப்படியே இரு. கூடிய சீக்கிரம் தெரிஞ்சுப்பே. எல்லாருக்கும் இப்படி தாக்கம் ஏற்பட்றதில்ல. கோடி பேர்ல ஒரு புத்தர்தான் கிட்டத்தட்ட உன்னை மாதிரி யோசிச்சவர். ஆனா அவருக்கு உண்மை தெரிஞ்சப்ப அவர் மௌனமாயிட்டார்- இப்ப இது போதும். என்னைப் பார்க்க ஆட்கள் வர ஆரம்பிச்சுட்டாங்க பார்..."

தர்மன் பேச்சோடு வெளியே காட்டினான். திண்ணையில் சிலர். லோகநாதனுக்கும் அதற்குமேல கேள்வி கேட்கத் தோன்றவில்லை.

நகர்ந்தான். தர்மன் திரும்பவும் அவன் ஜாதகத்தை கையில் எடுத்தான். அதைப் பார்த்துவிட்டு நிமிர்ந்து துர்க்காதேவி சிலையைப் பார்த்தவன் 'தாயே என் பூஜைக்கு வரமாத்தான் நீ இவனை அனுப்பியிருக்கியா... உன் கருணையே கருணை' என்று முணுமுணுத்தான்.

ஒதுங்கி நின்றபடி இருந்த தர்மனின் உதவியாளனுக்கு மட்டும் அது ஆச்சர்யமா இருந்தது!

## 9

"இந்த பிரபஞ்சத்தில் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. சாதாரண ஒரு கை தட்டும் விஷயம்கூட அதிர்வலையாக மாறி வெளியில் கலந்து

www.cleanindians.com

காற்றை பாதித்து மேகம் வரை சென்று பெய்யும் மழைநீரைத் தொட்டு முடிகிறது.

காரணமில்லாமல் ஒற்றைப்புல் கூட பூமித் தரையில் வளர்வதில்லை. பூமி ஒருவித சாய்மானத்தோடு இருப்பதில் இருந்து, அது சுழல்வதுவரை அனைத்தின் பின்னாலும் ஒரு திட்டமிடப்பட்ட கச்சிதமான இயக்க சக்தி ஒளிந்துள்ளது!"

காத்துக் கொண்டிருந்த அருணாச்சலாவிற்கு பொறுமையே போய்விட்டது. கார்த்திகேயன்கூட கிட்டே வந்து கேட்டான்.

"என்ன சார்... வந்த வேலை முடிஞ்சிடிச்சா? ஏன் உங்களையும் வெளியே போகச் சொல்லிட்டார் அந்த பிட்சு...?"

"தெரியல கார்த்தி... கூப்பிட்றேன்னு சொன்னார். கூப்பிடலை..."

"நான் வேணா பார்க்கட்டுமா?"

"வேண்டாம்... அவரே கூப்பிடட்டும்."

"வந்த காரியம் சக்ஸஸா சார்...?"—ஆர்வம் தாளாமல் கார்த்தி கேட்கவும் ஒரு சின்ன முறைப்பு அருணாச்சலாவிடம்.

"சாரி சார்..."—அவன் சாரி சொல்லி சற்று விலக, கதவைத் திறந்துகொண்டு பிட்சு அருணாச்சலாவைக் கூப்பிட்டார்.

அருணாச்சலாவும் ஆர்வமாக உள்ளே நுழைந்தார்.

"மிஸ்டர் அருணாச்சலா.... உங்க கோரிக்கைக்கு என் குருநாதர் பதில் சொல்லிட்டார். கூடிய சீக்கிரம் உங்க

www.cleanindians.com



மகனே உங்களைத் தேடி வருவான். கவலைப்பட வேண்டாம்..."

"வருவான்னா... எப்படி? அவன் என் மகன்தான்னு நான் எப்படி தெரிஞ்சுக்கறது?"

"இந்த விளக்கோட யார் உங்களப் பார்க்கறாங்களோ அவன்தான் உங்க மகனாம்..."

"இந்த... இந்த விளக்கோடையா...? எப்படி?"

"இதே விளக்குதான். இந்த சத்திய விளக்கு மூலமா அவரே உங்க மகனை அடையாளம் காட்றதா சொன்னார். ஆனா அதேசமயம் நீங்க ஒரு சத்தியம் செய்யணும்."

"என்ன?"

"எந்த காரணத்தைக் கொண்டும்நீங்க இதைப் பயன் படுத்தி எந்த ஆன்மாக்களையும் கூப்பிடக்கூடாது."

"ஏன்...?"

"என் குருநாதர் விருப்பத்தைச் சொல்லிட்டேன். அதுக்கான உறுதிமொழியை நீங்க தந்தா அவர் உங்களுக்கு உங்க மகனை அடையாளம் காட்டுவாராம்."

"நீங்க..."

"உம்... சொல்லுங்க... என்ன சொல்ல வர்றீங்க?"

"இதை நான் நம்பலாமா?"

"நிச்சயமா! இந்த விளக்கை நீங்க கொண்டு போயிடக்கூடாதுங்கற எண்ணத்துல நான் இதைச் சொல்லலை. நீங்க உயிரோட திரும்பணும். உங்க மகனோட சேரணும். விளக்கும் தவறா பயன்படக்கூடாது. அந்த ஆதங்கத்துலதான் சொல்றேன்."

பிட்சுவின் பதிலைத் தொடர்ந்து அருணாச்சலாவிடம் அடப்பமான மௌனம். தாடையைத் தடவியும், கைகளைப் பிசைந்தும் யோசித்தவர் அரைமனதாக சரி என்றார்.

"இப்ப சம்மதிச்சுட்டு நீங்க அப்புறமா மனசு மாறினா அது ஆபத்தாயிடும். எச்சரிக்கை."

"இல்ல... நான் மாறமாட்டேன். எனக்கு என் மகன் யார்னு தெரிஞ்சா போதும்."

"அப்ப இந்த விளக்கு மேலையே சத்தியம் பண்ணுங்க..."

பிட்சு சத்தியம் கேட்க அருணாச்சலா கரம் நடுக்கத்துடன் நீண்டு அந்த விளக்கின்மேல் அமர்ந்தது.

"நல்லது... நீங்க புறப்படுங்க. வழியில ஒரு மிலிட்டரி மேஜர் வழிமறிச்சு உங்க கார்ல இடம் கேட்பார். காரை நிறுத்தாம கொண்டு போயிடுங்க."

"ஏன்?"

"ஒரு பத்து நாள் அவர் அப்படித்தான் அலைஞ்சு சாகணும். அது அவர் தலை எழுத்து. சொன்னதைச் செய்யுங்க."

"சரி... இந்த விளக்கை குறைந்தபட்சம் நான் பூஜிக்கலாமா?"

"தாராளமா... அப்படித்தான் செய்யணும். விடாமல் துரத்தற உங்க பாவங்களுக்கு அதுதான் பரிகாரம்!"

"அப்ப நான் வரேன்... வணக்கம்."

"என் பரிபூரண ஆசிகள். இனி ஒவ்வொரு நாளும் உங்க வரைல புண்ணிய தினங்களாகட்டும்."

"நீங்க... உங்க... உங்க மரணம்."



"அது என்பாடு. இங்கையே நான் சமாதி ஆயிருவேன்."

பிட்சுவின் பதில்... அவர் நிதானமாக சொன்ன விதம்... எல்லாமே அருணாச்சலாவை என்னென்னவோ செய்தது.

கம்பெனியில் வெள்ளிக்கிழமைகளில் பூஜை போடுவார்கள். கற்பூரத்தட்டு அவர் எதிரில் வரும்போது அதை ஒத்திக் கொள்ளக்கூட அவர் பகுத்தறிவு அனுமதித்ததில்லை. அப்படிப்பட்டவர் கண்களில் மெல்ல மெல்லக் கண்ணீரின் சேர்க்கை. நடையிலும் ஒருவித சோர்வு.

'ஓ... இந்த வாழ்க்கைதான் எத்தனை பெரிய புதிர். உலகம் முழுக்க சுற்றிய நானேகூட ஒரு சின்ன கிணற்று தவளைதானே...?'

எத்தனை விஷயங்கள்... எத்தனை விஷயங்கள்... மலைப்போடு, பிரமிப்போடு, மனசு சலவை செய்யப்பட்டது போன்ற தூய்மையோடு முற்றிலும் புதிய அருணாச்சலாவாய் வந்து காரில் ஏறி அமர்ந்தார்.

பிட்சு கார் வரை வந்து கையசைத்து விடை கொடுத்தார்.

'இன்னும் சில நிமிடங்களில் அல்லது மணிகளில் செத்துவிடுவோம் என்று தெரிந்தும் என்ன ஒரு திடசித்தம்! என்னால் முடியுமா?' மனதில் கேள்விகளோடு காரில் அருணாச்சலாவின் பயணம் தொடர்ந்தது.

மதியம் கடந்து மாலைக்குள் சூரியன் பிரவேசித்தபடி இருந்தான். இருந்தும் இருட்டப் போவதுபோல பனிக்கூட்டத்தின் ஆக்ரமிப்பு, வானிலும் மழை மேகங்கள். மழையும் பெய்ய ஆரம்பித்தது.

www.cleanindians.com

டிரைவர் மொய்தீன் நிதானமாக காரை செலுத்தினான். வழியில் ஒரு வளைவு, விரைப்பாக ஒரு மிலிட்டரிக்காரர் உருவம் தெரிந்தது. மேஜர் சந்தர்பால்!

கைகளை நீட்டி காருக்கு லிஃப்ட் கேட்டுக் கொண்டிருந்தது அவரது கட்டைவிரல். மொய்தீன் கார்த்திகேயனைப் பார்த்தான். கார்த்தி அருணாச்சலாவைப் பார்த்து "சார் ஒரு மிலிட்டரிக்காரர் லிஃப்ட் கேட்கறார்..." என்றான்.

"நோ... நிக்காம போங்க..."

"சார் அவர் ஒரு ஆபீசர் மாதிரி தெரியுது..."

"சொன்னாக் கேள் கார்த்தி. அவர் ஆபீசர் இல்ல. காரை விடு..."

மொய்தீனும் காரை நிறுத்தாமல் வேகப்படுத்தினான். கார் மேஜரைக் கடந்த நிலையில் திரும்பிப் பார்த்தார். மேஜர் அங்கே இல்லை. கார் சீறியது. திடீரென்று வெய்யில் அடித்து புதிய க்ளைமேட் தோன்றியது. அது அந்த மலையின் குணம்.

கிட்டத்தட்ட இரண்டு மணி நேர பயணம். வழியில் ஒரு ஊர்வலம் குறுக்கிட்டது. மொய்தீன் காரை நிறுத்தினான்.

அது ஒரு நினைவு ஊர்வலம்.

விரைப்பாக பல மிலிட்டரிகாரர்கள் போனார்கள். நடு நாயகமாய் மேஜர் சந்தர்பால் படம் மாலையிடப்பட்டு ஒரு ட்ரக்கில் நிறுத்தப்பட்டிருந்தது.

அதைப் பார்த்த கார்த்திக்கு பகீர் என்றது.

"சார்ர்ர்..." என்றான் அருணாச்சலா பக்கம் பார்த்து. அவரோ ஆசுவாசத்தோடு நெற்றியைத் தேய்த்தபடி இருந்தார். மொய்தீன்கூட மிரண்டு போயிருந்தான்.



"என்ன மாலிக்... நாம இவரை வழியில உயிரோட பார்த்தோமே...?" என்றான்.

"எதுவும் பேசாதே மொய்தீன். காரை எடு."

காரும் திரும்பச் சீறியது!

அந்த ஆடுகள் ஒவ்வொன்றும் புசுபுசுவென்று மிக புஷ்டியாக இருந்தன. ஒரு பதினைந்து வயது சிறுவன் துரத்தித் துரத்தி மேய்த்துக் கொண்டிருந்தான். பிட்சுவியுவான் அந்தப் பக்கம் வரவும் பார்த்துச் சிரித்தான். அவரும் அவனை அருகில் அழைத்தார். அவர் கையில் அந்த விளக்கு இருந்தது. அவன் பார்வை அந்த விளக்கின் மேல் சென்றது. அவரும் இந்தா என்கிற மாதிரி அவனிடம் தந்தார். அவனிடம் ஒரே மகிழ்ச்சி. பிட்சு திரும்பி நடந்தார்.

அவன் அந்த விளக்கோடு சற்று தூரத்தில் இருந்த அவன் வீட்டை நோக்கி ஓடினான்.

வீட்டு வாசலிலேயே ஹுக்கா பிடித்துக்கொண்டு ஒரு முரட்டு மனிதர்.

அவரைப் பார்க்கவும் அவன் மூச்சிளைத்தான். அவரும் அவன் கை விளக்கைப் பார்த்தார்.

"பிட்சு கொடுத்தார்..."

"ஆமா பெரிய தங்கப் புதையல் பாரு..? கொண்டா இப்படி....!"—அவனிடமிருந்து பிடுங்கினார். உற்றுப் பார்த்தார்.

"அந்த ஆள் ஒரு மாயக்காரன். இதை எல்லாம் வெச்சுக்கக்கூடாது. நீ போ..." என்றபடியே அந்த விளக்கை வீசி எரிந்தார். தாமரை இதழ் போல் குவித்து மூட முடிந்த

www.cleanindians.com

அந்த ஐம்பொன் விளக்கு வெகுதூரம் பறந்து போய் ஒரு ஒற்றையடிப் பாதை அருகே விழுந்தது.

அந்தப் பாதையின் தொடக்கத்தில் லடாக் மண்ணுக்கே உரிய கலைப் பொருட்களை பிளாட் ஃபாரத்தில் போட்டு விற்கும் வியாபாரி ஒருவன் வந்து கொண்டிருந்தான்!

"போஸ்ட்!"

சப்தம் கேட்டு அறைக் கதவைத் திறந்தான் லோகநாதன். தபால்காரர் கையில் கடிதமுடன்... கடிதத்தை வாங்கியவனுக்கு ஆச்சரியமாகப் போனது. அருணாச்சலா டிரேடிங் கார்ப்பரேஷனில் இருந்து வந்திருந்தது. பிரித்துப் பார்த்தான்... எப்பொழுதோ போட்டிருந்த அப்ளிகேஷனுக்கான அழைப்பு! அடிவயிற்றில் குளுகோஸ் ஊருகிற மாதிரி ஒரு சில்லிப்பு.

பத்திரிகையாளனாக வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது பாதையை மாற்று என்கிற மாதிரி படபடத்தது அந்தக் கடிதம்.

அக்கவுண்ட்ஸ் ஆபீசர் வேலை...

சம்பளம், படி, சலுகைகள்... எல்லாம் நாலு இலக்கத்தை தாண்டிப் போனது.

வாழ்க்கையே மாறப் போகிறது என்று தர்மன் சொன்னது இதைத்தானா?

உள்ளே ஒரு கேள்வி காத்திருந்து கேட்டது.

தலையைத் துவட்டியபடி ரூம் மேட் குமார் உள்ளே நுழைந்தான்.

"என்ன மாப்ள... எங்க இருந்து லெட்டர்?"

www.cleanindians.com



"அருணாச்சலா டிரேடிங் கார்ப்பரேஷன்ல இருந்து இன்டர்வியூ..."

"வாவ்... லீடிங் கம்பெனிப்பா. டாடா, மாருதி மாதிரி பெரிய கம்பெனியாச்சே. அடிச்சக்கை..."

"நான் எதிர்பார்க்கவே இல்லை."

"அதுதான் லைஃப்!"

"அப்ப இன்டர்வியூவுக்கு போன்னு சொல்றியா?"

"என்ன இது பைத்தியக்காரத்தனமான கேள்வி, முதல்ல போப்பா..."

"இல்ல அமுதம் பத்திரிகைக்கு என்ன பதில் சொல்றதுன்னுதான் குழப்பமா இருக்கு..."

"அதைத் தூக்கி தூரப்போடு. கதை, கட்டுரை எப்பவேணா எழுதலாம். ஆனா இந்த மாதிரி இன்டர்வியூ வரும்போதே பயன்படுத்திக்கணும்."

"வேலை கிடைக்கணுமே...?"

"Be Positive லோகு... எதுலையும் சந்தேகம்கறது உன் உடன்பிறந்த வியாதியா என்ன?"

குமார் ஒரு இடி இடித்தான். லோகுவும் இன்டர் வியூவுக்குக் கிளம்பத் தீர்மானித்தான்.

கடைத்தெரு!

கோவில் மாடுகள் மனிதர்களுக்கு சமமாக மேய்ந்தபடி இருக்க, ஆட்டோக்கள் பாம்பு போல வளைந்து நெளிந்து ஓட ஏக சந்தடி...

அந்த இக்கட்டிலும் பிளாட்ஃபாரத்தில் பத்து ரூபாய்க்கு மூணு பொருள் என்றும், பனியன், ஜட்டிகளை

விரித்துப் போட்டுக் கொண்டு கடைகள். நடக்கவே சிரமமாக இருந்தது.

லோகுவும் எரிச்சலுடன் நடந்து கொண்டிருந்தான். ஒரு திபேத்திய கைவினைப் பொருள் வியாபாரியின் கடை லோகுவை மறித்தது.

உல்லன் சட்டைகள், கம்பளிக்குல்லாய்கள், பல விதமான விளக்குகள், மாடர்ன் ஆர்ட், உலோக பொம்மைகள் என்று ஏகத்துக்கும் பிளாட்ஃபாரத்தில் பரவிக்கிடந்தது.

ஒரு வினாடி அவைகளைக் கவனித்தவனை கண்டி இழுத்தது. தேங்கி நின்று கவனித்தவனை கப்பென்று பிடிக்க முனைந்தான் அந்த வியாபாரியும்.

"சாப்... என்னா வேணும். சொட்டர், குல்லாய் எல்லாம் டெட்சிப்.. பாருங்கோ.." என்றான் கடி தமிழில்.

லோகு பதில் சொல்லாமல் வரிசையாக ஒவ்வொன்றாக பார்த்தான். அந்த விளக்கு ஒரு மூலையில் கிடந்தது. கைக்கு அடக்கமாக இருந்தது.

சட்டென்று அதை எடுத்த வியாபாரி மளமளவென்று அதன் குழிகளை மூடிக் கொண்டிருந்த இதழ்களை விரித்தான்.

சின்ன விஷயம் ஆனால் அதீத வேலைத்திறன்.

"சாப் இது பிட்ரூல் பூஜா லேம்ப்.. நல்லாருக்கும். அட் எ டைம்ல எட்டு திரி போட்டு எரிக்கலாம். டெட்சிப் சார்.. வாங்குங்கோ.." என்றான்.

"விலை எவ்வளவு?"

"ஜஸ்ட் டூ ஹண்ட்ரட்.."



"இருநூறு ரூபாயா.. ஆளைவிடு."

ஓடப் பார்த்த லோகுவை தோளைப் பற்றி இழுத்தான்.

"நீங்க கேளுங்கோ சாப்.."

"இல்லய்யா.. எனக்கு ஒத்துவராது ஆளைவிடு."

"அட சும்மா கேளுங்கோ சாப்."

"ஐம்பது ருபா.. தருவியா?"

அவன் உடனேயே "ஹண்ட்ரட் ருபீஸ் தாங்கோ சார்" என்றான்.

"ஐம்பதுக்கு மேல் நயாபைசா தரமாட்டேன்."

"ஒரு நைண்ட்டியாவது தாங்கோ சார்.."

"அதான் சொன்னேன் ஒத்துவராதுன்னு. ஆளைவிடு."

"சாப்.. சாப்.." அவன் விடவில்லை!

அருணாச்சலா டிரேடிங் கார்ப்பரேஷன்!

குப்தா வந்திருந்தார்.

தடபுடலான வரவேற்பில் அகமகிழ்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

"இப்ப நினைச்சாலும் ஒரு கனவு மாதிரி இருக்கு குப்தா; எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை.." என்று 'லே'வில் பிட்சுவுடன் நேரிட்ட அனுபவத்தை அசைபோட்டார் அருணாச்சலா.

"எதுக்கு போனீங்களோ அது முடிஞ்சுதா..?"

இது குப்தாவின் கேள்வி

www.cleanindians.com

இல்ல குப்தா... இனித்தான் முடியனும். ஆனா ஒண்ணு. சதாவசிவம் ஒரு பெரிய கிரிமினல். செத்தும் அவன் புத்தி மாறவேயில்லை."

"எப்படி?"

"என் கேள்விக்கு பதில் சொல்லாம அந்த விளக்கு மூலமா தன் காரியத்தை சாதிச்சுக்க நெனச்சான்."

"ஸோ... சதாசிவத்தோட ஆவியோட பேசிட்டீங்கன்னு சொல்லுங்க."

"ஆமா... அதே சமயம் சந்தேகமாவும் இருக்கு..."

"சந்தேகமா?"

"ஆமா... நான் கண்ண மூடிகிட்டிருந்த நேரத்துல அந்த பிட்சுவே என் கேள்விக்கு பதிலை எழுதி இருப்பாரோன்னு ஒரு சந்தேகம்..."

"சந்தேகம் அங்கேயும் விடலையா?"

"என் காரியம் முழுசா நடக்கலையே. என் மகன் யார்னு தெரியற வரை நான் என்னையே கூட சந்தேகப் பட்டுகிட்டுதான் இருப்பேன்."

"திருத்த முடியாது உங்களை..."

"அந்த பிட்சு உயிரோட இருக்காரா சமாதியாயிட்டா ரான்னுகூட ஒரு சந்தேகம். என் பி.ஏ.வை அனுப்பி யிருக்கேன்."

"தி ஈஸ் டு மச். நான் நம்பினதாலதானே உங்களுக்கே சொன்னேன்."

"சரி உண்மைன்னே வெச்சுப்போம். ஆனா அதோட என் மகன் என்னை வந்து பாக்கனுமே..."

www.cleanindians.com



"இவ்வளவு தூரம் நடந்திருக்கு. இனித்தானா நடக்காது. நடக்கும் பாருங்க..."

"அப்படி நடந்திட்டா ரியலா சொல்றேன். நான் ரொம்ப கொடுத்து வெச்சவன்."

"பை த பை விளக்கோட பையன் வந்த பிறகு சத்தியத்தை மீறிடாதீங்க. இந்த மாதிரி விஷயத்துல ரொம்ப ஜாக்ரதையா இருக்கனும்."

"இல்ல குப்தா... நான் ஒரே ஒரு தடவை மீறுவேன்னு மனசுல நினைச்சுகிட்டுத்தான் சத்தியம் செய்துருக்கேன். இது அந்த பிட்சுவுக்குக் கூடத் தெரியாது."

"அடப்பாவி மனுஷா!"

"ஆமா... என் சொத்துக்கு ஆசைப்பட்டு அந்த பிட்சு குரூப்பே யாரையாவது விளக்கோட அனுப்பிட்டா என்ன பண்றது?"

"அதனால..."

"அதைக் கொண்டு என் இறந்துபோயிட்ட வனஜா வையே அந்த விளக்கு மூலமா கூப்பிடப்போறேன். அவ வந்து சொல்லணும்—விளக்கோட வந்திருக்கிறது என் மகன்தான்னு. தட்ஸ் ஆல். அப்புறமா நான் அதை நிச்சயமா வேற எதுக்கும் பயன்படுத்தமாட்டேன்..."

அருணாச்சலா சிகரெட்டைப் புகைத்தபடி சொன்னதில் குப்தாவிடம் ஏராள அதிர்ச்சி. அதேசமயம் ஜி.எம். ஸ்ரீதரன் உள்ளே நுழைந்தார்.

"என்ன ஸ்ரீதரன்?"

"சாரி ஃபார் த இன்டரப்ஷன் சார். இன்டர்வியூவுக்கு வந்த முந்நூத்தி சொச்சம் பேர்ல நமக்குத் தேவையான

பதினோரு பேரை செலக்ட் பண்ணிட்டோம். அப்பாய்ன் மென்ட் ஆர்டரும் ரெடி. அவங்களை நீங்களே பார்த்து ஆர்டரை கொடுத்தா அவங்களும் ரிச்சா ஃபீல் பண்ணுவாங்க..."

"வெயிட் பண்ணுங்க. வந்துட்றேன்."—அருணாச்சலா குப்தாவைப் பார்த்தார்.

"அப்ப நான் புறப்பட்றேன்..."

"நல்லது... நானும் எல்லாம் நல்லபடியா நடந்தபிறகு போன் பண்றேன்."

"பாத்து... எனக்கென்னவோ நீங்க ஜாக்ரதையா இருக்கறது நல்லதுன்னு தோணுது..."

"அதுல எப்பவுமே நான் எமன் குப்தா..."

"உங்க வைஃப்கிட்ட பேசிட்டீங்களா?"

"நோ... நெவர். முதல்ல பையன் வரட்டும்."

"ஓ.கே. ஆல் த பெஸ்ட்!"

குப்தா கை குலுக்கிவிட்டு கிளம்பினார். அருணாச்சலாவும் தன் அறையிலிருந்து அந்த அலுவலகத்தின் கான்ஃப்ரன்ஸ் ஹால் நோக்கி நடந்தார்.

உள்ளே தேர்வானவர்கள் காத்திருக்க பர்சனல் மேனேஜரும், ஜெனரல் மேனேஜரும் அவர்களிடையே கடின உழைப்பு... கோல் போஸ்ட், இன் வால்மென்ட் என்று கதைத்துக் கொண்டிருந்த நிலையில் அருணாச்சலா நுழையவும் கப்சிப்.

தேர்வானவர்கள் விரைப்பாக நின்று விஷ் செய்தார்கள். அதில் லோகநாதனும் இருந்தான். தோளில் ஜோல்னா பை.



"சிட்டவுன்..." உட்காரச் சொல்லி கூர்ந்து பார்த்தார். பின் பர்சனல் மேனேஜர் ஆர்டர் பேப்பர்களைத் தரவும் வரிசையாக தந்து கை குலுக்கினார்.

லோகநாதன் முறை வந்தது.

ஜோல்னா பையை மேஜைமேல் அவசரமாக வைத்தபடி கை குலுக்கக் கையை நீட்டினான். அவசரப் பட்டு வைத்ததில் உள்ளே இருந்த விளக்கு நழுவி கீழே விழுந்தது. கை குலுக்க நீட்டிய கையை அப்படியே பின்னுக்கு இழுத்து குனிந்து விளக்கை எடுத்தான்.

படபடப்போடும் விளக்கோடும் அருணாச்சலாவைப் பார்த்தான்.

அருணாச்சலா அப்படியே விக்கித்துப் போயிருந்தார். பார்வையிலும் ஒரு அதீத பளபளப்பு.

"மிஸ்டர் ஸ்ரீதர்... இந்த கேண்டிடேட்டோட என் ரூமுக்கு வாங்க..." என்றபடியே விறுவிறுவென்று அங்கிருந்து கிளம்பினார். யாருக்கும் ஒன்றும் புரியவில்லை!

ஒரு மாதம் சென்றுவிட்டது!

ஒரு கார் தர்மனின் ஆஸ்ரமக் குடிசை முன் நின்றது. உள்ளிருந்து சூட்டும் கோட்டுமாய் இறங்கினான் லோகநாதன்.

அவனைப் பார்த்து தர்மன் துளியும் ஆச்சரியமே படவில்லை.

"நீங்க சொன்னது போலவே எல்லாம் நடந்துடிச்சு மிஸ்டர் தர்மர். நான் இப்ப அனாதை இல்ல. ஒரு கோடீஸ்வரனோட மகன். கேள்விப்பட்டிருப்பீங்களே..."

www.cleanindians.com

லோகநாதன் கேட்க தர்மன் முகத்தில் இதமான புன்னகை.

"எனக்கு எல்லாம் பெரிய புதிரா இருக்கு. அதேசமயம் எப்படி இவ்வளவு பெரிய பொறுப்பை சுமக்கப் போறேன்னும் தெரியல... உங்ககிட்ட நான் பண்ணின வாக்குவாதங்கள நினைச்சா கொஞ்சம் வெட்கமாகூட இருக்கு..."

"அதெல்லாம் இப்ப எதுக்கு... ஆமா அப்பாவோட காரியம்லாம் நல்லபடியா முடிஞ்சிச்சா...?"

"உம்..."

"பார்த்து... அந்த விளக்கு இப்ப எங்க இருக்கு?"

"விளக்கு... அதுலதான் என் வாழ்க்கையே திரும்பிச்சு. அப்பாவும் அதை எடுத்துகிட்டுப்பாய் என்னவோ பண்ணாரு. அப்புறமாதான் கை கால்லாம் இழுத்துகிட்டு கீழே விழுந்தார்.

'நான் தப்பு பண்ணிட்டேன் வனஜா. என்னை மன்னிச்சிரு'ன்னுல்லாம் சொல்லி அழுதார். எனக்கு கடைசிவரை புரியலை. அதுக்குப் பிறகு வக்கீலைக் கூப்பிட்டு பேசறவரை நல்லாதான் இருந்தார். வக்கீல் வந்து என்கிட்ட பேசினப்போதான் நான் அவர் மகன்றதே எனக்குத் தெரிய வந்தது. ஆனா நான் போய் பார்த்தப்போ அப்பா இறந்து போய்ட்டார். எப்படி...? அந்த விளக்குல அப்படி என்னதான் இருக்கு? உங்களாலயாவது சொல்ல முடியுமா?"

தர்மன் சிரித்தான்.

"நான் அதை இப்ப கொண்டு வந்துருக்கேன் பாக்கறீங்களா?"

www.cleanindians.com



எடுத்துக் காட்டினான். தர்மனுக்கு அடுத்த நொடி உடம்பு சிலிர்த்துப் போனது.

"தம்பி அதை அப்படி சாமி காலடில வை. அது இனி அங்கேயே இருக்கட்டும். உனக்கு எதுவும் தெரியவும் வேண்டாம். ஒண்ணு மட்டும் தெரிஞ்சுக்கோ...சில பாவங்கள் எப்பவும் விடாது. அதுக்கு யாரை எப்படிப் பழிவாங்கணும்னு நல்லா தெரியும். நீ எந்த பாவமும் செய்துடாதே. நான்கூட இனி இந்த மாந்திரீகத்துல ரொம்ப ஈடுபாடு காட்டப்போறதில்ல. நீ ஒரு கோவில் கட்டு. அங்க இந்த சிலையையும், விளக்கையும் வெச்சு பூஜை பண்ணிகிட்டே என் காலத்தை ஓட்டிட்றேன்..."

"என்ன தர்மன்.... விளக்கமா சொல்லுங்க. இந்த விளக்குல அப்படி என்ன இருக்கு?"

"சத்தியம் இருக்கு, தர்மம் இருக்கு, எல்லாத்துக்கும் மேலா உங்கம்மாவே இதுக்குள்ற இருக்காங்க. இதுக்கு மேல எதையும் கேட்காதே. நான் சொன்னாலும் உனக்கு புரியாது..."

தர்மன் கை கூப்பினான். லோகநாதன் அதற்குப் பிறகு எதுவும் பேசவில்லை. எதையும் கேட்கவும் இல்லை!

முற்றும்

சென்னை மாவட்ட கிளை நூலகம், கொளத்தூர், சென்னை 99.
36508
538993